இடத்தாலணையும்பேர் - குறிஞ்சிமுதலியவைந்திணையைப்பற்றியும், வான் அகம் புறம்முதலிய இடங்களைப்பற்றியும் வரும்பெயர் (உ-ம்) வெற்பன், மறவன், ஆயன், ஊரன், சேர்ப்பன், வானத்தான், அகத்தான், புறத்தான் முதலியன.
இடத்திடல்-சொலித்தல்.
இடநாகம்-அடையிருக்கும்பாம்பு.
இடந்தலைப்பாடு- களவுப்புணர்ச்சிநான்கிலொன்று, அஃது இடந்தலைப் படுதல்.
*இடந்தலைப்படுத்தல்-கூட்டுதல்.
இடபக்கொடியோன்-சிவன்.
இடபம்-இராசசின்னத்தொன்று, எருது, ஓரிராசி, சிவன்கொடி, மேற்றிசைப்பாலன்குறி.
இடபவாகனன்-எருமைநாக்கு, சிவன்.
இடபவீதி-சூரியன் மூவகைவீதியினொடு வீதி.
இடபாரூடன்-சிவன்.
இடப்பகுபதம்-ஓர்பகுபதம்.
இடப்பிறிதின்கிழமை - இடம்பற்றியபிறிதின்கிழமை, (உ-ம்) அரசனது மாளிகை.
இடப்பு-இடக்கப்பட்டது, மண்கட்டு காண்முதலியவற்றையகலவிடுதல்.

இடப்பொருள் - ஏழாம்வேற்றுமைப் பொருள்.
இடமரம்-தேசோபத்திரவம்.
இடமலைவு-ஓரலங்காரவழு,அஃது ஒரிடத்துள்ளபொருள் மற்றோரிடத்துளவாகக்கூறுவது.
இடமன்-இடப்புறம்.
இடமாரம்-ஓர்பெரும்பறை.
இடமானம்-மேன்மையானவிடம், விசாலமானவிடம்.
இடமிடுதல்-பருத்தல்.
இடமிடைஞ்சல் } இடங்கழிமை, ஒடுக்கம், நெருக்கம்.
இடமுடங்கு }
இடமை-பூமி.
இடம்-அகலம், ஆகாயம், இடப்பக்கம், இடம்பாடு, இராகத்தகுதி நான்கினொன்று அஃது ஐந்திணையைப்பற்றிவருவது, இளக்காரம், ஏது, ஏழாம் வேற்றுமையுருபு (உ-ம்) என்னிடம், சமயம், செல்வம், தலம், தன்மை முன்னிலைபடர்க்கையென்னுமூவிடம்,தூரம், படுத்தல், பெருமை, வலி, விசாலம், வீடு.
இடம்பக்கம்-திரவியமுதலியவுதவி.
இடம்பம்-பெருமை, மேம்பாடு.
இடம்பரம்-இடம்பக்கம், வழிவகை.
இடம்பாடு-செல்வம், பருமை, விரிவு.
இடம்புதல்-விலகுதல், வெறுத்துவிடுதல்.
இடம்புரி-இடக்கைக்கயிறு, இடம்புரிச்சங்கு, சங்கு.
இடம்மானம்-ஓர்பறை.
இடர்-ஆபத்து, இடைஞ்சல், துன்பம்.
இடலம்-அகலம், விசாலம்.
இடலித்தல்-விசாலித்தல்.
இடலிப்பு-அகலம்.
இடலை-துக்கம், துன்பம்.
இடல்-எறிதல், கொடுத்தல்.
இடவகம் - இலவங்கம், பனம்பிசின், மாம்பிசின்.
இடவகை-வீடு.
இடவம்-பூமி.
இடவழு-தன்மைமுன்னிலைபடர்க்கை மூவிடத்தைபிறழக்கூறல்,ஐந்திணைக்குரியவற்றுள் ஒன்றற்குரியவற்றை மற்றொன்றற்குக்கூறுவதுமாம்.
இடவன்-இடக்கப்பட்டது, எதிரிமாடு, மண்கட்டி.
இடவாகுபெயர்- இடத்தினமைத்தையதனிடத்த பொருட்கு வழங்குவது, (உ-ம்) அகம்.
இடவியது-அகலமுள்ளது.
இடவை-வழி.
இடவோட்டு-இடப்புறச்செலவு, இராகுகேதுவின்நடை.
இடறல்-தடைபண்ணல், நிந்தித்தல்.
இடறி-யானை.
இடறு-ஆபத்து, இடறென்னேவல், தடை.
இடறுகட்டை-தடைகாரன்.
இடறுதல்-காலினலெற்றுதல், தடுக்குதல், தட்டுதல்.
இடற்சம்-குக்கில்.
இடனறிந்தொழுகல் - வணிபரொண்குணத்தொன்று.
இடன்-இடம்.
இடா-இறைகூடை, ஓர்பொறி.
இடாகினி-காளியேவல்செய்வோள்.
இடாகு-புள்ளி.
இடாசுதல்-அகலநிற்குதல், அடித்தல், அவமதித்தல், தள்ளல், நெருக்கல் மேற்படல்.
இடாடிமம்-தாதுமாதுளை.
இடாப்பித்தல் - காலையகலப் பண்ணி நிற்றல்.
இடாப்பு - அட்டவணை, சவாதுபண்ணினது, பார்த்தெழுதும்பிரதி, பெயர்விலாசம்.
இடாமுடாங்கு-எதிரிடை, ஏறுமாறு, ஒழுங்கின்மை.
இடாம்பீகன்-இடம்பன்.
இடார்-இறைகூடை, எலிமுதலியன பிடிக்கும்பொறி.
இடி-அசனி,இடியென்னேவல், இந்திரன்கொடி, உறுதிச்சொல்,ஒலி,சிற்றுண்டி, சுண்ணம், தகரம், தினைநென்முதலியவற்றின்மா, துடிப்பு, மயிர்ச்சாந்து.
இடிகம்-பெருமருந்து.
இடிகரை-அழிந்தகரை,
இடிகை-பூமி.
இடிக்கொடியன்-இந்திரன்.
இடிசாமம்-கெடுகாலம், நிந்தை.
இடிஞ்சில்-அகல்.

இடிதல்-உடைதல், ஒடிதல், நொறுங்கல்.
இடித்தல் - இடிக்குதல், இடிவிழுதல், உறுதிச்சொல், ஒலித்தல்.
இடித்துரை-உறுதிச்சொல்.
இடிபடல்-இடியுண்ணல்.
இடிப்பு-ஒலி.
இடிமரம்-உலக்கை.
இடிம்பு-அவமதிப்பு. இடும்பு.
இடியப்பத்தட்டு-இடியப்பஞ்சுடுந்தட்டு இடியப்பம் விற்குந்தட்டு.
இடியப்பம்-ஓர்சிற்றுண்டி.
இடியப்பவுரல்-இடியப்பம்பிழியும் பாத்திரம்.
இடியேறு-இடி.
இடிவு - அழிவு, இடிந்திருப்பது, ஒடிவு.
இடுகை-கிரந்தநிகண்டியென்று, அஃது காரியங்களைவகுத்து ஒழுங்குபடுத்தத்தக்கது.
இடுக்கு - இடம்பம், பிரபலியம், மேன்மை.
இடு-கொடுவென்னேவல்.
இடுகடை-தருமமீயும்வாயில்.
இடுகறல்-விறகு.
இடுகாடு-சுடுகாடு.
இடுகால்-பீர்க்கு.
இடுகிடை-இடுக்கண், நெருக்கம்.
இடுகு-ஒடுக்கம்.
இடுகுதல்-ஒடுங்குதல், நோ.
இடுகுறி-நியமிதமாத்திரைப்பேர்.
இடுகுறிச்சிறப்புப்பெயர் - இடுகுறியாலென்றற்கேவருஞ் சிறப்புப் பெயர்.
இடுகுறிப்பொதுப்பெயர் - இடுகுறியாற்பலவற்றிற்கும் பொதுவாய்வரும் பெயர்.
இடுகை-ஈகை.
இடுக்கணி-இடுக்கு.
இடுக்கண்-இக்கட்டு, துன்பம், வறுமை.
இடுக்கப்படல் - ஒடுக்கப்படல், துன்பப்படல்.
இடுக்கப்படுத்தல் - துன்பப் படுத்தல், நெருக்கல்.
இடுக்கம்-ஒடுக்கம், துன்பம், நெருக்கம், வறுமை.
இடுக்கல்-இடுக்குதல்.
இடுக்கி-இடுக்குவது, உலோபி, குறடு, கொடிறு, "சாவணம்.
இடுக்கிடை-நெருக்கம்.
இடுக்கு-இடைஞ்சல், ஒடுக்கம், கொடுக்கு, கொடுவென்னேவல், சந்து, துன்பம், நெருக்கமானவிடம்.
இடுக்குதல்-அணைத்தல். நெருக்கல்.
இடுக்குத்தடி-கிட்டித்தடி.
இடுக்குப்பனை-கருப்பநீர்ப்பனை.
இடுக்குப்பிள்ளை-கைக்குழந்தை.
இடுக்குமரம் - எண்ணெயூற்றுமரம், கடைமரம்.
இடுக்குமுடுக்கு - சங்கடம், மூலைமுடுக்கு.
இடுதங்கம்-மாற்றுயர்ந்ததங்கம்.
இடுதண்டம்-பம்பல், வந்தி.
இடுதண்டல்-பம்பல்.
இடுதல்-அணிதல், ஈதல், எறிதல், சொரிதல், நிசமித்தல், வைத்தல்.
இடுதி-அம்புக்கூடு.
இடுதிரை-திரைச்சீலை.
இடுதெண்டம்-தண்டனை, வாராவந்தி.
*இடுதேளிடுதல்-தேளிடப் படுவாகாணமே, தேளல்லாதவொன்றை மறையக்கொடுவந்து மேலேயிட்டு அவனைக்கலங்கப்பண்ணுதல், பாய்ச்சுத்தேளுமாம்.
இடுப்பு-இடை, பக்கம்.
இடுமருந்து-கைமயக்குமருந்து.
இடுமுடுக்கு-நெருக்கமானவிடம்.
இடுமோலி - மலையாளக்கரையில் உற்பத்தியாகிற ஓர்மரம்.
இடும்பர்-ஓர்வகையிராக்கதர், செருக்கர், துயர்செய்வோர்
இடும்பன் - ஓரரக்கன், குமாரனேவல் செய்வோன்.
இடும்பி - இடும்பன்தங்கை, ஓரிராக்கதி, செருக்குடையாள்.
இடும்பிகொழுநன்-வீமன்.
இடும்பு-அகந்தை, அவமதி, துன்பம், தேசோபத்திரவம்.
இடும்பை-அச்சம், ஆபத்து, சரித்திரம், தவறு, துன்பம், பொல்லாங்கு, விகாரமெட்டியென்று.
இடுவி-பெண்ணுறைமை.
இடுவந்தி - அநீதம், நெருக்கிடை, வாராவந்தி.

இடுவேற்று-இடைத்தட்டு.
இடை-அளவு, இடமூக்கினிற்கும் நரம்பு, இடம், இடையர்க்குரியது, இடைச்சொல், இடையென்னேவல், ஏழனுருபு, சமயம், சுவாசத்திற்சந்திரகலை, சுற்றுடல், தசநாடியிலொன்று, நடு, நிறை, நுசுப்பு, பக்கம், பௌரணை, மருங்குல், யானை.
இடைகலை-இடமூக்கால் வருஞ்சுவாசம், இடமூக்கினிற்கும் நரம்பு.
*இடைகழி-வாயில்.
இடைக்கச்சு, இடைக்கட்டு } அரைக்கச்சை.
*இடைக்கருவி-சல்லி.
இடைக்காடன்-ஓர்சித்தன்.
இடைக்கிடை-ஊடையூடை, ஒன்றைவிட்டொன்று, நிறைக்குநிறை.
இடைக்குலநாதன்-விட்டுணு.
இடைக்குறை-இடையிற்குறைந்து நிற்கும்மொழி.
இடைக்கொள்ளை-அவமிருத்தாய்ச் சாதல், இடையிலேவாருதல்.
இடைசுருங்குபறை-உடுக்கை.
இடைசூரி-அரும்புவளையம்.
இடைச்சங்கம் - மதுரையிலிரண்டாவதாயிருந்தசங்கம்.
இடைச்சனி-பூரநாள்.
இடைச்சன்-இரண்டாம்பேறு, நடுமகன்.
இடைச்சி-முல்லைநிலப்பெண்.
இடைச்சீலை-திரைச்சீலை.
இடைச்சேரி-இடையரூர்.
இடைச்சொல்-பெயர் வினைகளோடே சார்ந்துவழங்குஞ்சொல்.
இடைச்சொற்பகாப்பதம் - ஓர்பகாப்பதம்.
இடைச்சோழகம்-மறுகாற்றுக் கிடையிலேவீசுந் தென்றல்.
இடைஞ்சல்-இக்கட்டு, நெருக்கிடை, வருத்தம்.
இடைதரம்-இடைத்தரம்.
இடைதல்-சீலை, தோற்குதல், பின்வாங்குதல், வசங்கெடுதல்.
இடைத்தட்டு-இடையிலேகாரியம்பார்த்தல், சஞ்சாயம்.
இடைத்தரம்-நடுத்தரம்.
இடைத்திரிசொல்-இயற்சொற் போற்றம்பொருள்விளக்காது - அரிதுணர் பொருளனவாய்நிற்கு மிடைச்சொல், (உ-ம்) சேறும்.
இடைத்தொடர்க்குற்றுகரம்-ஓர்குற்றுகரம்.
இடைநடு-ஊடை.
இடைநரை-இடைக் கிடையே நரைமயிரிருப்பது.
இடைநிலை-பகுபதங்களினிடையே நிற்பது,*இடையிற்படுந்தரவு.
இடைநிலைத்தீபகம்-ஓரலங்காரம், அஃது தீபகச்சொல்லிடையினிற்பது.
இடைநிலைப்பாட்டு-தாழிசை
இடைநிலைமயக்கு - மெய்யொடு மெய்யேனும் உயிரொடுமெய்யேனு மொழிக்கிடைமயங்கிவருதல்.
இடைநிலையெடுத்து - சொற்களுக் கிடையே மயங்கிவரத்தகு மெழுத்துக்கள்.
இடைநீரினிற்றல்-நீரினீந்திநிற்றல்
இடைப்படல்-இடையிலுண்டாதல்.
இடைப்பழம்-இடை யிடைபழுத்த பழம்.
இடைப்பழுப்பு-பச்சைகலந்த பழுப்பு, முற்றும்பழாதது.
*இடைப்பாட்டு-ஔகம்.
இடைப்பிறவரல் - எழுவாய்முதலிய தொடரினுள் இடையிலேற்ற பிற சொல்வரல்.
இடைப்புணரளபெடை-நடு விருசீர்க்கண்ணுமளபெடைவருவது.
இடைப்புணரியைபு-நடு விருசீர்க்கண்ணுமியைபுவருவது.
இடைப்புணரொதுகை - நடுவிருசீர்க்கண்ணுமெதுகைவருவது.
இடைப்புணர்முரண்-நடுவிருசீர்க்கண்ணுமுரண்வரத்தொடுப்பது.
இடைப்புணர்மோனை - நடுவிருசீர்க்கண்ணுமோனைவரத்தொடுப்பது.
இடைப்புழுதி - ஈரமும்புழுதியுங்கலவன்
இடைப்புள்ளி-இடைவரி.
இடைப்பூட்டு-அரைப்பூட்டு.
இடைப்போகம்-இடையிற் புன்செய்ப்பயிர்விளைவு.

இடைமடக்கு - இடக்குமடக்கானபேச்சு, இடையிற்றடுக்கை, ஓரலங்காரம், அஃது இடைமுற்றுமடக்கி வருவது.
இடைமுள்-இடைப்பரு, ஓர்கரப்பன்.
இடைமேடு-நடுத்தரமானமேடு.
இடையர்-முல்லைநிலமாக்கள்.
இடையல் - ஒதுங்கல், தாழல், நல்லாடை, பின்னிடல், மெலிதல்.
இடையறல்-நடுவேமுடிந்துபோதல்.
இடையறுவன்பு-முடியாவன்பு.
இடையன்கால்வெள்ளி-ஓர்விண்மீன்.
இடையாகெதுகை-அடிதோறு மிடையிலேயாகுமெதுகை.
இடையாந்தரம்-நடு.
இடையாயர்-மத்திமர்.
இடையிடல்-நடுவிற்றேன்றல்.
இடையிடுதல்-ஊடேசம்பவித்தல்.
இடையிடை-இடைக்கிடை.
இடையிட்டுவண்ணம்-எதுகைத்தாது.
இடையிட்டெதுகை-அடிகளொன்றைவிட்டொன்றெதுகை யொன்றிவருவது.
இடையிற்சொல் - செந்தமிழ் நிலத்துமொழிகளாய் செய்யுளினும் வழக்கினுநின்று தம்பொருளையியல்பாய் விளக்குமிடைச்சொல்.
இடையின்மோனை-இடை யெழுத்துக்கள் ஒன்றற்கொன்று மோனையாய் வருவது.
இடையினம்-இடையெழுத்து.
இடையினவெதுகை-இடையினவெழுத்துக்களொன்றற்கொன்று எதுகையாய் வருவது.
இடையீடு-இடையிட்டுக் கொண்டது, ஊறுபாடு, தடை.
இடையூறின்மை-தடையின்மை, அஃது ஈச்சுரனெண்குணத்தொன்று.
இடையூறு-இடர், ஊறுபாடு, தடை.
இடையெண்-சிந்தடி ஒரடியாக எட்டு வருவது.
இடையெழுஞ்சனி-பூரநாள்.
இடையெழுத்து - வல்லோசை வெல்லோசை யிரண்டிற்கு மிடைநிலைமையா யுச்சரிக்குமெழுத்து.
இடையொடுகடைமடக்கு - ஓரலங்காரம், அஃது அடிகளினிடையுங் கடையு மடங்கிவருவது.
இடைவழக்கு-எதிரிக்கும் வழக்காளிக்குமிடையிலே வேறொருவன் தொடர்தல், கிளைவழக்கு.
இடைவழி-நடுவெழி, பாதிவழி.
இடைவள்ளல் - கேட்டன கொடுப்போன்.
இடைவிடல் - விட்டுவிட்டுத்தொடங்கல்.
இடைவிடாமல்-ஓயாமல்.
இடைவிடாமழை-ஓயாமழை.
இடைவு-தோல்வி, நீக்கம், வெளி.
இடைவெட்டு-இடையிலே பெறுதல்.
இடைவெட்டுப்பணம்-பொதுக்கியெடுத்தபணம், மாறுமுத்திரைவிழுந்தபணம்.
இடைவெட்டுப்பேச்சு-நிந்தனை.
இடைவெளி-ஊடுவெளி, நடுவெளி.
இடோலி-ஓர்வகைச்சிவிகை
இடோல்-ஓர்பறை.
இஷ்டகாபதம்-வெள்வெட்டிவேர்.
இஷ்டகாமியம், இட்டகாமியம் - இச்சித்தபொருளைநினைத்தபடிபெறுதல்
இட்டங்கட்டல்-இராசிநிலைவரைதல்.
இஷ்டசட்டம், இட்டசட்டம் - யதேச்சை.
இட்டடை - இட்டிடை, கடைச்சல்மரம்.
இஷ்டதேவதை, இட்டதேவதை - குலதேவதை, தான் வழிபடுதெய்வம்.
இட்டபோகம் - தன்னிட்டம் விரும்பியபோகம்.
இஷ்டப்பிரசாதம் - கைம்மாறுவேண்டாக்கொடை, தேவகிருபை, தொடர்ந்தவன்பு, யாகசேடம்.
இஷ்டம்-ஆமணக்கு, இட்டம், சடங்கு, யாகபலி, யாகம், விடுநிலை.
இட்டம்-அடிமைவிடுநிலை, அன்பு, இச்சைப்படி, கிரக நிலையாலாகும்பலாபலன்.
இட்டம்வைத்தல்-இட்டங்கட்டல்.
இட்டலி-ஓர்பண்ணிகாரம்.
இட்டலிடைஞ்சல்-இடையூறு, தரித்திரம், துன்பம்.
இட்டளம்-உவாதி, தளர்வு, துன்பம்
இட்டறுதி-நியமித்தவெல்லை, முட்டு,

வறுமை.
இஷ்டி-யாகம்.
இட்டி-இஷ்டி, ஈட்டி, செங்கல், விருப்பம்.
இட்டிகை-இடுக்குவழி, கூட்டுமெழுகு செங்கல்.
இட்டிடை - அற்பம், கடைச்சறகருவியினோருறுப்பு, சிறுமை, தரித்திரம்.
இட்டிடைஞ்சல்-இட்டறுதி, முட்டு.
இட்டியம்-யாகம்.
இட்டிவனம்-ஓர்சடங்கு.
இஷ்டு-விருப்பம்.
இட்டு - அசைச்சொல், அற்பம், இஷ்டு, நுண்மை.
இட்டுக்கட்டிக்கொள்ளல் - குறைவாய் மதித்தல்.
இட்டுக்கட்டிப்பேசுதல் - இல்லாததை நியமித்துப்பேசுதல்.
இட்டுறுதி - ஆபற்காலவுதவி, கண்டிதம்.
இட்டேற்றம்-அநீதம், முழுப்பொய்.
இட்டொருசட்டு-இட்டம்.
இட்டோடு-பிரிவு.
இட்டோட்டு-அலைக்கழிவு, தொந்தரை.
இணக்கம் - இசைவு, சம்மதம், சேர்மானம், திருத்தம்.
இணக்கு-இணக்கென்னேவல், இயைவு, சம்மதி.
இணக்குதல்-உடன்படுத்தல்.
இணக்கோலை-உடம்படிக்கைப் பத்திரம், பொருத்தோலை.
இணங்கலர்-பகைவர்.
இணங்கன்-வெடியுப்பு.
இணங்கார்-பகைவர்.
இணங்கி-தோழி.
இணங்கு-இணங்கென்னேவல், பிசாசம்.
இணங்குதல்-சம்மதித்தல், பொருந்துதல்.
இணபம்- யாக்கைக்குற்றம்பதினெட்டினொன்று.
இணவொரி-பலசுடருள்ளநெருப்பு.
இணர்-இணரென்னேவல், கிச்சிலிமரம், குலை, தளிர், பூங்கொத்து, பூந்தாது, பூமலர், மாமரம்.
இணறு-பூ.
இணாட்டு-ஓலைத்தளிர், ஓலைத்துண்டு, குணாட்டு, மீன்செவுள்.
இணைப்பு-எய்ப்பு.
இணைப்புதல்-எய்த்தல்
இணி-எல்லை, எணி, கண்ணறை.
இணுக்கு - இரண்டோலைகளினிடைவெளி, ஒணுங்கப்பட்டது, கிளைமுதலியவைகளினிடைச்சந்து, குலையினெட்டு, கைப்பிடியளவினுக்கப்பட்டது, வளார்.
இணுக்குதல்
இணுங்குதல் } இசித்தல்
இணை-இசைவு ,இச்சை, இரண்டு, உவமை, கூந்தல், சகாயம், சோடு, துணைபிணையென்னேவல், வதில்.
இணைக்கயல்-அட்டமங்கலத்தொன்று, இராசசின்னத்தொன்று.
இணைக்கல்லை - பரிமாறின இரட்டையிலை.
இணைக்குப்போதல் - இணையாகப்போதல்.
இணைக்குறளாசிரியப்பா - அகவற்பாவுளொன்று, அஃது ஈற்றடியு முதலடியுமலாவொழித்து நடுவடிகளுளொன்றும்பலவும் ஒருசீரும் பலசீருங்குறைந்து வருவது.
இணைதல்-இசைதல், சேர்தல், சையோகஞ்செய்யல், பொருந்தல்.
இணைத்தல் - உவமித்தல், சேர்த்தல், தொடுத்தல்.
இணைப்பு-இசைப்பு, சேர்ப்பு.
இணைமணிமாலை - ஓர்பிரபந்தம், அஃது வெண்பாவும் அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக விணைத்து வெண்பாவகவலிணைமணிமாலையெனவும் வெண்பாக்கலித்துறையிணைமணிமாலையெனவும் நூறுநூறு அந்தாதித்தொடை நான்கானும்பாடுவது.
இணைமுரண்
இணைமுரண்டொடை } முதலிருசீர்க்கண்ணுமுரண்வருவது.
இணைமோனை
இணைமோனைத்தொடை } முதலிருசீர்க்கண்ணுமோனைவருவது.
இணையசை-நிரையசை.
இணையடி-உபயபாதம், ஓரலங்காரம், அஃதுஇருசீரொன்றுயவருதல்.

*இணையிணை-பலவானவிணை.
இணையல்-இணைதல்.
இணையளபெடை } முதலிரு சீர்க்
இணையளபெடைத்தொடை } கண்ணுமளபெடை வருவது.
*இணையாவினைக்கை-ஒற்றைக்காய்.
இணையியைபு-அடிகளினீற்றசை யிரண்டுமொத்துவருவது.
இணையெதுகை } முதலிரு
இணையெதுகைத்தொடை } சீர்க்கண்ணுமெதுகைவருவது.
இணையெழுத்து-போலியெழுத்து.
இணைவிழைச்சு - கற்பின்மையாய்க் கொள்ளுமிச்சை, காமம், ஸ்த்ரீ புருஷரிருவர்க்குமொத்தவின்பம்.
இணைவு-ஒன்றிப்பு, கலப்பு, சேர்மானம், புணர்ச்சி.
இண்டஞ்செடி-இண்டு, அது செவ்விண்டு வெள்ளிண்டு என இருவகை.
இண்டர் - இடையர், சினேகர், சுற்றம்.
இண்டு-ஈகைக்கொடி, சிங்கிலிச்செடி.
இண்டை-ஈகைக்கொடி, தாமரை, மாலை, முல்லை, புலிதொடக்கி.
இதங்குதம்-இதாகிதம், நவ்வுசுவ்வு,
இதணம் } அட்டாலை, காவற்பரண், ப
இதண் } ரன்.
இதமித்தல்-ஒன்றித்தல்.
இதமியம்-இதப்படுதல், இனிமை, திருத்தி.
இதம் - இனிமை, உரிமை, சொல், நன்மை.
இதம்பண்ணல்-இன்பஞ்செய்யல்.
இதயம்-மனம்.
இதரபதார்த்தம்-வேறுவஸ்துக்கள்.
இதரபதார்த்தானவச்சின்னவான்மா - தேகப்பிணிப்பில்லாதவாத்துமா, மறுமைக்கடுத்தவாத்துமா.
இதரம்-அழிவு, அன்னியம், ஈனம், ஓர்மருந்து, கீழ்மை, தீங்கு, பாதரசம் வித்தியாசம்.
இதரயோகவிவச்சேதம்-பிரிநிலை.
இதரர்-அன்னியர் கீழ்மக்கள்.
இதரவிதரம் } அன்னியோன்னியம்,
இதரேதரம் } இதரேதரவுவமை.
இதரேதரவுவமை - ஓரலங்காரம், அஃது பொருளொருக்கா லுவமையாய் உவமையொருக்காற் பொருளாயொருதொடர்க்கண்வருவது.
இதலை-கொப்பூழ்.
இதல்-கவுதாரி, காடை, சிவல்.
இதவு-இதம், முகமன்.
இதழவிழ்தல்-மலரல்.
இதழி-கொன்றை.
இதழ்-இலை, உதடு, கண்ணிமை, கதவினிலை, பனையேடு, பாளை, பூவிதழ்.
இதழ்குவிதல் - உதட்டைக்குவித்தல், கண்மூடுதல், மலர்மூடிக்கொள்ளல்.
இதழ்விள்ளல் - பேசல், மலரல், வாய்திறத்தல்.
இதள்-இரதம், சிறுதூறு.
இதாகிதம் - நன்மைதீமை, விருப்புவெறுப்பு.
இதார்த்தம்-எதார்த்தம்.
இதி - அத்தாட்சி, இப்படி, உறுதி, காரணம், பிசாசம்.
இதிகாசப்பிரியா-நைமிசாரணியர்.
இதிகாசம்-அறிவு, கலைஞானமறுபத்துநான்கிலொன்று, பழங்கதை, மேற்கோள்.
இதிகாசன் - சூதமாமுனி, வேதவியாசன்.
இதியாசம்-அறிவு, உதாரணம், கலைஞான மறுபத்து நான்கிலொன்று, பழங்கதை.
இது-இஃது, சுட்டுச்சொல்.
இதை - கலப்பை, காராமணி, புதுக் கொல்லை, மரக்கலப்பாய்.
இதைப்புனம்-புதுக்கொல்லை.
இத்தி - இச்சிமரம், கல்லால், துவர்ப்பத்திலொன்று.
இத்திநடையம்-நத்தை.
இத்தியாதி-இதுமுதலானவை.
இத்து } காவட்டம்புல்.
இத்துரா }
இத்துரு-ஈயமணல், காவட்டம்புல், வங்கமணல்.
இத்துவரம்-எருது.
இத்துவரன்-நீசன்.
இத்துவரி-வியபிசாரி.
இத்தை-முன்னிலையசைச்சொல்.
இந்தம்-புளியமரம்.
இந்தம்பரம்-நீலோற்பலம்.
இந்தரீ-இராகு.

இந்தளம்-ஓர்பண், தூபக்கால்.
இந்தனம்-காடு, சுவாலை, நறும்புகை, மேல், விறகு.
இந்தனோடை-உத்தரீயம்.
இந்தா - இங்கேவா, இதைவாங்கிக் கொள்.
இந்தி-இலக்குமி, பூனை.
இந்திகோபம்-ஈயம்.
இந்தியம்-இந்திரியம், புலன்கள்.
இந்திரகம்-சங்கமண்டபம்.
இந்திரகரணம்-மூன்றுநேரசை கூடிய சீர், அஃது இயமானகண மெனவு ம்படும்.
இந்திரகீலம்-மந்தரமலை.
இந்திரகுஞ்சரம்-இந்திரன்யானை.
இந்திரகோபம்-தம்பலப்பூச்சி.
இந்திரசத்தி-இந்திராணி.
*இந்திரசாபம்-வானவில்.
இந்திரசாலம்-அற்புதங்களைக் காட்டும் வித்தை, எத்து, ஓர்நூல், கலைஞான மறுமத்துநான்கினொன்று.
இந்திரசாலி - அழிஞ்சில், இந்திரசால வித்தைக்காரன்.
இந்திரசித்து-இந்திரனைச் சயித்தவன், இராவணன்மகன், கருடன், கிருஷ்ணன்
இந்திரசிற்பம்-சிற்பநூலினொன்று
இந்திரசுகந்தம்-நன்னாரி.
இந்திரசுரசம்-நொச்சில்.
இந்திரசுதன்-அருச்சுனன், வாலி.
இந்திரதனு-வானவில்.
இந்திரதிசை-கிழக்கு.
இந்திரநாள்-கேட்டை.
இந்திரநீலம்-ஓரிரத்தினம்.
இந்திரபதம்-தேவலோகம்.
இந்திரபம்-பாலை, வெட்பாலை.
இந்திரபாஷாணம்-வைப்புப்பாஷாண முப்பத்திரண்டினொன்று.
இந்திரபிரகாணம்-இடியேறு.
இந்திரபுசிப்பி } வெங்தோன்றி.
இந்திரபுஷ்பம் }
இந்திரப்பிரஸ்தம் - பாண்டவர்நகரம், அது பழய டில்லிநகரம்.
இந்திரப்பிரியம் - பொதியமலையிலுண் டானமஞ்சணிறமுள்ளசந்தநம்.
இந்திரமாசாலம் } இந்திரசாலம்.
இந்திரமாஞாலம் }

இந்திரம்-ஆத்துமா, இந்திரியம், இராகடப்பமரம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று,நவ கண்டத்தொன்று, மாயம், மேன்மை, வண்டு.
இந்திரயாணி-இந்திராணி.
*இந்திரர்-தேவர்.
இந்திரலிகூட்டம்-அமாவாசி.
இந்திரலோகேசன்-இந்திரன்.
இந்திரவம்-கருங்குவளை.
இந்திரவல்லி-கொற்றான், முடக்கொற்றான், பிரண்டை.
இந்திரவாசம் } நெய்தல்.
இந்திரவாமம் }
இந்திரவாருணி-பேய்த்தும்மட்டி.
இந்திரவிகூடல்-அமாவாசி.
இந்திரவியாகரணம் - இந்திரன்செய்த ஓர்ஸம்ஸ்க்ருத இலக்கணம்.
இந்திரவில்-வானவில்.
இந்திரனூர்-பொன்னாங்காணி.
இந்திரன்மைந்தன்-அருச்சுனன், சயந்தன்.
இந்திரன்-கடவுள், தலைவன், தேவேந்திரன், மிருகசீரிடம், வாசவன்.
இந்திராட்சி-பார்வதி.
இந்திராணி - இந்திரன்மனைவி, நொச்சில்.
இந்திராணிகை-நொச்சிமரம்.
இந்திராணிப்பூ-கையணியினோருறுப்பு
இந்திராபரசன்-உபேந்திரன்.
இந்திராயுதம்-கருங்கட்குதிரை, வச்சிராயுதம், வானவில்.
இந்திராரி-இராக்கதன்.
இந்திராவரசன் } விட்டுணு.
இந்திரானுசன் }
இந்திரி-காந்தம், கிழக்கு, நன்னாரி.
இந்திரியகிராமம்-பஞ்சேந்திரியம்.
இந்திரியகோசரம்-புலனுக்கெட்டியது
இந்திரியக்காட்சி-கண்முதலிய புலனாலறிதல்.
இந்திரியத்துவாரம்-பொறிவாயில்.
இந்திரியநிக்கிரகம்-இந்திரியமடக்கல்.
இந்திரியநுகர்ச்சி } ஐம்புலனுகர்ச்சி.
இந்திரியபோகம் }
இந்திரியப்பிரத்தியட்சம் -பஞ்சேந்திரியக்காட்சி.
இந்திரியம்-சுக்கிலம், தாது, பஞ்சவிந்திரியம், பொறி.

இந்திரியவம்-வெட்பாலை.
இந்திரியவருக்கம்-பஞ்சேந்திரியம்.
இந்திரியவிப்பிரதிபத்தி - திரிப்புக்காட்சி.
இந்திரியாசங்கம்-அனுபவவெறுப்பு.
இந்திரியாயதனம்-உடல்.
இந்திரோகம் } வெட்பாலை.
இந்திரோபம் }
இந்திரோயம்-வெட்பாவட்டை.
இந்திரை-அரிதாரம், இலக்குமி.
இந்திரைகேள்வன்-திருமால்.
இந்திரைக்குமூத்தாள்-மூதேவி.
இந்தீவரம்-கருங்குவளை, கருநெய்தல்.
இந்தீவரன்-விஷ்ணு.
இந்து-இந்துப்பு, எட்டி, கரடி, கரி, கௌரிபாஷாணம், சந்திரன், சிந்துநதி, பச்சைக்கருப்பூரம்.
இந்துகமலம்-வெண்டாமரை.
இந்துகாந்தம்-சந்திரகாந்தக்கல்.
இந்துசனகம்-சமுத்திரம்.
இந்துசேகரன்-சிவன்.
இந்துதலம்-சந்திரன்கலை.
இந்துதேசம்-சிந்துதேசம்.
இந்துஸ்தானம் } ஓர்பாடை.
இந்துஸ்தானி }
இந்துபம்-மிருகசீரிடம்.
இந்துபுத்திரன்-புதன்.
இந்துப்பு-ஓர்மருந்துச்சரக்கு.
இந்துமதி-பூரணை.
இந்துரத்தினம்-முத்து.
இந்துரம்-எலி.
இந்துரவிகூட்டம்-அமாவாசியை.
இந்துரு-பெருச்சாளி.
இந்துரேகை } சந்திரன்கலை.
இந்துலேகை }
இந்துலோகம்-வெள்ளி.
இந்துவாரி - தண்ணீர்மிட்டான், சாத்தாவரி.
இந்துழி-பெருங்காயம்.
இந்துளம்-கடப்பமரம், நெல்லி.
இந்துளி-நெல்லி, பெருங்காயம்.
இந்துள்-நெல்லி.
இந்தூறு-இலந்தை.
இந்தோளம்-ஊசல், ஓரிராகம்.
இந்நாள்-அந்நியநாள், இன்று.
இபங்கம்-புளிமா.
இபம்-மரக்கேடு, யானை.
இபபாலகன்-யானைப்பாகன்.
இபவ-விபவ.
இபேரமம்-பதினான்குவயதுள்ளயானை.
இப்பந்தி-உலோபி, பலவீனன், பேடி, வகைதெரியாதவன்.
இப்பந்தியாடு-ஓர்வகையாடு.
இப்பர்-இடையர், உழவர், செட்டிகள், வைசியர்பொது.
இப்பவம்-இப்பிறப்பு.
இப்பால்-இந்தப்பக்கம், இனிமேல்.
இப்பி-சங்கு, சிப்பி
இமகரன்-சந்திரன்.
இமகிரி-இமாசலம்.
இமசானு-இமயம்.
இமபடி-சூரியன்.
இமப்பிரவை-ஏழ் நரகவட்டத்தொன்று, அஃது குளிர்நிலம்.
இமம்-உறைந்தபனி குளிர், சீதளம், பொன்.
இமயம்-இமயமலை, பொன்மலை.
இமயவில்லி-சிவன்.
இமலம்-மரமஞ்சள்.
இமவாலுகை-பச்சைக்கருப்பூரம்.
இமவான்-மலையரசன்.
இமாசலம் } இமயமலை.
இமாலயம் }
இமிசை - எளிமை, கொல்லுதல், சங்கையீனம், வருத்தம்.
இமிர்தல்-ஒலித்தல், முரிதல், மொய்த்தல்.
இமில்-எருத்திமேனரி, குட்டேறு.
இமிழ் - இனிமை, இமிழென்னேவல், ஒலி, பறை.
இமிழ்தல்-இனிதாதல், ஒலித்தல், கக்குதல்.
இமிழ்த்தல்-ஒலித்தல், கட்டல், கொப்பளித்தல்.
இமை - அற்பம், இமைப்பொழுது, இமையென்னேவல், கண்ணிதழ், கரடி, மயில்.
இமைகொட்டல்-இமைத்தல்.
இமைக்குழிவு-கண்ணில் ஓர்வித குத்தல்நோய்.
இமைத்தல் - ஒளிசெய்தல், கண்ணிமைத்தல்.
இமைப்பு-இமைத்தல், இமைப்பொழுது, விளக்கம்

இமைப்பொழுது-கணப்பொழுது.
இமையம்-இமயம்.
இமையவர்-வானோர்.
இமையவர்வேந்தன்-இந்திரன்.
இமையில்-கருடன்.
இமையோர்-இமையவர்.
இம்பர்-இவ்விடம், இவ்வுலகம்.
இம்பி-கருந்தினை.
இம்பூறல்-ஓர்சாயவேர், இது இராமேச்சுரத்தில்அதிகமாய்விளைகிறது,ஆதலின்இராமேச்சரவேரென்றும்பேர்.
இம்பூறற்சக்களத்தி-ஓர்பூடு.
இம்மடி-யானை.
இம்மி-அற்பம், ஓர்கணக்கு,அது பத்துலட்சத்து எழுபத்தையாயிரத்திருநூறில்ஓர்பாகம், நுண்மை, புலம், பொன்மை, மத்தங்காய்ப் புல்லரிசி.
இம்மெனல் - அநுகரணவோசை, விரைவின்குறிப்பு.
இம்மை-இப்பிறப்பு.
இயக்கம்-அசைதல், இயங்குதல், செய்குதல், நடமாடுதல், பலம், பாக்கியம்,பிரகாசம், பெருமை,போதல், மிகுதி,வடதிசை, வழி.
இயக்கர்-கந்தருவர்.
இயக்கர்கோமான்-குபேரன்.
இயக்கன்-கந்தருவன், குபேரன், நாய்.
இயக்கி-ஒலிப்பித்து, கந்தருவஸ்திரீ,தருமதேவதை.
இயக்கினி-கண்டங்கத்திரி.
இயக்கு-இயக்கென்னேவல், செலவு, நடை.
இயக்குதல் - உழத்தல், ஒளிசெய்தல், செலுத்துதல், தங்கல், நடத்தல்.
இயக்குரோதம்-ஆல்.
இயங்காத்திசை-சூனியதிசை.
இயங்காத்திணை-நடையில்லது.
இயங்கு-இசங்கு, இயங்கென்னேவல், ஓர் முட்செடி.
இயங்குதல்-இளைத்தல், உலாவல்,ஒளிசெய்யல், தங்கல், நடத்தல்.
இயங்குதிசை-பூரணதிசை.
இயங்குதிணை-நடையுள்ளது.
இயங்குநர்-வழிபோவார்.
இயசு } இரண்டாம்வேதம்.
இயசுரு }
இயத்தனம்-கருவி, பாத்திரம்.
இயத்தினம்-ஆயத்தம், கருவி, முயற்சி.
இயந்திரம்-ஆலை, சக்கரம், சூத்திரம், தேர், மதிலுறுப்பு.
இயந்திரி-இத்தி.
இயந்தை-மருதயாழ்த்திறம். [ன்று.
இயமதூதி - பாம்பினச்சுப்பல்லிலொ
இயமபடர்-இயமதூதர்.
இயமம் - அட்டயோகத்தொன்று, அஃதுஇச்சை களவுகொலைபொய் இவற்றினீங்கிப் புலனடைக்கியிருத்தல்.
இயமன் - அரவினச்சுப்பல்லிலொன்று, கூற்றுவன்.
இயமானகணம்-நேரசை மூன்றடுத்து வருவது.
இயமானன் - உயிர், காரியத்தலைவன், யாகஞ்செய்விப்போன்.
இயமான்-எசமான்.
இயம்-ஈ, ஒலி, சொல், மிறுதாறுசிங்கி, வாச்சியம்.
இயம்பல் - எவ்வகைவாச்சியமு முழக்கல், ஒலித்தல், சொல்லல், பழமொழி.
இயம்புதல்-சொல்லுதல், வேட்கை யுவமை, ஓரலங்காரம். அஃது பொருளை யின்னதொன்றென்று சொல்லவேட்கின்றதென்னுள்ள மெனக் கூறுவது.
இயலடி-இயற்சீரான்வருமடி.
இயலல்-இசைதல், எலுதல், கூடியதாயிருத்தல், பொருந்தல், விதிக்கப்படல்.
இயலாமை-கூடாமை.
இயலி-உலாவி.
இயலுவமம் - அதீதம்போலுஞ்சாக்காடெனவருவது, பண்புவமை.
இயல்-இசை, இயலென்னேவல், இயற்றமிழ், இலக்கணம், ஒழுங்கு, ஒத்து, குணம், சாயல், நடை, பகுதி.
இயல்பகத்திணை - அவ்வவ்வியல்பைக் கொண்டுபொருளைக்காட்டுவது.
இயல்பளவை - நால்வரிலொருவன் கள்வனெனில் மற்றையர் கள்வரல்லரொன்றுணர்தல்.
இயல்பு-ஒழுக்கம், குணம், சுபாவம், தகுதி, பெலன்.

இயல்புகேடு-பலவீனம்.
இயல்புக்காட்சி-காட்சிபேதத்தொன்று
இயல்புப்புணர்ச்சி - எழுத்துவிகாரமில்லாதபுணர்ச்சி.
இயல்பூ-வில்வம்.
இயல்பூதி-நாய்வேளை, வில்வம்.
இயல்பூபதி-வில்வம்.
இயல்பேது-ஒரளவை, அதுபலபொருள்குறித்த ஒருசொல்லாயினு மியல்பையுங் காரணத்தையுங்கொண்டொருபொருளைக் கருதுவது (உ-ம்) மா.
இயவம்-ஓர்தானியம், நெல்.
இயவர் - கீழ்மக்கள், சண்டாளர், தோற்கருவியாளர், வாச்சியக்காரர்.
இயவனர் - கம்மாளர், சித்திரக்காரர், சோனகர்.
இயவானி-ஓமம்.
இயவு-ஊர், காடு, புகழ், வழி.
இயவுள் - தலைவன், தெய்வம், புகழாளன்.
இயவை-துவரை, தோரைநெல், வழி.
இயறல்-போதல், முத்தி.
இயற்கை-ஏது, குணம், சுபாவம், தகுதி, தட்டுமுட்டு, திராணி, பாக்கியம் முறைமை, வழக்கம்.
இயற்கைஞானம்-சுபாவஞானம்.
இயற்கைப்புகழ்ச்சியணி - இயற்கையையே யுவமையாகக்கூறல், (உ-ம்) கன்னன்கொடையே கொடை.
இயற்கைப்புணர்ச்சி-களவுப் புணர்ச்சியினொன்று, அதுதலைவனுந்தலைவியு முயற்சியின்றிக்கூடுதல்.
இயற்கைப்பொருள்- இயல்புப்பொருள்
இயற்கையறிவு-சுயவறிவு.
இயற்கையுணர்வுடைமை - கடவுளெண்குணத்தொன்று, அதுபூருவஞானம்.
இயற்கைவினைக்குறிப்பு - ஆக்கச்சொல் வேண்டாதியற்கைச்சொல்லாய் நிற்கும் வினைக்குறிப்பு.
இயற்சீர்-ஆசிரியவுரிச்சீர்.
இயற்சீர்வெண்டளை- ஆசிரியவுரிச்சீர்ற்றளை வருஞ்சீர்முதலசையோடொன்றுறாதுநிற்பது.
இயற்சொல் - இயற்றமிழ், வழக்கச்சொல்.
இயற்படுத்துரைத்தல் - வழிப்படுத்திச்சொல்லல்.
இயற்பெயர் - காரணமின்றிவழங்கும்பேர்.
இயற்றமிழ் - செந்தமிழ், வழக்குத்தமிழ்.
இயற்றல்-எழுதல், செய்தல்.
இயற்றளை-ஆசிரியத்தளை.
இயற்றனம்-கருவி, பாத்திரம்.
இயற்றி-முயற்சி.
இயற்று - இயற்றென்னேவல், பாத்திரம்.
இயற்றுதல்-செய்தல், நடத்தல், விதித்தல்.
இயற்றுதற்கருத்தா - வினைமுதற் கருத்தா.
இயற்றும்வினை-தன்வினை.
இயற்றும்வினைமுதல் - செய்வினைக்கருத்தா.
இயனம்-மரமேறிகளின்கருவியுறை.
இயனிலையுருவகம்-உருவக வலங்காரத்தொன்று, அஃது ஒன்றனைக்கம்பலவற்றையுமுருவகித்து முருவகியாது முறைத் தங்கியையவுருவித் துரைப்பது.
இயன்மொழிவாழ்த்து-ஓர்பிரபந்தம்.
இயாகதம்-சிற்றகத்தி.
இயாகம்-கொன்றை, பாத்திரம், வேள்வி.
இயாகாதிபதி-இந்திரன்.
இயாதகம்-அத்தி.
இயாதம் - தோட்டியால் யானையைச் செலுத்துகை, யானைத்தோட்டியின் பிடர்.
இயாழ்-ஓரிசைக்கருவி.
இயுசாவியம்-கொன்றை.
இயை - இசைப்பு, இயையென்னேவல், புகழ்.
இயைதல்-இணங்கல், பொருந்தல்.
இயைத்தல் - இணக்கல், பொருத்தல், முறைப்படுத்தல்.
இயைபணி-ஓரலங்காரம்.
இயைபிசையணி - பற்பலவசனத்திற்று மொழிகடொறுமி னொப்புமையா னியையக்கூறுதல்.
இயைபிலுருவகம்-ஓரலங்காரம், அஃது பல பொருளையுந் தம்முளொன் றோடொன்றியை யாமலுருவகஞ் செய்வது.

இயைபின்மையணி-ஓரலங்காரம், அஃது ஒருபொருளையே யுபமானமாகவும் உபமேயமாகவுஞ் சொல்வது (உ-ம்) சேயிழையாள் செவ்வியிறைற் றானே யுவமைதனக்கு.
இயைபு-இசைப்பு, இணக்கம், செய்யுளிலோருறுப்பு, பொருத்தம்.
இயைபுத்தொடை - அடிகளினிறுதிதோறு மோரெழுத்தே வருந் தொடை.
இயைபுருவகம் - ஓரலங்காரம் அஃது பலபொருளையு முருவகஞ்செய்யுளி அவை தம்முளொன்றோடொன் றியைபுடையவாக வைத்து உருவகஞ் செய்வது.
இயைபுளன்-புகழாளன்.
இயைபுவண்ணம்-இடையெழுத்து மிக்குவருவது.
இயைபுவனப்பு - செய்யுள்வனப்பெட்டிலொன்று, அஃது இடைமெலியினவொற்றீற்றிற்பயின்றுவருவது.
இயைமே-வாழை.
இயைய-உவமையுருபு (உ-ம்) என்று இயைய.
இயைவு-இசைவு, இணக்கம், பொருத்தம்.
இரகசியத்தானம்-மூலத்தானம்.
இரகசியம் - அந்தரங்கம், பெண்குறி, மறைவு.
இரகம்-சூரியகாந்தம்.
இரகிதம்-இட்டம், கைவிடுதல், நீங்கியிருத்தல், விடுதல்.
இரகு-இராமனிரண்டாம்பாட்டன்.
இரகுநாதன்-இராமன்.
இரகுவமிசம்-இரகுவின் வமிசாவளி, காளிதாசன்செய்த ஓர்காப்பியம்.
இரகுவரன்-இராமன்.
இரக்கச்சொல்-பரிதாபமொழி.
இரக்கம்-உணர்வு, உருக்கம், ஒலி, கிருபை, துன்பம், பிச்சை, மனவுருக்கம்.
இரங்கல்- அழுதல், உருகல், ஒலித்தல், துன்பப்படல், பரிதபித்தல்.
இரங்கல்விலக்கு-ஓரலங்காரம், அஃது இரக்கந் தோன்றக்கூறி விலக்குவது.
இரசகந்தபாஷாணம்-சாதிலிங்கம்.
இரசகம்-இரேசகம்.
இரசகற்பூரம்-ஓர்மருந்து, கிண்ணிக்கற்பூரம்.
இரசகன்-வண்ணான்.
இரசகுளிகை-இரும்பைப் பொன்னாக்குமருந்து.
இரசகேசரம்-கருப்பூரம்.
இரசக்கட்டு-சூதக்கட்டு.
இரசசானு-இருதயம், முகில்.
இரசசிந்தூரம்-ஓர்செந்தூரம்.
இரசதம்-அரைப்பட்டிகை, இரத்தம், கழுத்தணி, பொன், யானைத்தந்தம் வெண்மை, வெள்ளி.
இரசதாது-இரதம்.
இரசதாளி-ஓர்வாழைமரம்.
இரசநாதம்-இரதம்.
இரசநாயகன்-சிவன்.
இரசபஸ்பம்-ஓர்மருந்து.
இரசபலம்-தென்னமரம்.
இரசபுட்பம்-இரசபஸ்மம்.
இரசமணி-இரசத்தால்கட்டியமணி.
இரசமாதா-ஓர்பாஷாணம்.
இரசமாத்திரை-இரசகுளிகை.
இரசம்-சாறு, சுக்கிலம், சுவை, சூதம் தாளி, நஞ்சுநீர், பாதரசம், பூந்தாது, பூப்பம், மதம், மா, மிளகுநீர்.
இரசலிங்கம்-சாதிலிங்கம்.
இரசவாதம்-இரும்பைப் பொன்னாக்குதல், கலைஞான மறுபத்து நாகிலொன்று.
இரசவாழை-பேயன்வாழை.
இரசனம்-ஓர்பொறி, பல், சுவை, தொனி, வன்னம்.
இரசனை-அரத்தை.
இரசனி-அவுரி, இராத்திரி, பயின்மஞ்சள்.
இரசனிகரன் } சந்திரன்.
இரசனீகரன் }
இரசனீசலம்-பனி.
இரசனை-அணிவகுப்பு, அலங்கரித்தல் இரசிப்பு, சாறு, சுவை, நா, மயிர்கோதல், மாதரிடையணி, மாலைகோத்தல், வாசகவிணைப்பு.
இரசாதலம்-கீழேழுலகிலொன்று.
இரசாதிபன்-இரசவஸ்துக்கட்டதிகாரி.
இரசாபாசம்-அழிவுஇரசமின்மை.
இரசாயனம் - இரசவாதம், ஓர்மருந்து, காயசித்திமருந்து, நஞ்சு, மோர்.

இரசாயன்னி-கருடன்.
இரசாலம்-கரும்பு, பலாமரம், மாமரம், கோதும்பை.
இரசிகம் - குதிரை, தூர்த்தத்தனம், யானை.
இரசிகன்-தூர்த்தன்.
இரசிகை - தூர்த்தி, நா, மாதரிடையணி.
இரசிதசுத்தி-ஈயம்.
இரசிதநாள்-சுக்கிரவாரம்.
இரசிதம்-இடி, ஒலி, வெள்ளி, வைப்புப்பாஷாண முப்பத்திரண்டினொன்று.
இரசித்தல்-உருசித்தல்.
இரசிப்பு-இனிமை, உருசி.
இரசுனம்-உள்ளி.
இரசேந்திரம்-இரசம், பரிசனவேதி.
இரசேந்திரியம்-நாக்கு.
இரசோகரன்-வண்ணான்.
இரசோபலம்-இருள், முத்து.
இரசோரசம்-இருள்.
இரச்சு-கயிறு, சடை, முடிச்சு.
இரச்சுலம்-கவண்.
இரச்சுவம்-குற்றெழுத்து.
இரச்சை-கயிறு.
இரஞ்சகம்-பிரியம், திரிவாய்ப்பெட்டி.
இரஞ்சகன்-செய்பவன், பிரியவான், வண்ணக்காரன், விளக்குவோன்.
இரஞ்சனம் - செஞ்சந்தநம், திரிவாய் மருந்து, பிரியம்.
இரஞ்சிதம்-இன்பம், பிரியம், விளக்கம்.
இரஞ்சிதவஞ்சி - மனதைக்கவரும்படியான அழகுள்ளஸ்திரீ.
இரட்சகத்தா-காவற்கடவுள்.
இரட்சகம்-இரட்சணை.
இரட்சகன்-காக்கிறவன், மீட்புச்செய்பவன்.
இரட்சணை-காவல், மீட்பு.
இரட்சண்ணியம்-இரட்சிப்பு, காத்தல்.
இரட்சண்ணியன்-இரட்சகன்.
இரட்சம்-இரட்சை.
இரட்சாபந்தனம் - அட்சரவியந்திரம், காப்பு.
இரட்சிதம்-காப்பாற்றல்.
இரட்சித்தல்-காத்தல், மீட்குதல்.
இரட்சிப்பு } காவல், மீட்பு.
இரட்சை }
இரட்டர்-வைசியர்.
இரட்டல்-அசைத்தல், இரட்டித்தல், ஒலித்தல், பணிமாறுதல்.
இரட்டாங்காலி-இரட்டைமரம், ஓரடியினிற்கு மிருமரம்.
இரட்டி - இரட்டியென்னேவல், இரண்டுபங்கு, ஓர்சாதி.
இரட்டித்தல் - இரட்டைப்படவெண்ணல், இரண்டாமுறையுழுதல், இரண்டுபங்காதல், இரண்டுபடுதல், ஒவ்வாமை.
இரட்டிப்பு-இரட்டித்தல்.
இரட்டியர்-இடையர், வைசியர்.
இரட்டு - இரட்டென்னேவல், இரட்டை, இரட்டைநூற்புடவை, ஒலி, ஓர்சாதி.
இரட்டுதல் - இரட்டித்தல், ஒலித்தல், வீசுதல்.
இரட்டுமி-ஓர்வாத்தியம்.
இரட்டுறமொழிதல்-இரண்டருத்தம்விளையச்சொல்வது.
இரட்டை-இரண்டொன்றானது, சோடு, பாடிவிச்சி, மிதுனவிராசி.
இரட்டைக்கிளவி-இருசொல்லடுக்கிவரல் (உ-ம்) கலகல.
இரட்டைத்தொடை - அடி முழுதும் வந்தமொழியே வருவது.
இரட்டைமணிமாலை - ஓர் பிரபந்தம், அஃது வெண்பாவுங் கலித்துறையு மிருபஃதந்தாதித்தொடையான்வருவது.
இரட்டையர் - இரட்டைப்பேறாகப் பிறந்து சிறப்படைந்த கவிராயர் இருவர்.
இரணகளம்-போர்க்களம்.
இரணகாளம் - போர்நிறுத்தலூதுங்காளம்.
இரணக்கொடி-போர்க்கொடி.
இரணங்கொல்லி-ஓர்பூடு.
இரணசங்கம் - போர்வென்றாதுஞ்சங்கு.
இரணசின்னம்-படைக்கலம், படைச்சனம்.
இரணசுக்கிரன்- கண்ணோயுளொன்று.
இரணசூரன்-யுத்தவீரன்.
இரணதாரை-போர்புரியவூதுந்தாரை.
இரணதூரியம்-போர்ப்பறை.

இரணதோரணம்-பகைவரை வெட்டி அவர்கள்தலையைத்தோரணம் கட்டிப்பிடித்தல்.
இரணத்துருவம்-கிரகபுடத்திற் கழிக்கப்படுவது.
இரணத்தொடை - செய்யுட்டொடையிளென்று, அதுசொல்லானேனும் பொருளானேனு மறுதலைப்படத்தொடுப்பது.
இரணபரீட்சை-சத்திரபரீட்சை.
இரணபாதகம்-கொலை, நம்பிக்கைத்துரோகம்.
இரணபாதகன்-கொலைபாதகன்.
இரணபேரி
இரணபேரிகை } போர்ப்பறை.
இரணமத்தம்-யானை.
இரணமாலை-பகைவர்குடலைமாலையாகவணிதல்.
இரணமுடி-பகைவரைவென்று போர்க்களத்திற் பூவைத்தலையிலே முடித்தல்.
இரணமுழுக்கு - உதிர முடலெங்குந் தோயும்படி போர்செய்யுதல்.
இரணமோசனம்-அழிவு.
இரணம்-அரவம், இரை, உணவு, உப்பளம், ஒலி, கடன், சதுப்புநிலம், பகை,பல்; புண், பொன், போர், வஞந்தரம், வேட்டை.
இணரங்கம்-போர்க்களம், யானைக்கொம்பினடி.
இரணவிரணம்-இரணத்தழும்பு, கொதுகு, துக்கம்.
இரணவீரம் - தன்வேந்தர்தடுத்துமஞ்சாது போர்புரியுஞ்சௌரியம்.
இரணவைத்தியம்-சத்திரவைத்தியம்.
இரணங்கணம்
இரணசிரம் } போர்க்களம்.
இரணபியோகம்-படையெழுச்சி.
இரணிபகருப்பன்-பிரமா.
*இரணியதானம்-சொர்னதானம்.
இரணியநேரம்-இச்சாஞானக் கிரியைகளையுடையோன், இரணியன்சொல்லப்பட்டவேளை அதுமாலைநேரம்.
இரணியம்-பொன்.
இரணியன்-ஓரசுரன், இவன் பிரகலாதாழ்வான்தந்தை, துவாதசாதித்தரிலொருவன்.
இரணியாக்கன்-இரணியன்தமயன், ஓரசுரன்.
இரணை-இரட்டை.
இரண்டகம் - இருமனம், நம்பிக்கைத்துரோகம்.
இரண்டகவாதி-நம்பிக்கைத் துரோகி.
இரண்டடியெதுகை - முதலிரண்டடியோரொதுகையாய் மற்றை யடிகளோரொதுகையாயேனும் பலவெதுகையாயேனும் வருவது.
இரண்டன் - துர்க்குணன்.
இரண்டாக்கியம்-இரண்டகம்.
இரண்டாந்தரம்-இரண்டாம்முறை. நடுத்தரம்.
இரண்டாம்பாட்டன்-மூதாதை.
இரண்டிகை-இண்டை.
இரண்டு-உபயம், புரளித்தனம்.
இரண்டுக்குற்றது-இதுவோ வதுவோ வென்கை,சாத்தியமோ வசாத்தியமோவென்பது.
இரண்டுபடுதல்-ஐயுறல், வேறுபடுதல்
இரண்டுபண்ணுதல் - புரளித்தனம்பண்ணுதல், வேற்றுமைபண்ணுதல்.
இரதகசதுரகபதாதி - இரதம் யானை குதிரை காலாள் சேர்ந்த சைன்னியம்.
இரதகம்-இத்தி.
இரதகீலம்-நாய்.
இரதகுண்டகன்-தூர்த்தன்.
இரதகுரு-கணவன்.
இரதகூசிதம்-புணர்ச்சிவெறுப்பு.
இரதசந்தியாகம்-செந்தாமரை.
இரதசாரதி-தேர்ப்பாகன்.
இரதசாரி-தேரோட்டம், வேசி.
இரததன்மாத்திரை-உருசியறிவு.
இரததாரி-காமாதுரன்.
இரதநாரீசம்-காமம், நாய், வேசி.
இரதபதம்-புறவு.
இரதபந்தம்
இரதபந்தனம் } சித்திரகவிகளிலொன்று.
இரதபரீட்சை-ஓர்வித்தை, கலைஞானமறுபத்துநான்கிலொன்று.
இரதபாதம்-தேருருள்.
இரதம்-அரைஞாண், அவயவம், இனிமை, இரசம், உடல். குணம், சத்ததாதுவிலொன்று அஃது உமிழ்நீர், சாத்தியம், சுவை, சூதம், தேர்,

பண்டி, பல், பாதம், புணர்ச்சி, மாமரம், வாகனம்
இரதயோனி-விபசாரி.
இரதவாழை-ஓர்வாழை.
இரதவிரணம்-நாய்.
இரதனம் - அரைஞாண், கிண்கிணி, பல்.
இரதன்-கண், கிளி.
இரதாங்கபாணி-விட்டுணு.
இரதாங்கம்-சக்கரம், சில்.
இரதாயனி-வேசி
இரதி-ஆசைப்பெருக்கம், இரத்தல், இலந்தைமரம், உருசி, காந்தள், காமம், கார்த்திகைப்பூ, நிறுக்கும் படிக்கல், பித்தளை, புணர்ச்சி, பெண், பெண்யானை, மதன்றேவி, வேண்டல்.
இரதிகாதலன்-மன்மதன்.
இரதிகாந்தன்-தாமரை, மன்மதன்.
இரதிகுகரம் } யோனி.
இரதிக்கிரகம் }
இரதிக்கிரியை } சுரதலீலை, புணர்ச்சி.
இரதிக்கிரீடை }
இரதித்தல்-அடக்குதல், இடுக்கண்படுதல், இழுக்குதல், உருசித்தல், மூடுதல், விரும்பல்.
இரதிபதி } காமன்.
இரதிபிரியன் }
இரதிமந்திரம்-யோனி.
இரதியாளர்-யாசகர்.
இரதிரமணன்-காமன்.
இரத்தகதசுரம்-இரத்தத்தை முறிக்கும்படியானசுரம்.
இரத்தகம்-செவ்வாடை.
இரத்தகாசம்-இரத்தம் கக்கும்படியான இருமல்நோய்.
இரத்தகுமுதம் } செந்தாமரை, செவ்வாம்பல்.
இரத்தகைரவம் }
இரத்தகோகனகம்-செந்தாமரை.
இரத்தக்கண்ணன்-கோபக்கண்ணன்.
இரத்தக்கலப்பு-உற்றவுறவு.
இரத்தக்கவிச்சு-இரத்தவெடில்.
இரத்தக்களப்பு - இரத்தமீறுகை, கருவம்.
இரத்தக்கிராணி-ஓர்வகை இரத்தபேதி.
இரத்தக்குலை-ஓர்நோய்.
இரத்தக்கொழுப்பு-இரத்தபுஷ்டி, கருவம்.
இரத்தக்கோமாரி-மாட்டுக்கு வருமோர்நோய்.
இரத்தசந்தனம்-செஞ்சந்தனம்.
இரத்தசந்தியாகம் } செந்தாமரை.
இரத்தசரோருகம் }
இரத்தசாகம்-செங்கீரை.
இரத்தசிருவம்-சிங்கம்.
இரத்தசூலை-சூதகவாய்வு.
இரத்தசெந்துகம்-நாங்கூழ்.
இரத்தச்சுரப்பு-இரத்தங்கன்றுதல், சரீரக்கொழுப்பு.
இரத்தஞ்சிந்துதல்-கொல்லுதல்
இரத்தஞ்சுண்டுதல்-இரத்தம்வற்றுதல், கொழுப்பேறுதல்
இரத்தட்சயம்-இரத்தகாசம்.
இரத்ததாது-செம்பு, செவ்வரிதாரம்.
இரத்ததுண்டம்-கிளி.
இரத்தத்தொடர்வு-இரத்தசம்பந்தம்.
இரத்தநரம்பு-உதிரநரம்பு.
இரத்தபலி - இரத்தஞ் சிந்தும்பலி, கொலை.
இரத்தபழம்-ஆலமரம்.
இரத்தபாஷாணம்-வைப்புப்பாஷாணம் முப்பத்திரண்டினொன்று.
இரத்தபாதம்-கிளி.
இரத்தபாரதம்-சாதிலிங்கம்.
இரத்தபாளம்-மூசாம்பரம்.
இரத்தபானம்-இரத்தம்பருகல்.
இரத்தபிண்டம்-சீனமல்லிகை.
இரத்தபித்தசூலை } இரத்தவாந்திநோய்.
இரத்தபித்தம் }
இரத்தபுட்பிகா-மூக்கிரட்டை.
இரத்தப்பசப்பு } இரத்தபுஷ்டி.
இரத்தப்பசுமை }
இரத்தப்பலி-இரத்தப்பிச்சை, இரத்தவுணவு.
இரத்தப்பழி-கொலைப்பழி.
இரத்தப்பிரமியம்-மூத்திரத்தோடு இரத்தம்விழுகிற ஓர் மேகநோய்.
இரத்தப்பிரவாகம்-இரத்தப்பெருக்கு.
இரத்தப்பிரவை - ஏழ்நரகவட்டத்தொன்று, அஃது இரத்தநிலம்.
இரத்தபீனசம்-மூக்கின்வழியாய் இரத்தம்விழுகிற ஓர்கபாலநோய்.
இரத்தப்புடையன் - கடித்தவுடன் கண் மூக்குவாய் வழியாய் இரத்தம் வருகிற ஓர்பாம்பு.

இரத்தமண்டலம்-செந்தாமரை.
இரத்தமண்டலி-கடித்தவுடன் துவாரங்கள்வழியாய் இரத்தம்வருகிற ஓர் விஷப்பாம்பு.
இரத்தமாரணம்-காவிக்கல்.
இரத்தமூலம் - இரத்தம்விழுகிற ஓர் மூலநோய்.
இரத்தம் - உதிரம், குங்குமப்பூ, சாதிலிங்கம், சிவப்பு, செம்பு, பவளம்.
இரத்தரோகம்-ஓர்நோய், கண்ணோயுளொன்று.
இரத்தல் - பிச்சைகேட்டல், வேண்டுதல்.
இரத்தவடி-வைசூரிக்குரு.
இரத்தவலிப்பு-இரத்தாநிக்கத்தால்வரும் இசிவு.
இரத்தவள்ளி-செவ்வள்ளிக்கிழங்கு.
இரத்தவற்கனம்-செம்பு.
இரத்தவாரி-சூதப்பெருக்கம்.
இரத்தவிந்து-இரத்தினத்திலுள்ளபொரிவு.
இரத்தவிரியன்-ஓர்விஷப்பாம்பு.
இரத்தவீசம்-மாதுளை.
இரத்தவெடில்-இரத்தமணம்.
இரத்தவெறி-ஆங்காரம், இரத்தங்குடித்தவெறி.
இரத்தாக்கம்-எருமைக்கடா, புறவம்.
இரத்தாக்கன்-குரூரன்.
இரத்தாசயம்-இரத்தந்தங்குமிடம்.
இரத்தாட்சி-அன்பத்தெட்டாவது வருடம்.
இரத்தாதாரம்-தோல்.
இரத்தாதிசாரம்-பிராந்திநோய்.
இரத்தாம்பரம்-சிவப்புப்புடவை.
இரத்தி-இத்தி, இலந்தை.
இரத்திரி-இத்திமரம்.
இரத்தினகருப்பம்-சமுத்திரம்.
இரத்தினக்கம்பளம் } உயர்ந்த சித்திரக்கம்பளம்.
இரத்தினக்கம்பளி }
இரத்தினசானு-மகாமேரு.
இரத்தினச்சுருக்கம்-ஓர்வைத்தியநூல், புகழேந்திப்புலவர்செய்த ஓர் உறுப்புவமைநூல்.
இரத்தினபரீட்சை - கலைஞானமறுபத்துநான்கினொன்று.
இரத்தினமாத்திரை-ஓர்குளிகை.
இரத்தினம்-மாமணிப்பொது.
இரத்தினாகரம்-கடல், மகோததி.
இரத்தினி - பிடிமுழம், முன்கைப்பேரெலும்பு.
இரஸ்து - படைகளுடைய போசனச்சாமான், வாழைப்பழம்.
இரத்துதல்-பேசலாலெழுமொலி.
இரத்தோற்பலம் - செங்குவளை, செந்தாமரை.
இரந்திரம்-குழி, சென்மலக்கினம், துவாரம்.
இரந்துணி } யாசிப்போன்.
இரந்துண்ணி }
இரப்பன்-யாசிப்போன்.
இரப்பாணன் } யாசகன்.
இரப்பாண்டி }
இரப்பாளன்-யாசிப்போன்.
இரப்பு-தரித்திரம், பிச்சை, மன்றாட்டு, யாசிப்பு.
இரப்புணி-இரப்போன்.
இரமடம்-பெருங்காயம்.
இரமணம் - இரம்மியம், காமச்சேட்டை, சுரதவிளையாட்டு, புணர்ச்சி.
இரமணன் - காந்தன், தலைவன், நாயகன்.
இரமணியம்-இரம்மியம்.
இரமதி-காகம், காமன், காலம், தூர்த்தன், மோட்சம்.
இரமம்-ஆசை.
இரமன்-காமன், நாயகன்.
இரமாபதி-திருமால்.
இரமாப்பிரியம்-தாமரை.
இரமித்தல்-சந்தோஷித்தல்.
இரமியம்-திருப்பதி, பூரணசந்தோஷம்.
இரமை-இலக்குமி, செல்வம், பழையாட்டி.
இரம்பக்கல்-குருந்தக்கல்.
இரம்பம்-ஈர்வாள், கத்தூரிமிருகம்.
இரம்பிவம்-மிளகு.
இரம்பை-இரம்பம், தேவலோகதாசி.
இரம்மியம் - பூரணசந்தோஷம்
இரலை-அச்சுவினிநாள், ஊதுகொம்பு, கருமான், கலைமான், புல்வாய்.
இரவச்சம் - இரத்தவினாலுண்டாகும் பயமுங்கூச்சமும்.
இரவணம் - ஒட்டகம், குயில், பரிகாசம்பண்ணுதல், வெண்கலம், வெப்பம்.

இரவணன்-ஒட்டகம்.
இரவதம்-குயில்.
இரவநுமதி - இராதோறும் வரும்சந்திரன்.
இரவலர்-ஏற்போர்.
இரவலன்-ஏற்பதில்வல்லோன்,
இரவலாளர்-யாசகர்.
இரவல்-மீண்டுந்தருவதாகக்கொள்கை, முகமாற்று, சொந்தமில்லாதது.
இரவறிவான்-கோழிச்சேவல்.
இரவாக்கல்-ஓரிரத்தினம்.
இரவி - சூரியன், மலை, மூக்கின்வலைத்துவாரம், வாணிகத்தொழில்.
இரவிகன்னம் - பூமிக்குஞ்சூரியனுக்குமுள்ளதூரம்.
இரவிகாந்தம்-சூரியகாந்தக்கல்.
இரவிகுலம்-சூரியவமிசம்.
இரவிக்கை-முலைக்கச்சு.
இரவிசான்-இரேவதி.
இரவிதிறமணி-சாதுரங்கபதுமராகம்.
இரவிபுடபுத்தி-சூரியனது உத்தம புடம்.
இரவிமது-வெள்ளி.
இரவிவிக்கேபம் - கிரகணத்திற்சூரியன் கிராந்திமார்க்கத்திற் சாய்ந்திருக்கை.
இரவு-இரத்தல்-இராத்திரி, பிச்சை, வறுமை.
இரவிக்குறி-களவுப்புணர்ச்சியி லிராக்காலஞ்சந்திக்க நியமிக்குமிடம்.
இரவுக்கை - மார்க்கட்டுச்சட்டை, முலைக்கச்சு.
இரவுத்திரம்-இரௌத்திரம்.
இரவுரவம்-இரௌரவம்.
இரவெரிமரம் - ஓர்மரம், சோதிவிருட்சம்.
இரவை - அணு, அற்பம், துப்பாக்கியிலிடுமீயச்சன்னம், மணிப்பொது, வச்சிரம்.
இரவோர்-யாசகர்.
இரவோன்-சந்திரன், யாசகன், வறியவன்.
இரளி-கொன்றை.
இரற்று-இரற்றென்னேவல், ஒலி.
இரற்றுதல்-ஒலித்தல்.
இரா-இரவு, இருத்தலைச்செய்யாவென்னு மஃறிணைப்பன்மைமுற்று, இருந்தென்னெச்சம்.
இராகசூத்திரம் - தராசுக்கயிறு, பட்டுநூல்.
இராகமெடுக்க-இராகமாலாபிக்க.
இராகம் - அன்பு, ஆசை, கீதம், சடத்தீயிறென்று, சிவப்பு, நிறம், மோகம், வித்தியாதத்துவமேழிறென்று.
இராகவன் - இரகுவம்சத்திற்பிறந்தவன், இராமன்.
இராகவி-பெருநெருஞ்சில்.
இராகவிணுடகம்-கொன்றை.
இராகவிராகம்-விருப்புவெறுப்பு.
இராகி-குரக்கன்.
இராகிக்கிராகம்-கிரணம்.
இராகு-கரும்பாம்பு, கோமேதகம்.
இராகுகாலம்-இராகுவின்காலம்.
இராகூச்சிட்டம்-உள்ளி.
இராகை - குட்டம், பருவமுடையாள், பூரணை.
இராக்கதம் - பெண்ணும்சுற்றமுமுடன்படாதுவலிதிற்கொள்ளுமமணம்.
இராக்கதர்-இராட்சதர்.
இராக்கதிர்-சந்திரன்.
இராக்காச்சல்-இரவில்காயுஞ்சுரம்.
இராக்கினி-இராசாத்தி.
இராசகம்-இராசகூட்டம்.
இராசகயம்-இராசயானை.
இராசகரம்-இறை.
இராசகலகம் - கொடுங்கோன்மை, படைக்குழப்பம்.
இராசகனி-எலுமிச்சைக்கனி.
இராசகாரியம்-அரசியல்.
இராசகிரி-வெள்ளைக்கிரி.
இராசகோலம்-இராசவேஷம். [நோய்.
இராசகோழை - இராசபயம், ஓர் கப
இராசசங்கம்-இராசசபை.
இராசசம்-இராசப்பிறப்பு.
இராசசாரசம்-மயில்.
இராசசிருங்கம்-குடை.
இராசசின்னம் - அரசர்க்குள்ள முடிமுதலியவரிசை, இராசதத்துவம்.
இராசசூயம் - அரசர்கள்செய்யும்வேள்வி, தாமரை, மலை.
இராசசேர்வை - இராசாக்களின்சேர்மானம்.
இராஜஸ்ரீ - கீர்த்திபெற்ற, மதிப்பான.
இராசதந்தம்-முன்வாய்ப்பல்.

இராசதம்-ஓர்காலம், முக்குணத்தினொன்று, அஃது ஊக்கம் ஞானம் வீரம் தருமம் தானம் கல்வி கேள்வியென்னு மெழுகுணமுடையது.
இராசதரிசனம்-இராசாவைக்காணல்.
இராசதருமம்-அரசரறதொழில், இராசநீதி, செங்கோன்மை.
இராசதாலம்-கமுகு.
இராசதானம் } தலைப்பட்டினம், வேந்திருக்கை.
இராசதானி }
இராசதுரோகம் - இராசாக்களுக்குச் செய்யும் வஞ்சகம்.
இராசதெரு-இராசமனைத்தெரு, பெருந்தெரு.
இராசத்திரவியம்-அரசர்செல்வம்.
இராசத்துவம்-அரசியல்பு, இராசத்தத்துவம், இராசாங்கம்.
இராசநாகம்-நாசப்பாம்பினோர்சாதி.
இராசநிட்ரேம்-கொடுங்கோன்மை.
இராசநீதி-இராசதருமம்.
இராசநோக்காடு-பிரசவவேதனை.
இராசநோக்கு - இராசகிருபை, இராசபார்வை.
இராசபஞ்சகம்-அரசாட்சியி னிடைஞ்சல், இராசபயம்.
இராசபட்டம் - இராசாதிகாரம், முடிசூட்டு.
இராசபட்டினம்-இராசநகரம்.
இராசபத்திரம்-இராசகட்டளை.
இராசபத்தினி-இராசன்றேவி.
இராசபரி-பரியரசு.
இராசபாட்டை-இராசமார்க்கம்.
இராசபிளவை - முதுகிலுண்டாகும் ஓர்சிலந்தி.
இராசபுரி-இராசநகர், வெல்லம்.
இராசபுள்-எண்காற்புள்.
இராசமண்டலம்-இராசசங்கம்.
இராசமாநகரி-இராசபட்டினம்.
இராசமாநாகம் } கருவழலை.
இராசமாமந்தம் }
இராசமாளிகை - அரசரரண்மனை, இராசநகரம்.
இராசமான்னியம் - இராசபொறுப்பாய்நடப்பது.
இராசயானை-எழுமுழமுயர்வும் ஒன்பதுமுழ நீளமும் பதின்மூன்றுமுழச் சுற்றுமுடையயானை.
இராசயுகம்-பாலை.
இராசயோகம்-ஒருத்தமயோகம்.
இராசராசன் - இராசாதிராசன், சக்கரவர்த்தி, துரியோதனன்.
இராசராசேசுவரி - துர்க்கை, பார்வதி.
இராசரிகம்-இராசதத்துவம்.
இராசலட்சுமி - அட்டலட்சுமியினொன்று.
இராசலேகம்-திருமுகம்.
இராசவசித்துவம் } இராசாவைத்தன் வசமாக்கல்.
இராசவசியம் }
இராசவசிகரம் }
இராசவட்டம் - பொதுவானசங்கதி.
இராசவதி - அரண்மனை, சிங்காசனம்.
இராசவரிசை-இராசசிறப்பு.
இராசவர்க்கம் - இராசசந்ததி, வெண்மையுங் கருப்புங்கலந்தநிறம்.
இராசவள்ளி-ஓர்கொடி.
இராசவாகனம் - சிவிகை, கோவேரி கழுதை.
இராசவாயில்-இராசவாய்தல்.
இராசவிட்ரேம்-கொடுங்கோல்.
இராசவிராசன் - இராசாதிராசன், குபேரன், துரியோதனன்.
இராசவிருட்சம்-கொன்றைமரம்.
இராசவீதி-இராசதெரு.
இராசனை-வெள்ளைப்பூண்டு.
இராசன்-அரசன், இந்திரன், சந்திரன்.
இராசா-இராசன்.
இராசாக்கினை-இராசகட்டளை, இராசதண்டனை.
இராசாங்கம்-அட்டவைசுவரியத் தொன்று, இராசசின்னம், இராசத்துவம், இராசவாளுகை.
இராசாசனம்-சிங்காசனம்.
இராசாணி-இராணி.
இராசாதிகாரம்-இராசதத்துவம்.
இராசாதிபதி } இராசராசன்.
இராசாதிபன் }
இராசாதிராசன்-திறைவாங்குமரசன்.
இராசாத்தி-அரசன்மனைவி, அரசி.
இராசாவர்த்தம்-இரத்தினம்.
இராசாளி-ஓர்புள்.
இராசி-இணக்கம், ஒழுங்கு, ஒளை, குவிதல், கூட்டம், மத்தியானம், மேடைமுதலியவீடு.
இராசிகம்-அட்சரகணிதம், அமிசம், அ

ரசனாலவருவது, ஓரிராசி, குவியல், நரம்புவரி.
இராசிகை-வயல், வரி.
இராசிக்காரன் - அதிர்ஷ்டமுள்ளவன்.
இராசிசக்கரம்-இராசிமண்டலம்.
இராசித்தலைவர் - பொருத்தம், மணப்பொருத்தம்பத்திெனான்று.
இராசிநாதன் -அவ்வவ்விராசியினின்று ஆளுகைசெய்யுங்கிரகம்.
இராசிபாகம்-பின்னம்.
இராசிபுடம் - இராசிகளிற்கிரகநிற்குநிலை.
இராசிப்பொருத்தம் -இராசியிணக்கம், மணப்பொருத்தம் பத்திெனான்று.
இராசிமண்டலம்-இராசிவட்டவடமைரை.
இராசியத்தானம்-குறி, கெற்பக்கிரகம், மறைவு.
இராசியம்-அந்தப்புரம், சா, தாமரைப்பூ, பெண்குறி, மறைவு.
இராசிலம்-சாரைப்பாம்பு, நீர்ப்பாம்பு.
இராசிவக்கிரம் - இராசிப்பிரிவி ெனான்று.
இராசிவட்டம்-இராசிச்சக்கரம்.
இராசிகதெய்வீகம் - அரசராலுந் தெய்வத்தாலும்வருவது.
இராசிகம்-அரசனாலவருவது.
இராசிகரம் - அரசாட்சிக்குரியது, அரசாளுகை.
இராசிலம்-இராசிலம்.
இராசீவம்-தாமரைப்பூ.
இராச்சியக்காரர்-இராச்சியம் பண்ணுவோர்.
இராச்சியபரிபாலனம் - இராச்சியப்பாதுகாப்பு.
இராச்சியபாரம் - இராச்சியப்பொறுப்பு.
இராச்சியம்-அரசுசெல்லுமிடம், ஆளுகை, உலகு, நாடு.
இராச்சியவதி-இராச்சியக்காரி.
இராடம்-ஓர்தேயம், கழுதை, பெருங்காயம்,வெங்காயம்.
இராட்சசன்-இராக்கதன்.
இராட்சத - நாப்பத்தொன்பதாவதுவருடம்.
இராட்சயின்-இராட்சசன்.
இராட்டினத்தொட்டி - இராட்டினம் போலச்சுழல்தொட்டி.
இராட்டினம்-நூனூற்குங்கருவி.
இராட்டினவாழை-ஒருகண்டில் நடுவிட்டுமேலுங்கீழுஞ்சீப்பிடும்வாழை.
இராட்டினவூசல் } இராட்டினம்
இராட்டினவூஞ்சல் } போற்சுற்றுமூஞ்சல்.
இராட்டு-இராசா.
இராணம்-இலை, மயிற்றோகை.
இராணி-இராசஸ்திரீ.
இராணிவாசம்-அந்தப்புரம்.
இராணுவம்-படை, யுத்தமுகம்.
இராதங்கம்-கால், சோரம்.
இராதம்-கடைக்கொள்ளி.
இராதாங்கம் - கலப்பை, மழைத்துளி.
இராதை-கிருட்டினன்மனைவி, பின்னல், விசாகம்.
இராதைகாந்தன்-கிருட்டினன்.
இராத்திரகம்-பாஞ்சராத்திரம்.
இராத்திரம்-இரவு.
இராத்திரி-இரவு, மஞ்சள்.
இராத்திரிகாசம்-வெண்டாமரை.
இராத்திரிசரன்-கள்வன், சேகண்டிக்காரன், பைசாசம்.
இராத்திரிவேதம்-கோழி.
இராந்து-இடுப்பு, தொடைச்சந்து.
இராந்தண்டு-இலந்தை.
இராப்போசனம் - இராச்சாப்பாடு, நற்கருணை.
இராமகலி - ஓரிராகம், அத்தமத்தியானத்தில் பாடுவது.
இராமக்கம்-ஓர்வைகுரி.
இராமக்கிரியம் } ஓரிராகம்.
இராமக்கிரியை }
இராமசகன்-சுக்கிரீவன்.
இராமசந்திரன்-இராமன்.
இராமசீத்தா-அணிநுணா.
இராமடம் } பெருங்காயம்.
இராமடை }
இராமதூதன்-அனுமான்.
இராமபத்திரி-ஓர்மருந்து.
இராமபாணம்-இராமரம்பு, ஓர்புழு, ஓர்மருந்து.
இராமமரம்-அணிநுணா.
இராமம்-அழகு, ஆசை.
இராமன் - தசரதமகாராசனுடையபுத்திரன், வருணன்.
இராமன்றேவி-சீதை.

இராமாநுசன் - இலக்குவன், விட்டு ணுசமயாசாரியரிலொருவர்.
இராமாயணம்-இதிகாசத்தொன்று, இராமசரிதை.
இராமாலை-கருகுமாலை.
இராமானம்-இராநாழிகை.
இராமிலன்-கணவன், காமன்.
இராமேசுரம்-இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலுள்ள ஓர்சிவஸ்தலத்தீவு
இராயசம்-எழுத்துக்காரியம், சம்பிரதித்தொழில்.
இராயசன்-சம்பிரதி.
இராயணி } இராசஸ்த்ரீ.
இராயனி }
இராயன்-அரசன்.
இராவடம் - அசோகு, அராவுத்தொழில்.
இராவடி-ஏலம், பேரோலம்.
இராவணம்-விளக்கு.
இராவணன்-இலங்கைவேந்தன்.
இராவணன்மீசை-ஓர்புல்.
இராவணாஸ்தம் } ஓர்வீணை.
இராவணாத்தம் }
இராவணாரி-இராமன்.
இராவணி-இந்திரசித்து.
இராவதம்-சூரியன் குதிரை, மேகலோகம்.
இராவதி-ஓர்கொடி, ஓர்நதி, யமபுரம்.
இராவிரேக்கு - அரசிலைச்சுட்டி, அரைமூடி, குழந்தைகள்நெற்றி மயிரில் தொங்குகிற அணியிலொன்று.
இராவுதல்-அராவுதல்.
இராவுத்தன்-குதிரைச்சேவகன், குதிரைப்பாகன்.
இராவுத்தாங்கம் - திருவிழாக் காலங்களில் மனிதர்களாவது ஸ்திரீகளாவது வேஷம்போட்டுக்கொண்டு குதிரைசவாரி செய்கிற ஓர்வேடிக்கை.
இரிகம்-இரத்தாசயம், இருதயம்.
இரிங்கணம்-ஓர்புள்.
இரிசல்-இரிதல், புலனைவேறொன்றிற்செலுத்தல், மனமுறிதல்.
இரிசியா-பூனைக்காலி.
இரிஞ்சி-மகிழ்.
இரிஞர்-அச்சமுள்ளோர், பகைவர்.
இரிதல் - அஞ்சுதல், ஓடல், கெடுதல், சாய்தல், தோற்றோடல்.
இரித்தல்-அச்சுறுத்தல், அழித்தல், ஓட்டுதல், கெடுத்தல், முறியடித்தல்.
இரிபு-அச்சம், ஓடுதல், சத்துரு, தோல்வி, பகை, வெறுப்பு.
இரிபேரம்-வெட்டிவேர்.
இரிப்பு-அச்சுறுத்தல், முறியடிக்கை.
இரியல்-இரிதல், கெடுதல், நல்லாடை.
$இரீஇ-இருத்தி, இருந்து.
இரீட்டம்-குறுகல்.
இரீதி-ஒழுங்கு, பித்தளை.
இரீதிகவுளம்-ஓரிராகம்.
இரு-இரண்டு.
இருகந்தம்-இருமணம்.
இருகால்-அரை, இரண்டுதோள், இரண்டுமுறை.
இருகாழி - இரண்டுகொட்டையுள்ள காய்.
இருகுரங்கின்கை-மொசுமொசுக்கை.
இருகுறணேரிசைவெண்பா - நேரிசை வெண்பாவி லொன்று.
இருக்கால்-இரண்டுமுறை, கவற்றிற்குயத்துளொன்று.
இருக்காழி - இரண்டு கொட்டையுள்ளது.
இருக்கு - உபநிடத முப்பத்திரண்டி னொன்று, மந்திரம், முதல்வேதம், வேதம்.
இருக்கை - ஆசனம், இருத்தல், ஊர்ப்பொது, குடியிருப்பு, வீடு.
இருங்கடல்-பெரியசமுத்திரம்.
இருங்குணம்-பெருமையானகுணம்.
இருசகம்-மாதுளை.
இருசட்-பன்னிரண்டு.
இருசி - இருதுவாகுந்தன்மையில்லாப் பெண், ஓர் பெண்பிசாசு.
இருசமயவிளக்கம்-ஓர்நூல்.
இருசீரகம்-சீரகம், கருஞ்சீரகம்.
இருசு-உரித்து, செவ்வை, பண்டியுளிரும்பு, மூங்கில்.
இருசுடர்-ஆதித்தன், சந்திரன்
இருசுடர்த்தோற்றம்-பெருங்காப்பியவுறுப்புளொன்று.
இருஞ்சிறை-காவல், நரகம், மதில்.
இருஷபத்துவசன்-சிவன்.
இருஷபம்-இடபம், காதிற்றுளை.
இருஷி-இருடி, பிரபை, வேசு

இருடி-ஆந்தை, இருதுடையாதிருப்பவள், முனிவன்.

இருஷிகேசன் } திருமால்.
இருடிகேசன் }

இருடிபத்தினி } முனிவன்மனைவி.
இருடிபன்னி }

இருஷியஞ்ஞம்-வேதாப்பியாசம்.

இருஷியமூகம்-கிட்கிந்தை.

இருட்சி-இருள், மயக்கம்.

இருட்டு-அறியாமை, இருள், மயக்கம்.

இருட்டுதல்-இருளடைதல்.

இருணபாதகம்-கடன் தீர்க்காமல் மோசஞ்செய்தல்.

இருணபாதகன்-கடன்தீர்க்காதவன்.

இருணம்-உப்பளம், உவர்த்தரை, கடன், கழிக்கப்படுமெண்.

இருணிலம்-நரகம்.

இருண்டி-சிறுசண்பகம்.

இருண்மை-இருளுடைமை.

இருதம்-நீர், மெய்.

இருதயகமலம்-உள்ளம்.

இருதயம்-இரத்தாசயம், உயிர்நிலை, உள்ளம், கருத்துரை, மனம்.

இருதலைக்கபடம்-விலாங்குமீன்.

இருதலைக்கொள்ளி-இருதலையுந்தீப்பற்றியகொள்ளி.

இருதலைஞாங்கர்-குமரன்வேல்.

இருதலைப்பட்சி-ஓர்புள்.

இருதலைப்பாம்பு-மண்ணுணிப்பாம்பு.

இருதலைப்பூச்சி-ஓர்பூச்சி.

இருதலைமணியன்-இருதலைப்பாம்பு.

இருதலைமாணிக்கம்-ஓர்மந்திரம்.

இருதாரைக்கத்தி - இரண்டுபக்கம் கூர்மையுள்ளகத்தி.

இருதி-இரண்டெழுத்தாலாகியஅசை.

இருதிணை-அஃறிணை உயர்திணை.

இருதிராசம்-வேனில்.

இருது-இரண்டுமாதபருவம், ஒருமாதம், கடவுளின்முத்தொழில், பிரபை, மகளிர்சூதகம், மகளிர் முதற்பூப்பு.

இருதுகாலம்-கருப்பந்தரிக்கத்தகுநாள், அது பூப்படைந்து பதினாறுநாள்மட்டும்.

இருதுக்காட்சி - அகப்பொருட்டுறையினொன்று.

இருதுசந்தி-பருவச்சங்கிரமம்.

இருதுசாந்தி-ஓர்சடங்கு, சோபனகலியாணம்.

இருதுவாதல்-பூத்தல்.

இருதுவிருத்தி-வருடம்.

இருதொண்டு-பதினெட்டு.

இருதோத்தி-சத்தியவசனம்.

இருதோற்றம்-சரமசரம்.

இருத்தம்-பிரகாரம்.

இருத்தல்-இருந்துதல், சீவித்தல், தங்கல், தாழ்தல்.

இருத்தி-இருத்தலைச் செய்தென்னெச்சம், இருப்பாயென்னுமேற்று, இருவென்னேவல், சித்தி, மேன்மை.

இருத்தினர்-வேள்வியில் குருவுக்கு ஒத்தாசைசெய்பவர்.

இருத்து-அஸ்தக்கிரியை.

இருத்துதல்-அழுத்தல், உட்காரச்செய்யல், தாமதிக்கச்செய்யல், நிலைபெறச்செய்யல்.

இருத்தை-இருபத்துநாலு நிமிஷங்கொண்டஓர்நாழிகை, சந்திரனைன்காம்பக்கம் ஒன்பதாம் பக்கம் பதினைன்காம்பக்கம், சேங்கொட்டை, நாழிகைவட்டில்

இருநா-உடும்பு, பாம்பு.

இருநிதிக்கிழவன்-குபேரன்.

இருநினைவு-இருமனம்.

இருந்தமிழ்-சிறந்ததமிழ்.

இருந்து-அசைச்சொல் (உ-ம்) எழுந்திருந்தோன், கரி.

இருந்தை-கரி.

*இருந்தையூர்க்கருங்கோழிமோசியார்-இடைச்சங்கப்புலவருளொருவர்.

இருபது-இரண்டுபத்து.

இருபன்னியம்-சேங்கொட்டை.

இருபாவிருபஃது-ஓர்பிரபந்தம், அஃது பத்து வெண்பாவும் பத்தகவலுமந்தாதித்தொடையா னிருபதினைந்து வருவது.

இருபிறப்பாளர்-உபநயனத்திற்கு முன்பு ஒருபிறப்பும்பின்பு ஒருபிறப்புமாகிய இருபிறப்பினையு முடையவர், பார்ப்பார்.

இருபிறப்பு-இருசனனம், சந்திரன், சிறகு, பல், பார்ப்பார், முட்டையிற்பிறப்பன.

இருபுட்சன்-இந்திரன்.

இருபுறவசை-இருமரபினிகழ்வுகூறல்.

இருபுறவாழ்த்து - இருமரபின் புகழ்கூறல்.
இருபெயரொட்டு - இருசொல்லொரு சொல்லாக நிற்பது, (உ-ம்) பாம்பு பாம்பு.
இருபெயரொட்டுப்பண்புத்தொகை-ஆகிய வென்னுமுருபு தொக்கு நிற்ப வொருபொருட்கே பொதுவுஞ் சிறப்புமாகஇருபெயர்வருவன, உ-ம்)ஆயன்சாத்தன்.
இருபொருள்-கல்வியும்செல்வமும்.
இருபோகம்-இரண்டுதரம்விளைவு.
இருப்பவல்-ஓர்பூண்டு.
இருப்பாணி-இரும்பாணி.
இருப்பாயுதம்-ஆயுதப்பொது.
இருப்பிடம்-ஆசனம், இருக்குமிடம்.
இருப்பு-இருக்கத்தக்கவிடம், இருக்குந்தன்மை, இருக்கை, குதம், பீடம், மீந்திருப்பவை.
இருப்புக்காய்வேளை-ஓர்செடி.
இருப்புக்கிட்டம்-கீச்சுக்கிட்டம்.
இருப்புக்கொல்லி-சிவனார்வேம்பு.
இருப்புச்சலாகை-இரணவைத்திய வாயுதத்தொன்று,இருப்புநாராசம், துப்பாக்கிச்சலாகை.
இருப்புச்சீரா } இருப்புச்சட்டை.
இருப்புச்சுவடு }
இருப்புத்தட்டுமுட்டு-இரும்புமணை.
இருப்புநெஞ்சு - இரக்கமில்லாத நெஞ்சு, கல்நெஞ்சு.
இருப்புப்பாரை-குழிகல்லுங்கருவி.
இருப்புமுள்-குற்றுக்கோல்.
இருப்புமுறி-ஓர்செடி.
இருப்புலக்கை-ஓராயுதம்.
இருப்புலி-துவரை.
இருப்பூறல்-இரும்புக்கறை.
இருப்பூரற்பணம்-கெட்டுப்போன வெள்ளிப்பணம்.
இருப்பை-இருப்பாயென்னுமுற்று, இலுப்பை.
இருமடங்கு } இரண்டுபங்கு.
இருமடி }
இருமடியாகுபெயர் - ஒன்றற்காகுபெயராயிருப்பது அதனொலாய மற்றொன்றற்கும் பெயராய் வழங்குவது, (உ-ம்) கார்காலம்.
இருமடியேவல்-ஈரேவல்.
இருமரபு-தந்தைவழி தாய்வழி.
இருமல்-கக்கல்நோய்.
இருமல்லி-சிறுமல்லி பெருமல்லி.
இருமனம்-சந்தேகம்.
இருமு-இரண்டசையாலாகியமொழி.
இருமுரடன்-முரட்டுக்குணன்.
இருமை-இம்மைமறுமை, இரண்டு, இருதன்மை, கருமை, துக்கம், பெருமை, மகிமை.
இருமையியற்கை-ஓரலங்காரம், அஃது கூடுவதையும் கூடாவதனையுங்கூடக்கூறுவது.
இரும்பலி-இரும்பிலி.
இரும்பன்-காமோலி.
இரும்பிலி-ஓர்செடி.
இரும்பு - ஆயுதப்பொது, சத்தலோகத்தொன்று அஃது கரும்பொன்.
இரும்புக்காய்வேளை-காய்வேளை.
இரும்புத்துப்பு-துரு, மண்டூரம்.
இரும்புலி-ஓர்செடி, துவரை.
இரும்புளி-ஓர்மரம்.
இரும்பை-குடம், பாம்பு.
இருவர்மாறுகொளொருதலைதுணிவு-எழுவகைமதத்திலொன்று.
இருவல்நொருவல் } இடிந்து மிடியாதது.
இருவல்நொறுவல் }
இருவனருவல்-குறுணல், தாளும்பருபருக்கையுமானது.
இருவாச்சி } கருமுகைச்செடி, ஓர்மரம்.
இருவாட்சி }
இருவாட்டித்தரை-மணலுங் களியுமுள்ளதரை.
இருவாய்க்குருவி-ஓர்புள்.
இருவாய்ச்சி-இருவாட்சி.
இருவாளிப்பு-இருமனம்.
இருவி-ஓர்நாபி, தினைத்தாள்.
இருவிக்காந்தம்-ஓர்நச்சுமூலிகை.
இருவினை-நல்வினை தீவினை.
இருவேலி-வெட்டிவேர்.
இருவேளை-நாய்வேளை நல்வேளை.
இருளர்-வேடர்.
இருளல்-இருளுதல்.
இருளன் - ஒருபிசாசம், மலையில்வாழுமோர்சாதியான்.
இருளி - இருசி, கருஞ்சீரகம், பன்றி, பன்றிமோத்தை, மூலையிலி, வெட்கம்.

இருளிச்செவி-அமுக்கிராஞ்செடி.
இருளுதல் - ஒளிமழுங்கல், மங்கலாதல்.
இருளை-நாணம்.
இருள்-இருட்டு, உன்மத்தம், கறுப்பு நரகம், மயக்கம், யானை.
இருள்முகா-நாவி.
இருள்வலி-சூரியன்.
இருமிமஸ்தகி-ஓர்மருந்து.
இரெட்டி-ஓர்சாதி.
இரெப்பை-கண்மடல்.
இரேகபிராணன்- தேகத்தோடைக்கிய மானசிவன், மிகுசினேகம்.
இரேகம்-தேகம்.
இரேகாத்திரயம்-அபயஞ்செய்தல்.
இரேகி-அதிட்டவான், கீழ்மகன்.
இரேகித்தல்-ஒன்றித்தல், சேருதல், பழகுதல்.
இரேகு-ஆயம்.
இரேகுத்தி-ஓரிராகம்.
இரேகை-எழுத்து, சித்திரம், வரி, வரை.
இரேக்கு-ஓர்வகைச்சல்லா, தத்துவம், பூவிதழ், பொற்றகடு.
இரேசகம் - பிராணவாயுவைவிடுதல், பேதிமருந்து.
இரேசகி-கடுக்காய், சீந்தில்.
இரேசக்குணை-கடுகு.
இரேசந்திரம்-இரதம்.
இரேசம்-இரசம்.
இரேசவம்-நவமணிக்குற்றத்தொன்று, நெல்வினிறம்.
இரேசனம்-பிராணாயாமத்தில் வாயுவைவிடல், விரேசனம்.
இரேசன்-அரசன், வருணன், விட்டுணு, வெள்ளுள்ளி.
இரேசிதம் - குதிரைவட்டமாயோடல், பரதவுறுப்புளொன்று, வெறுமை.
இரேசித்தல்-அந்தித்தல், மூச்சுவிடுதல்
இரேசுதல்-அசிரணம், அந்திப்பு.
இரேணு-அணு, அழகு.
இரேணுகம்-அரேணுகம், ஓர்மருந்து.
இரேதசு } விந்து.
இரேதஸ் }
இரேதஸ்கலிதம்-விந்து ஒழுகிவிடல்.
இரேபதம் - கண்டம், தருமநூல் பதினெட்டினொன்று.
இரேயம்-கள்.

இரேவதம்-இரேபதம், இரேவதிநாள்.
இரேவதன் - பலதேவன்மாமன்.
இரேவதி - கடைநாள், பலதேவன்மனைவி.
இரேவதிகொண்கன்-பலதேவன்.
இரேவு-ஆயத்துறை, இறங்குதுறை.
இரை - இருப்பு, இரையென்னேவல், இலக்குமி, உணவு, ஒலி, நீர், பூமி, பேச்சு.
இரைகொள்ளி-இரைப்பெட்டி, பெருந்தீனியாள்.
இரைக்குடர்-இரைப்பை.
இரைச்சல்-ஆரம்பம், ஒலி, வீக்கம்.
இரைதல்-ஒலித்தல், சீறுதல்.
இரைத்தல்-ஒலித்தல், வீங்குதல்.
இரைத்து-இண்டு, உப்பிலி, புலிதொடக்கி, வெண்கலம்.
இரைநீர்-கடல்.
இரைப்பற்று-இரைப்பிடி, செரியாதது.
இரைப்பு-இரைதல், ஓர்நோய், வீக்கம்.
இரைப்பெட்டி-இரைதங்கும்பை.
இரைப்பெலி-ஓரெலி, இதுகடித்தால் இரைப்புநோயுண்டாகும்.
இரைப்பை-இரைதங்கும்பை.
இரைமீட்குதல் - அசைவெட்டுதல், இரையெடுத்தல்
இரையெடுத்தல்-இரைமீட்டல், புசித்தல்.
இரௌத்திரம் } சுபாவக்குணமொன்பதினொன்று அஃது பெருங்கோபம்.
இரௌத்திரவம் }
இரௌத்தர் - குதிரைச்சேவகர், சோனகர்.
இரௌத்திரி-ஐம்பத்துநாலாவது வருடம்.
இரௌரவம்-ஓர்நரகம், சிவாகமமிருபத்தெட்டினொன்று.
இலகடம்-யானைமேற்றவிசு.
இலகம்-ஊமத்தை.
இலகரி-ஓர்நூல், பெருந்திரை, மஸ்து, மிகுபுகழ்ச்சி, வெறி.
இலகான்-கடிவாளம்.
இலகிமா-அட்டசித்தியினொன்று அஃது பஞ்சினொய்தாதல், கனமின்மையாகுகை.
இலகிரி-அபின், கஞ்சா, சாதிக்காய், சாதிபத்திரி.

இலகு-அகில், இலகென்னேவல், ஓர் மரம், கனமின்மை, காலதசப்பிரமாணத்தொன்று அஃது துரிதமிரண்டுகொண்டது, குறிலெழுத்து, சிறுவி, நொய்மை, வாமேனோர்வரநான்கிலொன்று அது கனமின்மை.

இலக்குசம்-ஈரப்பலா.

இலகுதல்-ஒளிசெய்தல்.

இலகுத்துவம்-அட்டசித்தியிலொன்று, அஃது, இலகுவாதல்.

இலகுமா-இலகிமா.

இலக்கணச்சிதைவு-வழுவாய்வழங்குஞ்சொல்.

இலக்கணச்சுழி-நல்லங்கச்சுழி.

இலக்கணச்சொல் - இலக்கணவழியால்வருஞ்சொல்.

இலக்கண நூல் - எழுத்து சொல் பொருள் யாப்பு அணி இவையைத்தெரிவிக்குநூல்.

இலக்கணப்போலி- இலக்கணமுடையதுபோல் வருஞ்சொல்.

இலக்கணம்-அடையாளம், அழகு, இயல், இலக்கணநூல், ஒழுங்கு, பேர், போதப்பிரகாரம் மூன்றிலொன்று அஃது, தான்விவரிக்கும் பொருளின் சிறபுத்தன்மைகூறல், முறைமை.

இலக்கணவழக்கு-இலக்கணநடை.

இலக்கணவழு-இலக்கணப்பிழை.

இலக்கணவிளக்கச்சூறாவளி - ஓர் இலக்கணநூல்.

இலக்கணவிளக்கம் - ஓர் இயற்றமிழ்நூல்.

இலக்கணி-இலக்கணமறிந்தவன்.

இலக்கணை - உரியபொருளைவிட்டுஅப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது

இலக்கமிடல் - இலக்கமெழுதல், கணக்குப்பார்த்தல்.

இலக்கம்-இலட்சம், எண், ஒளி, குறிப்பு, துலக்கம்.

இலக்கர்-சந்தை, சீலை.

இலக்காந்தரம்-இடையிலக்கம்.

இலக்காரம்-சீலை.

இலக்கியம் - இலக்கணநூற்படி முன்னோர் தந்தசெய்யுள், உதாரணம், குறி.

இலக்கியானம்-இலயபிடி.

இலக்கினசட்டுவருக்கம் - இராசிக்குரியவாறுகாரியம்.

இலக்கினபுடம்-இராசியைப்பற்றி வருஞ்சுத்தபுடம்.

இலக்கினம்-இராசிகளினுதயம், முகூர்த்தம்.

இலக்கு-எண்ணம், எதிர், எது, ஒட்டம், ஒப்பு, குறிப்பு, சமயம், சுவடு, நேர்.

இலக்குப்பார்த்தல்-குறிப்புப்பார்த்தல்.

இலக்குமணை-சாரசபட்சியின் பேடு.

இலக்குமன்-இலட்சுமணன்.

இலக்குமி-அதிட்டம், அழகு, சீதேவி, செல்வம், முத்து.

இலக்குவன்-இராமன்றம்பி.

இலக்குவைத்தல்-குறிப்புவைத்தல்.

இலங்கம்-எறும்பு, களரி, கூட்டம், முடம்.

இலங்கனம்-கடத்தல், தாண்டுகை, பட்டினி.

இலங்கிசார் - அலைக்கழிவு, இடைஞ்சல்.

இலங்கு-குளம்.

இலங்குதல்-ஒளிசெய்தல்.

இலங்குபொழுது - அத்தமிக்கும்போதிருக்கும் சூரிய ஒளி.

இலங்கை - ஆற்றிடைக்குறை, இராவணன் நகரமாகிய இலங்காபுரி, ஈழமண்டலம், தூங்குவது.

இலங்கோடு-கீழுடை.

இலசுனம் - வெள்வெங்காயம், வெள்ளைப்பூண்டு.

இலசுனம்-மணியின் குற்றத்தொன்று, வெள்வெங்காயம்.

இலச்சினை-குறி, முத்திரைமோதிரம்.

இலச்சை-அவமதிப்பு, கூச்சம், தொந்தரவு, வெட்கம்.

இலச்சைகெட்டமரம்-கற்றேக்கு.

இலஞ்சம்-பரிதானம்.

இலஞ்சி-ஏரி, கீழ், குணம், குளம், கொப்பூழ், சாரைப்பாம்பு, புனம், புன்குமரம், மகிழமரம், மடு, மதில்.

இலஞ்சியம்-கீழாநெல்லி.

இலட்சணம்-இடம், இலக்கணம், குறி, பார்வை, பேர்.

இலட்சம்-அடையாளம், இலக்கம், எ

த்து நூறாயிரம்.
இலட்சயம்-எண்ணத்தக்கது.
இலட்சாதிபதி-இலட்சப்பிரபு.
இலட்சியம்-அடையாளம், எதிர், எத்து, நூறாயிரம், மதிப்பு.
இலட்சுமணம்-ஓர்மரம், தாளி.
இலட்டு / இலட்டுகம் } அப்பவருக்கம், தோசை, பொரிமாத்திரளை.
இலணை-அரசமரம்.
இலண்டம்-ஆனையிலத்தி.
இலண்டன்-முருடன்.
இலண்டு-முருட்டுத்தனம்.
இலதை-இலந்தை, கொடி, கோற்கொடி, தக்கோலம், படர்கொடி.
இலதைவன்னி-கொடிவேலி.
இலத்தி-குதிரைப்பீ, யானைக்கட்டம்.
இலந்தை-ஓர்மரம், குளம்.
இலந்தைத்தம்பலம் - இலந்தமரப்பட்டையில் பூச்சிகளால் செய்யப்படும் துளை.
இலபனம்-வாய்.
இலபி-பேறு, விதி.
இலபிதம் - சம்பவிப்பது, பட்சித்தல், பேச்சு, பேறு, விதி.
இலபித்தம-பேறு.
இலபித்தல்-சித்தித்தல், பேறுகிடைத்தல்.
இலபிப்பு-சித்திப்பு.
இலப்தம்-கிடைத்தது, பாசிதம்.
இலம்-இல்லாமை.
இலம்பகம் - அத்தியாயம், நுதலணிமாலை, மாலை.
இலம்படை-இடுக்கண், தரித்திரம்.
இலம்பம் / இலம்பனம் } உச்சத்திற்குந் துருவத்திற்குமுள்ளதூரம், கைக்கூலி, தொங்குவது, நிறுத்திட்டவரி மாலை.
இலம்பாடி-ஓர்சாதி, வறியள்.
இலம்பாடு-தரித்திரம், வறுமை.
இலம்பாட்டார்-தரித்திரர்.
இலம்பாட்டோன்-தரித்திரன்.
இலம்பிகை-அண்ணாக்கு.
இலம்பிதச்சா - சூரியன் மேலிராசியின்மேலேறும்பாகவளவு.
இலம்பிதமதி - சந்திரபுடத்தைச் சூரியபாதையிற் சேர்க்குமோரளவு.
இலம்பிதம்-அசைவு, உயர்ச்சி, சந்திரபுடத்தைச் சூரியபாதையிற் சேர்க்குமோரளவு, தொங்கல்.
இலம்பை-இடுக்கண், தரித்திரம், துயரமானநிலை.
இலம்போதரன்-விநாயகன்.
இலயகாலம் - அழிவுகாலம், உலோகாந்தரம்.
இலயக்கியானம் - சங்கீதசூரக் கியானம்.
இலயஸ்தானம்-ஒடுங்குமிடம்.
இலயபிடி-இலயத்தானம் ஒடுக்கம்.
இலயம்-அடங்குகை, அழிவு, இலயபிடி, உருக்கல், ஒடுக்கம், ஒளிப்பு, கூத்தின்விகற்பம், கூத்து, சாவு.
இலயித்தல்-அழிதல், ஒடுங்குதல், சேர்ந்தொன்றித்தல்.
இலயை-இலயகாலம், தாளப்பிரமாணம்பத்திலொன்று.
இலயைக்கியானம்-இலயக்கியானம்.
இலலாடம்-நெற்றி.
இலலாடரேகை - நுதற்குறி, நெற்றிவரி.
இலலாடலிபி-தலையெழுத்து.
இலலாடிகை-நுதற்றிலதம், நெற்றிச்சுட்டி.
இலலாமம்-அடையாளம், அரசசின்னம், கொடி, கொம்பு, திலகம், வால்.
இலலாலம்-ஆபரணம், இரேகை, குதிரை, நெற்றிமறை, பிடர்மயிர், மகத்துவம்.
இலலிதபஞ்சகம்-ஓரிராகம்.
இலலிதம் - அழகு, அபிநயம், உபசாரம், ஓரிராகவிகற்பம், காமக்குறி, பரிகாசம், மகளிர் விளையாட்டு, மாதுரியம்.
இலலிதை-இராக முப்பத்திரண்டிலொன்று, பார்வதி, பெண், மான்மதம்.
இலவங்கபத்திரி-இலவங்க இலை.
இலவங்கப்பட்டை - ஓர்வாசனைப்பட்டை.
இலவங்கப்பூ-இலவங்கம்.
இலவங்கம்-ஓர் வாசனைமரம், அஃது பஞ்ச வாசத்தொன்றுமாம், கராம்பு.
இலவசம்-விலையின்றிப்பெறுகை.
இலவணபஞ்சாட்சரம் - ஓர்மந்திரம், ஓர் மாந்திரியநூல்.

இலவணபாஷாணம் - வைப்புபாஷாணமுப்பத்திரண்டினொன்று.
இலவணம்-உப்பு, உவர்த்தல்.
இலவணவித்தை-ஓர்தந்திரவித்தை.
இலவந்திகை-எந்திரவாவி, தண்ணீரிறைக்குமியந்திரம்.
இலவம்-அழிவு, அற்பம், ஓர்தீவு, ஓர்பஞ்சுமரம், கராம்பு, காலதசப்பிரமாணத்தொன்று அஃது கணமெட்டுக் கொண்டது, சாதிக்காய், பிழைநீக்கல், பூசை, மயிர்.
இலவம்பிசின் - இலவமரத்திலுண்டாகும் பிசின்.
இலவம்பொதுமணி- சௌந்திகப்பதுமராகமணி.
*இலவந்திகை-நீராவியைச்சூழ்ந்தவயந்தச்சோலை.
இலவலேசம்-மிகச்சிறிது.
இலவன்-இராமன்மக்களிலொருவன்.
இலவியம்-இலவசம்.
இலவு-ஓர்பஞ்சுமரம். தேற்று.
இலவுங்கம்-இலௌங்கம்.
இலளிதபஞ்சகம்- ஓரிசைவிகற்பம்.
இலளிதம்-அழகு, உபசாரம், ஓரிராகவிகற்பம், சிவாகம மிருபத்தெட்டினொன்று, பரிகாசம், மாதுரியம்.
இலளிதை-பார்வதி.
இலாகரி-மஸ்து, வெறி.
இலாகவம்-இலகு, சாமர்த்தியம், தாபரம்.
இலாகிரி-இலாகரி.
இலாகன்-ஓர்மீன்.
இலாகு-இலாகவம்.
இலாகை-மாதிரி.
இலாக்கிரி-செம்மெழுகு.
இலாக்கை-ஈர்.
இலாங்கலம் } இலாங்கலி } ஆண்குறி, கலப்பை, செங்காந்தள், தென்னமரம், பனைமுதலியன.
இலாங்கூலம்-வால்.
இலாசடி } இலாசடை } தொந்தரை.
இலாசம் } இலாசை } பொரி.
இலாச்சம் - ஓர் நில அளவை, மரக்கால்.
இலாஞ்சனம் - அடையாளம், கீர்த்தி, புள்ளி, பெயர், முத்திரை.
இலாஞ்சனை-இலாஞ்சனம், அலைவு.
இலாஞ்சி-ஏலம்.
இலாஞ்சிலி-ஏலம்.
இலாடசங்கிலி - ஓர் சங்கிலி, சடுத்தம்.
இலாடசிந்தூரம் - குதிரைலாடத்தால் செய்த செந்தூரம்.
இலாடம் - ஓர்பாஷை, குதிரையின் காற்பறனை, குற்றம், தேயமைம்பத்தாறி னொன்று, நெற்றி, புடைவை, புளியமரம், புளி.
இலாடர்-இலாடதேசத்தார்.
இலாடவி-அகில்.
இலாடன்பருத்தி-ஓர்பருத்திச்செடி.
இலாதார்-சஞ்சாயம்.
இலாந்துதல்-மச்சுச்சாந்திடுதல்.
இலாபதி-அரசன், புதன்.
இலாபம்-ஆதாயம், நயம்.
இலாபாதேவி-இலாவாதேவி.
இலாமச்சை } இலாமிச்சை } ஓர்வாசனைப்புல், விழல்.
இலாயம்-ஏலரிசி, குதிரைப்பந்தி.
இலாலனம் } இலாலனை } அன்புவைத்தல், கெஞ்சுதல், சீராட்டு, தாலாட்டு, நயஞ்செய்கை.
இலாலி - ஓர் வாழ்த்து, கற்பழிப்போன், துதி, நயஞ்செய்கை, மங்கலப்பாடல்.
இலாவணம்-உப்பு, சம்பாஷணை, பெயர்ப்பதிப்பு.
இலாவணியம் } இலாவண்ணியம் } பேரழகு.
இலாவாதேவி-கொடுக்கல்வாங்கல்.
இலாவிருதம்-நவகண்டத்தினொன்று.
இலாளனை-இலாலனை.
இலி-இல்லாதவன், எலி.
இலிகம்-எலி.
இலிகி-எழுதுகை, எழுத்து.
இலிகிதம்-எழுதியபுத்தகம், எழுத்து, கலைஞான மறுபத்துநான்கினொன்று.
இலிகித்தல்-எழுதுதல்.
இலிகுசம்-எலுமிச்சை.
இலிங்கங்கட்டி-இலிங்கதாரி.
இலிங்கசுத்தி-பஞ்சசுத்தியினொன்று.
இலிங்கசூலை - ஆண்குறியில்வரும் ஓர்மேகநோய்.

இலிங்கதாரி - இலிங்கங்கட்டிக்கொள்ளுகிற ஓர் சைவர்.
இலிங்கபாஷாணம் - விளைவுபாஷாண முப்பத்திரண்டிலொன்று.
இலிங்கபுராணம்- அட்டாதசபுராணத்தொன்று.
இலிங்கப்புடோல்-ஐவிரலி, கொவ்வை
இலிங்கப்புற்று-ஓர்மேகநோய்.
இலிங்கம்-அடையாளம், அருத்தாபத்தி, ஆத்துமலிங்கம், ஆண்குறி, இங்குலிகம், இஷ்டலிங்கம், உபநிடதமுப்பத்திரண்டி லொன்று, சிவலிங்கம், பிரமசரியநிலையிலொன்று.
இலிங்கர்-இலிங்கிகள்.
இலிங்கி-ஓர்சைவசந்நியாசி.
இலிங்கிகள்-தபசிகள், முனிவர்.
இலிதை-குறிப்பிசை, பூமி.
இலிந்தகம்-கருங்குவளை.
இலிபி-இலக்கம், எழுத்து, மெழுகுதல், விதி.
இலிபித்தல்-அனுகூலமாதல், எழுதுதல், நியமித்தல், விதித்தல்.
இலிர்த்தல் - சிலிர்த்தல், தளிர்த்தல் பொடித்தல்.
இலிற்றும்-துளிக்கும்.
இலீக்கை-ஈர், நமடு.
இலீலாவதி - மோகமுடையவள், விரகதாபமுள்ளவள்.
இலீலாவிநோதம்-சுரதவிளையாட்டு.
இலீலை - கதை, சரசம், பரிகாசம், பாவனைகாட்டுகை, புணர்ச்சி, மகளிர் விளையாட்டு, விளையாட்டு.
இலுதை-அணில்.
இலுப்பெண்ணெய்- இலுப்பைக் கொட்டையிலிருந்தெடுக்குமெண்ணெய்
இலுப்பை-இருப்பைமரம்.
இலுப்பைக்கட்டி - இலுப்பை பிண்ணாக்கு.
இலுப்பைகடுகு - இலுப்பைப்பருப்பு, இலுப்பையெண்ணெயினடியில்படியும்வண்டல்.
இலேககன் - எழுத்துக்காரன், கணக்கன்.
இலேகம்-எழுத்து,ஓர்விதமருந்து, திருமுகம்.
இலேகர்-வானோர்.
இலேகனம்-எழுத்து.
இலேகனி, இலேகிணி, இலேகினி - எழுதுகோல், எழுத்தாணி, தூவல்.
இலேகியம்-நக்கல், பாகாகக்கிண்டிய ஓர் மருந்து.
இலேகை - எழுத்து, சித்திரம், வரிவரை.
இலேசம்-அற்பம், இலேசு, ஓரலங்காரம், அஃது அகத்துக் கருதியவற்றைப் புறத்துக் குறிகளால் உணர்த்துவது, காலவிரைவு, நொய்மை.
இலேசு-அற்பம், கனமின்மை, நொய்மை.
இலேசுணம்-ஆரிநாரம்.
இலேந்து-கல்லுப்பு.
இலேபம்-வால்மிளகு.
இலேபனம் - தாதுவைஇலிக்குப்பூசுமருந்து, புணர்ச்சி, பூச்சு,வாசனைத்தைலம்.
இலேபி-இலபி, பூச்சு.
இலேபிதம்-தடவல்,
இலேம்புகம்-நிலக்கடம்பு.
இலேவணம்-மெழுகுதல்.
இலேவுந்து-கல்லுப்பு.
இலை - இலைக்கறி, உலோபம், ஏடு, தழை, பத்திரம், வெற்றிலை.
இலைகிள்ளல்-கைச்சித்திர மைந்திலொன்று.
இலைக்கதவு-ஓர்வகைக்கதவு
இலைக்கலம் - சாப்பிடுதற்குத்தைத்த இலை.
இலைக்கள்ளி-ஓர்வகைக்கள்ளி.
இலைக்கறி-கீரை.
இலைக்கிளி-தத்துக்கிளி.
இலைக்குட்டி-பலங்கெட்ட வாழைக்குட்டி.
இலைக்குறடு-நீண்டகுறடு.
இலைக்கொடி-வெற்றிலைக்கொடி.
இலைக்கொழுக்கட்டை-ஓர்வகைக்கொழுக்கட்டை.
இலைங்கம் - இலிங்கம், பதினெண்புராணத்தொன்று.
இலைச்சுருளி-ஓர் பூண்டு.
இலைத்தல் - சாரமின்மை, சுவைகுறைதல், பச்சைநிறமாதல், வால்அரோசித்தல்.
இலைத்திரி - காதில் வைக்குமோரிலைச்சுருள்.

இளங்குரல் - பயிர் இளங்கதிர், மிருதுவானகுரல்.
இளங்கொடி-சிறுகொடி, நஞ்சுக்கொடி, பெண்.
இளங்கொற்றி-இளங்கன்று, இளங்கன்றுடைப்பசு.
இளங்கோக்கள்-வைசியர்பொது.
இளசாட்சசம்-கொன்றை.
இளசு-இளவல்.
இளஞ்சந்திரன்-இளம்பிறை.
இளஞ்சாயம்-வெண்சாயம்.
இளஞ்சார்வு-குருத்தோலை.
இளஞ்சி-சுரைக்கத்திரி.
இளஞ்சூடு-சிறுசூடு.
இளஞ்சூல் - பயிரின் இளங்கதிர், முதிராப்பிண்டம்.
இளத்தல்-இழந்துவிடுதல்.
இளநாக்கடித்தல் - உறுதியற்றசொற்சொல்லல்.
இளநிறம்-வெளிறினநிறம்.
இளநீர் - தெங்கினிளங்காய், தேங்காய்க்கண்ணீர், மணிகளின்வெள்ளொளி.
இளநீர்க்குழம்பு-ஓர்கண்மருந்து.
இளநீலம்-வெளிறினநீலம்.
இளநெஞ்சன் - இளகினமனதுடையவன், கோழைமனதுடையவன்.
இளநெஞ்சு-இளகினமனம், கோழைமனம்.
இளந்தண்டு-மூளைக்கீரை.
இளந்தலை-இளக்கம், இளப்பு, இளமைப்பருவம், எளிமை.
இளந்தலைக்கைம்பெண்சாதி - பாலியவிதவை.
இளந்தாரி-வாலிபன்.
இளந்தென்றல்-சிறுதென்றல்.
இளந்தை-இளவயசு, இளைது, குழந்தை
இளந்தோயல் - ஆயுதங்களினிளகியதோய்ச்சல், தயிரினிளந்தோயல்.
இளப்பம்-கீழ்மையானது, திடமின்மை.
இளமட்டம்-குறுங்குதிரை, வாலிபமுடையது.
இளமண்-மணற்கொண்டதரை.
இளமண்டை-கொய்யதலை.
இளமத்தியானம்-மத்தியானத்தின் முன்பொழுது.
இளமழை-சிறுமழை.
இளமை - உன்மத்தம், பாலப்பருவம், வாலைப்பருவம்.
இளம்பசி-காலப்பசி, சிறுபசி.
இளம்பதம் - இளம்பாகம், பக்குவமற்றது.
இளம்பருவம் - இளவயசு, மெல்லியபதம்.
இளம்பறியல்-இளசாய்ப்பறித்தது.
இளம்பாடு-இளமையிற்படும்பாடு, இளம்பதம்.
இளம்பிடி-சிறியபெண்யானை, பெண்.
இளம்பிராயம்-இளம்பருவம்.
இளம்பிள்ளை-குழந்தை.
இளம்பிள்ளைவாதம்-சிறுபிள்ளைவாதம்.
இளம்பிறை-வளர்பக்கச்சந்திரன், வாலசந்திரன்.
இளம்புல்-அறுகு, முதிராதபுல்.
இளம்பெண்-கற்றாழை.
இளவடி-இளம்பதத்திலடிப்பு.
இளவரசு-இராஜகுமாரன், வாலபதி.
இளவல்-இளையோன், குழந்தை, தம்பி, முதிராதது.
இளவழிபாடு சிறுபிள்ளைக்கல்வி.
இளவன்-சோரபாஷாணம்.
இளவாடை-சிறுவாடை.
இளவாதித்தன்-வாலசூரியன்.
இளவாலிப்பு, இளவாளிப்பு - இளகுதல், சரமாகுதல்.
இளவிளவேனில்-துளிர்காலம்.
இளவுச்சம்-மத்தியானத்துக்குமுன்.
இளவுறை-இளந்தயிர்.
இளவெந்நீர்-சிறுசூடானநீர்.
இளவெயில்-காலைவெய்யில்.
இளவெலும்பு-முதிராவெலும்பு.
இளவெழுத்து-திருந்தாவெழுத்து.
இளவேந்து-இளவரசு.
இளவேனிலுரிமை-தென்றல் வீசலும், வண்டு கிளி பூவை அன்றில் குயிலிவை மகிழ்தலும், மாங்கனியுதிர்தலும், புன்னை மகிழ் தாழை சண்பகமிவைமலர்தலும், இந்திரகோபம் கேகயமுதலிய மெலிதலுமாம்.
இளவேனில் - சித்திரை வைகாசியின் பருவம், வெப்பம்.
இளாவிருதம்-நவகண்டத்தொன்று.
இளி-அவமதிச்சிரிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு, இணக்கம், இளியென்னேவல்,

சிரிப்பு, நெற்றியிற் பிறக்குமிசை, யாழினோர்நரம்பு.
இளிச்சற்கண்-பீளைக்கண்.
இளிதல்-இழிதல்.
இளித்தல்-அவமதித்தல், சிரித்தல், பரிகாசஞ்செய்யல், பல்லைக்காண்பித்தல்.
இளித்தவாய்ப்பட்டம் - இளிச்சவாயனெனப்படுகை.
இளிபுரிதல்-இகழ்ச்சிசெய்யல்.
இளிப்பு-இழிவு, இளித்தல், நிந்தை.
இளிவு-இழிவு.
இளை-இலக்குமி, இளமை, இளையென்னேவல், காவற்காடு, பிரதான காவல், புதனின்மனைவி, மேகம், வேலி.
இளைசு-இளையது.
இளைஞர்-இளையோர்.
இளைஞன்-சிறுவன்.
இளைது-இளையது.
இளைத்தமண்-சத்துக்குறைந்தமண்.
இளைத்தல் - சத்திகுறைதல், தளரல், தோய்ந்துபோதல், தோற்றுப்போதல், மெலிதல், வளங்குறைதல்.
இளைப்பம்-சொற்பம், தீமை.
இளைப்பறுதி - ஆயாசந்தீர்தல், பலப்படுத்துதல்.
இளைப்பாறுதல் - ஆறிக்கொள்ளுதல், வேலைவிட்டிருத்தல்.
இளைப்பாறுமண்டபம் - வசந்தமண்டபம்.
இளைப்பாற்றி-ஓய்ந்திருத்தல்.
இளைப்பு-தொய்வு, மெலிவு.
இளைமை-இளையதன்மை, பாலியம்.
இளையவர்-பெண்கள்.
இளையவன்-இளையோன்.
இளையள் } இலக்குமி, தங்கை, பின்
இளையாள் } பிறந்தாள், பெண்.
இளையோன் - இலட்சுமணன், இளஞ்சேட்சென்னி இவன் கரிகாற்பெருவளவன் தந்தை, குமரன், தம்பி.
இளைவலி-கரிக்காடு.
இற-இறவென்னேவல், இறால்.
இறகரான்மூடி - இறகால்மூடுதல், சேவலைப்போல்மிதித்தல்.
இறகர் } சிறகு, சிறை, பறவையிறகு.
இறகு }
இறக்கம்-இறங்குதுறை, இறங்குந்தன்மைசரிவு, போகிறவழி, மிருகங்கள் செல்வழி, வீக்கமுதலியவிறங்குதல்.
இறக்காது-செய்தி, பெயர்த்துச்சொல்லல்.
௦இறக்கு-இறக்குகை.
இறக்குதல் - இறங்கச்செய்தல், கவலையொழித்தல் கீழ்ப்படுத்தல், சாதல், தாழ்த்தல், தயிலமுதலியவடித்தல்.
இறக்குதுறை-இறங்குதுறை.
இறக்குமதி-இறக்குஞ்சரக்கு.
இறங்கமட்டான் } ஓர்வகைக்கார்நெல்.
இறங்கமொட்டான் }
இறங்கர்-குடம்.
இறங்கல்-அதோகெதியாதல், இறங்கப்படுவது, இறங்குதுறை.
இறங்குதல், அமிழ்தல், கீழ்நோக்குதல், கீழ்ப்படுதல், சரிதல், தாழ்வடைதல்.
இறங்குதுறை - இறங்குந்துறை, காரியத்தின்போக்கு.
இறங்குபொழுது-சாயங்காலம்.
இறங்குமட்டான்-இறகமட்டான்.
இறங்குமிராசி-கடகமுதற்றாறு வீழுனவிராசி.
இறங்குமுட்டான் } ஓர்நெல்.
இறங்குமேட்டான் }
இறஞ்சி-அவரி.
இறடி-கருந்தினை.
இறத்தல்-அழிதல், கடத்தல், சாதல், நடத்தல், மிகுதி.
இறந்தகாலம்-செல்காலம்.
இறந்தகாலவினைத்தொகை- செல்காலவினைதொக்குநிற்பது (உ-ம்) கொல்களிறு.
இறந்தகாலவினையெச்சம் - உ இ ய பு ஆ ஊ என என்னும் ஏழு விகுதிகளையும் பெற்று இடைநிலைபெற்றும் பெறாதும் வருந்தெரிநிலை வினையெச்சம்.
இறந்ததுதழீஇய வெச்சவும்மை-செல்காலநிகழ்ச்சியை விளக்கிநிற்கு மும்மை (உ-ம்) சாத்தனும்வந்தான்.
இறந்ததுவிலக்கல்-ஓர்யுக்தி.
இறந்திரி-இத்தி.
இறந்துபடுதல்-சாதல்.
இறந்தோர்-மரித்தோர்.
இறந்தோர்சேர்வனம்-மசானம்.

இறப்பு-அழிகை, கடத்தல் கெடுதல், சாவு, போக்கு, மிகுதி, வீட்டிறப்பு.
இறலி - இத்திமரம், கொன்றை, சத்த தீவிலொன்று, மருது.
இறல்-கிளிஞ்சில், கேடு, நரம்பு, முறிதல், விசை.
இறவாணம்-ஓர்வாச்சியம்.
இறவானம்-தாழ்வாரம்.
இறவு-அழிவு, இறக்கை, இருல், உற்ற சமயம், எல்லை, செல்கை, மிகுதி, வீட்டிறப்பு.
இறவுளர்- குறிஞ்சிநிலமாக்கள்.
இறவுள்-குறிஞ்சிநிலம்.
இறவை-இறவு, இறைகூடை, எணி, காடை, விரற்புட்டில்.
இரு-இருல்.
இருஞ்சுதல் - உராஞ்சுதல், தட்டியெடுத்தல், பட்சியறைதல், பருந்திருஞ்சல்.
இருட்டணம்-இராட்டினம்.
இருட்டாணிபம்-இடுக்கண்.
இருட்டுதல் - உரோஞ்சுதல், பகைத்தல், முரண்டுதல்.
இருட்டுப்பிருட்டு-எதடை, சச்சரவு.
இருத்தல்-ஆறுபலங்கொண்டநிறை, மீன்நீர்வைத்துறை.
இருத்து - வருத்தமுறக்கட்டியகுண்டு
இருத்துக்கட்டுதல்-கட்டித்தூக்குதல்.
இருல் - இடபவிராசி, இறவு, எருது, கார்த்திகைநாள், தேள்கூடு.
இருவுதல்-வக்கிமயிர்போகச் சீவுதல்.
இறுகக்கட்டல்-அழுந்தக்கட்டல்.
இறுகங்கியான்-கையாந்தகரை.
இறுகத்தழுவல்-இறுகவணைத்தல்.
இறுகினகை-ஈயாதகை.
இறுகுதல்-அழுந்துதல், கடினமாதல், கட்டியாதல், நெருங்கல், முரணுதல்.
இறுக்கம் - அழுத்தம், உருமம், ஒடுக்கம், கடினம், கையழுத்தம், நெருக்கம், பிசுனித்தனம், வயிரிப்பு.
இறுக்கர்-பாலைநிலமாக்கள்.
இறுக்கல் - இறுகச்செய்தல், உடுத்தல், உறுக்கல், ஒடுக்கல், கடிந்துகொள்ளல்.
இறுக்கன்-உலுத்தன்.
இறுக்கு - இறுக்கியமுடிச்சு, உறுக்குகை, ஒடுக்குகை.
இறுங்கு-சோளம்.
இறுதல்-அறுதல், ஒடிதல், கெடுதல், முடிதல், முரிதல்.
இறுதி-எல்லை, சாவு, முடிவு.
இறுதிக்காலம்-முடிவுக்காலம்.
இறுதிநிலைத்தீபகம் } தீபகச் சொற்கடையி னிற்பது.
இறுதிநிலைத்தீவகம் }
இறுதிநிலைவிளக்கம் }
இறுதிவிளக்கு }
இறுத்தல்-இறையிறுத்தல், ஒடித்தல், கடன்செலுத்தல், சேர்தல், சொல்லுதல், தங்கல், தெளித்தல், முடித்தல், முரித்தல், வடித்தல், வெட்டல்.
இறுநாகம்-இலாமிச்சை.
$இறுப்ப-கிடக்க.
இறுப்பு-ஆவணஓலை, இறுத்தல், கடன்செலுத்துகை, குடியிறை.
இறுமளவும்-இறுவரையும்.
இறுமாத்தல்- அகங்கரித்தல், ஏமாத்தல் நிமிர்ந்திருத்தல், மிகமகிழ்தல்.
இறுமாப்பு - அகந்தை, ஏமாப்பு, நிமிர்ச்சி, மிகுமகிழ்ச்சி.
*இறுமுறை - முடியுமுறை, வருந்துந்தன்மை.
இறும்பல்-அதிசயம்
இறும்பி-எறும்பு.
இறும்பு-இளமரக்காடு, காந்தள், கார்த்திகைப்பூ, குறுங்காடு, சிறுமலை, தாமரைப்பூ, தூறு, மலை, வண்டு.
இறும்பூது-அதிசயம், அற்புதம், காந்தள், சிறுதூறு, தளிர், தாமரைப்பூ, தீபம், பித்திகை, பெருமை, மலை, வண்டு.
இறுவதஞ்சாமை- வணிகரெண்குணத்தொன்று, அஃது நட்டத்துக்கஞ்சாமை.
இறுவரை-முடிவு.
இறுவரையம்-எல்லை, தற்சமயம்.
இறுவரையும்-சாமளவும்.
இறுவாய்-முடிவு.
இறை - அணு, அரசன், அற்பம், இறகு, இறப்பு, இறையென்னேவல், உயர்ச்சி, உயர்ந்தோன், ஊழித்தீ, எப்பொருட்குமிறைவன், கடமை, கடவுள், கடன், காலவிரைவு, குடியிறை, கையிறை, சிவன், சிறுமை, தங்கல், தங்குமிடம், தலை, நட்பம்,

நோய், பிரமன், பெருமை, மறு மொழி, மாமரம், மூத்தோன், வருத்தம், விடை, விட்டுறு, வீட்டிறப்பு.

இறைகுத்தல்-அளவுபார்த்தல், நிதானம்பண்ணுதல்.

இறைகூடி-அரசாண்டு.

இறைகூடை-சீலாப்பூட்டை, நீரிறைக்குங்கூடை, பூட்டை.

†இறைகொண்ட-தங்குதல்கொண்ட.

இறைகொள்ளல்-திறைகொள்ளல்.

இறைக்கள்ளன்-இறைப்பிளவை.

இறைக்குத்தல் - கண்புரட்சியற்றுநிற்றல்.

இறைக்குத்து- சாகுந்தருணத்தில்கண்குழிவிழுதல்.

இறைச்சி-மாமிசம்.

இறைச்சிப்பொருள் - தருக்கசாத்திரத்தொன்று, தெய்வமுதலாகிய பொருளின் கண்ணேபிறத்தல், புறத்துச்சொல்லுங் குறிப்புப் பொருள்.

இறைஞ்சலர்-சத்துருக்கள்.

இறைஞ்சல்-குனிதல், வணங்கல்.

இறைஞ்சார்-பகைவர்.

இறைஞ்சி-மரவுரி.

இறைஞ்சுதல்-குனிதல், வணங்குதல்.

இறைதல்-சிதறுதல், சிந்தல்.

இறைதிரியல்-அரசுநீதிதிறம்பல்.

இறைத்தல்-அள்ளிச்சொரிதல், சொரிதல், நீரிறைத்தல்.

இறைபயப்பது - இருவகை விடையினொன்று, அது வினவெதிர்வினவல், உடன்படல், உறுவதுகூறல், உற்றதுரைத்தல், ஏவல், சொற்றொகுத்திறுத்தல், மறுத்தல்.

இறைபுரிதல் - அரசாட்சிசெய்தல், நீதிசெலுத்தல்.

இறைப்பிளவை-கைவிரைச்சிலந்தி.

இறைப்பு - இறைக்குந்தன்மை, சொரிதல்.

இறைமகள்-இராசபுத்திரி.

இறைமகன் - அரசபுத்திரன், குமரன், விநாயகன்.

இறைமரம்-எற்றல்மரம்.

இறைமாட்சி-அரசியல்.

இறைமாண்டார்- அரசர்.

இறைமை-இராச்சியமுறை, தலைமை, தெய்வத்தன்மை.

இறைமையாட்டி-அரசி, தலைவி.

இறையவன்-இறையோன்.

*இறையனார்-தலைச்சங்கப்புலவருளொருவர்.

இறையனாரகப்பொருள் } ஓர் பொருளிலக்கணம்
இறையனார்பொருள் }

இறையால் - ஈழதேசத்தில் வழங்கின பன்னிரண்டணுவுள்ள ஓர்வகைநாணயம்.

இறையிலி-இறைகொடுக்காதவன்.

இறையோன்-கடவுள்.

இறைவனாரகப்பொருள் - இறையனார் பொருள்.

இறைவனிம்பம்-சிவனார்வேம்பு.

இறைவன்-அரசன், கடவுள், குரு, சிவனார்வேம்பு, சிவன், தலைவன், பிதா, பிரமன், மூத்தோன், *எப்பொருளினுந்தங்குவோன்.

இறைவன்வேம்பு-சிவனார்வேமபு.

இறைவி- அன்னை, இராசாத்தி, குருவின்மனைவி, தலைவி, மனைவி.

இறைவை - இறைகூடை, ஏணி, தூற்றுக்கூடை, நீரிறைக்கு மரப்பத்தல்.

இற்செறிப்பு } கன்னியை வீட்டிலிருத்திக்காத்தல்.
இற்செறிவுறுத்தல் }

இற்பிறப்பு-குடிப்பிறப்பு.

இற்புலி-பூனை.

இற்று-இஃது, இத்தன்மைத்து, சாரியை (உ-ம்) பதிற்றுப்பத்து.

இற்றுப்போதல் - அழுகிப்போதல், முரிந்துபோதல்.

இற்றுவிழல்-முரிந்துவிழல்.

இற்றை-இன்று.

இனக்கட்டு - இனக்கூட்டம், உறவின்முறை, பந்துக்கட்டு.

இனங்காக்குமயானை - யானைதிரட்குத்தலையானை

இனஞ்சனம்-சுற்றத்தார்.

இனத்தார்-சுற்றத்தார்.

இனமொழிவிடை - இனத்தச்சொல் விடை, (உ-ம்) மற்றையசெய்வேன்.

இனமோனை - இனவெழுத்துக்களொன்றற்கொன்று மோனையாய் வருவது.

இனம்-குலம், கூட்டம், சம்பந்தம், சுற்றம், திரள், பசுக்கூட்டம், மந்திரிகள், வருக்கம்.
இனவழி-வமிசபரம்பரை.
இனவெதுகை - இனவெழுத்துக்களாலாமெதுகை.
இனன்-அரசன், சந்திரன், சூரியன்.
இனா-நகைச்சொல்.
இனி - இப்பால், இப்பொழுது, பின்னால்.
இனிச்சபண்டம்-இனித்தபண்டம்.
இனிது-இனிமையுடையது.
இனித்தல்-இதப்படுதல், தித்தித்தல்.
இனிப்பு - இனிமை, சிநேகம், தித்திப்பு.
இனிமை - இனிப்பு, சந்தோஷம், மேன்மை.
இனியசொல்-இன்சொல்.
இனியவைகூறல் - வாக்கின்நற்குணம் நான்கினொன்று, அஃது நயச்சொல்.
இனியாநாற்பது - நன்மையைவிவரிக்கும் நாற்பதுபாட்டுள்ள ஓர்நூல்.
இனைதல்-இரங்குதல், வருந்தல்.
இனைத்தல்-ஒலித்தல், வருத்தல்.
இனைத்து-இத்தன்மைத்து.
*இனையள்-இனைதலையுடையவள், இத்தன்மையள்.
இன்-இனிமை, ஐந்தனுருபு (உ-ம்) மலையின் வீழருவி, சாரியை (உ-ம்) பூவின்மணம்.
இன்கண்-பிரியம்.
இன்சபம்-இராசசபை.
இன்சொல்-நயச்சொல்.
இன்சொல்லுவமை-ஓரலங்காரம், அஃது பொருளில் உவமைக்கொருமிகுதிதோன்றக்கூறி யின்ன மிகுதியுடைத்தெனினு மொப்பதன்றிச்சிறந்ததன்றென்பது.
இன்பம்-அகமகிழ்ச்சி, இனிமை, ஓரலங்காரம் அஃது சொல்லானாயினும் பொருளானாயினுஞ் சுவைபடத்தொடுப்பது, சுகம், நூற்பயனான்கி னொன்று, பெரியோரியல்பி னொன்று.
இன்பன்-கணவன்.
இன்பு-இன்பம்.
இன்புறல்- மகிழ்ச்சிபொருந்தல்.
இன்புறல்-தாயமேவோர்.
இன்மை-இல்லாமை, அபாவம்.
இன்மைநவிற்சியணி - ஓரலங்காரம், அது யாதொன்று மொன்றின்மையால் உபமேயத்திற்கு உயர்வேனுந்தாழ்வேனுந் தோன்றச்சொல்லுதல்.
இன்றி-இல்லாமல். [மை.
இன்றியமையாமை- இல்லாதாகிறையா
இன்று-அசைச்சொல், இந்தநாள்.
இன்றேல் - இல்லாமல்போனால், வேண்டுமானால்.
இன்ன-இத்தன்மைய, உவமையுருபு.
இன்னணம்-இவ்விதம்.
இன்னதுவல்லதிதுவென மொழிதல்-ஓர்யுக்தி.
இன்னம் } அதிகம், இதுவரையும்மடியும், மேலும்.
இன்னமும் }
இன்னலம்-இனியநலம்.
இன்னல்-தீமை, துன்பம்.
இன்னா- ஆகாமை, இகழ்ச்சி, சீழ்மையான, தீமை, துன்பம், வெறுப்பு.
இன்னாங்கு-தீமை, துன்பம்.
இன்னாச்சொல் - இழிசொல், கடுஞ்சொல், நகைச்சொல்.
இன்னாதார்-பகைவர்.
இன்னாது-தீது.
இன்னாநாற்பது - கெடுதியை விவரிக்கும் நாற்பதுபாட்டுள்ள ஓர்நூல்.
இன்னாமுகம் - சந்தோஷமில்லாதமுகம்.
இன்னாமை - ஆகாமை, தவறு, தீமை துயரம், வேண்டாமை.
இன்னாரினியார் - பகைவரும் சிநேகரும்.
இன்னார்-இத்தன்மையர், பகைவர்.
இன்னிலை-இலைக்கள்ளி.
இன்னிசை - இராகம், ஏழுநரம்புள்ள வீணை.
இன்னிசைக்கலிப்பா-கலிப்பாவு ளொன்று.
இன்னிசைக்காரர்-பாணர்.
இன்னிசைச்சிந்தியல்-வெண்பா இன்னிசைவெண்பாப்போலடங்கு மூன்றடியான் முடிவது.
இன்னிசைவெண்பா-வெண்பாவுளொன்று.

இன்னியம்-இன்பமானவாத்தியம்.
இன்னியர்-பாடுவோர்.
இன்னினி-இப்பொழுது.
இன்னும்-மேலும்.
இன்னே - இத்தன்மயவாய், இப்பொழுதே.
இன்னோசை-இனியவோசை.

ஈ

ஈ - அம்பு, அரைநாண், இந்திரவில், இலக்குமி, ஈயென்னேவல், ஓரெழுத்து, குகை, கொசுகு, சரசுவதி, தாமரையிதழ், பாம்பு, பார்வதி, முன்னிலை யசைச்சொல் (உ-ம்) நின்றீபெரும, வண்டு.
ஈகம்-சந்தனமரம்.
ஈகை-இண்டங்கொடி, கற்பகம், கொடை, பொன், மேகம்.
ஈகையன் } கொடையாளன்.
ஈகையாளன் }
¶ * ஈக்க-தருக.
ஈக்கை-புலிதொடக்கி.
ஈங்கம்-சந்தனமரம்.
ஈங்கிசை } இமிசை, கொலை, நிந்தை, வடு, வருத்தம்.
ஈங்கிஸை }
ஈங்கு-இண்டங்கொடி, இவ்விடம்சந்தனம்.
ஈங்கை-இண்டங்கொடி.
ஈங்கைத்துவக்கு-ஓர்மரப்பட்டை.
ஈசகன்-குபேரன்.
ஈசதேசாத்தி-பெருமருந்து.
ஈசத்துவம்-அட்டசித்தியிலொன்று, அஃது யாவர்க்குந் தேவனாகுதல்.
ஈசல்-ஈசெல், சீழ்க்கை.
ஈசற்போடல்-ஈசைகொட்டல்.
ஈசனாள்-ஆதிரைநாள்.
ஈசன்-அரசன், எப்பொருட்குமிறைவன், கடவுள், குரு, கௌரிபாஷாணம், சிவன், பிரமன், மூத்தோன், விட்டுணு.
ஈசன்மைந்தன் - முருகன், விநாயகன், வீரபத்திரன்.
ஈசன்றார் - கொன்றமரம், கொன்றைமாலை.
ஈசாநி-பார்வதி.
ஈசானமேரு - சிவன்வசிக்கும் வெள்ளிமலை.
ஈசானம்-சிவனைம் முகத்தொன்று, வடகீழ்த்திசை.
ஈசானன்-கடவுள், சிவன், வடகீழ்த்திசைப்பாலன்.
ஈசானி-சிவன் பஞ்சசத்தியி லொன்று
ஈசானியம்-ஈசானம்.
ஈசானியன்-ஈசானன்.
ஈசி-பார்வதி.
ஈசுரமூலி-தராசுக்கொடி, பெருங்கிழங்கு, பெருமருந்துக்கொடி.
ஈசுரவிந்து-இரசம்.
ஈசுரவேர்-தராசுக்கொடி.
ஈசுரன்-ஈசன், ஈச்சுவரன்.
ஈசுவரதரு-கடம்பு.
ஈசுவரன்-ஈச்சுரன்.
ஈசுவரி-பார்வதி.
ஈசுவரிநாதம் } கெந்தகம்.
ஈசுவரிபிந்து }
ஈசெல்-சிறகுள்ளகறையான்.
ஈசை-ஏர்க்கால், கலப்பை.
ஈச்சத்தோல் - ஈயினெச்சம் பிடித்த தோல்.
ஈச்சப்பி-உலோபி.
ஈச்சு-ஈச்சமரம்.
ஈச்சுக்கொட்டல்-சீழ்க்கைவிடுதல்.
ஈச்சுர-பதினோராவதுவருடம்.
ஈச்சுரமூலி-பெருமருந்து.
ஈச்சுரம்-சிவதத்துவ மைந்திலொன்று, அஃது ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்தது.
ஈச்சுரன்-அனுபவந்தருகிறவன், கடவுள், சிவன், தலைவன்.
ஈச்சுவரன்-கடவுள், தலைவன்.
ஈச்சுவரை-பார்வதி.
ஈச்சோப்பி-ஈப்பிணி, ஈயோட்டி.
ஈஞ்சு-ஈச்சமரம்.
ஈஞ்சை-இகழ்ச்சி, கொலை, நிந்தை.
ஈடணம்-புகழ்.
ஈஷணை } புத்திரன் மனைவி பொன் இவற்றில்விருப்புறுகை, விருப்பம்.
ஈடணை }
ஈடழிதல்-பெருமைகுன்றல்.
ஈடழிவு-சீர்கேடு.
ஈடன்-திராணிவான், பணக்காரன், பலசாலி, பெருமையுடையோன்.
ஈடாடுதல்-கொளகொளத்தல், தளர்தல், நேர்நிற்றல்.

ஈடாட்டம் - ஊசலாட்டம், கொடுக்கல் வாங்கல், தளதளப்பு, திராணி, விசாலம்.

ஈஷிகை } எழுதுகோல், தூரிகை
ஈடிகை }

ஈடிதம்-துதித்தல்.

ஈடு - உவமை, ஓர்மருந்து, கடன்கோடற்கு வைத்த அடகு, குழைவு, சரியொத்தது, பெருமை, பதில், வலி

ஈடுகட்டல் - ஈடுசெய்யல், பிணைகொடுத்தல்.

ஈடுசெலுத்தல்-பதிலளித்தல்.

ஈடுபாடு-ஒப்பு, நயநஷ்டம்.

ஈடேறுதல் - உய்யப்பெறுதல், கடைத்தேறுதல், வாழ்வடைதல்.

ஈடேற்றம்-இரட்சிப்பு, உய்வு, கடைத்தேற்றம், மீட்பு.

ஈடை-ஈகை, புகழ்ச்சி.

ஈட்சணம்-நோக்கம், பார்வை.

ஈட்டம்-கூட்டம்; திரள், தேட்டம்,

ஈட்டல் - சம்பாதித்தல், தொகுத்தல், வணிகரெண்குணத்தொன்று.

ஈட்டி-குந்தம், சவளம்.

ஈட்டியது-சஞ்சிதவினை, தேடியது.

ஈட்டுக்கீடு-சரிக்குச்சரி.

ஈணை-அகணி.

ஈண்டல்-கூட்டல், கூட்டம், நெருக்கம், நெருங்கல்.

ஈண்டு - இவ்வண்ணம், இவ்விடம், ஈண்டென்னேவல், சீக்கிரம், புலிதொடக்கி.

ஈண்டுதல்-ஈண்டல்.

ஈண்டை-இவ்விடம்.

ஈண்டையான்-இவ்விடத்தவன்.

ஈதல்-அந்தணர் அரசர், வணிகர்க்குரிய அறுதொழிலினொன்று கொடுத்தல், சொரிதல்.

ஈதி - அதிவ்ருஷ்டி முதலானவற்றாலுண்டாகு மூபத்திரவம், குட்டி, பயணம்.

ஈத்வரீ-வியபிசாரி.

ஈந்தி } ஈஞ்சு, கர்ச்சூரம்.
ஈந்து }

ஈப்சை-இச்சை.

ஈப்பி-இலையாமெனச்சம், ஈர்.

ஈப்பிணி-உலோபி.

ஈப்புலி-ஈயைக்கொல்லும்பூச்சி.

ஈமக்கடுமை-சுடுகாட்டின்வெப்பம்.

ஈமத்தாடி-சிவன்.

ஈமப்பறவை-கழுகு, காகம், பருந்து.

ஈமம்-சுடுகாடு, பாதிரிமரம், விறகு.

ஈமவனம்-மயானம்.

ஈமவாரி-வசம்பு.

ஈமுக்கடுமை-ஈமக்கடுமை.

ஈம்-சுடுகாடு.

ஈயக்களங்கு-வங்கவெட்டை.

ஈயக்கிட்டம்-ஈயமுருக்கியெடுத்த கிட்டம்.

ஈயக்குழலி-நீலப்பாஷாணம்.

ஈயக்கொடி-இண்டங்கொடி.

ஈயச்சிந்தூரம்-வங்கசிந்தூரம்.

ஈயச்சுரதம்-இண்டஞ்சாறு.

ஈயத்தின்பிள்ளை-நீலபாஷாணம்.

ஈயமலை-ஓர்மலை.

ஈயம்-பஞ்சலோகத்தொன்று, பாதிரி, பிருகாரசிங்கி.

ஈயல்-ஈதல், சிறகுமுளைத்த கறையான், தம்பலப்பூச்சி.

ஈயவரி-பெருமருந்து.

ஈயவெள்ளை - மரம்முதலியவற்றிற்குப் பூசும் ஓர் வருணம்.

ஈயுவன்-இராவணன்.

ஈயை-இஞ்சி, சிக்கிலி.

ஈயோட்டி-ஈச்சோப்பி.

ஈரக்கல்-ஓர்மருந்துக்கல், குருந்தக்கல்.

ஈரங்கொல்லியர்-வண்ணார்.

ஈரசைச்சீர் - இரண்டசைச்சீர், அது தேமா புளிமா கருவிளம், கூவிளம் எனும் வாய்ப்பாட்டான் வருவது.

ஈரஞ்சுவறுதல் - ஈரமுலர்தல், ஈரமூறுதல்.

ஈரடி-இணையடி, ஈரொட்டு, கவர், சந்தேகம்.

ஈரடிப்பயன் - உபயார்த்தம், கபடம், சந்தேகம், விகற்பம்.

ஈரடிப்பா-குறள்வஞ்சிப்பாச்சிறுமை.

ஈரடிமடக்கு-அடிகளிரண்டடிமடங்கிவருவது.

ஈரடிவருக்கம்-ஈரொட்டு, உபயார்த்தம், சந்தேகம், சித்திரகவியிலொன்று.

ஈரடிவெண்பா-குறள்வெண்பா.

ஈரடுக்கொலி-உபயவோசை.

ஈரணம்-வெறுநிலம், களர்நிலம்.

ஈரநாவு-பழிகூறுகிற நாக்கு.

ஈரந்துவட்டல்-ஈரமெடுத்தல்.
ஈரப்பசுமை-ஈரப்பற்று.
ஈரப்பசையுள்ளவன்-இரக்கமுள்ளவன், செல்வமுடையோன்.
ஈரப்பச்சை-ஈரப்பசுமை.
ஈரப்பலா-ஆசினிப்பலா.
ஈரப்பற்று-ஈரப்பிடி, சம்பத்து, நன்றி.
ஈரமதி-குளிர்ந்தசந்திரன்.
ஈரம்-அழகு, அறிவு, அன்பு, கரும்பு, கிருபை, குங்குமப்பூ, குங்குமம், குளிர்ச்சி, நினைவு, பகுதி, பண்பு.
ஈரலித்தல்-ஈரமாதல்.
ஈரலிப்பு-ஈரம்.
ஈரல்-ஈருள், பித்திருக்குந்தானம்.
ஈரல்கருகல்-நாணுதல், பயப்படுதல்.
ஈரல்பதறல்-பயப்படுதல்.
ஈரவன்-ஈரம், சந்திரன்.
ஈரவிதைப்பு-ஈரநிலத்தில் விதைக்கை, புழுதிவிதை.
ஈரவுள்ளி, ஈரவெண்காயம் } ஈருள்ளி.
ஈரறம்-இல்லறம், துறவறம்.
ஈரறிவுயிர் - பரிசமுஞ் சுவையுமறியும் நந்துமுதலிய செந்து.
ஈரற்கருகுதல்-ஈரல்வாடுதல், மிகவும்பயப்படுதல்.
ஈரற்குலை-ஈரற்கொத்து.
ஈரற்குழி-ஈரலுறுதானம், நெஞ்சிற்குழி
ஈரற்பித்து-பித்தந்தங்குமீரல்.
ஈரற்றீய்தல்-ஈரற்கருகுதல்.
ஈராசிடைவெண்பா - இரண்டாசிடையிட்டுவரும்வெண்பா.
ஈராடி-ஈரம், காற்றினமைவு, நிலையின்மை, மழைக்குணம்.
ஈராட்டி-இரண்டுமனைவி, ஈராடி.
ஈரி-கந்தைப்புடைவை, கொக்கான்விளையாட்டி லிவ்விரண்டாகப் பிரிக்குந்தன்மை, பலாக்காய்த்துமபு.
ஈரிச்சல்-குளிர்தல்.
ஈரித்தல்-ஈரமாதல்.
ஈரிப்பு-ஈரம், குளிர்மை.
ஈரியது-ஈரமுள்ளது.
ஈரியநெஞ்சம்-அன்புள்ளமனது.
ஈரிலைப்பயிர்-இரண்டிலை வெளியில்வந்த இளம்பயிர்.
ஈரிழை-இரட்டையிழைகொண்டது.
ஈரீற்று-இரண்டாமீற்றுப்பசு.

ஈருடல் - இருதன்மைத்தாயவுடல் (உ-ம்) நாரசிம்மன்.
ஈருயிர்க்காரி-கெர்ப்பிணி.
ஈருள்ளி-ஈரவெங்காயம்.
ஈருள்-ஈரல்.
ஈரொச்சம்-பெயரொச்சம்வினையெச்சம்.
ஈரொட்டு - இரண்டுக்குற்றது, சந்தேகம்.
*ஈரொற்றுவாரம்-இரண்டுமாத்திரைப் பெற்றுவருஞ்செய்யுள்.
ஈர்-இரண்டு, ஈரொன்னேவல், கரும்பு, பேன்முட்டை, முன்னிலைப் பன்மைவிகுதி.
ஈர்கொல்லி-ஈருருவுங்கருவி, உப்பிலிக்கொடி.
ஈர்கோலி-ஈர்வாரி.
ஈர்க்கில், ஈர்க்கு } அம்பிறகு, ஓலையீர்க்கு.
ஈர்க்குச்சம்பா-ஓர்நெல்.
ஈர்க்குமல்லிகை-ஓர்மல்லிகை.
ஈர்ங்கதிர்-குளிர்ந்தகதிர், சந்திரன்.
ஈர்ங்கதிர்த்திங்கள் - குளிர்ந்தகதிர்ச்சந்திரன்.
ஈர்ங்கை-உண்டுகழுவியகை.
ஈர்ஞை-பொறுமை.
ஈர்தல்-அரிதல், பிளத்தல்.
ஈர்த்தல்-அறுத்தல், இழுத்தல், ஈரித்தல், உரித்தல், குளிர்மையாதல், பிளத்தல், வெட்டல்.
ஈர்ந்தமிழ்-குளிர்ந்ததமிழ், தண்டமிழ்.
ஈர்ப்பட்டு-ஈர்வாணி.
ஈர்ப்பி-ஈர்.
ஈர்ப்பு-இசிவு, இழுப்பு, ஈர்த்தல், உரிப்பு, காயம்மாறுங்காலத்திலுண்டாகுமோர்வலி.
ஈர்வடம்-ஈர்வாணி
ஈர்வலி-ஈருருவுங்கருவி.
ஈர்வலித்தல்-ஈர்வாரல்.
ஈர்வாணி-ஈர்க்குக்கயிறு.
ஈர்வாரி-ஈருருவுங்கருவி.
ஈர்வாள்-மரமரியும்வாள்.
ஈர்வெட்டு-ஈர்ப்பட்டு.
ஈலி-கைவாள், சுரிகை.
ஈவிரக்கம்-இரக்கமுங்கொடையும்.
ஈவு-கொடுக்கப்பட்டது, கொடை, பிரித்துக்கண்டபேறு, வரம்.

ஈவுகணக்கு, ஈவுக்கணக்கு } பாகாரம், பிரிவுகணக்கு.
ஈவுசோய்வு-இளைக்காரமுங்கொடையும்
ஈழக்குலச்சான்றூர் - அறுபத்து மூவரிலொருவரானஏனாதிநாயனார், சாணார்
ஈழத்தலரி-ஏரலரி, பெருங்கள்ளி.
ஈழமண்டலம்-இலங்கை.
ஈழம்-இலங்கை, உலோகக்கட்டி, கள், கள்ளி, சிங்களதேசம், பொன்.
ஈழை-காசநோய், கோழை, தொய்வு.
ஈழைக்கொல்லி- தாழகம்.
ஈளை-கோழை.
ஈளைக்காரன்-கோழைநோயாளி.
ஈறல்-துக்கம், நெருக்கம், பின்னல்.
ஈறற்பற்றை-நெருக்கமானதூறு.
ஈறுந்தம், ஈறுந்தரம் } ஆகமுடிவு.
ஈறிலான், ஈறிலி } கடவுள்.
ஈறு-உப்பளம், எல்லை, பல்லிடையின் முரசு, மரணம், முடிவு.
ஈறுகடை-ஈறுந்தம்.
ஈறுகட்டி-இரசகருப்பூரம்.
ஈறுகெடுதல்-ஈறழிதல்.
ஈற்றசை - பாட்டிருதியினிற்கு மசைநிலை.
ஈற்றசையோகாரம் - ஈற்றசையாகவருமோகாரவிடைச்சொல்.
ஈற்றயல்-சொல்லினிறுதி யெழுத்துக்கயலெழுத்து.
ஈற்று-ஈனுகை, பெறுகை.
ஈற்றுளைதல்-ஈனவருந்துதல்.
ஈற்றெலும்பு-கடையில் நரம்பு, கடையெலும்பு.
ஈற்றெழுத்து-உயிர் பன்னிரண்டும் ஞ ண் ந் ம் ய் ர் ல் வ் ழ் ள் ன் என்னுமெழுத்துக்களும்.
ஈற்றெழுத்துக்கவி - முற்பாட்டினந்தத்தெழுத்தேனுஞ் சொல்லேனும்வரும்பாட்டிற் காதியாய்வருவது.
ஈனசாதி-எளியசாதி.
ஈனத்தார்-கொன்றை.
ஈனமிலணங்கு-தெய்வப்பெண்.
ஈனம்-அழிவு, இழிவு, கள்ளி, குறைபாடு, கேடு, தள்ளல்.
ஈனல்-ஈனுகல், கதிர்.
ஈன்றல்-ஈனல், உண்டாதல்,
ஈனனம்-வெள்ளி.
ஈனுக்குமரி - பிள்ளைபெறாத பாலியஸ்திரீ.
ஈனுமலடு-ஒருமுறையும்பெறாதமலடு, மலட்டுப்பசு, மலட்டெருமை.
ஈனுமாடு - மலட்டுப்பசு அல்லது எருமை.
ஈனுயம்-சங்கையீனம், நிந்தை.
ஈனுவரக்கி-இரக்கமில்லாதவள்.
ஈனுதல்-கதிர்முதலியனகக்குதல், காய்த்தல், பெறுதல்.
ஈனுமணிமை-சூதகம், புனிறு.
ஈனை-இலைநரம்பு, ஓர்வியாதி, சித்திரக்குறிப்பு, பருமட்டம்.
ஈன்றணிமை, ஈன்றணுமை } ஈனுமணிமை.
ஈன்றவணிமை-இளங்கொற்றியின்பச்சுடம்பு, கன்றினிளமை.
ஈன்றவள்-தாய், பார்வதி.
ஈன்றவன்-பிதா, பிரமன்.
ஈன்றார்-தந்தைதாயர்.
ஈன்றாள்-தாய், பார்வதி.
ஈன்றான்-தந்தை, பிரமன்.

உ

உ - இரண்டென்னுமெண்ணின்குறி, உருக்கம்கட்டளைகோபம்சம்மதியிவற்றைக் காட்டுமோருபசருக்கம், ஓரெழுத்து, ஓர்சுட்டு, ஓர்வினையெச்சவிகுதி (உ-ம்) செய்து, தன்மையொருமைவினைவிகுதி (உ-ம்) உண்கு, சாரியை, சிவன், பிரமன்.
உஃது - ஒன்றன்படர்க்கைச் சுட்டுப்பெயர்.
உககனல்-வடவைத்தீ.
உகசந்தி-உகத்தின்சந்திப்பு.
உகசூரியர்-பன்னிருசூரியர்.
உகட்டு-உவட்டு.
உகட்டுதல் -தேக்கெடுத்தல், புரளுதல்.
உகத்தல்-உயர்தல், எழும்பல், சந்தோஷித்தல், திருத்தியடைதல், மகிழ்வோடுகொள்ளல், விரும்பல்.
உகந்தசெய்தி-நல்லசமாசாரம்.
உகந்தது - அங்கீகரிக்கும்படியான வஸ்து.
உகந்தவன் - இணக்கமானவன், தருந்தவன், பிரியமானவன்.

உகப்பிரளயம்-யுகமுடிவு.
உகப்பு - உயர்ச்சி, சந்தோஷம், மகிழ்ச்சி.
உகமாருதம்-ஊழிக்காற்று
உகம் - இரண்டு, நாள், பாம்பு, பூமி, முடிவு, யுகம், *தலைப்பாட்டு.
உகரக்குறுக்கம்-குற்றியலுகரம்.
உகரம்-ஓரெழுத்து.
உகருத்திரர்-பன்னொருருத்திரர்.
உகல்-உதிரல், கழலல், சிந்தல், சொரிதல்.
உகவல்லி-நாகமல்லி.
உகவை-சந்தோஷம், மகிழ்ச்சி.
உகளம்-இஷ்டம், இரண்டு.
உகளல் - கடத்தல், குதித்தல், பாய்தல்.
உகளித்தல்-குதித்தல், பாய்தல்.
உகளுதல்-உகளல்.
உகா-ஓர்மரம்.
உகாதி-அருகன், யுகாதி.
உகாந்தகாலன் } சிவன், விட்டுணு.
உகந்தநாதன் }
உகாந்தம்-யுகப்பிரளயம், யுகமுடிவு.
உகாரம்-உகரவெழுத்து.
உகாரி-உருத்திரமூர்த்தி.
உகிரம்-இலாமிச்சை.
உகிர்-நகம்.
உகிர்ச்சுற்று-நகச்சுற்று.
உகினம் } புளிமா.
உகின் }
உகுணம்-முகட்டுப்பூச்சி.
உகுதல்-உதிரல், கழலல், சிந்தல், சொரிதல், பொடியாதல், விடுதல்.
உகுத்தல், உதிர்த்தல், ஊற்றுதல், சிந்தல், சொரிதல், விடுத்தல்.
உகைதல்-எழுதல், செல்லுதல்.
உகைத்தல் - எழுப்புதல், ஏறுதல், செலுத்தல்.
உக்கம்-ஆலவட்டம், இடபம், இடை, கோழி, தீ, தூக்குக்கயிறு, பசு, பந்து.
உக்கரித்தல் - உக்காரம்போடல், வாந்திபண்ணுதல்.
உக்கலை-ஒக்கலை, மருங்கின்பக்கம்.
உக்கல்-உக்கினது, உக்குதல், உளுத்தது, பக்கம், பதனழிவு.
உக்களம்- இராக்காவல், தலைக்காவல், பாளயஞ்சூழ்கழி
உக்களவர்-இராக்காவலர்.
உக்கா-கஞ்சாக்குடுக்கை, கள்.
உக்காக்கம்-அரைநாண்.
உக்காரம் - சத்திபண்ணல், தொனுப்போடுதல்.
உக்காரி-பிட்டு.
உக்கிடர்-சிலந்திப்பூச்சி.
உக்கிரகந்தம் } கரும்பு, பெருங்காயம், வசம்பு, வெள்ளுள்ளி, வேம்பு
உக்கிரகந்தி }
உக்கிரகெந்தை-வசம்பு.
உக்கிரகெந்தம்-உக்கிரகந்தம்.
உக்கிரவாசா-காத்தொட்டி.
உக்கிரச்சுரவார்-ஆதொண்டை.
உக்கிரமது - வைராக்கியமானகுணம்.
உக்கிரமம்-மூர்க்கம்.
உக்கிரம், உத்திரம், உறைப்பு, கடுமை, குரூரம், கொடுமை, கோபம், தலைக்காவல், பயங்கரம், பரணி, பாத்திரபதம், மகம், முருங்கை, மூர்க்கம், வெப்பம், வேகம், * தேவுறுப்பினுளொன்று.
உக்கிரன்- க்ஷத்திரியனுக்குஞ்சூத்திரிக்கும் பிறந்து வேட்டைத்தொழில் செய்வோன், சிவன், துருவாசன், விசுவாமித்திரன், வீரபத்திரன்.
உக்கிராக்ஷன்-சிவன்.
உக்கிராணம் - களஞ்சியம், பண்டசாலை.
உக்கிரி-துர்க்கை, வசம்பு.
உக்கிருஷ்டம் } உற்கிருஷ்டம், மிகுதி, மேன்மை.
உக்கிருட்டம் }
உக்கிரை-கருவசம்பு.
உக்கு-இலவங்கம்.
உக்குதல்-இற்றுப்போதல், பயப்படல்.
உக்குளான்-சருகுமுயல்.
உக்குறுமை-உகரக்குறுக்கம்.
உங்கரித்தல்-அதட்டுதல், உரப்புதல்.
உங்காரம்-அதட்டுகை, உம்மென்றுரப்பல், வண்டினொலி.
உங்காரித்தல்-உங்கரித்தல்.
உங்கு } உவ்விடம்.
உங்கே }
உங்கை-உன்மாதா, உன்றங்கை.
உங்஠னம் - அத்தன்மை, இத்தன்மை, இவ்விடம், உவ்விடம்.

உசகம்-ஆமணக்கஞ்செடி.
உசரிதம்-நெருஞ்சில்.
உசரு } உயர்.
உசர் }
உசலம் } உசிலம்.
உசல் }
உசற்காலம் - உஷற்காலம், சூரியோதயம்.
உசனம்-உபபுராணம் பதினெட்டினுென்று தருமநூல் பதினெட்டினுென்று.
உசனன்-சுக்கிரன்.
உசா-ஆராய்வு, ஆலோசனை, உசாவென்னேவல், உஷாதேவி, ஒற்றர்.
உஷாகாலம் - சூரியோதயத்துக்கு நான்குகடிகை முற்பட்டகாலம்.
உசாக்கேட்டல்-ஆலோசனை கேட்டல்
உசாதேவி } சூரியன்மனைவி.
உஷாதேவி }
உசாத்துணை-உசாவுதுணை.
உஷாபதி-அநிருத்தன்.
உசாவல்-ஆராய்தல், எண்ணல், யோசனைகேட்டல்.
உசாவு-ஆராய்வு, ஒற்றர்.
உசாவுதல்-உசாவல்.
உசாவுதுணை - ஆலோசனைத் துணைவன்.
உசி-கூர்மை, விருப்பம்.
உசிதசமயம்-அவதரம்.
உசிதம் - அழகு, உத்தமம், தகுதி, மேன்மை, யோக்கியம்.
உசிதன்-பாண்டியன்.
உசிப்புதல்-உசுக்கல்.
உசிரம் - இடபம், இலாமிச்சைவேர், கிரணம் செவ்வியம், மிளகு.
உசிர்-உயிர்.
உசிலம் } சிக்கிரிமரம்.
உசிலை }
உசில் }
உசிரம் - இலாமிச்சைவேர், வெட்டிவேர்.
உசு-உளு.
உசுக்கல் } எழுப்பல், ஏவுதல்.
உசுப்பல் }
உசுப்புதல் }
உசும்புதல்-இயங்குதல்.
உசுவாசம்-உச்சுவாசம், சுவாசம் உள்ளேயிழுத்தல்.
உஷை - இரவு, காலை, மாலை, வாணாசுரன்மகள்.
உச்சக்கிரகம்-சுபக்கிரகநிலை.
உச்சடை - கொடிக்கொம்பு, கோபம், வழக்கம்.
உச்சட்டம்-இலக்கு, நேர்.
உச்சதரு-தென்னமரம்.
உச்சதேவன்- கிருட்டிணன்.
உச்சத்தனம்-உச்சக்கிரகம்.
உச்சந்தம் - அதிகப்படுதல், ஒடுக்கம், தணிவு, விலையுயர்ச்சி.
உச்சந்தலை-உச்சிச்சிரசு.
உச்சந்திரம்-கடைச்சாமம்.
உச்சபாஷாணம்-பலக்கப்பேசல்.
உச்சமானவன்-நெட்டையானவன்.
உச்சம்-உயர்ச்சி, கிரகவுச்சம், தலைக்குநேரிடம், நுதி, மத்தியானம், வல்லிசை.
உச்சயனி } உச்செனிநகரம், அது விக்ரமாதித்தனுக்கு இராஜதானியாயிருந்தது.
உச்சயினி }
உச்சரித்தல்-சொல்லுதல்.
உச்சரிப்பு-எழுத்தினேசை, மந்திரோச்சாரணை.
உச்சலம்-அறிவு, மனம்.
உச்சவம்-உற்சவம்.
உச்சவீடு-உதயத்துக்கேழாமிடம்.
உச்சறகம்-அபானம்.
உச்சன்-இலக்குச்செறியும்பொருள்.
உச்சாகம்-முயற்சி.
உச்சாசனம்-கொலை.
உச்சாயம்-உச்சாகம்.
உச்சாடனம் - அகற்றல், ஏவுதல், கலைஞானமறுபத்துநான்கினுென்று.
உச்சாட்டியம்-ஓட்டல்.
உச்சாணி-உச்சி, உயர்ப்பு.
உச்சாரணஞ்ஞன்- பரபாஷைக்காரன்.
உச்சாரணம் } உச்சரித்தல், உச்சாடனம்.
உச்சாரணை }
உச்சாரம்-உச்சரிப்பு, உயர்ச்சி, மலம்.
உச்சாரிதம்-உச்சரிக்கப்பட்டது.
உச்சி-ஆண்மயிர், தலை, நடு, நடுத்தலை, நாய், நுனி, மத்தியானம், மயிர்முடி.
உச்சிகாட்டல்-உச்சுக்காட்டல்.
உச்சிக்கரண்டி - குழந்தைகளுச்சியி

வெண்ணெய்விடுஞ் சிறுகரண்டி.
உச்சிக்கலயம் - அடுக்கின் மேலிருக்கும் மட்பாத்திரம், சிறியமட்பானை.
உச்சிக்கிழான்-சூரியன்.
உச்சிக்குடுமி-உச்சாச்சிகை.
உச்சிக்குழி-உச்சித்துவாரம், தலைகடு.
உச்சிக்கொண்டை - உச்சியின் மயிர்முடி.
உச்சிக்கொம்பன் - உச்சியிற்கொம்புள்ளமாடு, காண்டாமிருகம்.
உச்சிச்சுட்டி-ஓராபரணம்.
உச்சிச்செடி-புல்லுருவி.
உச்சிட்டசாங்கரியம் - எச்சிற்பாத்திரத்திலுண்ணல்.
உச்சிட்டமோதனம்-மெழுகு
உச்சிஷ்டம் } எச்சில்.
உச்சிட்டம் }
உச்சிதம்-அரியது, அழகு, உசிதம், உயர்ச்சி, கொடை, தகுதி, நெருஞ்சில், மேன்மை.
உச்சித்திலகம்-ஓர் பூஞ்செடி.
உச்சிப்பிளவை- உச்சந்தலையிற்சிலந்தி.
உச்சிப்பின்னல்-உச்சிச்சடை.
உச்சிப்பொழுது-நடுப்பகல்.
உச்சிமலை-செங்குத்தான கலை.
உச்சிமல்லிகை-ஊசிமல்லிகை. [தல்.
உச்சிமோத்தல் - உச்சிச்சிரசை முகத்
உச்சிரட்டம்-தள்ளப்பட்டது.
உச்சிரதம்-பிரண்டை.
உச்சிரதன்-பிறந்தவன்.
உச்சிரயம்-உயரம், முக்கோணத்தினிறுதிட்டவரி.
உச்சிரயோகன்-கணவான்.
உச்சிராயம்-உயரம்.
உச்சிருதி - உயரம்,முக்கோணத்தினிறுதிட்டவரி.
உச்சிவிடுதி - மத்தியானநேரத்தில் மழைவிடுகை, மத்தியான விடுதலை.
உச்சிவேர்-மூலவேர்.
உச்சினி - விக்கிரமாதித்தனிருந்தவூர்.
உச்சினிமாகாளி - உச்சினி, ஓர்காளி.
உச்சின்னம்-சமப்படுதல்.
உச்சுக்காட்டுதல்-தூண்டிவிடுதல்.
உச்சுச்செனல்-நாயைக்கூப்பிடல்.
உச்சுதல் - இலகுக்கெறிதல், தள்ளுதல், பிறர்பொருளைக்கவரல், வெல்லுதல்.

உச்சுவலம்-ஆசை, பொன்.
உச்சுவாசம்-சுவாசம்விடுதல், நூலினுட்பிரிவு.
உச்சூடை-கொடிக்கம்பநுனி.
உச்சூனம்-கொழுப்பு.
உச்சேசனம்-மிச்சம், வரள்தல்.
உச்சேதம்-அழித்தல், வெட்டல்.
உச்சைச்சிரவம்-இந்திரன்குதிரை.
உஷ்ட்ரகம்-ஒட்டகம்.
உஞற்று-உஞற்றெனேவல், ஊக்கம், முயற்சி, வழக்கம், வழக்கோதல்.
உஞற்றுதல் - ஏவிவிடுதல், செய்தல், தவறிப்போதல், முயற்சிபண்ணுதல்.
உஞசட்டை-ஒஞசட்டை; மெல்வு.
உஞ்சம் - உரலருகிலும் வயலிலும் ஒவ்வொரு தானியமாய்ப் பொறுக்குதல்.
உஞ்சல்-ஊஞ்சல்.
உஞ்சு - நாயையேவிடுங் குறிப்புச்சொல்.
உஞ்சுக்காட்டுதல் - நாயையேவி விடுதல்.
உஞ்சை-அவந்திநகர்.
உடக்கு-திருகாணிச்சுரையினுட்புரி.
உடங்கு-உருங்கு, ஒன்றிப்பு, கூடிநிற்றல்.
உடசத்தோல்-குடசப்பாலைப் பட்டை.
உடசம்-சிறுகுடில், பன்னசாலை.
உடந்தை - உரித்து, கூட்டு, சேர்மானம்.
உடந்தைப்படல்-ஒருமித்தல்.
உடப்பு-தொரட்டுமுள்மரம்.
உடமுள்-வேலமரமுள்.
உடம்-உடன்.
உடம்படிக்கை-சம்மதம், பொருத்தச்சீட்டு, பொருத்தம்.
உடம்படுதல்-சம்மதப்படுதல்.
உடம்படுமெய் - உயிருமுயிரும்புணரவிடைவருஞ் சந்தியொற்று.
உடம்படுவிலக்கு - ஓரலங்காரம்,அஃது உடம்பட்டார்போலக் கூறிவிலக்குவது.
உடம்பாடு-ஒருமிப்பு, சம்மதம்.
உடம்பிடி-வேல்.
உடம்பிடிக்கை-உடம்படிக்கை.
உடம்பு - உடல், உயிருக்கிருப்பிடம், மெய்யெழுத்து.

உடம்புபுரட்டுதல்-சரீரத்திலிருந்து அழுக்கைத் திரட்டியெடுத்தல், பிள்ளைப்பருவச்செயலினென்று.
உடம்பெடுத்தல்-உடம்புதேறல், பிறத்தல்.
உடம்பை-கலங்கனீர்.
உடலம்-சரீரம்.
உடலல்-சினக்குறிப்பு, சினத்தல், பகைத்தல், பிரகாசித்தல், பெருங்கோபம், பொருதல்.
உடலிரண் டுயிரொன்று - கிளிஞ்சில், சிநேகம்.
உடலிலான்-காமன்.
உடலெடுத்தல் - சரீரந்தேறுதல், சனனித்தல்.
உடலெழுத்து-மெய்யெழுத்து.
உடல்-உடலென்னேவல், ஒற்றெழுத்து, சரீரம், பொருள், பொன், முப்பகையினொன்று.
உடல்வாசகம் - நெட்டெழுத்து வாசகம்.
உடல்வேலை-பருவேலை.
உடறல்-உடலல்.
உடற்குறை-தலையற்றவுடல்.
உடற்கூறு - உடலினிலக்கணம், உடலின்சுபாவம்.
உடற்கூற்றுத்தத்துவம் - சரீரத்தினிலக்கணநூல்.
உடற்கொழுப்பு-குடற்கொழுப் பேறுதல், அஃது தீனை மறப்பிக்குமோர் நோய்.
உடற்றல்-அழித்தல். உலைத்தல், சிதறவடித்தல், சினக்குறிப்பு, துரத்தல், பகைகொள்ளல், பிரயோகித்தல், பெருங்கோபம், பொருதல், வருத்துதல்.
உடற்றழும்பு-உடன்மறு.
உடனாளி - கூட்டாளி, சொத்துள்ளவன்.
உடனிகழ்ச்சி-ஒருங்குசம்புவித்தல், மூன்றும் வேற்றுமைப் பொருள்களினொன்று.
உடனிகழ்ச்சியணி - ஒரலங்காரம், அது புணர்நிலை.
உடனிகழ்தல் } உடனிகழ்ச்சி.
உடனிகழ்வு }
உடனிலை-கூடநிற்றல், தன்னொடு தானிற்றல்.
உடனிலைமயக்கம் } ஒரொற்றோ
உடநிலைமெய்மயக்கம் } தன்னொடு தான்மயங்குதல்.
உடனுக்குடனே - உடனேக் குடனே
உடனுற்றவன் - ஒரேவகுப்பு வேலையாள்.
உடனே } சம்பவித்ததும்.
உடனேக்குடனே }
உடனொத்தபங்காளி - சரிபங்குடையவன்.
உடனொத்தவன்-சமானமானவன்.
உடன்-அந்நேரம், கூட, மூன்றும்வேற்றுமையின் சொல்லுருபு.
உடன்கட்டையேறுதல், நாயக னுடனே மனைவிதீயேறுதல், பிரியேனென்று நிற்றல்.
உடன்கூட்டு-ஒன்றுகூட்டு.
உடன்கை-உடனே.
உடன்பங்காளி - கூடியபங்குக்காரன்
உடன்பங்கு-கூட்டுப்பங்கு, சரிப்பங்கு.
உடன்படல் - இசைதல், உடம்படிக்கைசெய்யல், எழுவகை மதத்தினொன்று, சம்மதிப்படல், சேரல், பொருந்தல்.
உடன்படல்விடை-வினயதற் குடன்பாடு காட்டுமொழி, (உ-ம்) செய்வேன்.
உடன்படிக்கை - உறுதிப்பாடு, சம்மதிபத்திரம்.
உடன்படுதல்-சம்மதித்தல்.
உடன்படுத்துதல்-இணக்குதல்.
உடன்படுமெய்-உடம்படுமெய்.
உடன்படுவிடை-உடன்படல்விடை.
உடன்படுவிலக்கு-ஒரலங்காரம்.
உடன்பாடு-சம்மதம்.
உடன்பாட்டுவினை-விதிவினை.
உடன்பிடிக்கை-உடன்படிக்கை.
உடன்பிறந்தார்-சகோதரர்.
உடன்பிறப்பு - கூடப்பிறக்கை, சகோதரம்.
உடன்போக்கிடையீடு - போக்கறிவுறுத்தன்முதல விரக்கமீறாகிய நான்குமாம்.
உடன்போக்கு - போக்கறிவுறுத்தன் முதலாகத்தோற்றமாகியவெட்டும்.

உடன்போக்குவிரி-பாங்கி தலைவற்குடன்போக்குணர்த்தன் முதலாகத்தலைவன் றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலீருகிய பதினெட்டும்.
உடன்மகரம் - நடுப்புடவையிற்பற்றுவிக்குமகரம்
உடன்றல் - கோபம், சினக்குறிப்பு, பொருதல்.
உடு-அகழி, அம்பிறகு, அம்பு,அம்புத்தலை, ஆடு, உடுவென்னேவல், ஓடக்கோல், சிக்கிரிமரம், விண்மீன்
உடுகாட்டி-பொன்னுங்காணி.
உடுகூறை-ஸ்த்ரீகள் ஆடை'
உடுக்கு - இடைசுருங்குபறை, ஒருகட்பறை, சீலை.
உடுக்கை - இடைசுருங்கியபறை, ஓர்கட்பறை, சீலை.
உடுண்டுகம்-வாகைமரம்.
உடுத்தல்-ஆடைசாத்தல், சோலைமுதலிய சூழப்பெறுதல், தரித்தல்.
உடுத்தவாடை } சிற்றுடை.
உடுத்தாடை }
உடுத்துதல்-ஆடை அணிதல்.
உடுநீர்-அகழ்.
உடுபதம்-ஆகாயம்.
உடுபதி-சந்திரன், மரமஞ்சள்.
உடுபதம்-தெப்பம்.
உடுபன்-சந்திரன்.
உடுபாதகம்-பனை.
உடுபாவனை-உடுப்பின்சாயல், உடுப்புன்சோடு, சுத்த உடுப்பு.
உடுபுடவை-சாதாரண உடை.
உடுப்பகை-சூரியன்.
உடுப்பு-உடை.
உடுப்பை-உடுப்பாயென்னுமுற்று, சீக்கிரிமரம், மலையாள ஜில்லாவில் தலைச்சேரிநகரத்துக் கருகில் மத்துவாசாரியர் வசிக்குமிடம்.
உடுமானம்-அந்தஸ்ததுக்குத்தகுந்த உடை.
உடும்பு-இரண்டுநாக்குள்ளஓர்செந்து.
உடும்புநாக்கன்-பொய்யன்.
உடும்புமுத்து-உடும்பிற்பிறந்தமுத்து.
உடுவின்காந்தன் } சந்திரன்.
உடுவின்வேந்தன் }

உடுவை-அகழ்.
உடை-உடைமை, உடையென் னேவல், உள், கலனை, கால், சீலை, செல்வம், வஸ்திரம், வேலமரம்.
உடைகுளம்-பூராடநாள்.
உடைகொல்-வேலமரம்.
உடைதல்-கெடுதல், சாய்தல், தகருதல், தளர்வு.
உடைத்தல்-இரித்தல்,கெடுத்தல், தகர்த்தல், தளர்த்தல்.
உடைத்தானவன் - சொந்தக்காரன், பொருளுள்ளவன்.
உடைத்து-உண்டாயிருத்தல்.
உடைப்பு-உடைந்தறவு, தகர்ப்பு, தளர்வு.
உடைமானம்-உடை, புடைவை.
உடைமை - ஆபரணம், உடையதன்மை, உரிமை, பணதி, பாக்கியம், பொருள்.
உடைய - ஆறும் வேற்றுமையினோர் சொல்லுருபு.
உடையல்-உடைக்குதல், உடைந்தது, கெடல், முரியல்.
உடையவன் - உரிமைக்காரன், எசமான், கடவுள், சொந்தக்காரன்.
உடையார் - ஒருத்தியோகஸ்தர், ஓர் ஜாதியின்பட்டப்பெயர், செல்வர்.
உடையார்பாளயம்-திருச்சிறுப்பள்ளியில் ஒரூர்.
உடையான்-உடையவன்.
உடைவாரம்-முழுவிளைவு.
உடைவாள்-உடையிற்கட்டும்வாள்.
உடைவு-இரிவு, கேடு, தகர்வு, தளர்வு, மனநெகிழ்ச்சி.
உடைவேல்-குடைவேல்.
உட்கட்டு-உள்ளூரம், மாதர் கழுத்திற்கட்டுமோர் மணிவடம், வீட்டினுட்கட்டு.
உட்களவு-உள்வஞ்சகம்.
உட்கள்ளம்-உள்வஞ்சகம், கட்டியினுள்விஷம்.
உட்கரணம்-அந்தக்கரணம்.
உட்கரிஷம்-அதிசயம், விளிம்பு.
உட்கருத்து-உட்பொருள், கருத்துரை, மனக்கருத்து.
உட்கல் - அச்சக்குறிப்புக் காட்டல், அஞ்சல், மடிதல், வெட்கல்.

உட்காங்கை-உட்கூடு.
உட்காத்தல்-இருத்தல்.
உட்காந்தல்-உள்வெப்பம்.
உட்காய்ச்சல் - உள்ளுக்காய்தல், ஓர் நோய்.
உட்காருதல்-உட்காத்தல்.
உடகிராந்தல் - உள்வெப்பத்தினுல் இளைத்துப்போதல்.
உட்கு-உட்கென்னேவல், பயம், வெட்கம்.
உட்குத்துப் புறவீச்சு-இசிவுஉண்டாகிற குலேயைப்பற்றிய ஓர்நோய்.
உட்குயிர்-உள்ளுயிர்.
உட்குறிப்பு-மனக்குறிப்பு.
உட்குற்றம்-காமமுதலியகுற்றம்.
உட்கூதல்-தோன்ருதகுளிர்சுரம்.
உட்கை-இடக்கைச்சுற்று, உட்கல், உட்பக்கம், உளவு, உள்ளங்கை, உள்ளுளவு.
உட்கைச்சுற்று-இடக்கைச்சுற்று.
உட்கொள்ளுதல் - அருந்துதல், உட்கருதல், திருவுளங்கொள்ளுதல், மனசில்வைத்தல், விழுங்கல்.
உட்கோபம்-தோன்ருக்கோபம்.
உட்கோள்-உட்கருத்து, கோட்பாடு.
உட்சங்கம்-அகச்சங்கம்.
உட்சமயம்-சைவமுதலிய வறுசமயம்.
உட்சாடை-உட்கருத்து, குழூஉக்குறி.
உட்சூத்திரம் - இலேசானவகை, உட்குறிப்பு, உள்ளுபாயம், நுட்பமானவகை, மூலகாரணம், மூலசூத்திரம்.
உட்செல்லல்-உட்போதல்.
உட்டணகாசம்-கண்ணேயுளொன்று.
உட்டணசஞ்சீவி-நீர், பிரண்டை.
உட்டணசயித்தியம்-வெம்மையிற்றண்ணெனவு.
உட்டணசிகை-குசன் சனி பானுமின்றகால்.
உஷ்ணம் } அகோரம், மிளகு, வெப்பம்.
உட்டணம் }
உட்டணவாயு - உட்டணங்கண்டுஉடலிற்கிளரும்வாயு.
உட்டணசகம்-குளிர்காலம்.
உட்டணித்தல்-உருமித்தல், வெப்பங்கொள்ளல்.
உட்டணேதகம்-வெந்நீர்.
உட்டணேபகமம்-வேனிற்காலம்.
உட்டிரம்-களர்நிலம், தேட்கொடுக்கி, நீர், மூட்செவ்வந்தி.
உட்டுளே-குழாய், புழை.
உட்டெளிவு-உள்வைரம், உள்ளத்தெளிவு, பழுதுதிருத்தியெடுத்திக்கொண்டது, பேரறிவு, வடித்தசாறு.
உட்டேட்டம் - உட்சம்பத்து, மனநாட்டம்.
உட்ணுதிக்கம்-அதிகவெப்பம்.
உஷ்ணேதகம்-வெந்நீர்.
உட்பகை-காமமுதலியஅறுபகை.
உட்படி-படிக்கற்குவாடிய இடையறிய இடும்படிக்கல்.
உட்படுதல்-உடன்படல், உள்ளேபோதல், எல்லேக்குக்கீழ்ப்படிதல், எற்படுதல்.
உட்படுத்தல்-உடன்படுத்தல், உட்செலுத்தல், உள்ளேசேர்த்தல், சிக்கப்படல், மதத்துக்குள்ளாக்கல்.
உட்பத்தியம்-மருந்து சாதனேபண்ணுந்தற்காலபத்தியம்.
உட்பந்தி-அகப்பந்தி.
உட்பலம் - சேனுபலம், திரவியபலம், துணேவர்பலம், தேகபலம்.
உட்பற்று-அகப்பற்று.
உட்பிரவேசித்தல்-உட்படுதல், உட்புகல்
உட்புகல்-உள்ளேபோதல்.
உட்புழை - அந்தரங்கம், உட்டுவாரம், உள்மடிப்பு.
உட்புறம்-உட்பக்கம்.
உட்பொருள்-உட்கருத்து, உட்பயன்.
உட்போடுதல் - வசமாக்கிக் கொள்ளுதல்.
உணக்கம்-உலர்ந்ததன்மை, வாட்டம்.
உணக்கல் - உலர்தல், காய்ச்சுதல், துக்கப்படுத்துதல், வாட்டுதல்.
உணங்கல்-உலர்தல், ஒசிதல், காய்தல், துக்கப்படுதல், மெலிவானது, வாடல்.
உணத்தல்-காயச்செய்தல், வாட்டுதல்
உணராமை-அறியாமை, மயக்கம்.
உணருதல்-அறிதல், ஊடறீர்தல், எண்ணல், கற்றறிதல், காய்தல், தெளிதல், நினேத்தல், பகுத்தறிதல், பரிசித்தறிதல், வாடல்.
உணர்-உணரொன்னேவல், உணர்வு.

உணர்ச்சி-அறிவு, கல்வி, சுவரணை, நினைவு, புத்தி, மனச்சாட்சி. [ல்
உணர்தல்-அறிதல்,உணருதல், காய்த
உணர்த்தல்-அறிவித்தல், கற்பித்தல், போதித்தல்.
உணர்த்தி-அறிவு, உணர்ச்சி.
உணர்ந்ததையுணர்தல் - ஓரளவை, அது முன் குளிர்வந்துற்ற காலத்து நெருப்பு மருந்தென்றறிந்தான்பின் புமது மருந்தெனவுள்ளங்கோடல்.
உணர்ந்தோர்-அறிவுடையோர்.
உணர்வு-அறிவு, ஊடலுந்துயிலுநீங்கல், தெளிவு, நீங்கல், புலன்.
உணர்வுகேடு - அறிவுகேடு, சுவரணைகேடு.
உணவு-ஆகாரம், சோறு, போசனம்.
உணவுதல்-தெரித்தல்.
உணு-உணவு.
உணி - அனுபவிப்பாள் அனுபவிப்பான் அனுபவிப்பதென்னும் பொருள்படநிற்கு மோரொருமைப் படர்க்கைவிகுதி, உண்ணியென்பதின்குறுக்கம், ஓர்செந்து.
உணை-உணையென்னேவல், மெலிவு.
உணைதல்-மெலிதல்.
உண்கலம்-போசனபாத்திரம்.
உண்கு-உண்கென்னேவல்.
உண்டல்-புசித்தல்.
உண்டாகுதல் - உண்டுபடுதல், தலைப்படுதல், வளர்தல்.
உண்டாக்குதல்-உண்டுபடுத்தல், வளர்க்குதல்.
உண்டாட்டு - பெருங்காப்பிய வுறுப்பொன்று, அது மதுமுதலியவுண்ணுஞ் சிறப்புக்கூறுதல், மகளிர்விளையாட்டு, மதுபானக் கொண்டாட்டு, விளையாட்டு.
உண்டாதல்-உண்டாகுதல்.
உண்டாத்தா-கள்ளி.
உண்டாயிருத்தல்-உளதாயிருத்தல்.
உண்டி-இரை, உணவு, உண்டாயென்னுமுற்று, உண்டியென் னேவல். சோறு, நால்வகையுணவினென்று. அஃது உண்பன, பறவையுணவு, பொக்கசப்பெட்டி.
உண்டிகை-உண்டியற்சீட்டு, பொக்கசப்பெட்டி.
உண்டிகைச்சீட்டு-உண்டிப்பத்திரம்.
உண்டிச்சீட்டு-உண்டியற்சீட்டு.
உண்டியல்-உண்டியற்சீட்டு, கோயிற்குக்கொடுக்கும்பணம், பொக்கிஷம்.
உண்டியற்சீட்டு-உண்டிப்பத்திரம்.
உண்டில்லாதது - கோள், தேவையானது.
÷ உண்டு-உள்ளது.
உண்டுகம்-பெருவாகைமரம்.
உண்டுபடுதல்-உண்டாதல், தோனுதல், முளைத்தல்.
உண்டுபடுத்துதல் } உண்டாக்குதல்.
உண்டுபண்ணுதல் }
உண்டை-உண்டாயென்னும் முற்று, உருண்டை, குளிகை, சிற்றுண்டி, தார்நூல், திரளை, படைவகுப்பு.
உண்ணம்-ஒடையென்னுமரம்.
உண்ணல்-அனுபவித்தல், புசித்தல்,விழுங்கல்.
உண்ணு-அண்ணம், உண்ணுவென்னுமெதிர்மறைப்பன்மைவினைமுற்று.
உண்ணாக்கு-மேல்நாக்கு.
உண்ணாட்டம்-உண்ணோக்கம்.
உண்ணாமுலை-பார்ப்பதி.
உண்ணி-ஓர்செந்து, பாலுண்ணி.
உண்ணிக்கொக்கு-ஓர்கொக்கு.
உண்ணீரம்-உள்ளீரம்.
உண்ணீர்-குடிக்குநீர்.
உண்ணோக்கல்-சிந்தித்தல், தியானித்தல்.
உண்பித்தல்-உண்ணச்செய்தல்.
உண்மடை-உள்வாய்க்கால், துஷ்டதேவதைகளுக்கிடும்பலி.
உண்மாசு-உபமலம், மனக்கறை.
உண்முடிச்சு-உட்கள்ளம்.
உண்மை - அறிவு, இயல்பு, உள்ளது, சத்தியம், நேர்மை, மெய், யதார்த்தம்.
உண்மைத்தவறு-தப்பிதம்.
உண்மைத்தாழ்ச்சி-உண்மைக்குறை.
உண்மைத்தாற்பரியம்-யதார்த்தமானகருத்து.
உண்மைத்துரோகம் - நம்பிக்கைத் துரோகம், பொய்.
உண்மைப்படுதல்-மெய்ப்படுதல், விசுவாசம்பொருந்தல்.
உண்மைப்படுத்தல்-மெய்ப்பித்தல்.

உண்மைப்பாதகம் - உண்மைத்துரோகம்.
உண்மைப்பிடி-ஒன்றின் உண்மையைத்தெரிந்து உறுதியாகப்பிடித்தல்.
உண்மைப்பேதகம்-உண்மைப்புரட்டு, நம்பிக்கைத்துரோகம்.
உண்மைப்பொருள் - உவமேயப் பொருள், உள்ளபொருள், மெய்ப்பொருள்.
உண்மையளவை-மெய்ம்மையினாற்பிரமாணித்தல்.
உண்மையுவமம்-ஓரலங்காரம், அஃது உண்மையைக்கூறி மறுத்துப் பொருளையேகூறி முடிப்பது.
உண்மைவசை-ஓர்வசை.
உண்மைவாழ்த்து-ஓர்வகைவாழ்த்து.
உதக்கிரியை-நீர்க்கடன்.
உதகசுத்தி-தேற்றான்கொட்டை.
உதகதானம்-தாராதத்தம்.
உதகமூலம் - தண்ணீர்விட்டான்கிழங்குப்பச்சைவேர்.
உதகம்-நீர், பூமி, மழை, மழைத்துளி.
உதகவன்-கொடுவேலி, தீ.
உதகாதாரம்-நீர்நிலை.
உதகாரம்-முகில்.
உதகு-புன்குமரம்.
உதகும்பம், உதகோதஞ்சனம் } நீர்ச்சாடி.
உதகோதரம்-முகில்.
உதக்கிரம்-நீட்சி.
உதக்கிரியை-நீர்க்கடன்.
உதக்கு-வடக்கு.
உதசம்-சாபம், பசுமடி.
உதஞ்சனம்-மூடி.
உதடன்-அதட்டுக்காரன்.
உதடு-அதரம், விளிம்பு, வெட்டுவாய்.
உதடுபிதுக்கி-ஒருபுறத்திற் பிதுங்கிவிழுமுதடுள்ளவன்.
உதடுமடித்தல்-கோபத்தினால், உதட்டைக்கடித்தல்.
உதட்டடி-அதகடி, வாய்வெருட்டு.
உதட்டைப்பிதுக்கல்- நிந்தனை அல்லது இல்லை என்பதைக் காட்டுமோர்குறி.
உதணம்-மொட்டம்பு
உததி-கடல், நீர்குடம், முகில்.
உதக்கிரமன்-கலவன்.
உதசுதை-இலட்சுமி.
உததிமேகலை-பூமி.
உததியானுசன்-வியாழம்.
உததீரம்-தகரம்
உதந்தம்-சமாசாரம்.
உதந்தன்-சாது.
உதபாரம்-முகில்.
உதபானம்-கிணறு.
உதப்பி-ஈரல், சீரணிக்காத இரை, பேசுகையிற் றெறிக்கும் வாய்நீர்.
உதப்பிவாயன் - எச்சில்தெறிக்கும்படி பேசுகிறவன்.
உதப்புதல்-இகத்தல், கடிந்துகொள்ளல், குதப்புதல்.
உதமேகம்-முகில்.
உதம்-அழைத்தல், கேட்டல், நீர்.
உதம்புதல்-அதட்டுதல், கடிந்துகொள்ளல்.
உதயகாலம், உதயகாலை } அருணோதயம்.
உதயகிரி, உதயபருவதம், உதயமனகிரி } உதயமலை.
உதயகிரி-ஓரிராகம்.
உதயமனம் - உதயகாலம், உதயமலை, உதயம்.
உதயம் - அதிட்டம், இலாபம், உதயகிரி, உதயவிராசி, உதித்தல், உலகசிருஷ்டிப்பு, கிரகத்தோற்றம், சீர்பேறு, பிறப்பு, விடியல், வெளிச்சம்.
உதயலக்கினம்-சென்மலக்கினம், தற்காலத்துதிக்குமிராசி.
உதயனம்-உதித்தல்.
உதயன்-சூரியன்.
உதயாதி-விடியல்.
உதயாதிபன் - சென்மராசியிலிருக்கும் கிரகம்.
உதயஸ்தமனம், உதயாத்தமனம், உதயாத்தம் } அத்தமன உதயமனங்கள், அந்திசந்தி.
உதரகோமதம்-யாலடைப்பூண்டு.
உதரக்கனல்-தீபனாக்கினி.
உதரக்கொதி-பசி.
உதரதி-சமுத்திரம், சூரியன்.
உதரத்தீ-உயிர்முத்தீயினொன்று.
உதரத்துடிப்பு-உதரக்கொதி.

உதரநாடி-இரத்தநரம்பு.
உதரநிமித்தந்திரிதல் - தினசீவனத்திற்காக வேலையைத்தேடித்திரிதல்.
உதரபந்தனம் - புருஷர் அரைப்பட்டிகை.
உதரப்பிரிவு-தங்குடித்தமர்.
உதரம்-கருப்பை, கீழ்வயிறு, யுத்தம், வயிறு.
உதரம்பரி - தன்வயிறு நிறைத்துக்கொள்வோன்.
உதரவணி } கண்டங்கத்திரி.
உதரவாணி }
உதராக்கினி-பசித்தீ.
உதராமயம்-கிராணி, வயிற்றுளைவு.
உதராவர்த்தம் - கொப்பூழ், தீட்டுக்கட்டு.
உதராவி-மரமஞ்சள்.
உதர்க்கம் - எதிர்காலம், வரப்போகிறலாபம்.
உவர்ச்சி-அக்கினி, ஓர்தெய்வம், மிக்கவொளியுள்ளவன்.
உதவகன்-தீ.
உதவசிதம்-வீடு.
உதவச்சிரம் - சமுத்திரத்திலிருந்து திரண்டெழுந்து மேலேபோகு நீர்த்தம்பம்.
உதவரக்கெட்டது } மிகவுமிழிந்தது.
உதவரங்கெட்டது }
உதவல்-ஈதல், காரியத்திற்காதல், தகுதியாயிருத்தல், துணைசெய்தல்.
உதவாகனம்-முகில்.
உதவாசம்-நீர்க்கரை, வீடு.
உதவாசனம் முகில்.
உதவி-ஒத்தாசை, கொடை, சகாயம், துணை.
உதவிந்து-நீர்த்துளி.
உதள் - ஆடு, ஆட்டுக்கடா, மேடவிராசி.
உதறிமுறிப்பான்-விஷ்ணுகரந்தை.
உதறுகாலி-உதறுகாற்பெண், எறிகாற்பசு.
உதறுதல்-இடங்கொடாமறதள்ளுதல், குலைவுகொண்டு நடுங்குதல், சிதற அசைத்து வீசுதல், விதிர்த்தல்.
உதன்னியம்-நீர்த்தாகம்.
உதாகரணம் - அத்தாட்சி.உதாரணம், இலக்கியமெடுத்துக்காட்டல்.
உதாகலம்-உரல்.
உதாகாரம்-உதாரணம்.
உதாசனம்-எண்ணுமை, தூஷணம்.
உதாசனன் - அக்கினிதேவன், கண்குத்திப்பாம்பு, கொடுவேலி, தீ.
உதாசனித்தல்-இகழல்.
உதாசினபாவம்-நிந்தனைக்குற்றம்.
உதாசினம்-உதாசனம், விருப்புவெறுப்பின்மை.
உதாசீனன்-பிறத்தியான்.
உதாத்தம்-இச்சை, ஓரலங்காரம், வேதஸ்வரத்தினென்று.
உதாத்தன் சிறந்தவன், புருஷார்த்த சிந்தையுள்ளவன், வள்ளல்.
உதாரகுணம்-உதாரத்துவம்.
உதாரணம் - இலக்கியமெடுத்துக் காட்டல், உதாகரணம், எதிர்நியாயம், ஒப்பனை, துணைக்காரணம்.
உதாரத்தம் - ஓரலங்காரம், அஃது செல்வம்முதலியவற்றின் மிகுதிதோன்றக்கூறுவது.
உதாரத்துவம் - பெருங்கொடைத் தனம்.
உதாரம் - உத்தண்டம், ஓரலங்காரம் அஃது பொருளின்றிக்குறிப்பானொருநெறிப்படநிரப்புங்கவி, கொடை, தாராளம், வீரம்.
உதாரன் } கொடையாளி, பேச்சுதீரமுள்ளவன், வீரன்.
உதாரி }
உதார்த்தம்-உருபகத்தினொன்று.
உதாவணி-கண்டங்காலி.
உதானம்-கண்மடல், கொப்பூழ், நாபியில்நிற்கும்வாயு.
உதானன்-நாபியில் நிற்கும்வாயு.
உதி - உதியென்னேவல், உலைத்துருத்தி, ஒதியமரம்.
உதிட்டிரன் - தருமன், இவன் பாண்டுவின்முதல்புத்திரன்.
உதிதம்-சொல்லல்.
உதித்தல் - அவதரித்தல், உதயமாதல். தோன்றுதல், பருத்தல், பிறத்தல்.
உதிப்பு-தோற்றம், பிறப்பு
உதியன்-சேரன், பாண்டியன்.
உதிரக்கட்டு - இரத்தக்கட்டு, பூப்புப்படாமை.
உதிரக்கலப்பு-உறவு.
உதிரக்கிரிகி-அட்டை, கரடி.

உதிரக்குடோரி-கருடன் கிழங்கு.
உதிரசூலை-இரத்தசூலை.
உதிரத்துடிப்பு-இரத்தத்துடிப்பு.
உதிரபந்தம்-மாதுளை.
உதிரபாசம்-இரத்தவுறவு.
உதிரமுரிப்பான்-விஷ்ணுகிராந்தி.
உதிரம்-இரத்தம்.
உதிரவாயு-சூதகவாயு.
உதிரவிரியன்-ஓர்பாம்பு.
உதிரவேங்கை-ஓர்மரம்.
உதிரன்-செவ்வாய்.
உதிரி-உதிர்ந்தது, ஓர்வகைவாழை, சிறுகீரை துளசி, வசூரியிலோர்வகை.
உதிரிக்குத்து - வசூரியிலு லுண்டாகுமோர்வகைக்குத்து.
உதிரித்தழும்பு-அம்மைவடு.
உதிரோற்காரி - சத்தமுகிலினென்று, அஃது இரத்தம்பொழிவது.
உதிர்-துகள், முத்தக்காசு.
உதிர்காய்-சொரிகாய்.
உதிர்காலம்-இலையுதிர்காலம்.
உதிர்க்குக்கிடாரி-கருடன்கிழங்கு.
உதிர்தல்-சாதல், சிந்தல், சொரிதல்,
உதிர்த்தல் - உகுத்தல், கண்ணீரிகுத்தல், சொரிவித்தல், பொடியாக்கல்.
உதிர்ப்பு-உகுக்கை, உதிர்வு.
உதிர்யன்-பண்டிதன்.
உதிர்வு-உகுகை. உதிர்கை.
உதிர்வேங்கை-உதிரவேங்கை.
உதீசி-வடக்கு.
உதீர்ணன் - புருஷார்த்த சிந்தையுள்ளவன்.
உது-உஃது.
உதும்பரம்-அத்திமரம், எருக்கு, செம்பு, செவ்வகத்தி, நெற்களம், வாயிற்படி.
உதூகலம்-உரல்.
உதை - உதைத்தல், உதையென்னேவல், காலாலழுத்துகை, முட்டு.
உதைகால்-மிண்டுக்கால்.
உதைகாற்பசு-உதறுகாற்பசு.
உதைகொடுத்தல்-உதைத்தல், மிண்டு கொடுத்தல்
உதைசுவர்-அணைசுவர்.
உதைதல்-உதைத்தல், செலுத்தல்.
உதைத்தல், அதைத்தல், அலட்சியம் பண்ணல், காலாலெறிதல், செலுத்தல், தாக்கல், பிரயோகித்தல்.

உதைப்பு - உதைக்கை, தாக்குகை, பயம்.
உதைமானம்-உதைகால்.
உதையுண்ணல்-உதைப்படல்.
*உதோன்முகம்-மேன்முகம்.
உத்கமம்-பிறப்பு, வியாபாரம்.
உத்கரம் - தானியம் முதலியவற்றின் குவியல்.
உத்கலநம் - விவாஹம்முதலானவேடிக்கை.
உத்காரிகை - சிறுகொழுக்கட்டை முதலானவை.
*உத்கிருஷ்ணம்-மேன்மை.
உத்கீதம் - கானம், சாமவேதப் பிரணவம், மேகம்.
உத்கீதன்-சந்திரன்.
உத்கோசம்-காணிக்கை, குரோதம், பரிதானம்.
உத்கோடரோகம் - எச்சிற்றழும்பு, தேமல்.
உத்தண்டமணி - பொன் மணியாலாகிய கழுத்தாபரணம்.
உத்தண்டம்-அதிகாரம், உக்கிரம், கொடை, தயிரியம், துணிவு, மகத்துவம், வலிமை, வாக்குவல்லமை, வீரம்.
உத்தண்டால்-உத்தண்டமணி.
உத்ததீ-மேட்டிமை.
உத்தமசத்து-அவயவபாவநாசம்.
உத்தமசரீரம் - கருடகந்திருவர் முதலியோருடம்பு.
உத்தமதாளி-வேலிப்பருத்தி.
உத்தமதானம்-நல்லோர்க்கீதல், பாக்குவெற்றிலைக்கொடை, பிளவிலை.
உத்தமபட்சம் - நற்பட்சம், முதற்றரம்
உத்தமபரி-கொத்துமல்லி இலை, சிரேஷ்டகுதிரை.
உத்தமபலம்-முந்திரிகைப்பழம்.
உத்தமபாத்திரம்-சற்பாத்திரம்.
உத்தமபுருடன்- உத்தமலக்கணமுடையவன், சன்மார்க்கன், தன்மை.
உத்தமம் - உண்ணமை, சொல்லல், நன்மை, முதன்மை.
உத்தமவிமிசதி - வருடமறுபதில் முதலிருபது.
உத்தமன்-சற்குணன், பெரியவன், பிருகண்பன், மூன்றுமனு.

உத்தமாகாணி-உத்தமதாளி.
உத்தமாங்கம்-ஆண்குறி, கருடன்வீடு, தலை, பெண்குறி.
உத்தமாங்கன் - அழகான முகமுள்ளவன், தகுதியுள்ளவன்.
உத்தமி } சற்குணமுள்ளவள், பார்
உத்தமை } வதி.
உத்தமோத்தமம்-அதிகவுத்தமம்.
உத்தம்-ஓரலங்காரம், அஃது காரணத்திற்கேற்றகாரியம் நிகழ்வது, கொட்டைமுந்திரிகை.
உத்தம்ஸம் - ஸ்த்ரீபுருஷர்கள் சிரத்திலும் செவிநுனியிலுமணியும் தளிர் மலர்முதலானவை.
உத்தம்பரி-உத்தமபரி.
உத்தம்பலம்-உத்தமபலம்.
உத்தரகாலம் - அடுத்தகாலம், சாந்திரமாதம், அது பூரணைதுவக்கி மற்றப் பூரணையளவும், வருங்காலம்.
உத்தரகுரு } போகபூமியாறினொ
உத்தரகுருவம் } ன்று, அஃதுசன் மார்க்கரிக்கும் நல்லனுபவபூமி.
உத்தரகோசமங்கை- மதுரைஜில்லாவிலிருக்கும் ஓர்சிவஸ்தலம்.
உத்தரகோசலை-அயோத்தி.
உத்தரகோளம்-உத்தரகுரு.
உத்தரகிராந்தம்-மேற்செல்லுகை.
உத்தரகிரியை } அசுபக்கிரியை.
உத்தரக்கிரியை }
உத்தரசாட்சி-பிரதிவாதியின்சாட்சி.
உத்தரணம்-முற்றத்துறத்தல்
உத்தரணி-சுருவை, பஞ்சபாத்திரக் கரண்டி.
உத்தரதுருவம்-வடமுனை.
உத்தரதேசம்-உத்தரபூமி.
உத்தரபட்சம் - அத்தாட்சி, அபரபக்கம், ஞாயமுத்தரித்துக்கண்டதீர்ப்பு, மறுமொழி.
உத்தரபதம்-பிராத்தியபதம்.
உத்தரபாகம்-பிற்பாகம்.
உத்தரபாதம்-மறுமொழி.
உத்தரபாத்திரபதம் - இரேவதி, உத்திரட்டாதி.
உத்தரபாற்குனி-உத்திரம்.
உத்தரபுருடன்-படார்க்கையிடத்தவன்.
உத்தரபூமி-வடபூமி.
உத்தரபோசனம் - புசித்துக் கையலம்பின பின்னுண்கை.
உத்தரமத்திமபூமி-நிரேகூஷணசமத்துவபூமி, துருவசக்கரத்திற்குங் கற்கிச்சக்கரத்திற்கும்நடு.
உத்தரயந்தோச்சம் - சூரியனுக்குங்கிரகத்திற்குமுள்ளதூரம்.
உத்தரமீமாஞ்சை - ஆறுசாத்திரத்தொன்று.
உத்தரம்-உயர்ச்சி, ஊழித்தீ. சேடம், பலம்,பின், மறுமொழி, வடக்கு.
உத்தரவாதம்.உத்தரிப்பு, ஈடு, வகைசொல்லுந்தன்மை.
உத்தரவாதி-எதிரி, பிணையாளி.
உத்தரவாருணி- ஓர்கொடி.
உத்தரவு-கட்டளை, மறுமொழி, விடுதலை, விடை.
உத்தரவுச்சீட்டு- அதிகாரப்பத்திரிகை, விடுதலைப்பத்திரிகை.
உத்தராசங்கம்-உத்தரீயம்.
உத்தராசாடம் } உத்திராடம்.
உத்தராஷாடம் }
உத்தராசாபதி-குபேரன்.
உத்தராசை-வடக்கு.
உத்தராட்சம் - பூகோளத்தின் வடபாகம்.
உத்தராதலம்-உயர்வு, தாழ்வு, மேல், கீழ்.
உத்தராதி-வடக்கு.
கருவிலி-ஓர்பாம்பு.
கருவிழி-கண்மணி.
கருவிளங்கனி -மூன்றுநிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளங்காய்-நிரைநிரை நேராய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறுநிழல் - நாலுநிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறும்பூ- நிரைநிரைநிரைநேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்ணிழல் - நிரைநிரைநேர்நிரையாய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்பூ - நிரைநிரை நேர்நேராய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளம்-இரண்டு நிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு, ஓர்மரம், காக்கணஞ்செடி.
கருவிளா-ஓர்மரம்.
கருவிளை-காக்கணஞ்செடி.
கருவுயிர்த்தல்-ஈனல்.
கருவுளமைப்பு-சென்மத்தினியமம்.
கருவூமத்தை-ஓர் ஊமத்தை.

கருவூர்-கோயம்புத்தூர்சில்லாவில் சேரனூர்.
கருவூலம்-பொக்கசம்.
கருவெடுத்தல்-உடம்பெடுத்தல்.
கருவேப்பிலை-கருவேம்பினிலை.
கருவேம்பு-ஓர்மரம்.
கருவேல்-ஓர்மரம்.
கருவை-ஓரூர், வரகுவைக்கோல்.
கருவெளவால்-ஓர்மீன்.
கருளை-கரளை.
கருள்-இருள், கறுப்பு, நல்லாடை.
கருனீகசன்னி-ஓர்சன்னி.
கருனை-பொரிக்கறி.
கரோகரம் - குத்துச்சண்டை, முழங்கைமடிப்பு.
கரோடம்-நகம்.
கரேணு-பெண்யானை, யானை.
கரை-அருகு, எல்லை, கரையென்னேவல், கானல், முடிவு, வார்த்தை.
கரைகடத்தல்-எல்லைக்குமேற்படல்.
கரைகண்டவன்-மிகத்தேர்ந்தவன்.
கரைகலம்-ஆபரணச்செப்பு.
கரைகன்று-அழிகன்று.
கரைகாணல்-எல்லைகாணுதல்.
கரைகாணுப்பேரொளி-கடவுள்.
கரைக்கல்லோலம்-கடற்பாசி.
கரைக்காற்று - கடலோரத்திலடிக்கும் காற்று.
கரைசிலை-இந்துப்பு.
கரைச்சல்-உருக்கம்.
கரைஞ்சான்-அகில்.
கரைதல் - அழுதல், அழைத்தல், அறப்பழுக்குதல், ஆரவாரம், இரங்கல், இளைத்தல், உருவழிதல், ஒலித்தல், சொல்லுதல், பதனழிதல், பேரொலி.
கரைதுறை-துறைமுகம்; முடிவு.
*கரைதல்-வருந்துதல்.
கரைத்தல் - உருக்குதல், எழுத்திலாவோசை, கரைக்குதல், சொல்லாவெழுமொலி.
கரைபிடித்தல்-கரையடைதல்.
கரைபுரட்டுதல் } கரைபுரளுதல் } கரைமூடிப்பாய்தல்.
கரைப்படுதல்-கரையேறுதல்.
கரைப்பாதை-கரையோரமானவழி.
கரைப்போக்கு - இழிவானது, கரையோரம், கரைவழி, போலிமணி.
கரைப்போர்-கரையிலிருந்து பண்ணுஞ்சண்டை.
கரைப்படுத்தல் - கரைக்குக்கிட்டுதல்.
கரையடுத்தது - கரையைக்கிட்டினது.
கரையல்-கரைந்தது, கரைந்துபோவது கனிதல்.
கரையார்-ஓர்சாதி, வலைஞர்.
கரையேறல் - கரையையடைதல், நற்கதியடைதல், வருத்தத்தினின்றுநீங்கல், வாழ்வடைதல்.
கரையோட்டு-கரைபிடித்தோடல்.
கரைவலை-கரைக்குக்கொண்டுவரும் வலை.
கரைவலைக்காரர்-கரையாரிலோர்பகுதி.
கரைவழி-கரைப்பாதை.
கரைவாரை-வடமேல்காற்று.
கரைவீதம்-கரைக்கேற்றபங்கு.
கரைவு-கரைதல்.
கரோடகம்-தண்ணீர்ப்பெட்டி.
கரோடம்-தலையோடு.
கரோடி-தலையோட்டிற்பொருத்து, முடிமாலை.
கரோடிகை-கழுதை, ஓட்டுமாலை, முடிமாலை.
கரோருகம்-நகம்.
கர்க்கடகசிங்கி-கடுக்காய்ப்பூ.
கர்க்கடகம்-ஓர்ராசி, நண்டு.
கர்ஜ்ஜுரோகம்-சரீர ஊறல், சொறிசிரங்கு, நமட்டுச்சிரங்கு, தினவு.
கர்ச்சிதம் - இடிமுழக்கம், யானைப்பிளிறொலி.
கர்ச்சித்தல் - முழங்கல்.
கர்ச்சூரம் - கழற்கொடி, பேரீந்து.
கர்ணம்-கணக்கன்.
கர்ணன்-கன்னன்.
கர்ணை-ஓர்வாத்தியம்.
*கர்ணிகை-தாமரைக்கொட்டை.
கர்த்தத்துவம் - அதிகாரம், இறைமைத்தன்மை, சகலத்தையும் நடத்துகிற தத்துவம்.
கர்த்தகம்-வயிற்றிரைச்சல்.
கர்த்தபம்-கழுதை.
கர்த்தமம்-மாமிசம்.
கர்த்தவியம்-செய்யத்தக்கது.
கர்த்தன் - எசமான், கடவுள், செய்வோன், தலைவன்.
கர்ப்பகோளகை-கருப்பாசயம்.
கர்ப்பக்கல்-ஓர்மருந்துக்கல்.
கர்ப்பக்கிரகம்-மூலஸ்தானம்.

கர்ப்பக்குழி-கருப்பை.
கர்ப்பஸிராவம் - கர்ப்பங்கரைந்துபோகுதல்.
கர்ப்பசூலை-இரத்தசூலை.
கர்ப்பபாதம்-அகாலபிரசவம்.
கர்ப்பபிரம்ஸம் - கருப்பை அடியிறங்கிப்போகுதல்.
கர்ப்பப்பரிசம்-கருஉற்பத்தி.
கர்ப்பப்பை-கருப்பாசயப்பை.
கர்ப்பம்-உள், கருக்கொள்கை, கருப்பாசயம், சினை.
கர்ப்பவதி-கர்ப்பஸ்த்ரீ.
கர்ப்பவிச்சியுதி-கருவழிவு.
கர்ப்பவோட்டம் - கருக்கொல்லுமேகவோட்டம், இது மார்கழிமாதத்தில் சூரியன் தனுசில் பிரவேசித்த பதின்மூன்றேமுக்கால் நாளுக்குமேல் பன்னிரண்டுநாள் ஓடுவது.
கர்ப்பாசயம்-சர்ப்பப்பை.
கர்ப்பாதானம்-ஓர்சடங்கு.
கர்ப்பிணி-கர்ப்பவதி.
கர்ப்புரை-சாம்பிராணி.
கர்ப்பூரசிலாசத்து-ஓர்மருந்து.
கர்ப்பூரம்-கருப்பூரம்.
கர்ப்பூரத்துளசி-ஓர்துளசி.
கர்ப்பூரப்புல்-ஓர்வாசனைப்புல்.
கர்ப்பூரவள்ளி-ஓர்வாசனைச்செடி.
கர்ப்பூரவில்வம்-ஓர்வில்வம்.
கர்ப்பூரவெற்றிலை-வாசனைவெற்றிலை.
கர்மபலம்-வினைப்பயன்.
கர்வடம் - நானூறுகிராமத்திற்குத்தலைக்கிராமம்,மலையும்யாறுஞ்சூழ்ந்தவூர்.
கர்வம்-இலட்சங்கோடி, குபேரனுடைய நிதியிலொன்று, செருக்கு.
கர்வாலியுமரம்-ஓர்மரம்.
கர்விதன்-செருக்குள்ளவன்.
கர்னம்-கன்னம்.
கலகக்குருவி-ஓர்பட்சி.
கலகண்டம் - அன்னம், குயில், புறா.
கலகப்பிரியன்-சண்டைக்காரன்.
கலகம்-ஓர்பட்சி, குழப்பம், சண்டை, பேரொலி, போர்.
கலகலத்தல்-அறக்காய்தல், ஒலிக்குறிப்பு, மிகப்பேசுதல்.
கலகலம்-இரைச்சல், பறவைக்குரல்.
கலகலெனல்-ஈரடுக்கொலிக்குறிப்பு.
கலகவாயன்-சண்டைக்காரன், வாயாரப்பவன்.
கலகவாய்க்குருவி-ஓர்குருவி.
கலக்கடி-கலக்கம்.
கலக்கம்-அச்சம், ஆரவாரம், குழப்பம், சஞ்சலம், துன்பம், தெளிவின்மை
கலக்கல்-கலங்கச்செய்தல், குழப்பல், கூட்டல், சேருதல், புணரல்.
கலக்கு-கலக்கெனவேல், கலங்கப்பண்ணுதல்.
கலக்குதல்-அஞ்சுவித்தல், கலங்கச்செய்தல், குழப்புதல், திகைக்கச்செயல்.
கலங்கடித்தல்-திகைக்கடித்தல்.
*கலங்கரைவிளக்கம்-கப்பலையழைக்கும்தீராவென்னும்விளக்கு.
கலங்கல்-அஞ்சல், அழுதல், கலங்குதல், சோற்றுநீர், துன்பமுறல்,நீர்பாயுமதகு.
கலங்கனீர்- கலங்கற்றண்ணீர்.
கலங்காவரிச்சு-குடிலின் கால்வரிச்சு.
கலங்குதல்-துயரப்படுதல், தெளிவின்றுதல்.
கலங்கொம்பு-கலைமான்கொம்பு.
கலசப்பானை-சிறுபானை.
கலசமுனி-அகத்தியன்.
கலசம்-குடம், பால்முட்டி.
கலசர்-இடையர்.
கலசோததி-பாற்கடல்.
கலசோற்பவன்-கும்பமுனி.
கலடு-கன்னிலம்.
கலணை-குதிரைக்கல்லணை.
கலதம்-சொட்டைத்தலை.
கலதி-மூதேவி.
கலதை-கலக்கம், மூதேவி.
கலத்தல்-எழுத்திலாவோசை, கலக்கச்செய்தல், புணர்ச்சி.
கலந்தருநர்-குசவர், பணித்தட்டார்.
கலந்தவர், கலந்தார் } அன்பர், உறவினர், சேர்ந்தார்.
கலந்தை-பெருமை.
கலபம்-கலாபம், மயிற்றோகை.
கலப்பற்று-மரக்கலத்தினீக்கலடைப்பது.
கலப்பித்தல்-கலக்கச்செய்தல்.
கலப்பு - உறவாகுகை, கலத்தல், கலவை, சங்கரம், புணர்ச்சி.
கலப்பை-உபகரணம், உழுபடை, கலப்பையுறுப்பு.

கலப்பைக்கிழங்கு-கார்த்திகைக் கிழங்கு வேந்தோன்றிக்கிழங்கு.
கலப்பைச்சக்கிரம் - எர்ப்பொருத்தம் பார்க்குஞ்சக்கிரம்.
கலப்பைப்படை-ஓராயுதம்.
கலமர் - பாணர்.
கலம் - ஆபரணம், ஆயுதப்பொது, இரேவதி, உண்கலம், ஓரளவு, மட்கலம், மரக்கலம், யாழ்.
கலம்பகமாலை-பன்மணிமாலை
கலம்பகம்-ஓர் பிரபந்தம்-அஃது ஒரு போகுவெண்பாக் கலித்துறை முதல் கலியுறுப்பாகக் கூறிப் புயவகுப்பு மதங்கம் அம்மானை காலம் சம்பிரதம் - கார் தவம் குறம் மறம்பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னுமிப் பதினெட்டுறுப்புகளு மியைய மடக்கு மருட்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை வெண்டுறை யென்னு மிவற்றால் இடையே வெண்பாவுங் கலித்துறையும் விரவிவர அந்தாதித் தொடையான் முற்றுறக் கூறுவது, கலப்பு, சண்டை, நறுஞ்சாந்து.
கலம்பகன்-செவிட்டுமேன்.
கலம்பம்-தாலம்பபாஷாணம்.
கலம்பி-கொடிவசலை.
கலயம்-கலசம்.
கலரவம்-புறா.
கலர்-கீழ்மக்கள்.
கலவசம்-காக்கை.
கலவம்-மயிற்றோகை.
கலவடை - உரலணை, திரிமணை, புரியணை.
கலவரம்-கலக்கம்.
கலவரித்தல்-கலங்குதல்.
கலவர் - படைவீரர், மரக்கலமோட்டிகள்.
கலவல்-எழுத்திலாவோசை, கலத்தல்
கலவன்-கலந்தது.
கலவாங்கட்டி-உடைந்தவோடு.
கலவாசு-ஓர்வகைவெடி.
கலவாய்-ஓர்மீன், ஓர்வெடி,
கலவி-புணர்ச்சி.
கலவியிற்களித்தல் - அகப்பொருட்டுறையிலொன்று.
கலவுதல்-கலத்தல்.
கலவை-கலப்பு, சங்கீரணம், சுண்ணச்சாந்து, சேறு, பரிமளச்சேறு.
கலவைச்சேறு-சாந்து, பரிமளச்சேறு.
கலவோடு-மண்பாண்டச்சல்லி.
கலனம்-பெரும்பாடு.
கலனை-அலாயுதம், கலப்பை, கலப்பையுறுப்பு.
கலன்-ஆபரணம், ஓமவுபகரணம், பன்னிரண்டு மரக்கால்கொண்ட அளவு, பாத்திரம், மரக்கலம், யாழ், வழக்கு.
கலன்கழிமடந்தை-கைம்பெண்.
கலாகூலம்-விஷம்.
கலாங்கம், கலாங்கன் - நீத்தபாஷாணம்.
கலாசி, கலாசிகை - முன்கை.
கலாசு-மரக்கலம்.
கலாசுகாரர்-மரக்கலமோட்டுவோர்.
கலாதன்-தட்டான்.
கலாதி-கலகம், சண்டை.
கலாநிதி-சந்திரன்.
கலாபதி-சந்திரன்.
கலாபம் - அம்புக்கூடு, அரைப்பட்டிகை, கலம்பகம், கலாபனை, சந்திரன், சரமணிக்கோவை, பதினாறுகோவையுள்ளமணி, பீலிக்குடை, மயிலிறகு, மயிற்றோகை.
கலாபனை-கலாபம்.
கலாபி-ஆண்மயில், மயிலிறகு.
கலாபித்தல்-கலகம்பண்ணுதல்.
கலாபினி-இராத்திரி.
கலாபினை-கலம்பகம்.
கலாபூரணன்-சந்திரன்.
கலாப்பித்தல்-கலத்தல்.
கலாமயம்-பாவித்தல்.
கலாமிருது-கம்மாளன், சந்திரன்.
கலாம் - ஊடல், கொடுமை, கோபம் பகை.
கலாம்பூரம்-ஓர்மருந்து.
கலாலாபம்-வண்டு.
கலாவதி-சந்திரன்.
கலாவல்லபன் - கலையறிவில் மேம்பட்டவன்.

கலாவிகம்-கோழி.
கலானம்-களக்கூட்டம்.
கலி-அம்பு, ஒலி, ஓர்பா, கடல், கடையுகம், கலியென்னேவல், கேடு, சனி சிறுமை, போர், யுத்தம், வஞ்சகம், வலி, வறுமை.
கலிகம்-கற்பரிபாஷாணம், வன்னி.
கலிகாரகன்-நாரதமுனி.
கலிகாலம் - கலியுகம், கொடுமையான காலம்.
கலிகை - உசிலமரம், இளம்பூவரும்பு, சீக்கராந்தூள், நாகமல்லி.
கலிக்கம்-கண்மருந்து.
கலிங்கத்துபரணி - சோழன்மேல்பாடின ஓர்நூல்.
கலிங்கம்-ஆற்றுத்தும்மட்டிக்காய், ஊர்க்குருவி, கண்மருந்து, குதிரை, சீலை, தேயமைப்பத்தாறி னொன்று இது கடகம்முதற்கொண்டு சென்னைவரைக்கும் எட்டினது, பதினெண்பாடையிலொன்று, மிளகு, வானம்பாடி, வெட்பாலை.
கலிங்கல் } ஏரிநிறை நீர் போம்வழி,
நலிங்கு } மதகு.
கலிசம்-வன்னிமரம்.
கலிச்சி - இரட்டைப்பிள்ளையிற்பெண்.
*கலிச்சும்மை-மிக்க ஆரவாரம்.
கலிஞ்சகம்-மீன்.
கலிஞ்சநம்-அம்பட்டரூர்.
கலிதம்-சங்கலிதம், பாய்கை, பெரும்பாடு, பொருத்தம்.
கலிதி-திப்பிலி.
கலித்தல்-ஆரவாரம், எழுச்சி, ஒலித்தல், கக்குதல், தழைத்தல், பொசிகுதல், பொலிவு, வெடித்தல்.
கலித்தளை - செய்யுட்டளையினொன்று அஃது வெண்பா வுரிச்சீர்கள் தம்முளொன்றுவது வரப்பெறுவது.
கலித்தாழிசை-ஓர்கவி-அஃது இரண்டு முதலிய பலவடிகளா யீற்றடிமிக்கு எனையடிதம்மு ளொத்துநிற்பத் தனித்தேனும் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கியேனும் வருவது.
கலித்துருமம்-தான்றிமரம்.
கலித்துறை-ஓர்கவி அஃது நெடிலடி நான்குகொண்டுமுடிவது.
கலித்தொகை-ஓர்பிரபந்தம்.
கலிந்தசை-யமுனைநதி.
*கலிநடம் - விநோதக்கூத்து ஆறினுளொன்று.
கலிந்தம்-ஓர்மரம், ஓர்மலை.
கலிந்தன்-சூரியன்.
கலிபணம்-ஒருபணம்.
கலிபலி } ஆரவாரம், கலிப்பிலி.
கலிபிலி }
கலிப்பா-ஐந்துபாவினொன்று - அஃது வெண்சீர்மிகப்பெற்றுமாச்சீரும் விளங்கனிச் சீரும் பெருது பிறசீர்களுஞ் சிறுபான்மைகலந்து கலித்தளையும் இயற்றளையுந்தழுவி தரவுதாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்பினுள் ஏற்பனகொண்டு நாற்சீரடியான் முடிவது.
கலிப்பிலி-எதிரிடை, கலாதி.
கலிப்பு-உயரம், எழுச்சி, ஒலி, கக்குதல், தரா, மிகுதி, வெடிப்பு.
கலிப்புமலை - அந்தகன்பீடம், தராவென்னும் உலோகமலை.
கலிமா - மகமதுமதத்தாருடைய விண்ணப்பம்.
கலிமராகம்-கிலிகிலிப்பை.
கலிமாலகம்-அகில்.
கலிமோகநம்-ஓர்வகை அத்திமரம்.
கலியத்தம் - கலியுகத்திற் சென்றவருடம்.
கலியர்-படைவீரர், மிடியர்.
கலியன் - இரட்டைப்பிள்ளையிலாண் கடையுகத்தலைவன், சனி.
கலியாணக்கால்-வாசலுக்கடுக்க நிறுத்துங்கப்பு.
கலியாணக்கிரதம்-ஓரவிழ்தம்.
கலியாணக்கோலம்-மணக்கோலம்.
கலியாணப்பூ-இருப்பைப்பூ.
கலியாணப்பூசினி - சாம்பல்நிறப் பூசினி.
கலியாணப்பொருத்தம் - மணவாளனுக்கும்மணவாளிக்கும்பார்க்கும் பொருத்தம்.
கலியாணமண்டபம்-மணமண்டபம்.
கலியாணம்-கொண்டாட்டம், சந்தோஷம், சுபம், பொன், விவாகம்.
கலியாணமுடித்தல் - விவாகம் பண்ணல்.

கலியாணி-உமை, ஓரிராகம்.
கலியாத்தம் } கலிவருஷம்.
கலியாப்தம் }
கலியுகம் - கடையுகம்-இதுநாலுலக்ஷத்து மூப்பத்திரண்டாயிரம்வருஷங்கொண்டது.
கலிலம்-ஸ்திரீ புருஷர்களுடையசோணித சுக்கிலங்கள் திரண்டபிண்டரூபம்.
கலிவிராயன் } ஓர்நெல்.
கலிவிராய் }
கலிவிருத்தம் - ஓர்கவி-அஃது அளபடிநான்கினைக்கொண்டது.
கலிவெண்பா-ஓர்கவி-அஃது வெண்டளைதழுவி யீற்றடி முச்சீரான் முடிவது.
கலினம்-கடிவாளம்.
கலினி-இடாகினி, கைம்மை, கைம்பெண், திப்பிலி.
கலினை-கைம்மை, கொன்றை, மிளகு.
கலின்-கலினெனல், ஈரடிக் கொலிக்குறிப்பு.
கலீயம்-கடிவாளம்
கலீரிடுதல் } ஒலிக்குறிப்பு.
கலீரெனல் }
கலுகுலுத்தல் - பலசிற்றொலியினுண்டான தொனி.
கலுகுலுப்பு-ஒலிக்குறிப்பு.
கலுக்குப்பிலுக்கு - அணிகளானெழுமொலி, ஆடம்பரம்.
கலுங்கு-கலிங்கு.
கலுடம் } கலங்கனீர், பாவம்.
கலுஷம் }
கலுமொலுத்தல் } ஒலிக்குறிப்பு.
கலுமொலெனல் }
கலுவடம்-பூவரும்பு.
கலுவம்-கல்வம்
கலுழக்கல்-கருடக்கல்.
கலுழம்-கலங்கனீர்.
கலுழன்-கருடன்.
கலுழி - கலங்கனீர், முல்லைநிலக்கானயாறு.
கலுழிதம்-கலங்கியிருத்தல்.
கலுழ்தல்-அழுதல், கலங்கல், சிந்தல்.
கலை - அரைப்பட்டிகை, ஆண்மான், ஆண்முசு, எட்டுவிநாடி அல்லது மூப்பது காட்டைகொண்ட ஓர்காலவட்டம், ஓர்பாகையிலறுபதிலொன்று, கலையென்னேவல், கல்வி, காஞ்சிமரம், சந்திரன் பங்கு, சவ்வு, சிலை, ஆகாசத்தின்பகுதி, சுறாமீன், நூல், பிரகாசம், மேயாட்டம், மகரமீன், மகராசி, மரக்கொம்பு, மேகலை, வெண்ணாங்கணிமேறோடு, வயிரம், வித்தியாதத்துவமேழினொன்று, விலங்கேற்றின்பொது* சரீரம்.
கலைகுறைதல்-சந்துக்குறைதல்.
கலைக்கியானம்-கலையறிவு, கல்விநூல்.
கலைக்கொம்பு-மான்கொம்பு.
கலைக்கோட்டுமாமுனி-ருஷிருடி.
கலைஞர்-புலவர்.
கலைஞானம்-கலைக்கியானம்.
கலைதல்-குலைதல்.
கலைத்தல்-ஓட்டுதல், நீக்கல், பிரித்தல், குலைத்தல்.
கலைநாதன்-அருகன்.
கலைநாயகன்-புத்தன்.
கலைப்பு-கலைத்தல்.
கலைமகள் } சரச்சுவதி.
கலைமடந்தை }
கலைமலைவு-கல்விமயக்கம்.
கலைமான்-ஆண்மான், சரச்சுவதி.
கலையம்-கலயம்.
கலையமைத்தி-துர்க்கை.
கலையினன்-சந்திரன்.
கலையுணர்த்துவோன் } குமரன்.
கலையுணர்புலவன் }
கலையூர்தி-சரச்சுவதி, துர்க்கை.
கலையேறுதல்-ஆவேசப்படுதல், உருவேறுதல்.
கலையேற்றுதல்-உருவேற்றுதல்.
கலையோதல்-நூலோதல்.
கலைவல்லோர்-அறிஞர், புலவர்.
கலைவு-குலைவு, குழப்பம், பிரிவு.
கல்-இரத்தினம், ஒலிக்குறிப்பு, கல்லு, கல்லென்னேவல், காவிக்கல், சிலை, மலை, விடந்தீர்க்குமணி.
கல்காதம்-அன்னபேதி.
கல்காரி-ஓர்மருந்து.
கல்கெருக-வன்னெருக.
கல்பலகை-கற்பலகை.
கல்மஷம்-கன்மஷம், குற்றம்.
கல்மடி-காய்மடி.
கல்மதம்-கன்மதம்.

கல்முதிரை-ஓர்மரம்.
கல்முரசு-கப்பிட்டிமரம்.
கல்மொந்தன்-ஓர்வாழை.
கல்லகம்-ஓர்.
கல்லகாரம்-செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லக்காரம்-ஓர்விதபனங்கட்டி, பனங்கற்கண்டு.
கல்லடிமூலம்-ஓர்பாஷாணம்.
கல்லடைசல் - ஓர்நோய், கல்லுறுத்தல்.
கல்லடைப்பு-நீரடைக்குமோர்நோய்.
கல்லணை-குதிரைமேற்றவிசு.
கல்லத்தி-ஓரத்தி
கல்லத்துவம்-செவிட்டுத்தனம்.
கல்லம்-செவிடு, மஞ்சள், விந்தமலை.
கல்லரவிந்தம்-கற்றாமரை.
கல்லல்-அரிக்கல், கலாதி, தோண்டல், பேசலாவெழுமொலி.
கல்லழிஞ்சில்-ஓர்மரம்.
கல்லளை-மலைமுழைஞ்சு.
கல்லறுத்தல்-கல்லரிதல்.
கல்லறை-கல்வீடு, குகை, பிரேதக்குழி
கல்லாங்காசு-கலவோடு.
கல்லாசாரி-கற்சிற்பன்.
கல்லாடம் - ஓர்நூல்.
கல்லாடர்-கல்லாடநூல்செய்தபுலவர்.
கல்லாதவன்-படிக்காதவன்.
கல்லாந்தலை-ஓர்மீன்.
கல்லாரம்-செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லார்-கீழ்மக்கள், மூடர்.
கல்லாலம்-இத்திமரம்.
கல்லால் - கயிலாயமலையினிற்குங் கல்லுவமான ஆல்.
கல்லான்-பாறை.
கல்லி-ஆமை, ஊர்க்குருவி.
கல்லிச்சி } ஓர்மரம்.
கல்லித்தி }
கல்லியம் - கட்டை, கள், கால், சாராயம்.
கல்லியன்-தக்கன்.
கல்லியாணகோத்திரை-கங்கை.
கல்லிழைத்தல்-இரத்தினம்பதித்தல்.
கல்லின்காரம்-கல்நார்.
கல்லீயம்-நீலாஞ்சனம், வன்மையான ஈயம்.
கல்லீரல்-ஓரீரல்.
கல்லு-கல், மலை,
கல்லுகம்-பெருவாகை.
கல்லுக்கலைக்காத்தான் - பொன்னாங்காணி.
கல்லுக்குத்தல் - காரியத்தைத்தடைசெய்யல்.
கல்லுணி-குறுவிச்சை, புல்லூரி.
கல்லுண்டை-ஓர்நெல்.
கல்லுதல்-கிண்டல்.
கல்லுதிரி-ஓரம்மை, ஓர்நெல்.
கல்லுத்திரல்-கல்வெட்டல்.
கல்லுநிலம்-கல்லுத்தரை.
கல்லுப்பு-ஒருப்பு.
கல்லுப்பொறுக்கி-தூதுணம்புறு.
கல்லுப்போடல் - காரியத்தை தடைசெய்யல், நங்கூரம்போடல்.
கல்லூரல்-கல்லினாலானவுரல்.
கல்லுருணி-குருவிச்சி.
கல்லுருவி-ஓர்பூடு.
கல்லுவைத்தல்-காரியஞ்சொல்லாமற்பண்ணுதல், சிலைதாபித்தல், தோணிதரிக்கப்பண்ணுதல், மரணச்சடங்கிறென்று, வையிராக்கியம்வைத்தல்.
கல்லுளி-ஓர்வகையுருக்கு, கல்லுப்பொளிகிறவுளி, பேய்க்களா.
கல்லுவை-ஓர்மீன்.
கல்லூசி-ஓர்மருந்து.
கல்லூரி-கல்விபயிலிடம்.
கல்லூருணு-ஓரூர், பாறைக்கிணறு.
கல்லெடுப்பு - மரணச் சடங்கிற்றுபித்த கல்லையெடுத்தல்.
கல்லெரிப்பு - நீரருகல், நீர்ச்சுருக்குநோய்.
கல்லெறி - எறிபடத்தக்கதூரம், கல்லுவிட்டெறிதல், கவண்.
கல்லெனல்-அனுகரணவோசை.
கல்லை-இலை, இலைக்கலம், பாதகுறட்டின் குமிழ், பிணக்கு.
கல்லைநீராக்கி-மாமிசபேதி.
கல்லொட்டி-நத்தை.
கல்லோலம்-புனற்றிரை.
கல்வம்-குழியம்மி.
கல்லரிக்கை-ஓர்பலா.
கல்வளை-மலைப்பிளப்பு, மலைமுழை.
கல்வி-அறிவு, கற்றல், நூல், புண்ணியத்தோற்றம் நான்கினென்று, வித்தை.
கல்விக்களஞ்சியம் - கல்விக்கிருப்பிடமானவன்.

கல்வித்திறம்-சாமர்த்தியம்.
கல்வித்துறை-கல்விநூல்.
கல்விநூல்-கலை.
கல்விபயிலிடம்-பள்ளிக்கூடம்.
கல்விப்பரிட்சை-கலைநூற்பயிற்சி.
கல்விப்பொருள்-கல்விச்செல்வம்.
கல்விமதம்-கல்விச்செருக்கு.
கல்விமான்-அறிஞன்.
கல்வியறிவு-கற்றறிவு.
கல்வியூரி-கழகம்.
கல்விவான்-அறிஞன்.
கல்வீடு-கல்லினாற்கட்டுமனை.
கல்வீரியம்-அன்னபேதி.
கல்வெட்டி-கல்வெட்டுபவன்.
கல்வெட்டு-அழியாதசொல், ஓர் பிரபந்தம், சிலாசாசனம், புகழ்ச்சிச் செய்யுள்.
கல்வெள்ளி - இரும்பும் வெள்ளியமுங் கலந்தது, முரணவெள்ளி.
கல்வேகம்-அன்னபேதி.
கல்வேதி-ஓர்மருந்து, சகஸ்திரபேதி.
கவக்குன்று-மந்தரமலை.
கவசகுண்டலன்-கவசத்தோடும் குண்டலத்தோடும் பிறந்த கன்னன்.
கவசம்-இரும்புமுதலியவற்று லியற்றிய சட்டை, காவற்பண்ணு மந்திரம் சட்டை, சீலமண்.
கவசனை-கவசம்.
கவடம் - தந்திரம்.
கவடி-ஓர்விளையாட்டு, சோகி.
கவடிப்பாய்தல்-ஓர் விளையாட்டு, பாய்தல்.
கவடு-இடப்படி, கபடம், கப்பு, கவர் கழுத்திடுகயிறு, தொடைச்சந்து, மரக்கொம்பு, யானைகட்டுங்கயிறு.
கவட்டல்-கவட்டுதல்.
கவட்டுக்கால்-கடப்புக்கால்.
கவட்டுதல்-சப்புதல், மெல்லுதல், வளைத்தல்.
கவட்டுநெஞ்சன்-வஞ்சகன்.
கவட்டை-கவர்.
கவணங்கட்டுதல்-காயங்கட்டுதல்.
கவணம்-ஓர்மருந்து, காயக்கட்டு.
கவணி-ஓர்புடவை.
கவணை - கவண், மாட்டுக்குப்புல்விடுமிடம்.
கவண்-கல்லெறிகயிறு.
கவண்டர்-ஓர்சாதியார், சண்டாளர்.

கவண்டி } கவண்.
கவண்டு }
கவந்தம்-உடற்குறை, நீர்.
கவந்தன்-ஓரிராக்கதன்.
கவம்-கோளை, மத்து.
கவயமா }
கவயம் } காட்டான்.
கவயல் }
கவரம்-சாமரம், சினம்.
கவராசம் } தமருசி, வட்டமிடுங்கருவி.
கவராயம் }
கவரி - இராசசின்னத்தொன்று, எருமை, கவரிமா, சாமரை, தேர்.
கவரிமா } ஓர்மிருகம்.
கவரிமான் }
கவரிறுக்கு-கடவுமரம், தணக்கு.
கவரொறுசங்கம்-முட்சங்கம்.
கவர் - இரண்டாகப்பிரிகை, கவரொன்னேவல், மரக்கப்பு, வாழை.
கவர்ச்சி - கவருதல், வெள்ளைக்காக்கணம்.
கவர்தல்-ஆசைப்பெருக்கம், இச்சித்தல், கடைத்தல், கொள்ளையிடல், திருடல், பறித்தல், வாருதல்.
கவர்த்தடி-முள்ளிழுக்குந்தடி.
கவர்த்தல்-கப்புவைத்தல், கவர்விடல்.
கவர்படுதல் - இரண்டுபடல், சிக்குப்படல்.
கவர்படுபொருள்-செய்யுள்வழுவி னொன்று, அஃது ஒருகுறிப்பான் விளங்கவேண்டும் பொருட்டெரிவுற வுணர்த்தவந்த சொல்பல, பொருடருவதாயதனை ஐயுறுத்தி நிற்பது (உ-ம்) யாவருமூடாடார் அரிமருவு சோலையகம்.
கவர்படுமொழி - பல கருத்துக்கொள்ளுஞ்சொல்.
*கவர்பரிப்புரவி- பருத்துவினையுஞ்செலவினையுடையகுதிரை.
கவர்ப்பு-சப்புவைத்தல்.
கவர்வழி-பலகவராய்ப்போம் பாதை.
கவர்விடுதல் - ஒன்றிலிருந்து பலதோன்றல், கப்புவைத்தல், கிளைத்தல், சந்தேகமாயிருத்தல்.
கவர்வு-கதுவுதல், கவர்விடுதல், கைப்பற்று.
கவலல்-கவலைப்படுதல், பேசலாலெழுமொலி, வருந்தல், விரும்பல்.

கவலி-கவலை.
கவலித்தல்-கவலைப்படல், வருந்தல்.
கவலை-அக்கறை, அச்சம், ஓர்கொடி, ஓர்மீன், கவர்வழி, கிலேசம், சந்தி, செந்தினை, துன்பம், நீரிறைக்குந்தோற்கூடை, நோய், மரக்கொம்பு, விசாரம்.
கவல்-துக்கம், வருத்தம்.
கவவு - அகத்திடுதல், கவர், மரக்கொம்பு.
*கவவுக்கை-அகத்திட்டகை.
கவழிகை-திரைச்சீலை.
கவளம் - சோற்றுத்திரளை, வாயளவு கொண்டவுணவு, வெற்றிலைக்கட்டு.
கவளி-வெற்றிலைக்கட்டு.
கவளிகரித்தல் - அபகரித்தல், விழுங்கல்.
கவளிகை-வெற்றிலைக்கட்டு.
கவளீகரித்தல்-கவளமாயுண்ணல், முற்றும் மூடுதல், விழுங்கல்.
கவறல்-துக்கித்தல், வருந்தல்.
கவறு-தாயக்கட்டை, பனம்பட்டை.
கவறுருட்டுதல் } தாயம்போடுதல்.
கவறெறிதல்
கவறை-ஓர்சாதி, வடுகர்.
கவறைச்செட்டி - செட்டிகளில் தாழ்ந்தசாதி.
கவற்சி-வருத்தம், விருப்பம்.
கவனம்-கடுப்பு, கருத்து, கலக்கம், காடு, குதிரைநடை, சீக்கிரம், படை, மிகுகவலை.
கவனன்-வேகமுள்ளோன்.
கவனி-கந்தகபாஷாணம்.
கவனித்தல்-கருத்துவைத்தல்.
கவனிப்பு-கருத்து.
கவா } வெள்ளைக்காக்கணம்.
கவாச்சி
*கவாட்சி-சன்னல்.
கவாடக்கட்டி-வசம்பு.
கவாடக்காரன்-புல்லுவெட்டுவோன்.
கவாடசூரணம் - அபினிகலவைச் சூரணம்.
கவாடம்-கதவு, புல்லுச்சுமை.
கவாடலேகியம்-அபினிலேகியம்.
கவாடவடகம் - கட்டுவாங்ககுளிகை.
கவாடி-கதவு.

கவாட்சம் } வட்டச்சாளரம்.
கவாட்சி
கவாய்-ஒருடை, கந்தை.
கவாரம்-தாமரை.
கவாளம் - குதிரைப்பேதிமருந்து, புண்ணாற்றுமருந்தினொன்று.
கவான்-தொடை, *மலைப்பக்கம்.
கவி - ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நாற்கவிகளைப் பாடுவோன், கவியென்னேவல், குரங்கு, சுக்கிரன், பாடல், பாடுவோன், புலவன் பூனைக்காலி.
கவிகம்-குக்கில், குதிரைக்கடிவாளம்.
கவிகருத்து-பாடுவோன்குறிப்பு.
கவிகற்றோர்-மங்கலப்பாடகர்.
கவிகாளமேகம்-ஓர்புலவன்.
கவிகுருந்தம்-கந்தகபாஷாணம்.
கவிகை-ஈதல், கவிதல், குடை.
கவிசனை-உறை.
கவிசினம்-கோவணம்.
கவிசை-ஓர்வயிற்றுநோய்.
கவிசொல்லுதல்-பாட்டுப்பாடுதல்.
கவிச்சக்கிரவர்த்தி - கம்பன், புலவன்.
கவிச்சி-துற்கந்தம்.
கவிச்சு-பிணநாற்றம், புலால்.
கவிஞர்-கலைவல்லோர், புலவர்.
கவிதல்-வளைதல், விருப்பமாயிருத்தல்.
கவிதை-பா.
கவித்தம் - கடுகுரோகிணி, கரமுட்டிசெய்தல், விளாமரம்.
கவித்தல்-கவியப்பண்ணுதல், மூடுதல்.
கவித்துவம்-கவிபாடும்வல்லபம்.
கவிநாயகன்-பாட்டுடைத்தலைவன்.
கவிப்பர்-செட்டிகள்.
கவிப்பு - ஆரூடத்துக்குச்சூரியனிற்கும் நிலை, உட்டுளை, குடை, மூடுதல்.
கவியங்கம்-வெட்பாலை.
கவியம்-கடிவாளம்.
கவிரத்தினம் - கவிபாடுவதைக்குறித்த ஓர்நூல்.
கவிரம்-அலரிச்செடி.
கவிராயன்-புலவன்.
கவிரோமம்-பூனைக்காலி.
கவிர்-முண்முருக்கு, முருக்கு.
கவிலாசிகை-ஓர்வீணை.
கவிவல்லோர் } புலவர்.
கவிவாணர்

கவிவு-உள்வளைவு, குவிவு.
கவிழ்ச்சி-குவிவு, குனிவு.
கவிழ்தல் - அகம்புறமாதல், இறத்தல், குனிதல், கெடல், தலைகீழாதல்.
கவிழ்தும்பை-ஓர்தும்பை.
கவிழ்த்தல் - அகம்புறமாக்கல், கவிழப்பண்ணல், மூடுதல்.
கவினம்-கடிவாளம், வெண்ணெய்.
கவினல்-அழகாயிருத்தல்.
கவின்-அழகு, தக்கபண்பு.
கவீச்சுரர்-கவிவாணர்.
கவீனம் - பசுமேய்ந்த இடம், வெண்ணெய்.
கவுசி-குழைவு, வருத்தம்.
கவுசிகம்-கௌசிகம்.
கவுசிகன்-இந்திரன், விசுவாமித்திரன்.
கவுஷணம்-கௌபீனம்.
கவுடதம்-வெட்பாலை.
கவுடி-ஓர்பண்.
கவுதாரி-ஓர்பட்சி.
கவுத்துகம்-பதுமராகம், வஞ்சகம்.
கவுத்துகவாதம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று.
கவுமாரம்-இளமை.
கவுமாரி-பார்வதி.
கவுரகாசு-அக்குமணி
கவுரவர்-குருகுலத்தவர்.
கவுரிபாஷாணம் - வெள்ளைப் பாஷாணம்.
கவுலவம்-பன்றிக்கரணம்.
கவுல்-உடன்படிக்கை, துர்க்கந்தம்.
கவுளி-ஓர்விதவெற்று, பல்லி.
கவுள்-கதுப்பு, யானைக்கதுப்பு, யானைமதம்பாயிடம்.
கவுனி-குதிரைப்பற்பாஷாணம், வாசல்
கவேரகந்நியை-காவேரிநதி.
கவேலம்-குவளை.
கவை-அசில், ஆயிலியம், எள்ளிளங்காய், கவர், கவர்வழி, காடு, கோட்டை, தேவை, மரக்கப்பு, வேலை.
கவைதல்-மூடல்.
கவைத்தடி-கவர்த்தடி.
கவைத்தாள்-நண்டு.
கவைநா-பாம்பு.
*கவைமுள்-வேலன்முள்.
கவையடி-கவர்க்குறை, பிளவடி.
கவையம்-கவயம்.
கவ்வல்-கவ்வுதல்.
கவ்வாணம்-ஓர்பண்.
கவ்வியம்-கௌவியம்.
கவ்வு - கவர், கவ்வென்னேவல், பெருமை.
கவ்வுதல் - கடித்துப்பிடித்தல், கவர்தல், வாயிலுற்கொள்ளல்.
கவ்வை-எள்ளிளங்காய், ஒலி, கள், காரியம், துன்பம், பழிமொழி, வேலை.
கழகம் } ஆயுதம் பயிலிடம், கல்விமு
கழகு } தலிய பயிலிடம், சூதாடுமிடம், சூது, போர்க்களம்.
கழங்கம்-சூதாடுகருவி.
கழங்கு - ஓராடல், கழற்சிக்கொடி, வெறியாட்டாளுடைடல்.
கழஞ்சு-பன்னிரண்டுபணவெடைகொண்ட நிறை.
கழப்பன் } வேலைக்கள்ளன்.
கழப்பாளி }
கழப்பு-கள்ளத்தனம்.
கழப்புணி-கழப்பன்.
கழப்புதல்-சோம்பாயிருத்தல்.
கழலடி-கழற்சிக்கொடிவேர்.
கழலல்-நெகிழ்தல், விலகல்.
கழலாடு-பீர்க்கு.
கழலி-பிரண்டை.
கழலிச்சிட்டு-ஓர்சிட்டு.
கழலை-கழலைக்கட்டி, புளொகுழல்.
கழல்-ஆடவர்சொடையாலும் வீரத்தாலுமணியும்பூண், கழலென்னேவல், கழல்மரம், கழற்கொடி, கால், செருப்பு, பொன்வண்டு.
கழல்வு-கழலுதல்.
கழறல்-உறுதிச்சொல், கழலுதல், சொல்லல், நெருக்கல்.
கழற்சி-கழலுதல், கெச்சக்காய்ச்செடி.
கழற்சுபதம்-அநிவிடையம்.
கழற்பதி-பெருங்குமிழ்.
கழற்றல் - கழலப்பண்ணல், விலக்கல்.
கழற்றி-கழலுதல்.
கழற்றுதல் - கழலப்பண்ணல், நீக்கிக்கொள்ளல்.
கழற்றுரை-கடிந்துபேசுஞ்சொல்.
கழனி-சேறு, நிலைச்சீலை, மருதநிலம் வயல்.
கழனியடுத்தவர்-உழவர், வேளாளர்.
*கழாத்தலை-சங்கப்புலவருளொருவர்

கழாநிலம்-கழிநிலம்.
கழாயர்-கம்பங்கூத்தர்.
கழாய்-கழுகு.
கழாய்க்கூத்தர்-கழாயர்.
கழாய்வனம்-சிறுகீரை.
கழாலை-உவர்நிலம், கழிநிலம்.
கழி - உப்பளம், உப்பாறு, கயிறு, கழியென்னேவல், கொம்பு, கோல், செம்மெழுகு, நூற்சுருள், மிகுதி, மெழுகுவர்த்தி, யாழினரம்பு, *உறன்
அழிகடை-அறக்கெட்டது.
கழிகோல் - மிருகங்களைப் பிடிக்குங் கோல்.
கழிக்கரை-கழிமுகம்.
கழிக்கரைப்புலம்பல்-ஓர் பிரபந்தம்.
கழிக்காரை-ஓர்செடி.
கழிசிறை-உறுப்புக்கேடி, நாடோடி.
கழிச்சல்-பெருக்கம், வயிறுபேதியாதல்
கழிதல்-கடத்தல், சாதல், செல்லல், தீர்தல், நடத்தல், பிரிதல், போதல், மிகுதல், வயிறுபேதித்தல்.
கழித்தல் - தீர்த்தல், நீக்குதல், போக்குதல், விலக்கல்.
கழிநிலம்-உப்பளம், உவர்நிலம்.
கழிநெடிலடி - செய்யுளடிகளிலொன்று, அஃது ஐஞ்சீரின் மிக்கசீர்களடுத்துநிற்பது.
கழிநெடில்-ஓர்கவி.
கழிபிறப்பு-முற்பிறப்பு.
கழிப்பு-கணக்குவகைநான்கிலொன்று, கழித்தல், குற்றம், தோஷந்தீர்க்குமோர்சடங்கு.
கழிப்புல்-ஓர்புல்.
கழிமுகம்-ஆற்றுநீர்க்கழிவு.
கழிமுட்டான்-ஓர்புல்.
கழிமை-தள்ளுதல்.
கழியர் - உப்பளவர், நெய்தனிலமாக்கள்.
கழியல்-கழிக்கப்பட்டது, பிரிதல்.
கழியிருக்கை-நதிசூழ்ந்தவிடம்
கழியுடல்-தசைகழிந்த உடல்.
கழியூணன்-பெருந்தீனன்.
கழிவாய்நஞ்சன்-ஓர்பாம்பு.
கழிவு-இழிவு, உள்ளதுசிறத்தல், கழிதல், சேஷம், தள்ளுபடியானது, நீங்குகை, பூரணம், மிகுதி.
கழிவுகணக்கு-ஓர்கணக்கு.
கழு-கழுகு, கழுமரம், கழுவென்னேவல், சூலம். புற்பற்றை.
கழுகண்டு-வணங்காத்தலையன்.
கழுகு-ஓர்பறவை.
கழுகுழுத்தல்-நொதுநொதுத்தல்.
கழுக்கடை-ஈட்டி, சூலம்.
கழுக்களம்-கொலைக்களம்.
கழுக்காணி-குறளன், சோம்பேறி, தழுக்குணி, வயிரக்கட்டை.
கழுக்குன்றம்-செங்கற்பட்டுக் கருகிலுள்ள திருக்கழுக்குன்றமலை.
கழுசி-சீந்தில்.
கழுச்சிறையன் - கழுவேற்றப்பட வேண்டியவன்.
கழுது-காவல், பரண், பிசாசம், வண்டு.
கழுதை - மூடன், வடமேற்றிசைப்பாலன்குறி, வாலேயம்.
கழுதைகடி-ஒருமூலைகுறைந்தவீடு.
கழுதைக்கரணம் - பதினோர் கரணத்தொன்று.
கழுதைக்குடத்தி-கழுதைப்புலி.
கழுதைத்திசை-வடமேற்றிசை.
கழுதைத்தும்பை-ஓர்தும்பை.
கழுதைமறி-கழுதைக்குட்டி.
கழுதைமுள்ளி-ஓர்செடி.
கழுதைவண்டு-ஓர்வண்டு.
கழுதைவாகினி-மூதேவி.
கழுதைவிட்டை-கழுதைச்சாணி.
கழுதைவிரியன்-ஓர்பாம்பு.
கழுத்தடி-தோண்மேல்.
கழுத்தல்-பொய்.
கழுத்து-கண்டம்.
கழுத்துச்குட்டை-கழுத்திற்கட்டுகிறசீலை.
கழுத்துக்கொடுத்தல் - ஒருவரிக்கட்டில் முன்னிற்றல்.
கழுத்துப்பட்டை-அங்கியினோருறுப்பு.
கழுத்துப்பொருத்தம் - மணப்பொருத்தம் பத்திலொன்று.
கழுத்துமுறித்தல் - ஒருவனைக்கெடுத்தியாதொன்றடைதல், ஒன்றைச்செய்ய வேண்டுமென்று தொந்தறை பண்ணல்.
கழுநீர்-அரிசிகளைந்தநீர், ஆம்பல்.
கழுந்தா-கழுந்து.
கழுந்து - குடம் முதலியவற்றின் கழுத்து, தேய்ந்து மழுங்கித்திரண்ட வடிவம், பொருத்து, மரவைரம்.

கழுப்பற்றை-புற்றக்கை.
கழுமரம்-கழு.
கழுமல்-இணைத்தல், நிறைதல், பற்றுதல், மயக்கம், மிகுதி.
கழுமுதல்-இணைத்தல், கலக்குதல், நிறைந்திருத்தல், மயங்குதல்.
கழுமுள்-ஆயுதப்பொது ஈட்டி, கழுமரம், சூலம், மாதனை.
கழுவல்-கழுவுதல்,
கழுவன்-பொய்யில் நிலைப்பவன், மிகுதுட்டன்.
கழுவாய்நிலம்-புற்றறை.
கழுவினெய்யுருக்கி - கடியவள், கழுவிலேற்றிய பிணத்தில் நெய்யுருக்குவாள், பிடித்தபிடிவிடாது சோலி பண்ணுகுறவன்.
கழுவுதல்-சுத்திபண்ணல்.
கழுவெளி-புற்றறை.
கழுவெறி-தழுக்குணி.
கழுவேற்றுதல்-கழுவில்வைத்தல்.
களை-கரும்பு, புநர்பூசம், மூங்கில்.
களைக்கூத்தர்-கம்பங்கூத்தர்.
களைக்கூத்து-கம்பங்கூத்து.
களைமுத்தம் - மூங்கிலிற்பிறந்த புகை நிறமுத்து.
கள-களாச்செடி.
களகண்டமாலை-ஓர்வகைச்சிலந்தி.
களகண்டம்-குயில்.
களகதுரோகம்-புளைக்குழல்.
களகம்-பெருச்சாளி.
களகம்பளம்-ஆட்டின்கழுத்தாரம்.
களகளத்தல்-ஈரடுக்காயொலித்தல்.
களகளப்பு-ஈரடுக்கொலிக்குறிப்பு.
களகளம்-பேரொலி.
களகளெனல் }
களகுளெனல் } ஈரடுக்கொலிக்குறிப்பு.
களகொளெனல் }
களக்கடை-களவாய்.
களக்கட்டை-நெற்களத்தினடுங்கட்டை
களக்கர்-புலையர், வேடர்.
களக்குக்கொளக்கெனல்-ஒலிக்குறிப்பு.
களங்கசத்துரு-ஈயமணல்மலை.
களங்கட்டி-ஓர்மீன்.
களங்கம் - அடையாளம், களிம்பு, கறுப்பு, குற்றம், சீதாங்கபாஷாணம், நீலம், மாசு.
களங்கன்-சந்திரன், மாசுள்ளோன்.
களங்கு-அடையாளம், இரசகுளிகை.
களங்கொள்ளல் - போர்க்களத்திற் கலத்தல்.
களசுவேதம்-அதிவிடையம்.
களஞ்சி-சூதபாஷாணம்.
களஞ்சியம் - பண்டகசாலை, பொக்கசசாலை.
களதபுதம்-கண்ணாடி, வெள்ளி.
களதம்-பெருச்சாளி.
களதவுதம் }
களதூதம் } வெள்ளி.
களதௌதம் }
களத்திரகாரகன்-சுக்கிரன்.
களத்திரம் - குடும்பம், சென்மத்துக்கேழாமிடம், மனைவி.
களத்தூர்-செங்கற்பட்டுக்கருகிலோரூர்.
களந்தூரி-தான்றிக்காய்.
களந்தூன்றி-தான்றிக்காய்.
களந்தை-களத்தூர்.
களபகத்தூரி-ஓர்வாசனைப்பண்டம்.
களபம் - கலப்பு, கலவைச்சாந்து, சட்டசாந்து, யானை, யானைக்கன்று.
களப்பலி-யுத்தவீரர்செலுத்தும்பலி.
களப்பன்றி-பெருங்குமிழ்.
களப்பனை-ஓர்செடி.
களப்பாட்டு-போரடிக்கும்போது சொல்லுகிறபாட்டு.
களப்பாய்-கதிர்ப்பாய்.
களப்பிச்சை - விளைகளத்திற்கொடுக்கும் பிச்சை
களப்பு-கடலினிடைப்பரவைத் திடர், கள்ளம்.
களப்புதல்-வேலைக்கள்ளம் பண்ணுதல்.
களப்பேச்சு - களரிபாஷை, சூடிமிதிகளத்திற்பயில்.
களப்பேறு-குடிமக்கள்படி.
களமம்-நெல்.
களமர்-உழுநர், சூத்திரர், பூவைசியர் மருதநிலமாக்கள்.
களமளத்தல்-ஒலிக்குறிப்பு.
களம்-இடம், இருள், ஓரூர், கடலுண்மிதப்புத்தளை, கழுத்து, களா, களர் நிலம், கறுப்பு, நெற்களம், போர்க்களம், மனைவி, மிடறு, விடம்.
களம்பாடுதல் - போர்க்களத்தை வன்னித்தல்.

களரவம்-காட்டுப்புறு, புறு.
களரி-அரங்கம், ஆயுதஞ்சூது கூத்துப் பயிலிடம், கருமை, களர்நிலம், காடு, கூட்டம், பாழ்நிலம், போர்க்களம், மிடறு.
களரிகட்டுதல் - அவையடக்கஞ் செய்தல், கூத்தரைமந்திரத்தினாற்கட்டல், நாடகசாலைகட்டல்.
களரிக்கட்டு-ஓர்வித்தை.
களரிக்கோழை - சவைக்குப் பயப்படுதல்.
களரியேறுதல்-அரங்கிலேறுதல்.
களரிவிடுதல்-அரங்கிலேவிடுதல்.
களர்-களர்நிலம், களாமரம்.
களர்நிலம்-உப்புநிலம்.
களர்மண்-உவர்மண்.
களவகத்திணை - அகப்பொருட்டுறையினொன்று.
களவம்-கலப்பு, சளவைச்சேறு.
களவர்-கள்வர்.
களவன் - கர்க்கடகவிராசி, கள்வன், நண்டு.
களவாடுதல்-களவெடுத்தல்.
களவாணி-களவாளி.
களவாளல்-களவாடுதல்.
களவாளி-கள்வன்.
களவியல்-கள்ளப்புணர்ச்சி.
களவு-உன்மத்தம், களாச்செடி, திருட்டு இஃது பஞ்சபாதகத்தொன்று, வஞ்சனை.
களவுதம்-வெள்ளி.
களவுப்புணர்ச்சி-கரவுக்கூட்டம், காந்தருவமணம்.
களவொழுக்கம் - களவாய்ப் புணர்ந்து திரிதல், களவு.
களன் - இடம், உக்கிரம், உன்மத்தம் ஒலி, கழுத்து, கூட்டம், சபை, சிநேகம், போர்க்களம், மருதநிலம்.
களா-ஓர்செடி, களர்நிலம், கறுப்பு.
களாசம்-பிரம்பு.
களாசாத்திரம்-காமநூலினொன்று.
களாசி-படிக்கம்.
களாநிலம்-உப்புநிலம்.
களாபடனம்-தயாவிருத்தி பதினான்கினொன்று, அஃது கற்பித்தல்.
களாபதி-சந்திரன்.
களாப்பூக்கோரை-ஓர்புல்.
களாவகம்-சிறுகீரை.
களார்வர்த்தவாதம் - கழுத்துநரம்பு சுருக்கு.
களி - இறுகியபழச்சாறு, களிப்பு, களிப்புள்ளவன், களியென்னேவல், கள், குரூரம், குழம்பு, சீதம், செருக்கு, செறிவு, பெருமை, மகிழ்ச்சி, மயக்கம், மாவாற்கிண்டியகளி, வெப்பு, வெறி.
களிகம்-வாலுளுவை.
களிகூருதல் - அகங்களித்தல், களிப்பு, மிகுதல்.
களிகை-கலிகை.
களிக்கண் - தட்டார்கருவியினொன்று.
களிக்காய்-தசைக்காய்.
களிக்குளம்-மலையாளக்கரையில் ஓர்பட்டினம்.
களிச்சக்காய்-கெச்சக்காய்.
களிதம்-பெருங்கல், வழுக்கல்.
களித்தல்-இன்புறல், செருக்கடைதல், மதத்தல், மிகவுவத்தல்.
*களித்துயில்-இன்பத்துயில்.
களித்துறை - இலங்கைத்தீவில் ஓரூர்.
களிநெஞ்சன்-கொரேன், செருக்கன்.
களிப்பாக்கு-அவித்துக்காய்ந்தபாக்கு.
களிப்பு-இன்பம், உள்ளக்களிப்பு, செருக்கு, மகிழ்ச்சி, மதர்ப்பு, மயக்கம்.
களிமண்-பசைமண்.
களிமம்-எலி.
களிம்பு-குற்றம், துரு, மலினம்.
களிம்பூறல்-களிம்பேறல்.
களியடைக்காய்-களிப்பாக்கு.
களியர்-நெய்தனிலமாக்கள், வெறியர்.
களியாட்டு-மதுவெறியாட்டு.
களிவாய்நஞ்சன்-ஓர்பாம்பு.
களிறினம்பு-யானைத்திப்பிலி.
களிறு-அத்தநாள், ஆண்சுறு, ஆண்பன்றி, ஆண்யானை, யானை, விலங்கேற்றின்பொது.
களுகொளெனல்-நழுநொழுத்தல்.
களுக்குக்களுக்கெனல்-ஒதிக்குறிப்பு.
களுசி-சிந்தில்.
களேபரம்-உடல், எலும்பு, பிணம்.
களை-அயர்வு, அழகு, ஒளி, களையென்னேவல், காந்தி, குற்றம், தாளப்பிரமாணம் பத்தினொன்று, தேவகலை, புல்.

களைகட்டல்-களைபிடுங்கல்.
களைகட்டி-களையெடுக்குங்கருவி.
களைகண் -|ஆதரவு, உதவி, தாவாரம், புகல்.
களைகொட்டு-களைகோல்.
களைகொள்ளுதல்-சோர்தல், தேவபத்திக்கடுத்தமுகக்குறியடைதல்.
களைகோல்-களைகளையுங்கருவி.
களைச்சத்தகம்-களைகளையுமாயுதம்.
களைஞர்-சண்டாளர், வேலைக்காரர்.
களைதல்-களைகட்டல், கொல்லல், நீக்குதல், விலக்குதல்.
களைதீர்தல் } சோகந்தீர்தல்.
களைதேர்தல் }
களைதல்-இளைப்புறல்.
களைபறித்தல்-களைபிடுங்குதல்.
களைபோடுதல்-சோகம்போடுதல்.
களைப்பு-களைத்தல்.
களைப்புல்-பயிருக்குட்புல்.
களையாறுதல்-சோகநீங்குதல்.
களையாற்றுதல்-சோகந்தீர்த்தல்.
களையேறுதல்-களைகொள்ளுதல்சக்திரகலைவளரல்.
களைவாரி - களைச்சத்தகம், களைவாருவோன்.
களைவெட்டி-களைகட்டி.
களைவு-களைதல்.
கள்-ஓர்வண்டு, களவு, கள்ளென்னேவல், சோர்வு, பன்மைவிகுதி, பொய், மது, மலர்த்தேன்.
கள்வன் - கரியவன், கர்க்கடகவிராசி, குரங்கு, திருடன், நண்டு, மூசு, யானை.
கள்ளக்கடன்-அநியாயவட்டிக்கு வாங்கல், மென்புரட்டு.
கள்ளக்கதவு-கள்ளவாயில்.
கள்ளக்கயிறு-சூத்திரக்கயிறு.
கள்ளக்கவறு-கவறு, வஞ்சகச்சூது.
கள்ளக்கவி-சோரகவி
கள்ளக்களவு-ஒளிப்புமறைப்பு.
கள்ளக்காசு-செல்லாக்காசு.
கள்ளக்காதுபடல்-குற்றினகாது பழுதுபடல்.
கள்ளக்காய்-கனற்றபழம்.
கள்ளக்கிடை-வஞ்சனையாகப் படுத்திருக்கை.
கள்ளக்கோலம்-இரண்டுக்குநசாயல், குணக்கேடானசாயல்.
கள்ளச்சரக்கு-கள்ளமானசரக்கு.
கள்ளச்சாதி- ஓர்சாதியார்.
கள்ளச்சாமம்-நடுச்சாமம்.
கள்ளச்சி-திருடி, புசீறு, பூவழலை.
கள்ளச்சுரம்-விட்டுவிட்டுக்காயுங் காய்ச்சல்.
கள்ளச்சொல் - திருட்டுப் பேச்சு, பொய்.
கள்ளத்தொய்யல்-களவுசெய்யல்.
கள்ளத்தட்டு-அந்திரத்தட்டு.
கள்ளத்தனம்-கபடம்.
கள்ளத்தீன்-திருட்டுணவு.
கள்ளத்தோணி-ஓர் ஓடம்.
கள்ளநீர்-புண்ணீர்.
கள்ளநேரம்-அந்திநேரம்.
கள்ளப்பாய்-இடைத்தட்டிலுருவனை.
கள்ளப்பார்வை-அன்புநோக்கம், திருட்டுப்பார்வை.
கள்ளப்புணர்ச்சி-தந்தைதாயறியாது தலைவனுந் தலைவியுங்கூடல்.
கள்ளப்புருஷன்-சோரநாயகன்.
கள்ளப்பேச்சு-தந்திரப்பேச்சு.
கள்ளமனம்-வஞ்சகமனம்.
கள்ளம்-கபடம், களவு, குற்றம், புண்ணினுட்கள்ளம், பொய், வஞ்சகம்.
கள்ளம்பண்ணல்-சோர்வுபண்ணல்.
கள்ளவிடல் - வேண்டியபடி செய்யாதுவிடல்.
கள்ளல் - களவுசெய்தல், கள்ளுண்ணல், வஞ்சித்தல்.
கள்ளவல்லியன்-ஓர்சாதியான்.
கள்ளவாயில்-கள்ளவழி.
கள்ளவிலை-இரகசியவிலை.
கள்ளவெட்டு-கள்ளத்தனம்.
கள்ளவேலை-மாசிசமானவேலை.
கள்ளவேளை-நியமிக்கப்படாதநேரம்.
கள்ளர்பற்று-கள்ளச்சாதியரூர்.
கள்ளறை-பெட்டகத்துள்ளறை.
கள்ளன்-ஓர்சாதியான், சோரன்.
கள்ளாமை-களவுசெய்யாமை.
கள்ளாம்பல்-வெள்ளாம்பல்.
கள்ளி-ஓர்மரம், திருடி.
கள்ளிக்காக்கை-செம்போத்து.
கள்ளிக்கோட்டை-ஓரூர்.
கள்ளிச்சிட்டு-ஓர்பறவை.

கள்ளிமடையான்
கள்ளிமந்தாரை } ஈழத்தலரி.
கள்ளிமுளையான்
கள்ளு-நீறிடாதபனைநீர், மது.
கள்ளுணி
கள்ளுண்ணி } கள்ளுண்போன்.
கள்ளுதல்-களவுசெய்தல்.
கள்ளூண்-வண்டு.
கறகறத்தல்-அரிசுண்டப்படுத்தல், சீக்கிரக்குறிப்பு.
கறகறப்பு - ஒலிக்குறிப்பு, மனங்கொள்ளாமை.
கறகறெனல்-ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
கறங்கல் - ஒலித்தல், சுழலல், பேய், வளைதடி.
கறங்கு-கறங்கென்னேவல், காற்றாடி, சுழற்சி.
கறங்குதல்-ஒலித்தல், சுழலல்.
கறங்கோலை-காற்றில்சுழலும் ஓலை.
கறட்டி - உலர்ந்தகட்டி, வறண்டகட்டம்.
கறட்டியோணன்-கரட்டோணன்.
கறட்டுக் கறட்டெனல் - கோழைகொண்டிழுத்தல்.
கறத்தல்-உறத்தல், கவருதல், பால்முதலிய பிதுக்கல்.
கறமன்-காய்ந்துவறண்டது,
கறல்-விறகு.
கறவை-பாற்பசு.
கறவையான்-பாற்காரன், பாற்பசு.
கறளை-ஓர்மரம், கருளை, குள்ளன்.
கறள்-கறை, துரு.
கறா-காடைக்குரல்.
கறாக்கி
கறார் } வரையறை.
கறாளி - அடங்காக்குதிரை, அடங்காமை.
கறாளை-வளர்ச்சியற்றது.
கறி - கடி, கறியென்னேவல், மிளகு.
கறிக்கரணை-ஓர்செடி.
கறிக்காய்-மிளகு.
கறிச்சுரை-ஓர்சுரை.
கறித்தல்-கடித்தல், புசித்தல்.
கறித்தும்பை-ஓர்தும்பை.
கறிப்பாலை-ஓர்பாலை.
கறிப்புடல்-ஓர்புடோல், ஓர்வண்டு.
கறிமசாலை-கறிச்சரக்கு.
கறிமுள்ளி-ஓர்முள்ளி.
கறியாமணக்கு-பறங்கியாமணக்கு.
கறியுப்பு-இலவணம்.
கறிவடகம்-வற்றல்.
கறு-கோபம்.
கறுகாய்ஞ்சொறி-ஓர்செடி.
கறுக்காய்-இளநீர்க்கயர், ஓர்மரம்.
கறுக்கை-கோபித்தல்.
கறுத்தகாக்கட்டான்-ஓர்கொடி.
கறுத்தப்பாசி-கரியமணி.
கறுத்தப்பூ-கருங்காக்கணம்.
கறுத்தல் - கறுப்பாதல், கோபித்தல், மனக்குறைப்படுதல்.
கறுத்தவன்-கரியன், பகைவன்.
கறுத்தவுப்பு-காருப்பு.
கறுநாகம்-காரீயம்.
கறுப்பன் - ஓர்தேவதை, கரியன், கார்நெல்.
கறுப்பி-எவக்ஷாரம், கரியவள், கருவண்டு, காகமிளை, மீனம்பர்.
கறுப்பு - கருநிறம், கறை, கோபம், சினக்குறிப்பு, மனக்குறை.
கறுப்புக்கட்டுதல்-பயிர்கறுத் துண்டாதல், மழைக்கோலங்கொள்ளல்.
கறுப்புக்காய்ஞ்சொறி-ஓர்செடி.
கறுப்புக்கொள்ளல்-கோபங்கொள்ளல்.
கறுப்பெறிதல்-கறுத்தல்.
கறுமுதல்- சினக்குறிப்புக்காட்டல், சினத்தல்.
கறுமுறுத்தல்-சினத்தல்
கறுமுறெனல் - ஒலிக்குறிப்பு, குறைசொல்லல்.
கறுமொறுத்தல்-மொறுமொறுத்தல்.
கறுமொறெனல்-கறுமுறெனல்.
கறுவம்-ஆங்காரம், சினம்.
கறுவல் - கரியவன், கருநிறம்,சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு,சினக்குறிப்புகாட்டல்.
கறுவா-இலவங்கமரம்.
கறுவாப்பட்டை-இலவங்கப்பட்டை.
கறுவித்தல்-சலஞ்சாதித்தல்.
கறுவியம்-கறுவித்தல், வைராக்கியம்.
கறுவிருளை-கருங்காக்கணம்.
கறுவு-கறுவென்னேவல், சலஞ்சாதித்தல், சினக்குறிப்பு, சினம், தணியாக்கோபம்.

கறுவுதல்-சலஞ்சாதித்தல்.
*கறுழ்-கடிவாளம்.
கறுள்-கடிவாளம்.
கறேரெனல் - ஒலிக்குறிப்பு, கருமை, நிறக்குறிப்பு, விரைவின்குறிப்பு.
கறை - இருள், உதிரம், உரல், கருங்காலிமரம், கறள், கறுப்பு, குடியிறை, குற்றம், நஞ்சு, நிறம், மாசு, *கடமை.
கறைக்கட்டுதல் } கறள்பிடித்தல்.
கறைபிடித்தல் }
கறைபோக்கி-சவுக்காரம்.
கறைப்படுதல்-குற்றப்படுதல்.
கறைப்போக்கன்-கீழ்மகன்.
கறைப்போக்கு-கீழ்மை.
கறைமிடற்றிறை } சிவன்.
கறைமிடற்றோன் }
கறையடி-யானை.
கறையான்-சிதல்.
கறையான்மேய்தல் - கறையான்கட்டுதல்.
கறையான்புற்று-வன்மீகம்.
கற்கசகாரன் - கடினமுள்ளோன், சுறுக்கிளகாதவன்.
கற்கசம்-உத்தாமணி, கடினம், குரூரம் பிசுனம், பிரயாசம்.
கற்கசர்-உலோபிகள், கடினர், கீழ்மக்கள்.
கற்கடகரம் - தேள், நண்டு வாய்க்காலி.
கற்கடகசிங்கி-கடுக்காய்ப்பூ.
கற்கடகபாஷாணம்-விளைவு பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.
கற்கடகம் - ஓரிராசி, தாமரைநூல், நண்டு.
கற்கடகவைரி-குரங்கு.
கற்கடி-ஓர் அரக்கி.
கற்கண்டம்-கற்பார்.
கற்கண்டு-கருப்புக்கட்டி.
கற்கபலம்-மாதுளை.
கற்கம்-இலுப்பைப்பூ, ஓர்சரக்கு, தாமரை, நிட்டை, பலவகை கூடியமருந்து, பாதம், மருந்தின்பொது.
கற்கரம்-மத்து.
கற்கரி-கரகம், தயிர்கடைதாழி.
கற்கரிகை-சதங்கை.
கற்கருசிலை-ஓர்பூடு.
கற்கனல்-கன்மதம்.
கற்கா - கொடுங்கரிப்பூகாட்டியென்று.
கற்காணம்-கருஞ்சீரகம்.
கற்காமி-கன்மதம்.
கற்காரம்-கல்லைக்காரம், காரக்கல்.
கற்காரு-அகில்மரம், கற்காரம்.
கற்காவி-காரக்கல்.
கற்கி-குதிரை, திருமாலவதாரத்தொன்று, தேவர்கோயில்.
கற்கிச்சா - சாவாக்கியங்களிலொன்று.
கற்கிணறு-கல்லுக்கிணறு.
கற்கிமண்டலம்-உத்தரவீதிக்கடை.
கற்கு-கற்கடகவிராசி.
கற்குடல்-ஓர்விதநோய்க்குடல், மந்தக்குடல்.
கற்குளித்தல் - இரத்தினங்குளித்தெடுத்தல்.
கற்கொத்தி-கற்பொறுக்கிப்புள்.
கற்கோடன்-கார்க்கோடன்.
கற்கோவை-கருடன்கிழங்கு.
கற்சத்து-கல்நார்.
கற்சம்-யானைபிணிவெருவி.
கற்சவளை-கற்சத்து.
கற்சரீரம்-வயிரச்சரீரம்.
கற்சனம்-கோபம், தொனி, முழக்கம், யுத்தம்.
கற்சாகம்-மரகதம்.
கற்சாடி-கல்லினாற்செய்தபாத்திரம்.
கற்சிற்பன்-சிற்பன்.
கற்சுண்ணாம்பு-கன்னீறு.
கற்சுவர்-செங்கல் காட்டுக்கல் லிவற்றாற்செய்யப்பட்டசுவர்.
கற்சூரம்-கழற்கொடி, பேரீந்து.
கற்சூலை-ஓர்சூலை.
கற்பகக்காம் - கோபுரித்தலைக்கெந்தகம்.
கற்பகச்சோலை-இந்திரன்காவனம்
கற்பகத்திணை - அகப்பொருட்டுறையிலொன்று.
கற்பகம் - ஐந்தருவிலொன்று, அஃது வேண்டிற்றெல்லாந் தருமரம், புளியாரை, விநாயகன்.
கற்பகன்-சௌனகன்.
கற்பகோளகை-கருப்பப்பை.
கற்பஞ்சாதித்தல்-காயசித்திக்குமருந்து சாதித்தல்.
கற்படி-எறும்படி.
கற்படுத்தல்-செங்கற்பதித்தல்.

கற்படை - கற்படுத்தநிலம், கோட்டையிற் கள்ளவழி.
கற்பதரு-கற்பகவிருட்சம்.
கற்பதித்தல் - இரத்தினமழுத்தல், கல்லடுத்தல்.
கற்பதுருமம்-கற்பதாரு.
கற்பநிதி-குபேரனவநிதியினென்று.
கற்பம் - அற்பம், ஆயிரங்கோடி, இரண்டிரவுமொருபகலுங் கொண்டது, உலகமுடியுங்காலம், கஞ்சா, கருப்பம், சித்தர்கள்மருந்து, தேவலோகம், நவநிதியிலொன்று, நிண்ணயம், பிரளயு, பிரமனோர்நாள், புளியாரை, மந்திரசாத்திரம், மூப்புவராமற்செய்யு மருந்து, வேதாங்க மாறினொன்று.
கற்பபாதபம்-கற்பகவிருட்சம்.
கற்பரன்-வெள்ளைப்பாஷாணம்.
கற்பரிபாஷாணம்-அதம்பம், ஓர்மருந்து
கற்பலகை-எழுதும்பலகை.
கற்பழியாதபெண்-கன்னி.
கற்பழிதல்-கற்புக்கெடுதல்.
கற்பற்று-கிட்டக்கல்.
கற்பனை-இல்லத்தையுள்ளதாயுண்டு பண்ணல், கடிப்பு, கட்டளை, கல்வி, கற்பிப்பு சாதுரியம், நிருணயம், பாவனை, புனைந்துரை, விதிப்பு.
கற்பனைகடந்தோன்-கடவுள்.
கற்பாசி-ஓர்மருந்து.
கற்பாஷாணம்-ஓர்மருந்து.
கற்பாடு-கல்லுள்ளவிடம்.
கற்பாட்டி-கற்புடையாள்.
கற்பாந்தம்-உறுதியாயிருப்பது, கற்பமுடிவு.
கற்பாரியம்-சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று.
கற்பார்-கல்லுப்பார், கல்விகற்போர்.
கற்பாலவணம்-சிந்துலவணம்.
கற்பாவுதல்-கற்படுத்தல்.
கற்பாழி-மலைக்குகை.
கற்பாளி-கல்லலை.
கற்பாறை-கன்னிலம், கல்லுப் பாளம்.
கற்பிதம்-அலங்கரிப்பு, கட்டளை, நியமம், பாவனை, போர்யானை, விதிப்பு.
கற்பித்தசொல்-ஆக்கச்சொல், நியமிக்குஞ்சொல்.
கற்பித்தல் - உண்டாக்கல், கட்டளையிடல், நியமித்தல், படிப்பித்தல், விதித்தல்.
கற்பியல்-கற்பொழுக்கம்.
கற்பிரம்-கல்லாரை.
கற்பிலக்கணம்-கற்புநடை, அதுஉள்ள மகிழ்ச்சியுமூடலு மூடலுணர்த்தலும் பிரிவும்பிறவுமாம்.
கற்பிற்கிளவித்தொகை - பரத்தையிற் பிரிவுமுதலாகப் பொருள்வயிற் பிரிவீறும்.
கற்பு-கல்வி, கற்பனை, நீதிநெறி, மகளிர்நிறை, மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி, முறைமை, விதி.
கற்புடைமகளிரத்தியாயம் - காசி காண்டம் என்னும் புத்தகத்தி லோர் பாகம்.
கற்பிப்பலித்தல்-கற்புச்சித்தித்தல்.
கற்புரம்-பொன்.
கற்புழை-கல்வலை, கோட்டையிற்கள்ளவழி.
கற்பூ-கல்லாறை, கற்றாமரை.
கற்பூசரம்-நாகமலை.
கற்பூமி-கல்லுநிலம்.
கற்பூரசத்து-கருப்பூரச்சிலை.
கற்பூரம்-கருப்பூரம், பொன்னாங்காணி.
கற்பூரவள்ளி-ஓர்பூண்டு.
கற்பை-படிக்கல்லுப்பை.
கற்பொடி-அன்னபேதி.
கற்பொறுக்கி-ஓர்புள்.
கற்போன்-மாணாக்கன்.
கற்றசை-வாடாத்தசை.
கற்றச்சன்-கற்சிற்பன்.
கற்றடிவிரியன்-ஓர்பாம்பு.
கற்றலைமீன்-ஓர்மீன்.
கற்றல்-படித்தல், பழகுதல்.
கற்றவர்-புலவர்.
கற்றறிமூடன்-கற்றும் மதியீனனாயிருப்பவன்.
கற்றறிவு-படிப்பினால்வருமறிவு.
கற்றா- இளங்கன்றுப்பசு.
கற்றாமரை-ஓர்தாமரை.
கற்றார்-அறிஞர், படித்தோர்.
கற்றாழை-ஓர்செடி.
கற்றானை-காவிப்புடவை.
கற்றீட்டு-கன்மதம்.
கற்றுக்குட்டி-படிக்கும்பிள்ளை.

கற்றுக்கொடுத்தல்-படிப்பித்தல்.
கற்றுச்சொல்லி-சிறுகவிஞன், துணைச் சொல்லுச் சொல்வோன்.
கற்றூண்-கல்லாலாயதூண்.
கற்றேச்கு-ஓர்மரம்.
கற்றை - கதிர்த்தொகுதி மயிர்த்தொகுதிபோல்வன, கூட்டம், தென்னோலை முதலியவற்றின் முடையுங் கற்றை.
கற்றொட்டி - கல்லினாற்செய்த நீர்த்தொட்டி.
கற்றோர்-அறிஞர், கலைஞர்.
கற்றோர்நவிற்சியணி - மிகுதிக்குக்காரணமாகாததை யதற்குக்காரணமாகச்சொல்லுவது.
கனகக்கொடியோன்-கன்னன்.
கனகசபை - பஞ்சசபையி னொன்று, பொன்னம்பலம்.
கனகதண்டிகை-பொற்சிவிகை.
கனகதப்பட்டை-ஓர்வாச்சியம்.
கனகதம்-ஒட்டகம்.
கனகதர்-சண்டாளர், புலைஞர்.
கனகபரிட்சை-கலைஞான மறுபத்துநான்கினொன்று.
கனகமிளகு-வால்மிளகு.
கனகம்-பொன்.
கனகரசம்-அரிதாரம்.
கனகலம்-ஓர்தலம்.
கனகன்சங்கலிதம்-கனமாகிய வீரொண்ணின்பெருக்கம்.
கனகன்-இரணியன்.
கனகாசம்-கண்ணினோர்நோய்.
கனகாசலம்-மகாமேரு.
கனகாசனம்-பொன்னாசனம்.
கனகாபிஷேகம்-பொன்னபிஷேகம்.
கனகாமிரதம்-வெள்ளி.
கனகாரியம்-ஊமத்தை.
கனங்காய்-ஓர்மரம்.
கனசங்கலிதம்-சமமாகிய மூவெண்பெருக்கத்தைக்கூட்டியது.
கனசரம்-இரசம், நீர்.
கனசாரம்-கருப்பூரம்.
கனசாரி-மிகுதி.
கனட்டி } சிறுவயல்.
கனட்டு }
கனதண்டி-கனமுள்ளது.
கனதி-இறுமாப்பு, கனம், பாரம், பெருமை.
கனதிக்காரன்-பெருமைக்காரன்.
கனத்தநாள்-தாக்குக்கொண்டநாள்.
கனத்தல் - நெருங்கல், பாரங்கொள்ளுதல்.
கனத்தி-வைப்பரிதாரம்.
கனநயதேசியங்கள்-இராகபேதம்.
கனபலம் - அகலம் கனம் நீளம் மூன்றையும்பெருக்கிவருவது.
கனபுடம்-நூறுஎருப்புடம்.
கனப்பு-அழுத்தம், இறுமாப்பு, கொழுப்பு, தடிப்பு, பாரம், விறைப்பு.
கனப்புக்காட்டல்-கனத்தல்.
கனமழை } பெருமழை.
கனமாரி }
கனமூலம்-கனத்தொகையினின்று அதின் மூலமாகிய வொருகோணமறிதல்.
கனம் - அகலம், இசைவிகற்பம். இரசம், ஈயம், கூட்டம், கோவைக்கிழங்கு, சங்கை, சமமாகிய மூவெண்ணின்பெருக்கம், சீர்மை, செறிவு, நிறைவு, பருமை, பாரம், பெருமை, பொன், மிகுதி, மேகம், வட்டம், வன்மை.
கனம்பண்ணுதல்-சங்கித்தல்.
கனம்பாடுதல்-சுரம்பாடுதலினொன்று.
கனரசம்-நீர், மழை.
கனருசி-மின்னல்.
கனலி-கள்ளி, கொடுவேலி, சூரியன், நெருப்பு, பன்றி.
கனலுதல்-எரிதல், காய்தல், சூடுகொள்ளல்.
கனலொழுங்கு-தீத்திரள்.
கனல்-உட்டணம், கனலென்னேவல், நெருப்பு, பிரமை.
கனல்நிறக்கல்-செம்புக்கல்.
கனல்நிறம்-மாணிக்கம்.
கனல்பேதி-சாத்திரபேதி.
கனல்மரம்-சோதிமரம்.
கனவட்டம்-குதிரை, பாண்டியன் குதிரை.
கனவான்-கனிசவான்.
கனவிரதம்-நீர்.
கனவீனம் - பாரக்குறைவு, மகிமைக்குறைவு.

கனவு-கனா, நித்திரை, மயக்கம்.
கனவுநூல்-கனாவின்பலனறியுநூல்.
கனவுமூலி-மூங்கில்.
கனறல்-கடுப்பு, கனற்றுதல், சினக்குறிப்பு.
கனற்கூர்மை-வளையலுப்பு.
கனற்சி-சினம, வெப்பம்.
கனற்சிலை-மந்தாரச்சிலை.
கனற்பு-அடுப்பு.
கனற்றல், கனற்றுதல் } எரிதல், காயப் பண்ணல்.
கனனத்தம்பம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று.
கனனம் - கிண்டல், புதைத்தல், விழுதல்.
கனன்றல்-கனலுதல், சினக்குறிப்பு.
கனா-கனவு.
கனாகரம்-கார்காலம்.
கனாசிரயம்-ஆகாயம்.
கனி-கனியென்னேவல், தித்திப்பு, நிரசவஸ்துக்கள் பிறக்குமிடம், பழம், முதிர்ந்தபழம்.
கனிகரம்-அன்பு.
கனிகை-கனிதல்.
*கனிக்காய்-உதாயக்காய்.
கனிஷ்டம், கனிட்டம் } அழகு, கடைவிரல், சிறுமை.
கனிட்டர்-கீழ்மக்கள், பின்பிறந்தோர்.
கனிட்டன்-கீழ்மகன், பின்னோன்.
கனிட்டிகை-கடைவிரல்.
கனிட்டை - கடைவிரல், பின்பிறந்தாள்.
கனிதல்-இரங்கல், உருகல், கரைதல், கோபித்தல், சினக்குறிப்பு, நைதல், பழுத்தல், புதைத்தல், பெருங்கோபம், மனங்களித்தல்.
கனித்திரம்-மண்வெட்டி.
கனிந்தசொல்-இனியசொல்.
கனியாமணக்கு - ஒராமணக்கு, பப்பாமரம்.
கனிவு-அன்பு, இரங்குகை, முதிர்வு.
கனீயசம்-செம்பு.
கனுகுபினுகெனல் - மனங் கனிந்தின் புற்றிருத்தல்.
கனுக்கு-கனுக்கென்னேவல், சந்தத்தினசைப்பு.
கனுக்குதல்- குறைத்தல், சந்தத்திலசைத்தல், சிதைத்தல்.
கனுக்குப்பினுக்கு-அதிகபரிமளிப்பு, ஒலிக்குறிப்பு.
கனை - ஒலி, கனையென்னேவல், செறிவு, நிறைவு, நெருக்கம்.
கனைகதிர்ச்செல்வன்-சூரியன்.
கனைக்குதல்-ஆரவாரம், ஒலித்தல்.
கனைதல்-கூடுதல், நெருங்கல்.
கனைத்தல் - ஆரவாரித்தல், ஒலித்தல், குதிரை முதலிய வனுமானித்தல், கொக்கரித்தல், சிரித்தல்.
கனைப்பு-கனைத்தல்.
கனையிருள்-அதிகவிருள்.
கனைவரிவண்டு-ஓர்வண்டு.
கனைவு-நெருக்கம்.
கனோபலம்-ஆலாங்கட்டி.
கன்-கல், சிறுதராசுத்தட்டு, வெண்கலவேலை.
கன்பாயாநாடு-ஓரூர்.
கன்மகாண்டம்- ஓர் வைத்தியநூல், கன்ம நிவிர்த்திசொல்லுநூல்.
கன்மசண்டாளன்-பாதகன்.
கன்மசாதாக்கியம்-சிவசாதாக்கிய மைந்தினொன்று.
கன்மசாந்தி-கன்மநிவர்த்தி.
கன்மஷம், கன்மடம் } அழுக்கு, ஈயம், கறள், பாவம்.
கன்மடி-காய்மடி.
கன்மதம்-கல்மதம்.
கன்மதான்மியம் - சரீரத்தி லகங்காரங் கலத்தல்.
கன்மத்துரோகி-சண்டாளன்.
கன்மநிவர்த்தி-பாவப் பிராயச்சித்தம்.
கன்மபரிபாகம்-கன்மத்தொலைவு.
கன்மபூமி-கருமபூமி.
கன்மம்-இருவினை, செய்தொழில், தீவினை, பாவம்.
கன்மரோகம்-தீராநோய்.
கன்மலி-ஏலம்.
கன்மவலை- இலவுகீகமயக்கு.
கன்மவியாதி-தீராநோய்.
கன்மழை-கல்லாகவருஷிக்குமழை.
கன்மாதி-தென்புலத்தோர்கடன், நித்தியகன்மம்.
கன்மாதிகன்-கடன்செய்வோன்.

கன்மாந்திரம் - தீக்கடன் முதலியன, பாவம்.
கன்மி-கிரியைக்காரன், பாவி.
கன்முதிரை-ஓர்முதிரைமரம்.
கன்முரிசு-ஓர்மரம்.
கன்மேந்திரியம் - கிரியைக்குரிய பொறி, அவை உபத்தம், பாணி, பாதம், பாயுரு, வாக்கு.
கன்மொந்தன்-ஓர்வாழை.
*கன்றமராயம்-கன்றுகள்மேவியபிடித்திரள்.
கன்றல்-கடுப்பு, கன்றினது, கன்றுதல், சினக்குறிப்பு.
கன்றீனல்-கன்றுபோடல்.
கன்று-அற்பம், இளமரம், எருமை ஒட்டை கடமை கவரி காட்டா குதிரை பசு மரை மான் யானை யிவற்றின்குட்டி, கன்றெனேவல், கைவளை, மரக்கன்று.
கன்றுகாலி-மாடுகன்றுமுதலியன.
கன்றுகொல்லி-பசுநோயிலொன்று.
கன்றுதல்-இரங்கல், கன்றல், கோபித்தல், நைதல், பதனழிதல், விசனப்படல்.
கன்றுத்தாய்ச்சி-கன்றுண்டானபசு, குற்பசு.
கன்றுபடல்-சினைப்படல்.
கன்றுபுக்கான்-ஓர்பூடு.
கன்னகடூரம் - காதால் கோழ்க்கப்படாத கொடியது.
கன்னகண்டு-காதசுருணி.
கன்னகம்-கன்னக்கோல்.
கன்னகூதம்-குறும்பி.
கன்னக்காரன் - கள்வன், கன்னமிடுகிறவன்.
கன்னக்கிரந்தி - கன்னத்தில்வரும் ஓர்நோய்.
கன்னக்கோல்-சுவரகழ்கருவி.
கன்னங்கரியது-மிகக்கரியது.
கன்னங்கறேரெனல் - மிகு கறுப்பின் குறிப்பு.
கன்னசூலை-ஓர்நோய்.
கன்னடகவுளம் } ஓர்பண்.
கன்னடகௌளம் }
கன்னடம் - ஓர்கூத்து, ஓரிராகம், ஓர்பாடை, சாதிநான்கிலொன்று, தேயமைம்பத்தாறிலொன்று.
கன்னடியம்-ஓர்தேசம், ஓர்பாடை.
கன்னடியர்-ஓர்சாதியார்.
கன்னத்தட்டு-தராசுத்தட்டு.
கன்னபரம்பரை-கன்னபாரம்பரை.
கன்னபாகம்-காது.
கன்னபாரம்பரியம் } வாக்குமூலமாய் வழங்குவது.
கன்னபாரம்பரை }
கன்னபூஷணம்-காதணி.
கன்னபூரம் - அசோகு, காதணியிலொன்று, காது, நீலோற்பலம்.
கன்னப்பரிசை-கீழலகு.
கன்னப்பிளவை-ஓர்சிலந்தி.
கன்னப்புற்று-கன்னக்கிரந்தி.
கன்னப்பூ-ஓர்காதணி.
கன்னப்பொறி-காதினருகானபொறி, கேள்விமூலம்.
கன்னமதம்-யானைமதத்திலொன்று.
கன்னமலம்-குறும்பி.
கன்னமிடுதல்-களவெடுத்தல், சுவரகழ்தல்.
கன்னமீசை-கன்னத்தின்மீசை.
கன்னமூலம்-காதினடி, காது.
கன்னம்-அருகு, கதுப்பு, கன்னக்கோல், காது, கிரகமார்க்கவளவு, தராசு தராசுத்தட்டு, நரம்பு, பொற்கொல்லன், யானைச்செவி.
கன்னல் - கரகம், கரும்பு, சருக்கரை, நரம்பு, நாழிகை, நாழிகைவட்டில்.
கன்னவகம்-சிறுகீரை.
கன்னவேதம் }
கன்னவேதனம் } காதுகுத்தல்.
கன்னவேதை }
கன்னற்கட்டி-கற்கண்டு.
கன்னன் - அங்கராசன், இவன்சூரியனுக்கும் குந்திதேவிக்கும் பிறந்தவன், இடையெழுவள்ளலி லொருவன்.
கன்னா-ஓர்வாச்சியம்.
கன்னாடம்-ஓர்பாஷை, தேயமைம்பத்தாறிலொன்று.
கன்னாதம்-அன்னபேதி.
கன்னாபின்னவெனல்-உருத்தெரியாமற் சொல்லல், குற்றல்.
கன்னார்-ஓர்சாதி, ஓர்மருந்து.
கன்னாவதங்கம்-காதிற்பூ.
கன்னி-அத்தநாள், அழிவில்லாள், அழிவின்மை, இளமை, ஓரிராசி, ஓர்யாறு, கரந்தை, கற்புக்கெடாமை,

கற்றாழை, காக்கணஞ்செடி, காவிளை, குமரி, தவப்பெண், துர்க்கை, தெய்வப்பெண், பார்வதி, பெண்.
கண்ணிகம்-மணத்தக்காளி.
கன்னிகாசலம்-மேரு.
கன்னிகாதானம்-கன்னியை மணம்முடித்துக்கொடுத்தல்.
கன்னிகாபதி-மருமகன்.
கன்னிகாரம்-கோங்கு.
கன்னிகை-கலவியறியாதவள், குமரி, தாமரைக்கொட்டை, துர்க்கை, பூவரும்பு.
கன்னிக்கால்-கன்னிமூலையிற்கப்பு, முதல்நாட்டுந்தம்பம்.
கன்னிக்கிழங்கு-கிட்டிக்கிழங்கு.
கன்னிக்குட்டி-முதலீன்றகுட்டி.
கன்னிக்கோழி-முட்டையிடாதகோழி
கன்னித்திங்கள்-கன்னிமாதம்.
கன்னித்தீட்டு-இருதுத்தீட்டு.
கனித்துவம்-கன்னிப்பருவம்.
கன்னித்தேங்காய்-தென்னமரம் முதற்காய்த்தகாய்.
பன்னிநாகு-ஈனாதநாகு.
கன்னிப்பழி-கன்னிகையைக்கற் பழித்தபாவம்.
கன்னிமணி-ஆடு, மான் முதலியவற்றின்மறி.
கன்னிமாதம்-புரட்டாதிமாதம்.
கன்னிமார்-வாலைப்பெண்கள்.
கன்னிமுத்திரை-கன்னித்தன்மை.
கன்னிமை-கன்னிப்பருவம்.
கன்னியழிதல் - கன்னிமுத்திரை யழிதல்.
கன்னியாகரணம்-கன்னியை யபகரித்தல்.
கன்னியாகுமரி - இந்தியாவின் தென்கோடிமுனை, ஓர்யாறு.
கன்னியாக்கிரணம்-கலியாணம்.
கன்னியாஸ்திரி-கன்னிப்பெண்,குமரி.
கன்னியாதானம்-அறம் முப்பத்திரண்டினொன்று, அஃது கன்னியைத் திமுன்னர்க்கொடுப்பது.
கன்னியாதூசிகன் - கன்னித்துரோகி
கன்னியாதோஷம்-கன்னிகாபகீர்த்தி.
கன்னியாபுத்திரன்-கானீனன்.
கன்னியாப்பிரதானம் - கன்னிகா தானம்.
கன்னியாவேதி-மருமகன்.
கன்னியீற்று-தலையீற்று.
கன்னிறம்-இசங்கு.
கன்னீகம்-ஓர்சன்னிநோய்.
கன்னுவர்-கன்னார்.
கன்னுறுகம்-சிறுகீரை.
கன்னெஞ்சன்-வன்னெஞ்சன்.
கன்னெஞ்சி-அவுரி,வன்னெஞ்சி.
கன்னை-கட்சி, பக்கம்.
கன்னைக்கொறடு - இருகட்சிக்கு முதவிசெய்வோன்.
கன்னைக்கோல்-நெய்வார் கருவியினொன்று.
கன்னைமாறி-அங்கிடுதத்தி.

கா

கா-அசைச்சொல் (உ-ம்) வேளிவட்காண்டிகா, ஓரெழுத்து, காத்தல், காவடி, காவென்னேவல், சோலை, துலை, தோட்சுமை, பூந்தோட்டம், வருத்தம், வலி.
காகடுகம்-எள்.
காகக்கரிப்பான் - கருங் கரசலாங்கண்ணி.
காகங்கரைதல்-காகங்கூவல்.
காகசிஞ்சி / காகசிஞ்சீ / காகசிஞ்சை } குன்றிக்கொடி.
காகச்சிலை-கருமுகிற்சிலை.
காகச்சுக்கான்-கருமணற்சுக்கான்.
காகதாலியநியாயம் / காகதாலியம் } காகம்பனம்பழத்தின்மேல் உட்கார பழம்விழுதல், தற்செயல், பொருத்தம்.
காகதுண்டம்-அகில்.
காகதுண்டி - ஓர்செடி, ஓர்வகைப்பித்தளை.
காகதேரி-மணித்தக்காளி,
காகத்துரத்தி-ஆதொண்டை.
காகத்துவசத்தாள்-மூதேவி.
காகத்துவசம்-வடவைத்தீ.
காகநதி - காவிரிப்பூம்பட்டினம், காவேரி.
காகநாசி-பாற்சோற்றி.
காகநிமிளை - கருநிமிளை.
காகபட்சம்-சிறுகுடுமி, பக்கக்குடுமி.
காகபதம்-காலதசப் பிரமாணத்தொன்று,அஃது குரு இரண்டுகொண்டது

காகபலம்-எலுமிச்சமரம்.
காகபலி-காகத்துக்கிடுமுணவு.
காகபாஷாணம்-ஓர்மருந்து.
காகபீலி-குன்றிக்கொடி.
காகபுச்சம் }
காகபுட்டம் } குயில்.
காகப்புள்-அவிட்டநாள், காக்கை.
காகம்-அவிட்டம், காக்கை, கீரி, வட கீழ்த்திசைப்பாலன்குறி, வைப்புப் பாஷாணமுப்பத்திரண்டிலொன்று.
காகயவம்-பதர்.
காகரி-திப்பிலி.
காகருகம்-எட்செடி.
காகருகன்-வறியன்.
காகருடி-பன்றி.
காகலீரவம்-குயில்.
காகலூகம்-ஆந்தை.
காகலூகன்-பயந்தவன், வறியவன்.
காகவாகனன்-சனி.
காகளம்-எக்காளம், புள்ளோசை.
காகாங்கி-ஓர்வகைக்கோவைக்கொடி.
காகாபிசாசு - இரத்தமுண்ணும் வாவற் பறவை, ஓர்பேய்.
காகாரி-ஆந்தை.
காகாவிரிச்சி-காகாபிசாசு.
காகிதம்- கடுதாசி, திருமுகம்.
காகித்தம் }
காகித்திரம் } குரிஞ்சா.
காகு-இசையறுப்பு.
காகுதம்-கபோலம்.
காகுத்தன்-இராமன், ஓரரசன், பரஞ்சயன், விட்டுணு.
காகுராசி-புடோல்.
காகுளி-இசை, தவிசு, மந்தவிசை, மிடற்றெழுமோசை, மெத்தை.
காகூவெனல்-ஒலிக்குறிப்பு.
காகொடி-எட்டிமரம்.
காகோடகி-வாலுளுவை.
காகோடியர்-நாடகர்.
காகோதரம்-பாம்பு.
காகோலம்-அண்டங்காகம்.
காகோளி-அசோகமரம், கொடியரசு, தேட்கொடுக்கி.
காக்கட்டான்-காக்கணம்.
காக்கணங்கொவ்வை - காக்குறட்டை.
காக்கணம்-கருவிளை.
காக்கம் - காக்குரட்டைச்செடி, கோவை.
காக்கன்போக்கன்-நன்மார்க்கன்.
காக்சாட்சி-ஒருமச்சி.
காக்காய்-அவிட்டம், காகம்.
காக்காய்க்கொல்லி-ஓர்செடி, ஓர்விதை.
காக்காய்ச்சோளம்-ஓர்சோளம்.
காக்காய்ப்பாலை-ஓர்பாலை.
காக்காய்ப்பூ-ஓர்பூடு.
காக்காய்ப்பொன்-பொன்னிறப்பிசின், போலிப்பொன்.
காக்காய்மீன்-ஓர்மீன்.
காக்காய்மூக்கன் - மனுஷரிலோர்விதசாதி.
காக்காய்மூக்கி }
காக்காய்மூக்கு } கருமுகிற் பாஷாணம்.
காக்காய்வலி-ஓர்நோய்.
காக்காரர்-தோட்சுமைக்காரர்.
காக்காவெனல்-ஒலிக்குறிப்பு.
காக்குத்துவான்-ஓர்புள்.
காக்குரட்டை }
காக்குறேட்டை } காக்கொரட்டை.
காக்கை-அவிட்டநாள், காகம், காக்குதல், பஞ்சபட்சியிலொன்று.
காக்கைக்கொடியாள்-மூதேவி.
காக்கைபாடினியம் - ஓரியாப்பிலக்கணம்.
காக்கைமுகர்-ஓர்வகைமானிடர்.
காக்கைவலி-ஓர்நோய்.
காக்கைவேர்-சாக்கணவேர்.
காக்கைவேலி-உத்தாமணி.
காக்கொரட்டை-கருங்காக்கணம்.
காங்கவீகம்-இலைவிளையும் நிலம்.
காங்கிசை }
காங்கிஷை } விருப்பம்.
காங்கு - ஓர் நீலப்புடவை, பெரும் பானை.
காங்கேசன்-காங்கேயன்.
காங்கேயம்-பொன்.
காங்கேயன்-குமரன், வீட்டுமாசாரி.
காங்கேருகி-ஓர்மரம்.
காங்கை-வெப்பம்.
காங்கையன்-வைப்புநவப்பாஷாணம்.
*காங்கைஷ-ஆசை.
காசசுவாசம்-ஓர்நோய்.
காசமர்த்தகம்-பெரும்புல்.

காசம்-ஈளைநோய், கண்வியாதி, கற்பாஷாணம், கோழை, சிலேட்டுமம், தேயமைம்பத்தாறினென்று,பொன்
காசறை - கத்தூரிமிருகம், மணி, மயிர்ச்சாந்து.
காசனம்-கொலை.
காசனன்-கொலைசெய்வோன்.
சாசா - எருமை, காயாசெடி, நாணல்.
காசாண்டி-ஓர்வகைச்செம்பு.
கசாம்பாரை-ஓர்மீன்.
ஹாம்பூமேனியன்-விட்டுணு.
காம்பூவண்ணன்-கச்சாலம், காய்ச்
காசபாஷாணம், துரிசி,விட்டுணு.
காசாவில்லை-சந்தனக்கூட்டு.
சற்ப்பட்டணம், சிரகம்.
காசாண்டம்-ஓர்புத்தகம்.
காசி-ல்-காகச்சிலை.
காசிகருட்டி-ஓர்புள்.
காசிக்குப்பி-ஓர்வகைமெல்லியகுப்பி.
காசிக்சாரம்-ஒருப்பு.
காசித்தும்பை-ஓர்தும்பை.
காசிபப்பிரமா-காசிபன்.
காசிபம்-தருமநூல் - பதினெட்டினொன்று.
காசிபன்-ஓரிருடி, இவர் மரீசி மகாரிஷியின்பிள்ளை, அதிதி என்பவளால் தேவர்களுக்கும் திதி என்பவளால் அசுரர்களுக்கும் தந்தை.
காசிமீரம் - தேயமைம்பத்தாறினொன்று.
காசிரம்-வட்டம்.
காசிரோர்த்தம் - ஆடுதின்னாப்பாளை,வறட்சுண்டி.
காசிலவணம்-காசிச்சாரம்.
காசிலிங்கம்-ஓர்சிவலிங்கம்.
காசிவாசநி-குறும்பூசினி.
காசிவாசி-காசிநகரத்தான்.
காசினி-பூமி.
காசு - காசுக்கட்டி, குற்றம், கோழை, நாணயம், பொன், மணிப்பொது, மாதரணிவடம், வெண்பா விறுதிச்சீருளொன்று.
காசுகட்டுதல்-ஓர்விளையாட்டு.
காசுக்கடை-பொன்விற்கிறகடை.
காசுக்கட்டி-ஓர்மருந்து.
காசுக்காரன்-பணக்காரன்.
காசுமண்-ஓர்மண்.

காஜலவம்-வளையலுப்பு.
காசை-கயரோகம், காயா, நாணற்புல்.
காச்சக்கீரை-காச்சுரை.
காச்சல்-சுவரம்.
காச்சாக்கு-காச்சுரை.
காச்சிரக்கு-காச்சுரை.
காச்சுப்பு-கவட்டுப்பு.
காச்சுரை-புளிச்சக்கீரை.
காஸ்மீரம் - குங்குமப்பூ, தேயமைம்பத்தாறினொன்று.
காஞா-காயா.
காஞ்சம்-நீலாஞ்சனக்கல்.
காஞ்சனத்தூள்--பொன்மணல்.
காஞ்சனம்-புன்கமரம், பொன்.
காஞ்சனி-மஞ்சள்.
காஞ்சா-கஞ்சா.
காஞ்சான்கட்டுதல், காஞ்சான்பற்றுதல் } செற்றலாதல்.
காஞ்சி-எண்கோவைமணி, ஓர் பண், ஓர்மரம், காஞ்சிவரம், நாத்தாங்கி, நிலையின்மை.
காஞ்சிகா-எட்டிமரம்.
காஞ்சிமாலை - ஓர்பிரபந்தம்,படைமுனைதிருன்றுஞ் சேவகர்க்குமாலை.
காஞ்சியம்-வெண்கலம்.
காஞ்சிரம், காஞ்சிரை } எட்டிமரம்.
காஞ்சினி-மஞ்சிட்டி.
காஞ்சுகம், காஞ்சுகி } சட்டை.
காஞ்சொறி, காஞ்சோன்றி } ஓர்செடி.
காஷாயம் - ஓர்மருந்து, காவி, கூழ்,பலமருந்தொன்றாயூறியது.
காஷாயப்புடைவை-காவிப்புடைவை.
காடகம்-சீலை.
காடவிளக்கு-ஓர்வகைவிளக்கு.
காடன்-ஓர்மீன்.
காடாக்கினி-பெருந்தீ.
காடாந்தகாரம்-பேரிருள்.
காடாரம்பற்று-காட்டுப்புறம்.
காடாற்று-ஈமக்கிரியையினொன்று.
காடாற்றுதல் - பிரேதத்தின்தீயைத்தணித்தல்.
காடி-ஊறுகாய், ஓர்மருந்து, ஓர்வகைவண்டி, கஞ்சி, கள், தோண்டுகோல், நெய், புளித்தநீர், மூளை.

காடிகம்-சீலை.
காடிக்காரம்-ஆயக்கல், நெருப்புக்கல்
காடினியம் } அதிககடினம்.
காடின்னியம் }
காடு-ஆரணியம், இடம், ஊர், எல்லை, ஓர்விகுதி (உ-ம்) நோக்காடு, சுடுகாடு, செத்தை, நெருக்கம், பரணிநாள், மிகுதி, வனம்.
காடுகலைத்தல்-வேட்டைக்காரர் மிருகங்களைக்கலைத்தல்.
காடுகாட்டுதல்-கொல்லல், வெறிதாய் விடுதல்.
காடுகாள்-வடுகன்ருய்.
காடுபடுதிரவியம்-காட்டிலுண்டாகுந்திரவியம், அஃது அரக்கு, சருந்தினை, தேன், நாவி, மயிற்பீலி.
காடுபலியூட்டுதல்-காட்டில்வாழுந் தேவர்களுக்குப் பலியிடல், குறவர், வேடர் செய்யுமோராராதனை.
காடுபிருண்டி-காடுவாரி.
காடுமேய்த்தல்-வீணாய்த்திரிதல்.
காடுவசாதி-காடுவாழ்சாதி.
காடுவாரி-ஓராயுதம், காடுபிராண்டி, சேர்ப்பவன்.
காடுவாழ்சாதி-சரீரத்தைப் பேணுது திரிவோர்.
காடுவாழ்த்து-வனதேவதைகளை வாழ்த்தல், வனதேவதைகளை வாழ்த்திச் சொல்லுமோர் பிரபந்தம்.
காடுவெட்டி - சிறுமண்வெட்டி, மரம் வெட்டுகிறவன், முரடன், மூடன்.
காடேறி-ஓர்பிசாசம்.
காடை-ஓர்புள்.
காடைக்கழுத்தன்-ஓர்நெல்.
காடைக்கண்ணி-ஓர்தினை.
காடைப்புடம்-மூவெருப்புடம்.
காட்சம்-சோழங்கபாஷாணம்.
காட்சி - அறிவு, அற்புதம், ஓரளவை, தரிசனம், தோற்றம், பத்தவத்தையினென்று அது தலைமகளைத் தலைமகன் தனியிடங்காண்டல், பார்வை, பிரத்தியட்சப் பிரமாணம், வேடிக்கை. [ல்.
காட்சிகொடுத்தல்-தரிசனங் கொடுத்த
காட்சிப்பொருள்-உருவப்பொருள், காணப்படுபொருள்.

காட்சியணி-ஓரலங்காரம், அஃது உபமானோபமேயங்களின் காட்சியை ஆரோபித்தல்.
காட்சியர் }
காட்சியவர் } அறிஞர்.
காட்சியார் }
காட்டகத்தி-வீழி.
காட்டணம்-பெருங்குமிழ்.
காட்டத்தி-பேயத்தி.
காஷ்டம்-விறகு, வெண்கலம்.
காட்டம்-அடித்தட்டை, விறகு, வெண்கலம்.
காட்டல்-காண்பித்தல்.
காட்டவரை-ஓரவரை.
காட்டழல்-காட்டக்கினி.
காட்டாள்-நாகரீகமில்லாதவன்.
*கிருதகிருமி-நெய்யாலுண்டாகும்புழு.

கிருதகுளபாளிதபோசனம் - திருத்திபோசனம், நெய் சருக்கரை முதலியகூடிய இனியபோசனம்.
கிருதசங்கேதம்-இணக்கம்.
கிருதசன்னிதானம்-முன்னிலை.
கிருதசாபத்திரிகை-கணவன் மறுவிவாகஞ்செய்தபின்னும் அவனோடு வாழும்மனைவி.
கிருதசூடன் - உச்சிச்சிகைவைக்கப்பட்டவன்.
கிருதசோபம் - அலங்காரம், பிரகாசம்.
கிருதசௌசம்-சுத்தம்செய்தல்.
கிருததாசன்-வேலையாள்.
கிருததாரன்-விவாகஞ்செய்தோன்.
கிருதநாசனம்-நன்றியீனம்.
கிருதநிருசேனன் - பாவநிவர்த்திசெய்தோன்.
கிருதபலம்-செய்பலம்.
*கிருதபுத்திகள்-ஞானிகள்.
கிருதம் - செம்முருங்கை, செய்கை செய்யப்பட்டது, நெய், முதல்யுகம் முன்.
கிருகரன்-முகத்திடைநின்று தும்மலுஞ்சினமும் வெம்மையும் விளக்கும் வாயு.
கிருதலட்சணம்-நல்லிலக்கணம்.
கிருதவேசம்-அலங்கரித்தல்.
கிருதவேதனன்-கூலியாள்.
கிருதன்-கிருட்டிணன்மாமன், பிலுக்கன்
கிருதாகிருதம்-செய்தகுறைவேலை.
கிருதாஞ்சலி-கைகூப்பல்.
கிருதாந்தசனகன்-சூரியன்
கிருதாந்தம்-இலிகி, தருக்கித்துமுடித்த தீர்மானம்.
கிருதாந்தன்-நமன்.
கிருதார்த்தம்-காரியசித்தி, பேறு.
கிருதார்த்தர்-கருமமுடித்தோர், பேறுபெற்றோர், மகிழ்ச்சிபெற்றோர், விருத்திபடைந்தோர்.
கிருதி-உபாதி, செய்கை, நடுக்கம்.
கிருதிகரன்-இராவணன், வேதனைசெய்வோன்.
கிருது - குசால், கோமளம், செருக்கு, நெய், யாகம்.
கிருதோபகாரம்-உதவிசெய்தல்.
கிருதோபநயனன்-பூணூற்றரித்தோன்.
கிருத்தி-அறிவு, ஓர்தேவதை, கிருத்திகை, தோல், மான்றோல்.
கிருத்திகாசுதன் / கிருத்திகாசூனு } முருகன்.
கிருத்திகை-கார்த்திகை.
கிருத்திமம்-கடமை, செய்கை, தோல், பூதகணம், பொய், மாயை, வஞ்சனை, வைதீகநடை.
கிருத்தியகருத்தா-கருமாதிபன்.
கிருத்தியப்பிழை-செய்கைப்பிழை.
கிருத்தியம் - கடமை, கிரியைமுறை, சடங்கு, தொழில், நடக்கை, நித்தியகருமம், பிதிர்கடன்.
கிருத்தியை-ஓர்தேவதை.
கிருத்திரமம் / கிருத்திரிமம் } பொய், வஞ்சனை.
கிருத்திரிமபுத்திரன்-வளர்ப்புப்பிள்ளை.
கிருத்திவாசன்-சிவன்.
கிருத்துவம்-அசாத்தியம், குரூரம், செய்தல், செருக்கு.
கிருபணத்துவம்-உலோபத்துவம்.
கிருபணம்-உலோபம்.
கிருபணன்-உலோபன்.
கிருபன் - ஓர்வில்லாசிரியன், குருகுலத்தவரின் பஞ்சாசாரிகளிலொருவன்.
கிருபாகடாட்சம்-கிருபைப்பார்வை.
கிருபாகணம்-வாள்.
கிருபாகரன் கிருபையுடையோன்.
கிருபாசனம் - அருள்செய்யும்படியிருக்குமாசனம்.
கிருபாசாரியன்-கிருபன்.
கிருபாணம்-கிருபாகணம்.
கிருபாணிகை-கத்தி.
கிருபாமூர்த்தி-கடவுள், கிருபாரூபி, கிருபையாலவதரித்தோன்.
கிருபாலு / கிருபாளு } கிருபையுடையோன்.
கிருபி-துரோணன்மனைவி.
கிருபிபுத்திரன்-அசுவத்தாமன்.
கிருபீடபாலம்-கடல்.
கிருபீடயோனி-தீ.
கிருபை-அருள், இரக்கம்.
கிருபைகூர்தல் - கருணைகொண்டிருத்தல்.
கிருபைக்கண்-அருட்பார்வை.
கிருமி-அரிபுண், புழு.
கிருமி ஓமம்-ஓர்மருந்து.
கிருமிக்கிரந்தி-ஓர்நோய்.
கிருமிக்குன்றம்-வாலுளுவை.
கிருமிசத்து-ஓர்மருந்து.

கிருமிசத்துரு-புரசம்விரை.
கிருமிசுத்தி-மட்டி.
கிருமிச்சுரம்-ஓர்சுரம்.
கிருமிச்சூலை-கிருமிநோய்.
கிருமிச்சைலம்-கறையான்புற்று.
கிருமிநாசம்-ஓமம், குராசானியோமம், பங்கம்பாலை - பலாசம்விரை, பேய்ப்பீர்க்கு, வேப்பீர்க்கு.
கிருமிநாசி-நிலவாகை.
கிருமியரி-வாய்விளங்கம்.
கிரேதம், கிரேதாயுகம், கிரேதை - முதல்யுகம், அது பதினேழுலக்ஷத்திருபத்தெண்ணாயிரம்வருஷம் கொண்டது.
கிரேஸ்தன், கிரேத்தன் - கிரகஸ்தன், சங்கைமான், நாணயவான்.
கிரேந்தி-கச்சோலம்.
கிரேனிடல்-அஞ்சியொடுங்கல்.
கிரேனிடுதல்-அஞ்சுதல்.
கிரேன்கிரேனெனல்-அச்சக்குறிப்பு.
கிலம்-அழிவு, சிறுமை.
கிலி-பயம்.
கிலிகம்பரை-அலுசிலும்பல், கலாதி.
கிலிகோலம்-சீர்கேடு.
கிலிமண்டல்-அஞ்சுதல்.
கிலியம்பறை-கிலிகோலம்.
கிலீபம்-பேடு.
கிலீபலிங்கம்-அலிக்குறி.
கிலீபன்-பேடி.
கிலுகிலுத்தல், கிலுகிலுப்பு - ஒலிக்குறிப்பு.
கிலுகிலுப்பை-ஓர்செடி, ஓர்விளையாட்டுக்கருவி.
கிலுகிலெனல்-ஒலிக்குறிப்பு, குரங்குபண்ணுமொலி.
கிலுக்குதல்-கிலுங்கச்செய்தல்.
கிலுங்கி-கிலுகிலுப்பை.
கிலுங்குதல்-கிலுகிலுத்தல்.
கிலுசிதம்-வறுமை.
கிலுட்டம்-நிறைதல்.
கிலுத்தம்-மணிக்கட்டு.
கிலுமொலுத்தல், கிலுமொலெனல் - ஒலிக்குறிப்பு.
கிலேசம்-அச்சம், கவலை, துன்பம், நோ, வருத்தம்.
கிலேசு-கீழ்.
கிலேசித்தல்-விசாரப்படல்.
கில்லம்-கழுத்து.
கிழக்கதை - பழங்கதை, பூராயக்கதை வீண்கதை.
கிழக்கன், கிழக்கா, கிழக்கி - கிழங்கான்.
கிழக்கு-கீழ், கீழ்த்திசை.
கிழக்குவெளித்தல் - கீழ்த்திசைவெளிதுவிடுதல்.
கிழக்கோலம்-கிழவடிவு.
கிழங்கன், கிழங்கான் - ஓர்மீன்.
கிழங்கு-கந்தம்.
கிழங்குக்கொடி - ஓர்வகைப் பயிர்க்கொடி.
கிழடன்-கிழவன்.
கிழடு-முதிர்வயதுள்ளது.
கிழண்டுதல்-வயதாற்றளர்தல்.
கிழத்தனம்-கிழத்தன்மை.
கிழத்தி - உரியவள், தலைவி, மருதத்தலைவி, மனைவி.
கிழத்து-ஓர்மீன்.
கிழமை-உரிமை, கடமை, குணம், சம்பந்தம், மாட்சிமை, மூப்பு, வாரம்.
கிழமைவட்டம்-ஏழுவாரம்.
கிழமைவிரதம்-வாரவிரதம்.
கிழம்-கிழத்தன்மை.
கிழலை-சுற்றுப்புறம், திசை, மரக்கலத்தின் சாய்வுபக்கம்.
கிழவர்-உரியோர், மூப்புடையோர்.
கிழவன்-உரியோன், கணவன், தலைவன், பரணிநாள், மருதநிலத்தலைவன் மூப்புடையோன்.
கிழவி - உரியவள், தலைவி, தாய்க்கிழங்கு, முருங்கை, மூப்புடையாள்.
கிழவு-கிழவுத்தன்மை.
கிழாத்தி-ஓர்புள், ஓர்மீன்.
கிழாநெல்லி-ஓர்பூடு.
கிழார் - இறைகூடை, சலகுத்திரம், தோட்டம்.
கிழாலை-களர்நிலம்.
கிழான் - உரியோன், கைக்கிளையிசையின்சுவையுடைமை, சூரியன், தயிர்.
கிழி - எழுதுபடம், கிழிந்ததுண்டு, கிழியென்னேவல், கீறுடை, கீற்று, நிதிப்பொதி, பொட்டணி.
கிழிகடை-அறவிளப்பமானது.

கிழிக்கட்டு-கிதிப்பொதி, பொட்டணி.
கிழிதல்-பிளத்தல், பீறுதல், வீணுதல்.
கிழித்தல்-கிழிக்குதல், கீறல்.
கிழிப்பு-கிழிக்கை, பிளவு, வெடிப்பு.
கிழிமுறி-கிழித்த துண்டுச்சீலை, செல்லாச்சீட்டு.
கிழியல் - அறவிளப்பமானது, கிழிந்த சீலை, கிழிவு, பயனற்றவன்.
கழிவு - காரியக்கேடு, கிழிதல், கீற்று வாய்க்காமை.
கிளக்கல்-சொல்லல்.
கிளத்தல்-எழுப்பல், சொல்லுதல்.
கிளத்தி-நாமகள்.
கிளத்து-சொல்.
கிளப்பம்-எழுப்பம், வளர்ச்சி.
கிளப்பல்-உயர்த்தல், எழுப்பல், கிண்டுதல், மிதத்தல், முயற்றல்.
கிளப்பு-கிளப்பென்னேவல், கிளம்பச்செய்தல், சொல், மொழிகை.
கிளம்பல்-அதிகரித்தல், எழும்பல், வளர்தல்.
கிளருதல்-கிளர்தல்.
கிளர் - ஒளி, கிளரொன்னேவல், பூந்தாது.
கிளர்ச்சி-இறுமாப்பு, எழுச்சி, நிறைவு மேலோங்குகை, விருத்தி.
கிளர்தல்-உயர்தல், எழுதல், கிண்டல், நிறைதல், பிரகாசித்தல், வளர்தல்.
கிளர்த்தல்-எழுப்பல், ஒளிசெய்தல்.
கிளர்வு-எழுச்சி, பெருக்கம், வளர்ச்சி.
கிளவரி-தண்ணீர்விட்டான்கிழங்கு.
கிளவி-அகப்பொருட்டுறை, சொல்.
கிளறுதல்-கலத்தல், கிண்டுதல், கிளப்புதல், வெளியாக்கல்.
கிளா-களா, கிளாய், கோது.
கிளாலை-களாலை.
கிளி-ஓர்மீன், கிள்ளை.
கிளிகடிகருவி } ஓர்கருவி.
கிளிகடிகோல் }
கிளிச்சிறை - நால்வகைப் பொன்னினொன்று.
கிளிஞ்சிலாறு-கிளியாறு.
கிளிஞ்சில்-எரல்.
கிளித்தட்டு-ஓர்விளையாட்டு.
கிளிப்பிள்ளை-கிளி.
கிளிப்பூச்சி-வெட்டுக்கிளி.
கிளிமீன்-ஓர்மீன்.
கிளிமூக்கன்-கற்முழை.
கிளிமூக்குக்கிழங்கு - ஆகாசகருடன்கிழங்கு.
கிளிமூக்கெழுத்தாணி-ஓர்வகை யெழுத்தாணி.
கிளியாறு-புதுச்சேரிக்குத் தெற்கிலுள்ள ஓர்நதி.
கிளிவெட்டுப்பாக்கு - இடையிடையே தோலுரித்தபாக்கு.
கிளுகிளுத்தல்-ஒலிக்குறிப்பு.
கிளுகிளெனல்-ஒலிக்குறிப்பு.
கிளுவை-ஓர்பறவை, ஓர்மரம், ஓர்மீன்.
கிளை-உறவு, ஒளி, ஓர்பண், கிளையென்னேவல், கூட்டம், கைக்கிளையெனுமிசை, தளிர், மந்தை, மரக்கிளை மூங்கில், வீணையினோர்நரம்பு.
கிளைகூட்டல் - ஆந்தைகள் கூச்சலிடுதல்.
கிளைக்கதை - ஒன்றிலிருந்து பலகதை தோன்றுங்கதை.
கிளைஞர்-உறவோர், தோழர், மருதநில மாக்கள்.
கிளைதல்-கழுவல், களைதல், தெரித்தல்.
கிளைத்தல்-கிண்டல், கிளைவைத்தல், நிறைதல், நெருங்கல், பெருகல்.
கிளைப்பெயர்-சுற்றப்பெயர்.
கிளைமை-உறவு, சிநேகம்.
கிளையார்-சிநேகர்,
கிளைவழி-கொடிவழி, வமிசம்.
கிளைவிடுதல் } கப்புவைத்தல்.
கிளைவைத்தல் }
கிள்ளல்-கிள்ளுதல்.
கிள்ளாக்கு } உண்டியர்சீட்டு.
கிள்ளாங்கை }
கிள்ளாப்பிறாண்டு - அலட்சியம், ஓர்விளையாட்டு, கிள்ளையெடுத்தல்.
கிள்ளி-சோழவம்சத்தார், சோழன்.
கிள்ளிக்காட்டுதல் - அருட்டி அறிவித்தல்.
கிள்ளு-கிள்ளப்பட்டதுண்டு, துணிக்கை
கிள்ளுக்கீரையாயெண்ணல் - அற்பமாயெண்ணல்.
கிள்ளுதல்-நுள்ளுதல்.
கிள்ளுப்பிறாண்டு - ஓர்விளையாட்டு.
கிள்ளை - கருங்கிளி, கிளி, குதிரை, பத்திரிசாதி.
கிள்ளைவிடுதூது-ஓர்பிரபந்தம்.
கிராக்கி-அருமை, ஒறுப்பு.

கிராணி-ஓர்வியாதி.
கிருப்பிராண்டு-ஓர்விளையாட்டு.
கிரும்புதல்-மெல்லச்செதுக்கல்.
கிருய்-பச்சைநிறக்களிமண்.
கிருவுதல்-ஒலிக்குறிப்பு.
கிறி-பொய், வழி.
கிறிசு-குற்றுவாள்.
கிறிச்சான்-ஒலிகாட்டுமோர்கருவி.
கிறிச்சிடுதல்-ஒலிக்குறிப்பு.
கிறீச்சனம்-ஓர்நோய்.
கிறீச்சுக்கிறீச்செனல்-ஒலிக்குறிப்பு.
கிறீஸ்துவம்-கிறிஸ்துமார்க்கம்.
கிறு-நிகழ்காலவிடைநிலைச்சொல்.
கிறுகிறுத்தல்-அஞ்சுதல், தலைசுழற்றுதல், விரைவுக்குறிப்பு.
கிறுகிறுப்பு-செருக்கு, தலைச்சுழற்சி.
கிறுகிறெனல-சுழலல், விரைவுக்குறிப்பு.
கிறுக்கல்-எழுதல், கீறித்தள்ளல்.
கிறுக்கன்-காவி, பைத்தியக்காரன்.
கிறுக்கு-அகம்பிரமம், எழுத்து, பைத்தியம்.
கிறுக்குதல்-கிறுக்கல்.
கிறுக்குப்பிடித்தல்-பைத்தியமாதல்.
கிறுங்குதல்-அசைதல்.
கிறுசன்-குங்குமப்பூ, மஞ்சள்.
கிறுது-கிருது.
கிறுதுவேதன்-பீர்க்கு.
கிறுத்துவம்-அகில், கிருத்துவம்.
கிற்பு - அடிமைத்தனம், கட்டுப்பாடு, செய்கை.
கிற்புறல் } எழுதுதல், எழும்புதல்,
கிற்புறுதல் } கட்டுப்படுதல்
கிற்றல்-கட்டுப்படுத்தல், செய்தல்.
கினி-பீடை.
கினிபிடித்தல்-நோய்பிடித்தல்.
கினை-கவசம், விளா,
கின்று-நிகழ்காலவிடைநிலைச்சொல்.
கின்னம்-உபத்திரவம், கீழ்மை, துக்கம்
கின்னரச்சுரை-ஓர்சுரை.
கின்னரம்-ஆந்தை, கின்னரப்பட்சி, நீர்வாழ்பறவை, வீணை.
கின்னரர்-பதினெண்கணத்தொன்று.
கின்னரர்பிரான்-குபேரன்.
கின்னரி-ஆந்தை, வீணை.
கின்னரேசன்-குபேரன்.
கின்னி-மழைக்கிளி.
கின்னிக்கோழி-ஓர்கோழி.

கீ

கீ-ஓரெழுத்து, கிளிக்குரல்.
கீகசம்-எலும்பு, மிகச்சிறியபுழுச்சாதி.
கீக்கீயெனல் - கிளிகுரல்காட்டல், பறவைப்பார்ப்பின்குரல்.
கீசகசித்து-வீமன்.
கீசகம் - குரங்கு, தலைச்சீரா, மூங்கில்.
கீசகன்-ஓரரசன்.
கீசகாராதி-வீமன்.
கீசகாரி-வீமன்.
கீசபர்ணம் } நாயுருவி.
கீசபர்ணி }
கீசம்- - குரங்கு, குருவி, திசையெட்டுக்குட்பட்ட பிரதேசம், நிருவாணம்
கீசம்பறை-ஒழுங்கீனம்.
கீசரன்-சரக்கொன்றை.
கீசவல்லி-கீசபர்ணம்.
கீசறை } கிரியைகேடு.
கீசறைநாடகம் }
கீசன்-சூரியன், போர்வல்லோன்.
கீசா-பொய்.
கீச்சான்-ஓர்புள், ஓர்மீன், ஓர்விளையாட்டு, குழந்தை.
கீச்சி-சிறுமணிக்கோவை, பாசிமணி.
கீச்சிடுதல்-கத்துதல்.
கீச்சு-கீச்சழுகை. புள்ளொலி.
கீச்சுக்கிட்டம்-இருப்புக்கறள்.
கீச்சுக்கீச்சுத்தம்பலம்-ஓர்விளையாட்டு.
கீச்சுக்கீச்செனல்-ஒலிக்குறிப்பு.
கீச்சுக்குரல் - குருவிக்குரல்போன்ற குரல், மெல்லியகுரல்.
கீச்சுத்தாரா-ஓர்வகைத்தாரா.
கீடக்கினம்-கெந்தகம்.
கீடப்பகை-வாய்விளங்கம்.
கீடமணி-மின்மினிப்பூச்சி.
கீடமாரி-சிறுபுள்ளடிப் பூடு.
கீடம்-கோற்புழு, புழு, வண்டு.
கீடராஜம்-குலாலகீடகம்.
கீணம் } குறைபாடு, கேடு, சிதைவு.
க்ஷீணம் }
கீணர் } அற்பர், எளியர், கீழோர், வறியர்.
க்ஷீணர் }
கீண்டல்-கிண்டுதல், கிழித்தல், கிளைத்தல்.
கீதசாத்திரம்-சங்கீதசாத்திரம்.
கீதம்-இசை, இசைப்பாட்டு, மூங்கில். மூன்றும்வேதம், வண்டு.

கீதவம்-ஊமத்தை.
கீதவாத்தியம்-இசைக்கருவி.
கீதவேதம்-சாமவேதம்.
கீதாரி-இடையன்.
கீதி-கருங்காலி, கீதம், கீதம்பாடுவோன்.
கீதை-பாட்டு, பூருவசரித்திரமெடுத்துக்காட்டல் இஃது அவதூத கீதை, இரிபுகீதை, உத்தரகீதை, சிவகீதை பகவற்கீதை, பிரமகீதை யென்னப்படும்.
கீயாக்கணக்கு - வடமொழியின் கூட்டெழுத்துக்கள்.
கீரணம்-விழுங்கல்.
*கீரந்தையார் - இடைச்சங்கப்புலவருளொருவர்.
கீரம்-கருங்கிளி, கிளி, பால்.
கீரன் - மதுரைச்சங்கப்புலவரிலொருவனுன நக்கீரன்.
கீரி-கள்ளி, நகுலம்.
கீரிப்பல்-சிறுகூர்ப்பல்.
கீரிப்பாம்பு - ஓர்பாம்பு, வயிற்றிலுள்ள ஓர்வகைப்புழு.
கீரிப்பிள்ளை-கீரி.
கீரிப்பூச்சி-கீரிப்பாம்பு.
கீரிப்பூடு-ஓர்பூடு.
கீரிமரம்-ஓர்மரம்.
கீரியுள்ளல்-ஒருள்ளல்.
கீரை-இலைக்கறிப்பொது.
கீரைக்காய்-ஓர் வெள்ளரிக்காய்.
கீரைக்குத்தண்ணீரிறைத்தல் - குழந்தைகளின் கால் கைகளை சேர்த்துப் பிடித்துத் தொங்கவிட்டு ஊசலாட்டும் ஓர்விளையாட்டு.
கீரைநார்ப்பட்டு-ஓர்பட்டுச்சீலை.
கீரைப்பாம்பு, கீரைப்பூச்சி } வயிற்றிலுண்டாகிற பூச்சி.
கீரோதகம்-கீரநீரம்.
கீரோமாரோ-ஒலிக்குறிப்பு.
கீர்-ஒலிக்குறிப்பு, வார்த்தை.
கீர்க்கிரெனல் - உபயவொலிக்குறிப்பு.
கீர்த்தனம், கீர்த்தனை, கீர்த்தி } துதி, புகழ்.
கீர்த்தித்தல்-புகழ்தல்.
கீர்த்திப்பிரதாபம் - கீர்த்திப்பிரபலியம், மிகுகீர்த்தி.
கீர்த்திமான்-புகழுடையோன்.
கீர்வாணம்-சமஸ்கிருத பாஷையினோர் பகுதி.
கீலக-நாற்பத்தெட்டாவது வருடம்.
கீலகம்-அணுப்பு, ஆணி, தந்திரம், பொருத்து.
கீலகவெட்டை - கீலகவருஷத்து பஞ்சம், மிகுகாங்கை.
கீலகை-கீழ்.
கீலம்-ஆணி, கிழிவு, கீல், கீற்று, சுவாலை, பிசின், பொல்லம், வெட்டு.
கீலாலபன்-அரக்கன்.
கீலாலம்-உதிரம், காடி, நீர்.
கீலுதல்-கிண்டுதல், கிழித்தல், பிளத்தல்.
கீல்-கதவின்கீல், கிசில், கீலென்னேவல், சந்து, நுண்மை, பிணையல், பொருத்து.
கீழண்டை-கிழக்குப்புறம்.
கீழறுத்தல் - சத்துருவுக்கஞ்சிக்கீழறையாற்போதல், சுரங்கமறுத்தல்.
கீழறை-கீழ்வீடு, முறுக்கு.
கீழாதல்- தளர்தல், தாழ்வடைதல்.
கீழாநெல்லி-கீழ்க்காய்நெல்லி.
கீழாறு-கீழுற்று.
கீழாறெடுத்தல்-தோன்றுமறக்கிளைதல்.
கீழுடை - கௌபீனத்தோடிசைந்த ஒருடை.
கீழுதடு-கீழதரம்.
கீழுலகம், கீழுலகு } நரகம், பாதலம்.
கீழேபோதல் - வளர்ச்சிபடிப்புமுதலியன வரவரக்குறைதல்.
கீழைத்திசை-கீழ்த்திசை.
கீழைப்புறம்-கிழக்குப்புறம்.
கீழோங்கி-கறையானிலோர்வகை.
கீழோர்-கீழ்மக்கள், சண்டாளர்.
கீழ்-ஆதி, இடம், ஈனம், ஏழனுருபு, கடிவாளம், கீளென்னேவல், கிழக்கு, கீழிடம், கீழோர், பள்ளம், பூமி, மறதி.
கீழ்காய்நெல்லி-ஓர்பூடு.
கீழ்காற்று-கொண்டல்.
கீழ்கை - ஈனகுலத்தார்பகுதி, கிழக்குப்புறம், பதிவு.
கீழ்க்கணக்கு-கீழ்வாயெண்.
கீழ்க்கண்-கண்ணின்கீழ்ப்பக்கம், கீழ்ப்பார்வை.

கீழ்க்கதி - கீழ்நோக்கினசெலவு, தாழ்ந்தபதம், நரகம்.
கீழ்க்கதுவாயளபெடை - கடையயலொழிந்தமற்றெல்லாவற்றின் கண்ணுமளபெடை வரத்தொடுப்பது.
கீழ்க்கதுவாயியைபு-முதலயலொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணி யைபுவரத்தொடுப்பது.
கீழ்க்கதுவாயெதுகை - கடையயற் சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணுமெதுகைவரத்தொடுப்பது.
கீழ்க்கதுவாய்முரண் - கடையயற்சீரொழிந்த மற்றெல்லாச் சீர்க்கண்ணும் முரண்வரத்தொடுப்பது.
கீழ்க்கதுவாய்மோனை-கடையயற் சீர்க்கணின்றி யொழிந்தசீர்க்கண் மோனைவரத்தொடுப்பது.
கீழ்க்குரல்-கீழோசை, மந்தவொலி.
கீழ்சாதி } ஈனசாதி, தாழ்ந்தசாதி.
கீழ்ச்சாதி }
கீழ்தரம்-இழிந்ததரம்.
கீழ்தல் - அழித்தல், கிழித்தல், பிளத்தல்.
கீழ்த்திசை-கிழக்கு.
கீழ்த்திசைப்பாலன்-இந்திரன்.
கீழ்நோக்கம் - அதோமுகம், கீழ்ப்பார்வை.
கீழ்நோக்கி-நேர்வாளம்.
கீழ்நோக்கு-கீழ்நோக்கம்.
கீழ்நோக்குதல் - கீழேபார்த்தல், கீழேபோதல்.
கீழ்படிவு-அமைவு, கீழ்ப்பணிவு.
கீழ்பால்-கிழக்கு.
கீழ்பால்விதேகம் - நவகண்டத் தொன்று.
கீழ்பூமி-பாதலம்.
கீழ்ப்படிதல்-அடங்கிநடத்தல்.
கீழ்ப்படுதல்-அடங்குதல், இழிவுபடல்.
கீழ்ப்படுத்துதல் - அடக்குதல், ஈனப்படுத்தல், தாழ்வுபடுத்தல்.
கீழ்ப்பணிதல்-அடங்குதல்.
கீழ்ப்பயிர் - பெரும்பயிருக்குணிற்குஞ் சிறுபயிர்.
கீழ்ப்பாடு-அடக்கம், கீழ்ப்பக்கம்.
கீழ்ப்பாறை-கீழறை, கீழிருக்கும்பாறை
கீழ்ப்பிள்ளை-முதுமரங்களின் கீழ்நாட்டுந் தெங்கு முதலியவற்றின்கன்று.
கீழ்ப்புறம்-கீழ்ப்பக்கம்.
கீழ்ப்போக்கிப்பேசுதல்-தூஷணம் பேசுதல்.
கீழ்மகன்-ஈனன், சனி.
கீழ்மக்கள்-சண்டாளர்.
கீழ்மடி-அடிமடி.
*கீழ்மடை-கடைமடை.
கீழ்மாரி - அடிவானத்திற் கருகிக்கொண்டு பெய்யும்மழை.
கீழ்முகம்-கீழ்நோக்கும்முகம்.
கீழ்மேலாதல் - தலைகீழாதல், தலைதடுமாற்றமாதல்.
கீழ்மை-ஈனம், தாழ்மை.
கீழ்வயிறு-அடிவயிறு.
கீழ்வாடை-வாடைக்கொண்டல்.
கீழ்வாய்-சிற்றெண், தாடி.
கீழ்வாரி-கீழ்மாரி.
கீழ்விதேகம்-கீழ்பால்விதேகம்.
கீழ்விழுதல்-காரியத்துக்காகத்தாழ்தல்.
கீழ்வீடு-கீழ்க்கட்டுமனை.
கீளல்-கிழித்தல்.
கீளி-ஓர் சிறுமீன்.
கீளுதல்-கிண்டல், கிழித்தல்.
கீறல் - எழுதல், கிழித்தல், கீறுதல், பொன்முதலிய வுரைத்தல்.
கீறு - அடையாளம், எழுத்து, கீற்று, தென்னோலை அல்லது பனங்கிழங்கின்பாதி, பிளவு, வரி.
கீறுதல் - கிறுக்குதல், குறிப்புக்காட்டுதல், தேய்த்தல், பிளக்குதல்.
கீற்றடித்தல்-கயிறடித்தல்.
கீற்றன்-ஓர்புடவை.
கீற்று-அரதனக்குற்றம், கிடுகு, கீறல், பிளவு, வரி.
கீற்றுமதி-மூன்றாம்பிறைச் சந்திரன்.
கீனம்-அபாவம், இழிவு, குறைபாடு.
கீனர்-அற்பர்.
கீனன்-குலமில்லான், குறைவானவன்.
கீன்றல்-கிழித்தல்.

(கு)

கு - இருதிணைப்பா லொருமைத்தன்மை வினைவிகுதி (உ-ம்) உண்கு, இன்மைக்கும் எதிர்மறைக்கும் வருமோருபசர்க்கம், ஓரெழுத்து, குற்றம், சாரியை, (உ-ம்) வருகுதி, சிறுமை, தடை, தொனி, நான்காமுருபு,

நிந்தை, பண்புப்பெயர் விகுதி(உ-ம்) நன்கு, பாவம், பிறவினைவிகுதி(உ-ம்) போக்கு, பூமி.
குகம்-அங்கிகரித்தல், அணிதல், கதியுள்ளகுதிரை, குகை, குருத்துவம், நட்பம், மலைக்குகை, மறைவு.
குகரம்-ஓரெழுத்து, குடவறை, மலைக்குகை.
குகலிதம்-ஒலி, குயில், குரல்.
குகனன்-எலி, பாம்பு.
குகன்-இராமர் வனவாசம் செய்யப்போகும் பொழுது சிநேகம் பூண்ட ஓர் செம்படவர் தலைவன், குமரன், குரு.
குகிலம்-பர்வதம்.
குகு - அமாவாசை, குப்பயம்பற்றியிருக்கும் நரம்பு, கூகையொலி.
குகுதான்-தசநாடியிலொன்று.
குகுரம்-ஓர்தேசம்.
குகுரன்-நாய்.
குகுலா-கடுகுரோகிணி, தேனீ.
குகூகண்டம்-குயில்.
குகூகம்-குயில்.
குகூபாலன்-ஆதிகூர்மன்.
குகூமுகம்-குயில்.
குகை-அளை, சமாதியறை, பஞ்சலோகங்களையுருக்கும் பாத்திரம், மலைமுழை, முனிவர்வாசம்.
குகைக்காமன்-கன்னன்.
குகைச்சி- புற்றுஞ்சோறு.
குகைப்புடம்-ஓர்வகைப்புடம்.
குகைமேனுதத்தி-சொன்னபேதி.
குக்கல்-இருமல், குக்கன்.
குக்கன்-நாய்.
குக்கி } வயிறு.
குக்ஷி }
குக்கிலம்-அதிவிடயம்.
குக்கில்-குங்கிலியம், செம்போத்து.
குக்குடசருப்பம்-பறவைநாகம்.
குக்குடச்சூட்டு - கோழித்தலைகந்தகம், கோழிப்புடம்.
குக்குடத்துவசன்-முருகன்.
குக்குடப்புடம்-கோழிப்புடம்.
குக்குடமண்டபம்-முத்திமண்டபம்.
குக்குடம்-கோழி.
குக்குடாதிவடகம்-ஓர்மருந்து.
குக்குடி-இலவமரம், பெட்டைக்கோழி
குக்குதல்-இருமுதல், குந்துதல்.
குக்குரம்-கோடகசாலை.
குக்குரன்-நாய்.
குக்குலி-செம்போத்து.
குக்குலிகுத்தல்-செம்போத்துகூவுதல்.
குக்குலு-குங்குலியம்.
குக்குறுப்பான் } ஓர்குருவி.
குக்குறுவான் }
குங்கிலிகம்-குங்குலியம், வாலுளுவை.
குங்கிலியக்கலையர் - அறுபத்து மூன்று சிவாசாரியரிலொருவர்.
குங்கிலியம்-குங்குலியம்.
குங்குதல்-குறைதல்
குங்குமக்காவி-செங்காவி.
குங்குமச்சம்பா-ஓர்நெல்.
குங்குமபாஷாணம்-அஞ்சற்குளச்சி.
குங்குமப்பூ-ஓர்சரக்கு.
குங்குமம்-ஓர்மரம், குங்குமநிறம், குங்குமப்பூ, செஞ்சாந்து.
குங்குமவர்ணி-அரிதாரம், மஞ்சட்கல்.
குக்குமவர்ணிச்சி-தாளகம்.
குங்குமவர்ணக்கல்-மஞ்சட்கல்.
குங்குமவலரி-செவ்வலரி.
குங்குலியக்கலையர் - அறுபத்துமூவரிலொருவர்.
குங்குலியம்-குக்குலு.
குங்குலு-குங்கிலியம்.
குசக்கணக்கு-வழுவானகணக்கு.
குசக்கலம்-ஓடு, மட்கலம்.
*குசக்கிரந்திமணி-தருப்பைமுடிச்சு.
குசத்தனம்-மூடத்தனம்.
குசத்தி-ஓடு, குசப்பெண், பூநீறு, பூவழலை.
குசத்திகிரி-குலாலசக்கரம்.
குசந்தனம்-செஞ்சந்தனம்.
குசபலம்-மாதுளைமரம்.
குசப்பிரியம்-பவளம்.
குசப்புத்தி-மடமை.
குசமசக்கு-பொய், வீண்மயக்கு.
குசமணை-தண்டசக்கிரம்.
குசம்-தருப்பைப்புல், நீர், மரப்பொதுமுலை, வெறும்புறங்கூறல்.
குசலக்காரன் - தந்திரக்காரன், மந்திரவித்தைக்காரன், வஞ்சகன்.
குசலப்புத்தி-தந்திரப்புத்தி.
குசலம்-சாமர்த்தியம், சுகம், தந்திரம் மந்திரவித்தை, மிக்ககல்வி.

குசலர்-அறிஞர், மிகவல்லோர்.
குசலவர்-இராமன்மக்கள்.
குசலவித்தை-மந்திரவித்தை.
குசலவேதனை-இன்பமான உணர்ச்சி.
குசலாகுசலவேதனை - இன்பமும் வருத்தமுமான உணர்ச்சி.
குசலை-தடை.
குசவர்-குயவர்.
குசவாரம்-செவ்வாய்க்கிழமை.
குசளை-தடை.
குசன் - இராமன் மக்களிலொருவன், செவ்வாய்.
குசாக்கிரபுத்தி-அதிக நுண்ணியபுத்தி.
குசாக்கிரம்-தருப்பைநுனி.
குசாங்குலியம்-பௌத்திரம்.
குசாட்சம்-குரங்கு.
குசாலிங்கநம்-ஓர்வகையாலிங்கநம்.
குசால்-சமாளம், மனோச்சாகம், வேடிக்கை.
குசிருதம்-பொல்லாங்கு.
குசினி-சிறியது, சிறுபயிர்.
குசிலன்-துட்டன்.
குசு-அதோவாயு.
குசுகுசுத்தல்-இரகசியம்பேசுதல்.
குசுகுசுப்பு-இரகசியம்.
குசுகுசெனல் - இரகசியவொலிக்குறிப்பு.
குசுமம்-காயா, பூ.
குசுமாகரம் - பூந்தோட்டம், வேனிற்காலம்.
குசுமாசவம்-பொல்லாங்கு.
குசும்பம்-ஓர்பூ, ஓர்மரம்.
குசும்பா-ஓர்பானம், ஓர்புடைவை, செந்திருக்கம்பூ, வெண்மைகலந்த சிவப்பு
குசும்பைமலர்மணி - கோவரங்கப்பதுமராகம்.
குசுலம்-குதிரை.
குசேசயகரன்-சூரியன்.
குசேசயம்-தாமரைப்பூ.
குசை - கடிவாளம்,குதிரைக்கட்டுங்கயிறு, குதிரையின்பிடர்மயிர், தருப்பை.
குசைத்தீவு-சத்ததீவினொன்று.
குசைப்புல்-தருப்பைப்புல்.
குசையன்-வீரவேகி.
குசோதகம்-தருப்பைநீர்.
குசோத்தியம்- தந்திரம், பரிகாசம்.
குச்சத்தின்பாதி-சிறுடுள்ளடி.
குச்சம்-ஓர்வகையலங்காரத்தூக்கு, குன்றி, கொத்து, நாணற்புல், நூல்முதலியவற்றின் கொத்து,நெற்குஞ்சம்,பற்பாடகம், வெறும்புறங்கூறல்.
குச்சரம்-ஓர்தேயம்.
குச்சரர்-குச்சலியர்.
குச்சரி-ஓர்பண்.
குச்சரியர், குச்சலியர் } குச்சரர்.
குச்சி-கூர்ச்சு, மயிர்ச்சிகைப்பூடு.
குச்சிதம்-குற்சிதம்.
குச்சிலியர்-குச்சரர்.
குச்சில்-சிறுகுடில்.
குச்சு-அடைப்பு, குஞ்சம், குடில், குற்றி, கூர், சிறுகம்பு, சிற்றில், நுதி, பாவாற்றி, மயிர் வேர் முதலியமுடிச்சு.
குச்சுச்சார்த்துதல்-விக்கிரங்களி னழுக்கெடுத்தல்.
குச்சுப்புல் - அழுக்கெடுக்கக் கட்டிய புல், ஓர்புல்.
குச்சுவாங்குதல்-இரத்தினங்களை யொப்பஞ்செய்தல்.
குச்சுக்காரி-விபசாரி.
குச்சை-கொய்யகம்.
குஞ்சம்-ஈயோட்டி, குச்சு, குச்சுப்புல், குறள், குறுணியி லெட்டிலோர்பங்கு, குன்றிக்கொடி, கூன், கொத்து, கோட்சொல்லல், சீதாங்கபாஷாணம், தந்தம், நாழியென்னுமளவை, நூற்றிருபதிழை தொடுத்திருக்கப் பட்டது, புளிநறளை, பூங்கொத்து, மருள், வீசுங்குஞ்சம்.
குஞ்சரக்கன்று-யானைக்குட்டி.
குஞ்சரக்கோடு-யானைக்கொம்பு.
குஞ்சரம்-உச்சிதம், கருங்குவளை, மருள், யானை.
குஞ்சராசனம்-அரசமரம்.
குஞ்சராராதி-சரபம், சிங்கம்.
குஞ்சரி-பெண்யானை.
குஞ்சனம்-வளைவு.
குஞ்சன்-கட்டையன், குறளான்.
குஞ்சாயி-குஞ்சியாயி.
குஞ்சி - ஆண்மயிர், குஞ்சியென்னேவல்,குடுமி,குன்றிக்கொடி,சிறியதாய்,

சிற்றப்பன், பறவைக்குஞ்சு, மயிர்ப்பொது.
குஞ்சிக்கடகம்-சிறுகடகம்.
குஞ்சிச்சடை-சிறுசடை.
குஞ்சிதநிருத்தம் - ஒருகாறூக்கியாடல்.
குஞ்சிதம் - ஒருகாறூக்கிநிற்றல், படங்குந்திநிற்றல், வளைவு.
குஞ்சிதாதனம்- காற்பெருவிரலையூன்றிநிற்பது.
குஞ்சித்தல்-படங்குந்திநிற்றல்.
குஞ்சிப்பெட்டி-சிறுகடகம்.
குஞ்சியப்பன்-சிறியபிதா
குஞ்சியாச்சி } சிறியதாய்.
குஞ்சியாயி }
குஞ்சிரிப்பு-குறுநகை.
குஞ்சு-அணில்முதலியவற்றின்பிள்ளை, ஆண்குறி, எலி, பறவைக்குஞ்சு.
குஞ்சுக்கடகம்-குஞ்சிக்கடகம்.
குஞ்சுபொறித்தல்-குஞ்சுபிறப்பித்தல்.
குஞ்சுரம்-குன்றி.
குஞ்சுறை-பறவைக்கூடு.
குடகம் - ஓர்மலை, தேசமைம்பத்தாறிஞென்று, மேற்கு.
குடகரம்-உத்தாமணி.
*குடகவனா-காவிரிதோன்றுமலை.
குடகன்-சேரன்.
குடகு-ஓர்தேசம்.
குடகோளார்த்தம்-பச்சிமகண்டம்.
குடக்கடம்-வளைவு
*குடக்கால்-குடத்தண்டு.
குடக்கி-வளைவானது.
குடக்கியன்-வளைவானவன்.
குடக்கினி-கருங்காலி.
குடக்கு-மேற்கு.
குடக்குழி-நீர்க்குண்டு.
*குடக்கூந்து - விஞேதக்கூத்தாறினுளொன்று.
குடக்கூலி- வாடகை.
குடக்கோ } சேரன்.
குடக்கோன் }
குடங்கட்டுதல் - குடம்போற்றிரட்டிவிடுதல்.
குடங்கனா-தண்ணீர்க்குடம் வைக்குமிடம்.
குடங்கர் - குடம், குடிசை, கும்பவிராசி.
குடங்கல் } வளைவு.
குடங்குதல் }
குடங்கை-உள்ளங்கை.
குடசப்பாலை - குறிப்பாலை, கொடிப்பாலை, வெட்பாலை.
குடசம்-மலைமல்லிகை, வெட்பாலை.
குடச்செவி-கும்பகன்னம்.
குடஞ்சுட்டு-பசுப்பொது.
குடதிசை-மேற்கு.
குடத்தி-ஓர்மிருகம், முல்லைநிலப்பெண்.
குடத்திமர்-இடைச்சியர்.
குடநாடு-மேனுடு.
குடநாதன்-சேரன்.
குடந்தம் - குடம், கும்பகோணம், நிரட்சி, நால்விரன்முடக்கிப் பெருவிரனிறுத்தி நெஞ்சிடைவைத்து நிற்றல்.
குடந்தை-கும்பகோணம்.
குடபலை-மணத்தக்காளி.
குடப்பம்-இருப்பை.
குடப்பாறு-ஓர்குடம்.
குடப்பாலை-ஓர்மரம்.
குடமணம்- கருஞ்சீரகம்.
குடமண்-வெண்மணல்.
குடமல்லிகை-ஓர் மல்லிகை.
குடமாடல்-மாயோனுடல்.
குடமுருட்டி - காவிரிநதியின் ஓர்கிளை
குடமுழா-ஓர்முழவு.
குடமூக்கு-கும்பகோணம்.
குடமூதுதல்-குடத்தினுள்ளூதி ஒலிபிறப்பித்தல்.
குடம்-ஊர்ப்பொது, கும்பம், கும்பவிராசி, கைகொட்டிக்குவித்தல், கொடுந்தமிழ் நாட்டிஞென்று, சதுரக்கள்ளி, சருக்கரை, திரட்சி, பசு, பட்டினம், பூசம், மருதநிலத்தூர், மாயோனுடல்.
குடம்பை- உடம்பு, நீர்நிலை, பறவைக்கூடு, முட்டை.
குடம்வைத்தல்-ஓர்விளையாட்டு.
குடாராஜம்-ஓர்வகைப்பூரான்.
குடாரி-குடாரி.
குடர்-குடல்.
குடலேறுதல்-குடல்பிசகிமேலிடுதல்.
குடலேற்றம்-குடலேறுதல்.
குடலை- தொக்கட்டி, பூக்கூடைமுதலியனபொத்தி.

குடலைப்பூச்சி-ஓர்பூச்சி.
குடல்-குடர்.
குடல்திருகுதல்-குடர்ப்பிசகுதல்.
குடல்வலி-ஓர்நோய்.
குடல்வாதம்-ஓர்நோய்.
குடவப்பருப்பதம்-ஓர்மலை.
குடவம்-பித்தளை.
குடவர்-இடையர்.
குடவளப்பம்-இருப்பை.
குடவறை-குகை, சிற்றறை.
குடவன்-ஒருகொட்டையுள்ளது, கோட்டம், கோணலான வுருவுள்ளது, பித்தளை.
குடவிளக்கு-திருமணத்தீபம்.
குடவு - குகை, குடவென்னேவல், குமரஞுடல், வளைவு.
குடவுண்ணி-ஒருண்ணி.
குடவுதல்-வளைதல்.
குடவுளுந்தன்-ஓர்புலவன்.
குடவெழுத்தாணி - குடங்கட்டிய வெழுத்தாணி.
குடற்கொழுப்பு-நெய்ப்பு.
குடற்பற்றுப்பிஞ்சு-இளம்பிஞ்சு.
குடற்பிடுங்கி-துருசி.
குடற்பிரிவு-குடற்பிசகு.
குடற்புறை-குடற்றுவாரம்.
குடற்பை-குடர்போர்வை.
குடற்போர்வைத்தோற்றம்-நால்வகைத்தோற்றத்தினென்று அஃது தோற்காதுள்ளன.
குடா-குடைவு, கோணம், மூலை.
குடாக்கடல்-மூலைவிழுந்தகடல்.
குடாக்கை-வயலின்மூலை.
குடாசம்-எய்ப்பு, கபடம், கோள், துர்ப்போதனை, மாயம், வஞ்சகம்.
குடாசகன்-கோட்காரன், வஞ்சகன்.
குடாசுதல்-தந்திரஞ்செய்யல், தந்திரம்.
குடாது-மேற்கிலுள்ளது.
*குடாந்நம்-சருக்கரைப்பொங்கல்.
குடாபாகம் - சங்கீதத்தி னோர்சுவை, செய்யுட்சுவையினென்று.
குடாப்பு-கூடு.
குடாரம் - கோடாலி, தயிர்கடைதறி, தயிர்கடைதாழி.
குடாரி-கோடாலி, திப்பிலி, யானைத்தோட்டி.
குடாரு-தயிர்கடைதாழி.

குடார்த்தகோளம் - பூமியின் மேற்குப்பாதியுண்டை.
குடாவடி-கரடி.
குடாவு-குடா.
குடான்-செம்முள்ளி.
குடி-உடம்பு, ஊர்ப்பொது, குடியானவன், குடியென்னேவல், குலம், கோத்திரம், சமுசாரம், நெற்றிப்புருவம், பட்டினம், மருதநிலத்தூர், மனைவி, வீடு.
குடிகாரன்-சுராபானி.
குடிகெடுத்தல் - குடிகளை நட்டப்படுத்தல்.
குடிகேடன்-துட்டன்.
குடிகேடி-துட்டை.
குடிகேடு-குடியழிவு.
குடிகை-ஏலரிசி.
குடிகொள்ளுதல்-வாசமாயிருத்தல்.
குடிக்காடு - ஊர்ப்பொது, மருதநிலத்தூர்.
குடிக்கூலி-வாடகை.
குடிசரம்-நீர்ப்பன்றி.
குடிசனம் - அரசாட்சிக்குள்ளடங்கிய சனம்.
குடிசெயல்வகை-தன்குடும்பத்தை உயர்த்தும்வகை.
குடிசை-குடில்.
குடிஞை-ஆறு, கூகை, சிற்றில், பதி, பறவைப் பொது, மருதநிலத்தூர், வீடு, *பேராந்தை.
குடித்தல்-பருகுதல்.
குடித்தனக்காரன் - இல்லாச்சிரமி, பயிரிடுவோன்.
குடித்தனம்படுதல் - விவாகம்பண்ணல்
குடித்தனம்-இல்வாழ்க்கை.
குடிநாசம்-குடியழிவு.
குடிநிலம்-குடியிருக்கத்தக்கநிலம்.
குடிநீர்-ஓர்வகைக்கஷாயம்.
குடிபடை-குடிசனம்.
குடிபுகுதல்-புதுவீட்டிற் சேர்தல்.
குடிபோதல்-குடிபுகுதல், குடியெழும்பல்.
குடிப்பழுது-வசை.
குடிப்பிறப்பு - ஒழுக்கமுடைய குடியிற்பிறத்தல்.
குடிப்பு-பானம்.
குடிப்பெண்-குலஸ்திரீ

குடிப்பெயர்-குலத்தால்வந்த பெயர்.
குடிமகன்-அம்பட்டன், முக்குலத்தோர்க்குமேவல் செய்வோன்.
குடிமக்கள் - பணிசெய்யும்பதினெண்வகைச்சாதியார், அவர் இலைவாணிகன், உப்புவாணிகன், எண்ணெய்வாணிகன், ஒச்சன், கற்றச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோவிற்குடியான், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன்என்பவர்.
குடிமதிப்பு-குடிக்கணக்கு, குடியிறை.
குடிமார்க்கம் - முறைப்படி விவாகம்முடித்திருத்தல்.
குடிமுறை-குடித்தனம்.
குடிமை-குடிமக்கட்டொழில், குடிமக்கள், குடியினியல்பு.
குடியரசு-குடியாட்சி.
குடியர்-கள்முதலிய குடிப்போர்.
குடியழிதல்-குடிகெடுதல்.
குடியழித்தல்-குடிகெடுத்தல்.
குடியழிவு-குடிநாசம்.
குடியன்-குடிகாரன்.
குடியாட்சி-தன்குடும்பத்தைநடத்தல்.
குடியாட்டம்-குடிவாழ்க்கை.
குடியானவர்-குடிசனம்.
குடியியல்பு-குடிமுறை.
குடியிருத்தல் - குடியாயிருத்தல், குடிவைத்தல்.
குடியிருப்பு-குடிநிலம், குறிச்சி.
குடியிறங்குதல் - மறுதேசத்திற்சனங்கள்வந்து குடியேறுதல்.
குடியிறை-குடிவீதம் வைத்தவரி.
குடியெழுப்புதல்-குடிகலைத்தல்.
குடியெழும்புதல் - இருந்தவீட்டைவிட்டுப்போதல்.
குடியேறுதல் - சனங்கள் குடியாய்வந்து சேர்ந்திருத்தல்.
குடியேற்றம்-குடியேறுந்தன்மை.
குடியேற்றுதல்-குடியிருக்கச்செய்தல்.
குடியோட்டிப்பூண்டு-குருக்கு.
குடிரம்-காரை.
*குடிலகதி-வளைந்துபோதல்.
குடிலச்சி-கருவண்டு.
குடிலம் - ஆகாயம், குராமரம், சடை, வஞ்சகம், வட்டம், வளைவு.
குடிலை-பிரணவம்.
குடிலைப்பொருள் - பிரணவத்தினுட்பொருள்.
குடில்-ஆகாயம், குடிசை, சிற்றில்.
குடிவருதல்-குடிபுகுதல்.
குடிவாங்குதல்-குடியெழும்பிப்போதல்
குடிவாழ்க்கை - இல்வாழ்க்கை, மருதநிலத்தார்.
குடிவெறி-மதுபானமஸ்து.
குடிவைத்தல் - குடியிருத்தல், வாழ்வித்தல்.
குடீசகம்-கழுதை.
குடீசகன்- ஓர்யதி, துர்மார்க்கன்.
குடு-கள்.
குடுகு-குடுக்கை.
குடுகுடா } கஞ்சாக்குடுக்கை.
குடுகுடி }
குடுகுடு-ஒலிக்குறிப்பு.
குடுகுடுகிழவன்-கூனற்கிழவன், தளர்ந்தவயதோன்.
குடுகுடுக்கை-காய்ந்தொலிக்குந் தேங்காய்.
குடுகுடுத்தல்-துரிதமாயோடித்திரிதல்.
குடுகுடுத்தான்-சுறுக்கான், பரபரப்பாயோடித்திரிவோன்.
குடுகுடுப்பு-துரிதச்செலவு.
குடுகுடுப்பை - அறக்காய்ந்து வற்றலானது, கஞ்சாக்குடுகு, சிற்றுடுக்கை, மரமணி.
குடுகுடெனல்-விரைவின்குறிப்பு.
குடுக்குக்குடுக்கெனல்-ஒலிக்குறிப்பு.
குடுக்கை-கமண்டலம், தேங்காய் முதலியவற்றின் குடுக்கை.
குடுப்பம்-நான்குபலம்.
குடுமி - ஆண்மயிர், உச்சி, கதவிற்குடுமி, சிகை, நுதி, பாம்புபிடிப்பவன், மயிர்முடி, மலையுச்சி, வில்லு, வெற்றி.
குடுமிக்கதவு-சுழியாணிக்கதவு.
குடுமிதட்டுதல்-தானிய அளவிற்றலை வழித்தல்.
குடுமிப்பருந்து } ஓர் பருந்து.
குடுமியன் }
குடுமிவைத்தல் - பார்ப்பார் முதலிய வேதத்திற்குரிய வருணத்தாரின் பிள்ளைகட்குச்செய்யுமோர் சடக்கு.
குடும்பக்கோடாலி - குடிகளை யழிவுபண்ணுகிறவன்.

குடும்பத்தானம்-களத்திரத்தானம்.
குடும்பப்பிரதிட்டை-குடிவைத்தல்.
குடும்பம் - உறவு, ஒருகுடியிலுள்ளார், மனைவி, வீடு.
குடும்பன்-பள்ளரிற்றலைவன்.
குடும்பி-சமுசாரி, பள்ளிகளிற்றலைவி.
குடும்பினி-மனைவி.
குடும்பு-சுற்றம், பூங்கொத்து.
குடுவை-கமண்டலம், குண்டான், சிறுபானை.
குடுவையாறு-ஓர்நதி.
குடேரம்-அக்கினி, துளசி.
குடேரஜம்-வெண்டுளசி.
குடை - இராசசின்னத்தொன்று, உடைவேல், உட்டுளைப்பொருள், கவிகை, குடையென்னேவல், குமரனுடல், மிதியடி முதலியவற்றின் குமிழ்.
குடைகரி-பஞ்சலோகங்களை யுருக்கும் படி குடையப்பட்டகரி.
குடைகவித்தல்-குடைநிழற்றல்.
குடைக்காரன்-குடைபிடிப்போன்.
குடைக்காளான்-ஓர்காளான்.
குடைக்கிழங்கு-சிற்றரத்தை.
குடைக்கொள்ளுதல்-குடைபோ லெழும்புதல், குமிழிக்கொள்ளுதல்.
குடைச்சல்-குடைவு, வருத்தம்.
குடைச்செவி-உள்வளைந்தசெவி.
குடைச்செவிக்கொள்ளல் } மிருகங்
குடைச்செவியிடுதல் } கோபத்
குடைச்செவியெடுத்தல் } தினுலே
செவியை நிமிர்த்தல்.
குடைதல்-அரித்தல், கடைதல், கவிதல், துளைத்தல், தோண்டல், நீராடுதல், நோவுபடுத்தல், மனதைவருத்தல்.
குடைநிழற்றல்-உலகத்தைப்பாதுகாத்தல், குடையாணிழல்செய்தல்.
குடைப்பனை-தாலபத்திரப்பனை.
குடைப்புல்-ஓர்புல்.
குடையல்-குடைதல்.
குடையன்பருவதம்-பித்தளை.
குடையாணி-குடைபோல தலையுள்ள ஆணி.
குடைவண்டு-ஓர்வண்டு.
குடைவு-குகை, குவிதல், வளைவு.
குடைவேல்-ஓர்மரம்.

குடோரம்-கடேரம்.
குடோரி-கீறிமருந்துபதித்தல், கீறுதல், குடாசகம், சுதைமண், வங்கமணல், வெண்காரம், வெள்ளைப்பாஷாணம்.
குடோரிபண்ணல் } சன்னிக்குவிஷத்
குடோரியாடல் } துக்குக்குடோ
குடோரியிடுதல் } ரிவைத்தல்.
குடோரிவைத்தல் - கீறிமருந்துவைத்தல்.
குட்டக்கரப்பன்-ஓர்கரப்பன்.
குட்டக்குறடு-சிறுகுறடு.
குஷ்டம் } ஆழம், குட்டநோய், குள
குட்டம் } ம், கொடுந்தமிழ் நாட்டி
ஞென்று, கோஷ்டம்.
குட்டநாசனம்-வெண்கடுகு.
குட்டநி-கோட்சொல்பவள்.
குட்டரி-மலை.
குட்டல்-அபகரித்தல், குட்டுதல், தகர்த்தல்.
குட்டனம்-தட்டல்.
குட்டன்-ஆட்டுக்குட்டி, குட்டரோகி, குழந்தை, மகன்.
குட்டாரம்-கம்பளம், பர்வதம்.
குட்டாரி-கந்தகம்.
குட்டான்-சிறுஓலைப்பெட்டி.
குட்டி-ஆடு, கழுதை, கீரி, குதிரை, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி, பூனை, மான், முதலை, முயல், யானை, இவற்றின்குட்டி, ஆதாயம், குரங்குமுதல் மரக்கோட்டின் வாழ்விலங்கின் பிள்ளை, குழந்தை, சிறுபெண், வாழைக்கன்று.
குட்டிக்காய் - அடுத்திருக்குஞ் சிறுகாய், சண்பிடிக்காய்.
குட்டிக்கொக்கான் - கொக்கானிலோர் வகை.
குட்டிச்சாத்தான்-ஓர்பேய்.
குட்டிச்சுவராய்ப்போதல் - கெட்டுப் போதல்.
குட்டிச்சுவர்-சிறுசுவர், மடையன்.
குட்டித்தக்காளி-சிறுதக்காளி.
குட்டித்தாய்ச்சி-குட்டியுண்டாயிருக்கும் விலங்கின்பெண்.
குட்டிபடுதல் - ஆடுமுதலிய சினைகொள்ளல்.
குட்டிபோடுதல்-ஒன்றுகூடப்போடல், குட்டியீனுதல்.

குட்டிப்பலா-ஓர்செடி.
குட்டிப்பல்-பல்லோடடுத்து முளைக்கும்பல்.
குட்டிப்பை-சிறுபை.
குட்டிமம்-கற்படுத்த இடம்.
குட்டியப்பன்-சிறியதகப்பன்.
குட்டியம்-சுவர்.
குட்டியிடுக்கி-கோடைக்கிழங்கு, கோட்டம், சிற்றரத்தை, பயிருடன் முளைக்குமோர்புல்.
குட்டியிடுதல் - பாம்புமுதலிய குட்டியீனுதல்.
குட்டிவிரல்-விரலோடடுத்து முளைக்குஞ்சிறுவிரல்.
குட்டிவிளா-ஓர்விளாமரம்.
குட்டிவைத்தல் - கொக்காணி லோர் செய்கை.
குட்டினம்-கருஞ்சீரகம்.
குட்டினி-சங்கம்வாங்குபவள், வசவி,
குட்டீரம்-பர்வதம்.
குட்டு-குட்டுதல், குட்டென்னேவல் மானம்.
குட்டுணி - குட்டுப்படுகிறவன், சுணைகெட்டவன்.
குட்டுண்ணல்-குட்டுப்படல்.
குட்டுதல்-அனுப்புதல், தலையிலேசொட்டுதல்.
குட்டும்
குட்டுமலம் } பூவரும்பு.
குட்டுவன்-சேரன்.
குட்டை-ஓர்வியாதி, கடையாயிருப்பது குள்ளம், கைத்துண்டு, சிறுகுளம், தொழுமரம்.
குட்டையன் - கட்டையன், குட்டை, நோயுள்ளோன்.
குணகண்டி-சிவதை.
குணகம்-பெருக்குந்தொகை.
குணகர்-கணக்கர்.
குணகாங்கியம்-ஓர்ஆரியநூல்.
குணகாரம்-பெருக்குக்கணக்கு.
குணகி-குணமுள்ளவன்.
குணகு-குணகென்னேவல், பிசாசம்.
குணகுதல் - சோம்புதல், தனகுதல், வளைதல்.
குணக்கு-எதிரிடை, கிழக்கு, கோணல்.
குணக்குதல்-பின்னிற்றல், வளைத்தல்.
குணக்குறைவிசேடம்-குணக் குறையினால் மேன்மைதோன்ற நிற்பது, (உ-ம்) கோட்டந்திருப்புவனங்கொள்ளாதவர்செங்கோல்.
குணக்குன்று - கடவுள், குணமுள்ளவன்.
குணக்கெடுத்தல் - குணத்தைக்கெடுத்தல், வளையெடுத்தல்.
குணக்கேடு-குணமின்மை.
குணக்ஞன்-தற்குணமுள்ளவன்.
குணங்கர்-பிசாசம்.
குணங்கல்-சுணங்கல், வளைதல்.
குணங்கு - குணங்கென்னேவல், பிசாசம்.
குணங்குதல்-வளைதல்.
குணங்குறி - அடையாளமுஞ் சுபாவமும்.
குணசந்தி-நிலைமொழியீற்றினின்ற அகர ஆகாரமும் வருமொழி முதலினின்ற இகரவீகாரமுங்கெட ஏகாரமும் நிலைமொழியீற்றகர ஆகாரமும் அவற்றொடுபுணரவந்த உகர ஊகாரமுங்கெட ஓகாரமுந் தோன்றுவது (உ-ம்) சுரேந்திரன், வரோதயன்.
குணசாலி-நற்குணன்.
குணசைவம்-ஓர்சைவம்.
குணஞ்ஞன்-குணவான்.
குணட்டு-கதிரின்குலை.
குணட்டுதல்-செல்லங் கொஞ்சுதல், துள்ளிவிளையாடுதல், மயக்கிப்பேசுதல்
குணஷ்டை - குணதோஷம், தொந்தரை.
குணதிசை-கிழக்கு.
குணத்தன்மையலங்காரம் - ஓரலங்காரம்.
குணத்தாலணையும்பெயர்-அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, குடி, சாதி, சிறப்புமுதலியவற்றான் வரும்பெயர்.
குணத்திரயம்-முக்குணம் அஃது இராசதம், சாத்துவிகம், தாமதம்.
குணத்தொகை-பண்புத்தொகை.
குணத்தொனி-நாணியின்சத்தம்.
குணநிதி - கடவுள், குணமுள்ளோன்.
குணபத்திரன் - அருகன், கடவுள், நிகண்டுசெய்த மண்டலவனின்குரு.

குணபம்-பிசாசம், பிணம்.
குணபலம்-அதிவிடயம்.
குணபவுணர்-இராக்கதர்.
குணபாகி, குணபாசி } பிசாசம்.
குணபாடல்-குணவாகடம்.
குணபிரதி-குணம்.
குணபேதம்-ஆங்காரம், குணமாறுதல்.
குணப்படுதல் - சுகமடைதல், நற்குணமடைதல்.
குணப்படுத்தல் - சீர்திருத்தல், மனந்திரும்பச்செய்யல்.
குணப்பண்பு-குணத்தலாயபண்பு.
குணப்பிழை-துற்குணம்.
குணப்பெயர்-பண்புப்பெயர்.
குணமாதல்- சீர்ப்படுதல், சுகமாதல்.
குணம்-இராசதமுதலியகுணம், இலட்சணம், கயிறு, குடம், சத்து, சுகம், சீர்மை, தத்துவம், தன்மை, நாணி, நிறம், பண்பு, மேன்மை.
குணலி-சீந்தில்.
குணலை - ஓர்கூத்து, வீராவேசத்தாற்கொக்கரித்தல்.
குணலையிடுதல்-கைதட்டிக் கூவுதல்.
குணவந்தன்-குணமுள்ளவன்.
குணவநுதி-ஓரலங்காரம்.
குணவாகடம் - குணங்களறிவிக்கும் வைத்தியசாத்திரம்.
குணவாகுபெயர் - பண்புப் பெயரைப் பண்பிக்குரைத்தல், (உ-ம்) நீலம்.
குணவான்-நற்குணன்.
குணவிலக்கு-ஓரலங்காரம் அது குணத்தை மறுத்துச் சொல்வது.
குணவுவமம்-பண்புவமம் (உ-ம்) பான்மொழி.
குணனம்-கணக்குப்பெருக்கல், விவரம்.
குணனீயம்-பெருக்கப்படுந்தொகை.
குணன்-சற்குணன்.
குணாகுணம்-சாத்தியாசாத்தியம், குணமுங் குணவீனமும்.
குணாதீதம்-குணங்கடந்தது.
குணாதீதன்-கடவுள், சீவன்முத்தன்.
குணாம்பு-கோமாளம்.
குணாம்புதல்-ஈளினம்பண்ணுதல், பகிடிபேசல்.
குணார்த்தகோளம்-கிழக்குப்பாதி யுண்டை.
குணாலம்-ஓர்தேசம், ஓர்புள்.
குணாலயன்-கடவுள்.
குணாலை-குணாலைக்கூத்து.
குணாவநுதி-குணத்தினுயர்வு தோன்றக் கூறுமலங்காரம்.
குணி-ஊமை, குணியென்னேவல், பண்பி, மூடவன், வில்.
குணிக்கரித்தல்-கணக்குப்பெருக்குதல்.
குணிக்காரம் - கணக்குப் பெருக்குந்தன்மை.
குணிதம்-பெருக்கிக்கண்டபேறு, மடங்கு.
குணித்தல்-எண்பெருக்கல், மதித்தல்.
குணிப்பு-மதிப்பு.
குணிப்பெயர்-குணத்தையுடைய பொருட்பெயர்.
குணில் - ஓர்பறை, கவண், குறுந்தடி, பறையடிக்குந்தடி.
குணு-புழு.
குணுகல்-சிணுங்குதல்.
குணுகுணுத்தல், குணுகுதல் } சிணுங்குதல், மூக்காற்சத்தம்வரப் பேசுதல்.
குணுகுணுப்பு - மூக்காலொலியெழப் பேசல்.
குணுகுணெனல்-குணுகுணுத்தல்.
குணுக்கம்-அணுக்கம்.
குணுக்கல்-நுணுக்கல், வளைத்தல்.
குணுக்கன்-மூக்காற் சத்தம்வரப் பேசுகிறவன்.
குணுக்கு - குதம்பை, மாதர்காதணியிலொன்று, வலையின்முடிந்திருக்குமீயம், வெள்ளி.
குணுங்கர்-குயிலுவர், சண்டாளர், தோற்கருவியாளர், பிசாசர்.
குணுங்கு-பிசாசம்.
குணுங்குதல்-அனுங்குதல்.
குண்டகன்-தலைவனைப்பிழைத்தீன்ற சோரபுத்திரன்.
குண்டக்கம்-குடாசகம்.
குண்டக்கிரியம், குண்டக்கிரியை } ஓரிராகம், ஓர்பண்.
குண்டடியன்-ஆண்சிவிங்கி.
குண்டணி-பின்புறணி.
குண்டம்-ஓமக்கிடங்கு, கிடங்கு, கிணறு, குடுவை, குண்டான், குழி, குளம், துட்டை, பானை.

குண்டலகேசி-ஓரிலக்கியநூல்.
குண்டலம்-ஆகாயம், காதணியிலொன் று, தவத்தோர்காதணி, வட்டம்,வா னம்
குண்டலன்-பலராமன்.
குண்டலி-இசங்கு, ஓர்வாயு, காளி,சிந் தில், தாளகம், பாம்பு, மயில்,மான், மூலாதாரம்.
குண்டலிசத்தி-வல்லபசத்தி.
குண்டவண்டன் } குண்டலவண்டியு
குண்டவண்டியன் } ள்ளது.
குண்டனம்-வளைதல்.
குண்டனி-குறளை, வசவி.
குண்டன்-அடிமை, குண்டகன், குண் டனிசொல்வோன், வளைந்தது.
குண்டாணிக்கொடி-ஓர்கொடி.
குண்டாலரோகம் - குழந்தைகளுக்கு உடம்பெங்கும் காணுகிற சிவந்த க ட்டிகள்.
குண்டான்-பெருஞ்சட்டி.
குண்டி-ஆசனபக்கம், இருதயம்,ஈரல்,ச கனம்,பழத்தின்கீழ்ப்புறம்,மீன்சினை.
குண்டிகம்-எருவராட்டி, துகள்.
குண்டிகை-கமண்டலம், குடம்.
குண்டிக்காய்-ஈரல்.
குண்டிதம்-துகள்.
குண்டியம்-பழிச்சொல், பொய்.
குண்டில்-ஓர்செடி,சிறுச்செய், மூதுகு.
குண்டினபுரம் } தமையந்திபிறந்த பு
குண்டினம் } ரம்.
குண்டினன்-ஓர்முனிவன்.
குண்டூரம்-தத்துவம். [ன்.
குண்டூரன் - பலமுள்ளவன், மனித
குண்டு - ஆண், ஆண்குதிரை, ஆழம், உருண்டை, குளம், சிறுச்செய், தா ழ்வு, திரண்டகல், நிறைகல்.
குண்டுக்கட்டு - கூன்வாங்கிக் கட்டுங் கட்டு.
குண்டுக்கழுதை-ஆண்கழுதை.
குண்டுக்கிராமம்-சிறுகிராமம்.
குண்டுகுழற்றுவக்கு - பருங்குழற்றுவ, க்கு.
குண்டுக்குழை-குண்டுக்குழல்.
குண்டுச்சட்டி-குழிச்சட்டி.
குண்டுச்சம்பா-சொரிகுரும்பைநெல்.
குண்டுச்சுழி-எழுத்துக்களின் குண்டா காரச்சுழி.
குண்டுப்பிணையல் - குண்டுள்ள பிணை யல்.
குண்டுரோசனை-குண்டோசனை.
*குண்டூர்க்கூற்றம்-சேரனாட்டிலோர்ப குதி.
குண்டூசி-கொண்டையுள்ளவூசி.
குண்டெழுத்தாணி-குடலெழுத்தாணி.
குண்டேறு-ஓர்மீன்.
குண்டை - இடபவிராசி, ஈகைக்கொ டி, எருது, சட்டி.
குண்டைச்சம்பா - சொரி குரும்பை நெல்.
குண்டோசனை-ஓர்கிழங்கு.
குண்டோதரன்-ஓர்பூதன்,பொருந்தீனி க்காரன்.
குண்ணியம் - கணக்கிற் பெருக்குதல், குணம்.
குதகிலம்-மூலரோகம்.
குதக்குதல்-வாயில் ஆகாரம் அடைத் தல்.
குதக்கேடு-சீர்கேடு, துப்புக்கேடு.
குதட்டுதல்-அதக்குதல், கன்றுமுதலி யன பால்குடித்துவாயுதப்புதல்,மெ ல்லல்.
குதபகாலம் - பிதிர்புண்ணியகாலம், அஃது பதினேழனாநாழிகைதொட ங்கி யிருபதுநாழிகைவரையும்.
குதபசத்தகம்-பிதிர் சிராத்தத்திற்குவே ண்டிய ஏழ்திரவியம்.
குதபம்-தருப்பைப்புல்.
குதபன்-சூரியன், தீ.
குதப்பம்-கலக்கம், மாறுபாடு.
குதப்பல்-குதப்புதல்.
குதப்பிரம்ஸம் - அடிதள்ளிப்போகுத ல்.
குதப்புதல்-அதக்குதல், உதப்புதல்.
குதம்-கிடங்கு, தருப்பை, மலவாயில், மிகுதி, வெங்காயம்.
குதம்பல் - இறுக்கமில்லாதது, குதம் புதல்.
குதம்புதல்-அலைசுதல், கொதித்தல், சி னத்தல்.
குதம்பை-ஓராபரணம், ஓர்பூடு, காதிடு சடை.
குதம்பைசித்தர்-ஓர்சித்தர்.
குதரம்-மலை.
குதர்-பிரிவு.

குதர்க்கம்-முறைகெட்ட தருக்கம்.
குதர்க்கி-வீண் தருக்கமுள்ளவன்.
குதர்செல்லல் - வழிதவறுதல், விலகிப்போதல்.
குதர்தல் - குதறுதல், கோதிவகிர்தல், சிதறுதல்.
குதலை-அறிவிலான், எதிரிடை, மழலைச்சொல், மாதருடையமொழி.
குதலைவார்த்தை-மழலைமொழி.
குதறுதல்-உதறுதல், கிண்டுதல்.
குதனம்-குதனை.
குதனு - அவலட்சண சரீரம், லட்சணஹீனன், குபேரன்.
குதனை } சாதுரியமின்மை, துப்புக்கேடு.
குதனைக்கேடு } சாதுரியமின்மை, துப்புக்கேடு.
குதாங்குரம்-மூலம்.
குதாவிடை-ஆராய்வு, குதர்க்கம், குழப்பம், தடை.
குதானன்-தாளிச்செடி.
குதி-அடிப்புறத்துமூலை, அடிமிதி, கால்மைக்குதி, குதிப்பு, குதியென்னேவயல், முயற்சி.
குதிகால்-குதிங்கால்.
குதிகொள்ளல்-குதித்தல், பெருகுதல், பெருமைக்குணம் பண்ணுதல், பொலிதல்.
குதிக்கள்ளன்-குதிவாதம்.
குதிக்கால் } காற்குதி.
குதிங்கால் } காற்குதி.
குதித்தல் - கடத்தல், பாய்தல், வெல்லுதல்.
குதிப்பிளவை-ஓர்சிலந்தி.
குதிப்பு-ஓர்மீன், குதித்தல்.
குதிமுள் - குதிரைசெலுத்துங் கருவியிலொன்று.
குதியன் - குதிப்பு, மத்தாலதிமிதிபண்ணல்.
குதியன்குத்துதல் - களித்து விளையாடல்
குதிரை-ஊர்க்குருவி, கயிறுமுறுக்குங் கருவி, துப்பாக்கியிலோருறுப்பு; நீரையடைக்குமரம், நால்வகைத்தானையிலொன்று அஃது பரிமா, மாமரம்.
குதிரைகொடுத்தல்-தோற்றோர் வென்றோரைச்சுமத்தல்.
குதிரைகொல்லி-ஓர்நோய், ஓர்பூடு.

குதிரைக்கசை-குதிரைச்சவுக்கு.
குதிரைக்கல்லணை-சேணம்.
குதிரைக்கவிசனை-குதிரையுடுப்பு.
குதிரைக்காரன் - குதிரைப்பாகன், குதிரைவீரன்.
குதிரைக்குளம்பன் - ஓர்வகைப் பொற்காசு.
குதிரைக்குளம்பு-நீர்க்குளிரி.
குதிரைக்குளம்புமோதிரம் - ஓர்வகை ஆழி.
குதிரைச்சம்மட்டி } குதிரையடிக்குங் கயிறு.
குதிரைச்சவுக்கு } குதிரையடிக்குங் கயிறு.
குதிரைச்சாணி-குதிரைக்காரன், குதிரைவிட்டை, குதிரைவைத்தியன்.
குதிரைச்சாலை-குதிரைலாயம்.
குதிரைப்பசிரி-குதிரைப்பயிரி.
குதிரைச்சீட்டு-பந்தயச்சீட்டு.
குதிரைப்பட்டை-ஓடுதாங்கி.
குதிரைப்பந்தயம் - குதிரையோட்டத்துக்கு வைக்கும்பந்தயம்.
குதிரைப்பந்தி-குதிரைச்சாலை.
குதிரைப்பயிரி-ஓர்பூடு.
குதிரைப்பற்பாஷாணம் - ஓர்பாஷாணம்.
குதிரைப்பாகன்-குதிரைவிடுவோன்.
குதிரைப்பிடுக்கன்-பீநாறிமரம்.
குதிரைமசாலி-தேன்மரம்.
குதிரைமரம்-கால்வாய்யடைக்குங்கதவு
குதிரைமறி-குதிரைக்குட்டி, பெண்குதிரை.
குதிரைமார்க்கம்-குதிரைசெல்வழி.
குதிரைமுகம்-நளகம்.
குதிரையங்கபடி-குதிரையேறும்படி.
குதிரையாளி-வைரவன்.
குதிரையிலக்கணம் - குதிரையின் சுழிமுதலிய வுறுப்புகள்.
குதிரையேறல்-தோற்றோர்மேலேறல் பரிமேலேறல்.
குதிரையேற்றம் - குதிரையேறும் பயிற்சி.
குதிரைராவுத்தன்-மாவுத்தன்.
குதிரைலாயம்-குதிரைப்பந்தி.
குதிரைவலி-ஓர்நோய்.
குதிரைவாய்க்கருவி-கடிவாளம்.
குதிரைவாய்வடம்-குசைக்கயிறு.
குதிரைவாலி-ஓர்சாமை, ஓர்புல்.
குதிரைவாலிச்சம்பா-ஓர்நெல்.

குதிரைவாலிச்சாமை-ஓர்தானியம்.
குதிரைவையாளிவீசி-புரவிவட்டம்.
குதிர்-கூடு, நென்முதலிய வைக்குங் கூடு.
குதிர்தல் } செவ்வைப்படுதல்.
குதிர்படுதல் }
குதிவாதம்-ஓர்நோய்.
குதுகம் } விருப்பம்.
குதுகலம் }
குதுகுலித்தல்-மிகுகளிகொள்ளல்.
குதுகுலிப்பு - மயிர்ச்சிலிர்ப்பு, மிகுமகிழ்ச்சி.
குதுபம்-தினத்தி னெட்டாவது முகூர்த்தகாலம், வாசற்படி.
குதும்பகர்-தும்பை.
குதுவை-அடைவு, ஈடு.
குதூகலம்-விருப்பம்.
குதூணகம்-கண்ணோயினொன்று.
குதை-பசி, பணிப்பூட்டு, பாசி, முனை, விற்குதை.
குதைமணி-சட்டைத்தெறி.
குத்தகை-மதித்துக்கொள்ளல், மதியத்துக்குவிற்றல்.
குத்தகைகாரன்-மதியத்துக்கு வாங்கினவன்.
குத்தகைவேலை-பெருத்தவேலை.
குத்தம்-இரட்சித்தல்.
குத்தரசம்-பெருங்காயம்.
குத்தல் - அடித்தல், உரோசம்வரப்பேசல், உறைக்கச்சொல்லல், ஒருவர் சொன்னசொற்றைத்தல், குத்துதல், இஃது நால்வகை யூறுபாட்டினொன்று, மெய்ப்பரிச மெட்டினுமொன்று, சிறுகவார்த்தல், நெரித்தல், புதைத்தல், வாயுமுதலிய வடைதல்.
குத்தாலம்-காட்டாத்தி.
குத்தாலா-கடுகுரோகிணி.
குத்தி-அடக்கம், குற்றி, சிறுகுடுவை மண்.
குத்திக்கொல்லர் - பண அஞ்சற்காரர்.
குத்திடுதல் - குத்தியள்ளுதல், நிறுதிட்டம்.
குத்திப்பேசல்-உரோசம்வரப் பேசல், உறைக்கப்பேசல்.
குத்திரம் - குரூரம், சணல், சீக்கிரம், சுடுசொல், பொய், மலை, வஞ்சகம்.
குத்திரன்-வஞ்சகன்.
குத்து - உலக்கைமுதலியவற்றாற் குற்றல், குத்தென்னேவல், கையைப்புதைத்தள்ளல், சணல், தைத்தல், நிறுதிட்டமானது, நேர், வாயுக்குத்து.
குத்துகோல் } முட்கோல்.
குத்துக்கோல் }
குத்துக்கரணம்-ஓர்விளையாட்டு.
குத்துக்காந்தை-ஓர்கரந்தை.
குத்துக்கரளை-ஓர்காளை.
குத்துக்கால்-தேரினிறுத்துங் கால்கள், நிறுதிட்டமாய் நிற்குங்கால்.
குத்துக்காற்சம்மட்டி-ஓர்மரம்.
குத்துக்காற்பயறு-ஓர்பயறு.
குத்துக்குளம்பு-குத்தென நிற்குங்குளம்பு.
குத்துக்கோளை-ஓர்கோளை.
குத்துச்செடி - நிலம்பற்றிப் படராத செடி.
குத்துணி-ஓர்புடவை, தழுக்குணி.
குத்துதல்-குத்தல்.
குத்துத்திராய்-ஓர்கீரை.
குத்துப்பகன்றை-ஓர்செடி.
குத்துப்பயளி-ஓர்கீரை.
குத்துப்பன்னீர்-ஓர்மரம்.
குத்துப்புள்-புள்ளடித்தலிலோர்வகை.
குத்துப்போர்-நிறுதிட்டமாய் வைக்குஞ்சூடு.
குத்துவாய்-கடிவாய்.
குத்துவாள்-சுரிகை.
குத்துவிளக்கு-ஓர்விளக்கு.
குத்தூசி-ஓர்கருவி.
குத்தெண-நேரே.
குநீதி-துன்னீதி, நீதிகேடன்.
குந்தகம் } குழப்பம், கோள், தடை.
குந்தக்கம் }
குந்தமம்-பூனை.
குந்தம் - ஓர்நிதி, ஓர்பாஷாணம், கண்ணோய், குதிரை, குபேரன் நவநிதியிலொன்று, குருந்தமரம், கைவேல், சிறுசவளம், சூலம், நான்குபலம், நோய், பெருஞ்சவளம்.
குந்தரைத்தல்-வீணயிருத்தல்.
குந்தலிக்கம்-வெள்ளைப்போளம்.
குந்தளம் - தேயமைம்பத்தாறினொன்று, பெண்மயிர், மயிர்க்குழற்சி, மயிர்ப்பொது.

குந்தளை - தைலபாத்திரம் வைக்குங் கருவி.
குந்தனம்-மணியழுத்தல்.
குந்தா-கப்பலின் பிற்பக்கம், துப்பாக்கியின் அடி.
குந்தாணி-குந்தநோய், பருவுரல்.
குந்தாணிப்பீரங்கி-ஓர்பீரங்கி
குந்தாலம்-ஓர்புள்.
குந்தாலி-கொந்தாலி.
குந்தாளித்தல்-களித்துக்குதித்தல்.
குந்தாளம்-மண்வாருங்கருவி.
குந்தாளித்தல், குந்தாளிப்பு } குந்தாலித்தல்.
குந்தாள்-குந்தாளம்.
குந்தி-ஓர்சீட்டு, கள், பாண்டவர்தாய்.
குந்திக்குந்திநடத்தல் - இருநினைவாய் நடத்தல், குந்துகால்வைத்து வைத்து நடத்தல்.
குந்தியடித்தல்-ஓர்விளையாட்டு.
குந்திரம்-ஓர்புள்.
குந்திரிகம், குந்திருக்கம் } குங்குலியம்.
குந்து-ஒட்டுத்திண்ணை, குந்துதல், குந்தெனனேவல், திண்ணையருகு, தும்பு.
குந்துகாலி-அடிப்பலமற்றமரம், கிந்தி நடப்பவள்.
குந்துகாலினிற்றல்-படங்குந்திநிற்றல், விரைவைக்காட்டிநிற்றல்.
குந்துதல்-கிந்துதல்,குந்தியிருத்தல்.
குந்துத்தடி - குந்தெடுக்கு, மலக்குத்தடி.
குந்துரு, குந்துருக்கம் } ஓர்சரக்கு, ஓர்மரம்.
குந்தெடுத்தல்-தும்பெடுத்தல்.
குபங்கம்-அருவருத்தசேறு.
குபசுபா-காஞ்சிரை.
குபதம்-துன்னடை, பாழ்வழி.
குபலம்-நட்டம், பலவீனம்.
குபாணி-கோணற்கையன்.
குபாதன் - செவ்வையாய்நடக்க வறியாதவன்.
குபிதம்-கோத்தல், கோபம்.
குபிதாந்தகம்-துன்மரணம்.
குபிலன்-அரசன்.
குபிஞர்-வலைஞர்.
குபினி-வலை.
குபீரிடுதல்-இரத்தமுதலிய விரைந்து பாய்தற்குறிப்பு.
குபீர்குபீரெனல்-ஈரடுக்கொலிக்குறிப்பு
குபுத்திரன்-இழிகுலபுத்திரன், துற்புத்திரன்.
குபுருஷன்-துட்டன்.
குபேரகம்-சின்னி.
குபேரசைலம்-கைலைமலை.
குபேரன் - சந்திரன், தனதன், வடக்கு, வடதிசைப்பாலன்.
குபேரிகை-வட்டத்திருப்பி.
குபேராட்சி - கொடிப்புன்கு, பாதிரி.
குபையம்-சிறுபுள்ளடி.
குபோதகி-வசலை.
குப்பக்காடு-காட்டிலுற்ற கிராமம்.
குப்பம்-கிராமம், குப்பல், திடர்.
குப்பலை-குப்பளை.
குப்பல்-குவியல், கூட்டம்.
குப்பளை-ஓர்செடி.
குப்பாமணி-குப்பைமேனி.
குப்பாயசம்-சரீரம்.
குப்பாயம்-சட்டை, மேற்போர்வை.
குப்பி-ஓர்பாண்டம், மாதர் தலையணியிலொன்று, வீணையின் முருக்காணி.
குப்பிக்குட்சமைந்தகன்னி - பஞ்சபட்சிபாஷாணம்.
குப்பிடுக்கடுக்கன் - ஓர்வகைக்கடுக்கன்.
குப்பிசாரம்-காசிசாரம்.
குப்பிச்சரக்கு-பதங்கவைப்பு.
குப்பிமா-மாக்கல்லு.
குப்பியசாலை-பித்தளைப்பாத்திரஞ் செய்யுமிடம்.
குப்பியம் - பொன் வெள்ளி தவிர்ந்த லோகம்.
குப்பிலவணம்-வளையலுப்பு.
குப்பிவைப்பு-குப்பியில் வைத்துச்செய்யுஞ்சரக்கு.
குப்புக்குப்பெனல் -ஈரடுக்கொலிக்குறிப்பு.
*குப்புஜம்-புங்காக்காய்.
குப்புக்கிரதன்-ஒழுக்கங்குன்றிய பார்ப்பான்.
குப்புழாய், குப்புழை } ஓர்செடி.
குப்புறக்கிடத்தல்-அதோமுகமாய்க் கிடத்தல்.

குப்புறல் - கடத்தல், குதித்தல், பாய்தல்.
குப்புறவிழுதல் - முகந்தரைநோக்கவிழுதல்.
குப்பெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
குப்பை - கஞ்சல், குவிவு, கூட்டம், மேடு.
குப்பைக்கீரை-முட்கீரை.
குப்பைச்சி-குதனைக்கேடுள்ளவள்.
குப்பைப்பருத்தி-உப்பம்பருத்தி.
குப்பைமேனி-ஓர்பூடு.
குப்பையன்-குதனைக்கேடுள்ளவன்.
குப்பைவாரி-ஓர்கருவி,விளக்குமாறு.
குமஞ்சம், குமஞ்சான் } ஓர்சாம்பிராணி.
குமடு-கன்னம்.
குமட்டல்-தெவிட்டல்.
குமட்டி-ஓர் சுரைக்கொடி.
குமட்டு-ஒக்காளம், நிறைவு, வயிற்றுப்புரட்டு.
குமட்டுகல்-அருவருத்தில், குடலைப்புரட்டல், தேக்கெடுத்தல்.
குமண்டையிடுதல் - நிறைந்துதெவிட்டல்.
குமதி-துன்மதி, புத்திகேடன்.
குமரகண்டம்-ஓர்வலி.
குமரகம்-மாவிலிங்கு.
குமரதானம் - எழுத்துத்தானமைந்தினொன்று.
குமரம் - ஓரிலக்கணநூல், கொம்பிலாவிலங்கு.
குமரன்-ஆண்மகன், இளையோன், பதினாறுவயசுமுதல் முப்பத்திரண்டு வயசுக்குட்பட்டவன், மகன், முருகன், வயிரவன்.
குமரி-அழிவின்மை, அழுகண்ணி, ஓர்கண்டம்.கற்றாழை, கன்னி, காணி, சத்தநதிகளினொன்று, சத்தமாதர்களிலொருத்தி, சத்திசாரணை, பருவமுடையவள், புதல்வி, மகள்.
குமரிகண்டம்-நவகண்டத்தொன்று.
குமரிக்கோடு-ஓர்மலை.
குமரிச்சேர்ப்பன்-பாண்டியன்.
குமரிதாழல்-ஓர்பூடு.
குமர் - கன்னியழியாமை, விவாகமில்லாதபெண்.
குமல்-அரிவாள்.
குமளம்பாசு-சுரைமீன்.
குமாரகன்-குமரன்.
குமாரதந்திரம்-ஓர்நூல்.
குமாரத்தி-இராசாவின்மகள், புத்திரி.
குமாரபாலன்-சாலிவாகனன்.
குமாரம்-ஓடவைத்தபொன்.
குமாரவாகனம்-மயில்.
குமாரவிருத்தியை-பிள்ளைப் பரிகாரம்பண்ணும்பெண், மருத்துவிச்சி.
குமாரன் - இராசபுத்திரன், குமரன், மகன், முருகன், வாலிபன்.
குமாரி-குமாரிகை, சுவர்ணபேதி, துர்க்கை.
குமாரிகை - பத்துவயசுதுவக்கிப் பன்னிரண்டுவயசுப்பெண்.
குமானை-ஓர்நதி.
குமாலகம்-சவ்வீரதேசம்.
குமிகை - இளவெள், எள்ளு, வெள்ளெள்.
குமிடக்கல்-சிட்டகல்.
குமிட்கல்லு-கற்கிட்டம்.
குமிட்டித்தல்-திரளுதல்.
குமிட்டிப்பு-திரட்சி.
குமிட்டில்-ஓர்கீரை.
குமிட்டு-குவியல்.
குமிதம், குமிதிகம் } தேக்கமரம்.
குமித்தல்-குவித்தல், மிகக்குத்தல்.
குமிலம்-பேரொதி.
குமிழி - குமிழ்ப்புவடிவுள்ளது, நீர்க்குமிழி.
குமிழிக்கொள்ளுதல்-கொப்புள் வடிவுபடக்கிளர்தல்.
குமிழித்தல் - குமிழிக் கொள்ளுதல், கொப்பளித்தல்.
குமிழ்-உள்ளங்காற்கட்டி, எருத்துத்திமில், ஓர்மரம், குமிழி, குமிழ்ப்பு, நாணல்.
குமிழ்ப்பு-புடைப்பு, புளகம்.
குமிழ்வண்டு-குடைவண்டு.
குமிள்-ஓர்மரம், குமிழ்.
குமிளி-குமிழி
குமீர்குமீரெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
குமுகம்-பன்றி.
குமுகுமுத்தல், குமுகுமெனல் } மிகுமணக்குறிப்பு.

குமுக்கு-உதவி, திரட்சி, தொகை.

குமுணன்-முதலெழுவள்ளலி லொருவன்.

குமுதகம்-ஓர்சித்திரக்கம்பி.

குமுதசகாயன் } சந்திரன்.
குமுதநண்பன் }

குமுதபதி-சந்திரன்.

குமுதபாந்தவம்-கர்ப்பூரம்.

குமுதபாந்தவன்-சந்திரன்.

குமுதம் - அடுப்பு, ஆம்பல், கருப்பூரம், கற்பாஷாணம், குமுதகம், கூட்டம், செவ்வாம்பல், தருப்பை, தென்மேற்றிசையானை, படையிலோர்தொகை அஃது சேனைமுகம்மூன்றுகொண்டது, பேரொலி, வக்கிராந்தபாஷாணம், வெள்ளாம்பல், வெள்ளி, வெள்ளைப்பாஷாணம்.

குமுதன் - குரங்குப் படைத்தலைவரிலொருவன்.

குமுதாட்சன்-ஓர்பிதிர்தேவதை.

குமுதாதாரம்-வாயுலோகம்.

குமுதிகை-பூசினி.

குமுதிசை-ஓர் வாசனைமரம்.

குமுதினி-குவளைத்தடாகம், குவளைப்பூத்திரள்.

குமுதேசன்-சந்திரன்.

குமுதை-ஓர்பூடு, ஓர்மரம்.

குமுந்தம்-கற்பாஷாணம்.

குமுரம்-சித்திரக்கம்பி.

குமுலி-துளசி.

குமுறல் } அதிர்த்தல், ஒலித்தல், கிளர்தல், கொதித்தல்,
குமுறுதல் }
பேசலாலெழுமொலி, பேரொலி, முழக்கம்.

குமேரு-தென்முனை.

குமைஞ்சான்-குமஞ்சான்.

குமைதல்-அழிதல், குழைதல்.

குமைத்தல் - அழித்தல், குழையப்பண்ணல்.

குமையல்-குழைவானது, குழைவு.

குமைவு-அழிவு, குழைவு.

குமோதகன்-விட்டுணு.

கும்பகம் - கற்றுழை, சாலாங்கபாஷாணம், தொட்டிபாஷாணம், பிராணாயாமத்தொன்று அஃது கும்பித்தல்.

கும்பகலசம்-சடங்குஸ்தாபன குடகலசம்.

கும்பகன்னன்-இராவணன்றம்பி.

கும்பகாமாலை-பித்தகாமாலை.

கும்பகாம்போதி-ஓர்பண்.

கும்பகாரகன் } குயவன்.
கும்பகாரன் }

கும்பகாரி-கண்ணிடுமை, குசத்தி, செம்பாஷாணம்.

கும்பகாரிகை - கண்ணிடுமருந்து, குசத்தி.

கும்பகோணம்-ஓர்பட்டினம், மோசம்.

கும்பசந்தி - யானைக்கும்பலத்தலத்திடையுள்ளவிடம்.

கும்பசம்பவன்-அகத்தியன், துரோணாசாரியன், வசிட்டன்.

கும்பசலம்-பூசாகும்பநீர்.

கும்பசன்-அகத்தியன், துரோணாசாரியன்.

கும்பசாலை-குசக்கலம்வனையுமிடம்.

கும்பஞ்சரிதல்-கழுத்துமடிதல்.

கும்பஞ்சான்-சிவதை.

கும்பஞ்செய்தல் - குவித்தல், பிரேதமடக்கல்.

கும்பதாசி-சங்கதூதி, வேசி.

கும்பதாபனம் } தேவர்க்குத்தாபனமாகக்கும்பம்வை
கும்பஸ்தாபனம் }
த்தல்.

கும்பதெட்சணை - கும்பத்திற்போடுங்காசு.

கும்பநிறுத்தல் - கும்பஸ்தாபனம்பண்ணல்.

கும்பப்பிள்ளை - கும்பத்திற்பிள்ளைக்கட்டு.

கும்பமுனி-அகத்தியன்.

கும்பம்-ஓர்ராசி, ஓர்பாஷாணம், குடம், குவியல், சிவதை, தோண்மேல், நெற்றி, யானைமத்தகம்.

கும்பம்வைத்தல் - கும்பதாபனம் பண்ணல்.

கும்பயோனி - அகத்தியன், துரோணாசாரியன், வசிட்டன்.

கும்பல்-கும்புதல், குவியல், கூட்டம்.

கும்பவத்திரம்-கும்பத்துக்குச் சார்த்தும் வத்திரம்.

கும்பவாதம்-ஓர்வாதநோய்.

கும்பவிம்பம்-தொட்டிபாஷாணம்.

கும்பளமோசு-குளாமீன்.

கும்பலம்-பூசணி.

குமுக்கு-உதவி, திரட்சி, தொகை.
குமுணன்-முதலெழுவள்ளலி லொரு வன்.
குமுதகம்-ஓர்சித்திரக்கம்பி.
குமுதசகாயன் } சந்திரன்.
குமுதநண்பன் }
குமுதபதி-சந்திரன்.
குமுதபாந்தவம்-கர்ப்பூரம்.
குமுதபாந்தவன்-சந்திரன்.
குமுதம் - அடுப்பு, ஆம்பல், கருப்பூரம், கற்பாஷாணம், குமுதகம், கூட்டம், செவ்வாம்பல், தருப்பை, தென்மேற்றிசையானை, படையிலோர் தொகை அஃது சேனைமுகமூன்று கொண்டது, பேரொலி, வக்கிராந்த பாஷாணம், வெள்ளாம்பல், வெள்ளி, வெள்ளைப்பாஷாணம்.
குமுதன் - குரங்குப் படைத்தலைவரி லொருவன்.
குமுதாட்சன்-ஓர்பிதிர்தேவதை.
குமுதாதாரம்-வாயுலோகம்.
குமுதிகை-பூசினி.
குமுதிகை-ஓர் வாசனைமரம்.
குமுதினி-குவளைத்தடாகம், குவளைப்பூத்திரள்.
குமுதேசன்-சந்திரன்.
குமுதை-ஓர்பூடு, ஓர்மரம்.
குமுந்தம்-கற்பாஷாணம்.
குமுரம்-சித்திரக்கம்பி.
குமுலி-துளசி.
குமுறல் } அதிர்த்தல், ஒலித்தல், கிளர்தல், கொதித்தல்,
குமுறுதல் }
பேசலாலெழுமொலி, பேரொலி, முழக்கம்.
குமேரு-தென்முனை.
குமைஞ்சான்-குமஞ்சான்.
குமைதல்-அழிதல், குழைதல்.
குமைத்தல் - அழித்தல், குழையப்பண்ணல்.
குமையல்-குழைவானது, குழைவு.
குமைவு-அழிவு, குழைவு.
குமோதகன்-விட்டுணு.
கும்பகம் - கற்சூழை, சாலாங்கபாஷாணம், தொட்டிபாஷாணம், பிராணாயாமத்தொன்று அஃது கும்பித்தல்.
கும்பகலசம்-சடங்குஸ்தாபன குடகலசம்.
கும்பகன்னன்-இராவணன்றம்பி.
கும்பகாமாலை-பித்தகாமாலை.
கும்பகாம்போதி-ஓர்பண்.
கும்பகாரகன் } குயவன்.
கும்பகாரன் }
கும்பகாரி-கண்ணிடுமை, குசத்தி, செம்பாஷாணம்.
கும்பகாரிகை - கண்ணிடுமருந்து, குசத்தி.
கும்பகோணம்-ஓர்பட்டினம், மோசம்.
கும்பசந்தி - யானைக்கும்பலத்தலத்திடையுள்ளவிடம்.
கும்பசம்பவன்-அகத்தியன், துரோணாசாரியன், வசிட்டன்.
கும்பசலம்-பூசாகும்பநீர்.
கும்பசன்-அகத்தியன், துரோணாசாரியன்.
கும்பசாலை-குசக்கலம்வனையுமிடம்.
கும்பஞ்சரிதல்-கழுத்துமடிதல்.
கும்பஞ்சான்-சிவதை.
கும்பஞ்செய்தல் - குவித்தல், பிரேதமடக்கல்.
கும்பதாசி-சங்கதாதி, வேசி.
கும்பதாபனம் } தேவர்க்குத்தாபனமாகக்கும்பம்வைத்தல்.
கும்பஸ்தாபனம் }
கும்பதெட்சணை - கும்பத்திற்போடுங்காசு.
கும்பநிறுத்தல் - கும்பஸ்தாபனம்பண்ணல்.
கும்பப்பிளவை - கும்பத்திற்பிளவைக்கட்டு.
கும்பமுனி-அகத்தியன்.
கும்பம்-ஓரிராசி, ஓர்பாஷாணம், குடம், குவியல், சிவதை, தோண்மேல், நெற்றி, யானைமத்தகம்.
கும்பம்வைத்தல் - கும்பதாபனம் பண்ணல்.
கும்பயோனி - அகத்தியன், துரோணாசாரியன், வசிட்டன்.
கும்பல்-கும்புதல், குவியல், கூட்டம்.
கும்பவத்திரம்-கும்பத்துக்குச் சார்த்தும் வத்திரம்.
கும்பவாதம்-ஓர்வாதநோய்.
கும்பவிம்பம்-தொட்டிபாஷாணம்.
கும்பளமோசு-குளமீன்.
கும்பலம்-பூசணி.

கும்பளா-ஓர்மீன்.
கும்பன்-ஓரிராக்கதன், தூர்த்தன்.
கும்பா-ஓர்பாத்திரம்.
கும்பாகுடம்-கும்பம்வைக்கிறகுடம்.
கும்பாரம்-அம்பாரம், கும்பம்.
கும்பாபிஷேகம்-தூபிவைத்தல், விக்கிரகதாபனம்.
கும்பி-கும்பராசி, கும்பியென்னேவல், குவியல், சிவதை, சுடுசாம்பல், சேறு, தாலம்பபாஷாணம், நரகம், நெருப்பு, நெற்றி, பலண்டுறுகம், மண்பாத்திரம், யானை, வயிறு.
கும்பிடரி - கமக்காரனிடத்து வெளிப்பாடுகொண்டுபோகுமரிவி.
கும்பிடல்-கைகூப்பல், வணங்கல்.
கும்பிடு-வணங்குகை
கும்பிடுகிளிஞ்சல்-ஓர்கிளிஞ்சல்.
கும்பிடுசட்டி-தீச்சட்டி.
கும்பிடுதல்-கும்பிடல்.
கும்பிடுபூச்சி-ஓர்பூச்சி.
கும்பிட்டுக்கட்டுதல் - தழுவிக்கொள்ளுதல்.
கும்பித்தல் - பிராணவாயுவைச்சமப்படுத்தியடக்கல்.
கும்பிபாகம்-ஓர்நரகம்.
கும்பிமதம்-யானைமதம்.
கும்பியழித்தல்-ஓர்விளையாட்டு.
கும்பிலன்- திருடன், மைத்துனன்.
கும்பீடு-வணக்கம்.
கும்பீநசம்-பெரும்பாம்பு.
கும்பீநசி-இராவணன்சிற்றாய்.
கும்பீரம் } முதலை.
கும்பிலம் }
கும்பு-கூட்டம்.
கும்புதல்-அடிப்பற்றுதல்.
கும்பை-ஓர்வாழை, குடம், கும்பகோணம், பூசாவேதிகை, வேசி.
கும்மட்டம் - ஓர்வாத்தியம், கோவிலின்தூபி, வளைவு, விளக்கேற்றக் காகிதமுதலிய வற்றாற்கட்டுங்கூடு.
கும்மட்டி-ஓர்கூத்து, ஓர்வாத்தியம்.
கும்மட்டிக்காய் - ஆற்றுத் தும்மட்டிக்காய்.
கும்மலி-தடித்தவள்.
கும்மல்-அடித்தல், அரிவாள்.
கும்மாயம்-குழம்பு, சுண்ணாம்பு.
கும்மாளங்கொட்டுதல் - குதித்து கையொடுகை தட்டல்.
கும்மாளம் } குதியன்.
கும்மாளி }
கும்மி-ஓர்பிரபந்தம், மகளிர்கூத்து.
கும்மிப்பாட்டு-மகளிர்பாடலிலொன்று
கும்முதல்-குதம்புதல்.
கும்மெனல்-இருட்குறிப்பு.
குயக்கலம்-மண்பாண்டம்.
குயக்காலம்-கிலக்கடம்பு.
குயத்தினலகை-நிலவாகை.
குயபீசகம்-எட்டிமரம்.
குயமயக்கு-குழம்பு.
குயம்-இளமை, கொடுவாள், தருப்பை முலை.
குயவரி-புலி.
குயவர்-கும்பக்காரர்.
குயவிரிவு-மண்பாண்டங்களின் பொரிவு.
குயவு-தேர்.
குயா-கோங்குமரம்.
குயித்தல்-செய்தல்.
குயில்மொழி-குயின்மொழி.
குயிலல்-இழைத்தல், செய்தல், சொல்லல்.
குயிலன்- தேவேந்திரன்.
குயிலாயம்-சுவரறை, பறவைக்கூடு, மட்கலம்வனையுங்கூடம்.
குயிலுதல் - அழுத்துதல், அழைக்குதல், உண்டாக்கல், உயருதல், ஊடுருவுதல், ஒலித்தல், கட்டுதல், கூப்பிடுதல், செய்தல், சொல்லுதல், துளைத்தல், தைத்தல், நெருங்குதல், பின்னல்.
குயிலுவம் - சூத்திரரறுதொழிலினொன்று இதுதோற்கருவிகளைக் கொட்டலும் துளைக்கருவிகளை யூதலும் நரம்புக் கருவியை யிசைத்தலும்.
குயிலுவர்-தோல்வினைஞர், நரம்புக்கருவிக்குரியோர்.
குயில்-இசைக்குழல், ஓர்புள், குயிலென்னேவல், சொல், துளை, துளையுடைப்பொருள், முகில்.
குயிறல் - அழைத்தல், செய்தல், சொல்லுதல், துளைத்தல், நெருங்கல்.
குயிற்கண்மணி-சௌகந்திகப் பதுமராகம்.

குயிற்றல்-செய்தல், சொல்லுதல், பதித்தல்.
குயின்-மேகம்.
குயின்மொழி - அதிமதுரம், குயிலின்குரல்.
குயுத்தி-நிந்தை, பரிகாசச்சொல், மனநிமிர்ச்சி.
குய் - சாம்பிராணிப்புகை, தாளித்தகறி, நறும்புகை.
குய்யகர்-தேவசாதியிளோர்பேதம்.
குய்யதீபகம்-மின்மினி.
குய்யபாஷிதம்-மந்திரம்.
குய்யபீசகம்-எட்டிமரம்.
குய்யம் - அபானவாயில், ஆண்குறி, பெண்குறி, பொய், மறைவு, வஞ்சகம்.
குரகதம் - குதிரை, குதிரைப்பற்பாஷாணம்.
குரகம்-நாகணவாய்ப்புள், நீர்வாழ்பறவை.
குரகர்-சாகதீவார்.
குரக்கன்-கேழ்வரகு.
குரக்கு-குரங்கு.
குரங்ககம்-மான்.
குரங்கநாபி-கஸ்தூரி.
குரங்கம் - எட்டிமரம், மான், விலங்கின்பொது.
குரங்கல்-தாழ்தல்.
குரங்கன்சுறு-ஓர்மீன்.
குரங்கி-சந்திரன்.
குரங்கு-குரங்கென்னேவல், கொளுக்கி, தொடை, மந்தி, முசுமுசுக்கை, விலங்கின்பொது.
குரங்குகடியன் - பழுதுற்றதேங்காய், முகிழடிசுருங்கினகாய்.
குரங்குச்சேட்டை-குணங்கெட்ட செய்கை.
குரங்குதல்-இணங்குதல், குரங்கல், வணங்குதல், வளைதல்.
குரங்குப்பிடி-விடாதுபிடித்தல்.
குரங்குமுடி-ஓர்வகைமுடி.
குரங்குவலி-ஓர்நோய்.
குரங்குவாற்பூட்டு - கதவிற்பூட்டுகளிலொன்று.
குரங்குளை-சுருண்டபிடர்மயிர்.
குரச்சை-குதிரைக்குளம்பு.
குரஞ்சி-ஓர்பண்.
குரடன்-சக்கிலியன்.
குரணம்-முயற்சி.
குரண்டகம்-பச்சைப்பூவுள மருதோன்றிமரம், பொன்மைகலந்த சிவப்பு.
குரண்டநாசிநி
குரண்டநாசி } பருத்திச்செடி.
குரண்டம்-கொக்கு.
குரத்தம்-ஆரவாரம்.
குரத்தி - ஐயை, குருவின்மனைவி, தலைவி.
குரப்பம்-குதிரைமயிர்கோதுஞ்சீப்பு.
குரமடம்-பெருங்காயம்.
குரம் - ஒலி, குதிரைக்குளம்பு, தருப்பை, பசு, பாகல், விலங்கின்குளம்பு.
குரம்பு-செய்கரை, வரம்பு.
குரம்பை - உடல், சிறுகுடில், பறவைக்கூடு, முட்டை.
குரரி-பெண்ணுடு.
குரலம்-நெற்றியிலசையுஞ் சுரிமயிர்.
குரலீனம்-கழுதை.
குரலெடுத்தல் - பெருங்குரலெடுத்தல்.
குரல் - இரகு, இன்னிசை, எழிசையிலொன்று, ஒலி, ஓசை, கதிர், தினை, பாதிரிமரம், பெண்மயிர், மயிர்ச்சுருள், மிடறு, மிடற்றுற் பிறக்குமிசை, யாழ்நரம்பினோசை, யாழ்நரம்பு, *பூங்கொத்து.
குரல்வளை-மிடறு.
குரவகம் - செம்பூவுள்ள மருதோன்றிமரம், வாடாக்குறிஞ்சி.
குரவம்-ஓர்மரம், கோட்டம், நறுமணம், பேரீந்து.
குரவரம்-குறிஞ்சா.
குரவர் - அரசர், உவாத்தி, குரு, தந்தை, மூத்தோர்.
குரவளை-குரல்வளை.
குரவன்-அரசன், உவாத்தி, குரு, தந்தை, பிரமன், மந்திரி, முற்பிதா, மூத்தோன்.
குரவு-குராமரம், நறுமணம்.
குரவுநிறமணி - கோவரங்கப் பதுமராகம்.
குரவை-ஒலி, ஓர்மீன், கடல், கூத்து, கைகோத்தாடல், பெருஞ்சத்தம்.
குரவையிடுதல் - கூப்பிடுதல், சத்தஞ்செய்தல்.

குரற்காட்டுதல் - அழைத்தல், சத்தங் காட்டல்.
குரா-குரவுமரம்.
குராசானி-ஓர்பூடு.
குராசானிஓமம்-ஓர்பூடு.
குரால்-கபிலைநிறம், கோட்டான், பசு.
குரிகிற்முளி-ஓர்கிழங்கு.
குரிசில் - ஆண்மகன், இராசா, பெருமையிற்சிறந்தோன்.
குரீஇ-புள்.
குரீரம்-மைதுநம்.
குரு-அங்கிீரன் புதல்வரிலொருவன், ஆசான், இருமாத்திரை, இரும்பு செம்பு ஈயமுதலிய வுலோகங்களைப் பொன் வெள்ளியாகப் பேதிக்குஞ் சிந்தூரம், உவாத்தி, ஓரரசன், காத்திரம், காலதசப் பிரமாணத்தொன்று, அஃதுஇலகுஇரண்டுகொண்டது, சுத்தசலம், சோறு, துருசி, தேசமைம்பத்தாறி னொன்று, நிமிட மறுபத்துநான்கு கொண்டது, நிறம், பாரம், பிதா, பிரகாசம், பெருமை, மேன்மை, வகுரி, வருத்தம், வியாழம், வோர்க்குரு.
குருகடாட்சம்-குருவின்கிருபை.
குருகு-இளமை, உலைமூக்கு, குருக்கத்தி, கொய்யடிநாரை, கைவளை, சோழி, தேசமைம்பத்தாறி னொன்று, நாரை, நீர்ப்பறவை, பறவைப்பொது, மூலநாள், யானையின்மூளை, வட்டுக்குட்குருத்து, வெண்மை.
குருகுமணல் } வெண்மணல்.
குருமண் }
குருகுலம்-பலண்டுறுகப் பாஷாணம், பாரதர்குலம்.
குருகுலவேந்தர்-கௌரவர்.
குருகூர் } ஆழ்வார்திருநகரி.
குருகை }
குருக்கண்-குருட்டுக்கண், முலை.
குருக்கத்தி-ஓர்மரம்.
குருக்கன்-உருக்கன்.
குருக்கிரமம் - கன்னபாரம் பரியமாய்வழங்குவது.
குருக்கு - இக்கிரி, பிரமதண்டுச் செடி வடலிமுதலியன நெருங்கிய தோப்பு.
குருக்குத்தி - ஓர்முட்செடி, நெல்லைச் சடைவிக்கும் வியாதி.
குருக்கேத்திரம்-ஓர்தலம்.
குருக்கொடுத்தல் - ஏவிடல், கொடுமை செய்யத்தூண்டல், புத்திசொல்லுதல்.
குருக்கொள்ளுதல்-புத்திமுதிர்ச்சிகாட்டல்.
குருசம்-வேந்தோன்றி.
குருசந்தானம்-குருவமிசம்.
குருசந்திரயோகம் - வியாழனுஞ்சந்திரனுங் கூடியிருக்கும்யோகம்.
குருசாரபலன்-வியாழகெதியின்பலம்.
குருசூரியன்-வயிரமணி.
குருசேடம்-குருப்பிரசாதம்.
குருசேவை-குருவுக்குப்பணிசெய்தல்.
குருச்சனன்-சங்கைமான், தலைவன்.
குருச்சி-சீனக்காரம்.
குருடன் - கண்ணில்லான், சுக்கிரன், திருதராட்டிரன்.
குருடி-குருட்டுப்பெண்.
குருடு - அறிவின்மை, உறுப்புக்குறையெட்டினொன்று அஃது பார்வையின்மை, விளக்கமற்றது.
குருட்டடி-எழுந்தமானம்.
குருட்டாட்டம் - அறியாமை, குருட்டுத்தனம்.
குருட்டீ-ஓரிலையான்.
குருட்டுக்கல்-நிறமற்றகல்.
குருட்டுச்சாயம்-நிறமற்றசாயம்.
குருட்டுத்தனம்-குருட்டாட்டம்.
குருட்டுப்பத்தி-அறியாமையானபத்தி.
குருட்டுமை-எழுத்து விளங்காதமை.
குருட்டுவாக்கு - அறியாதவிதமாய்வந்தசெய்கை.
குருட்டுமுத்து-ஒளியற்றமுத்து.
குருட்டுவௌவால்-ஓர்வவ்வால்.
குருட்டெழுத்து - அக்கர சுத்தமில்லாதவெழுத்து.
குருணி-ஒருமரக்காலளவுள்ளது.
குருதக்கிணை - குருவுக்குக் கொடுக்குந்தட்சிணை.
குருதற்பகன் } குருவின் பன்னியைக் கற்பழித்தோன்.
குருதற்பி }
குருதி-இரத்தம், சிவப்பு, செவ்வாய், மூளை.
குருது-கிருதம், குதிர்.

குருத்தல் - குருப்பித்தல், பெருங்கோபம்.
குருத்து-இளமை, மரமுதலியவற்றின் குருத்து, விலங்கின் கொம்புக் குருத்து, வெண்மை.
குருத்தாக்கக்குதல் - குருத்து வருதல், பயிரின்குருத்துத்தெறித்தல்.
குருத்துரோகம்-பஞ்சபாதகத்தொன்று
குருத்துவம்-குருதத்துவம், மகத்துவம்.
குருத்துவிடுதல் } குருத்து வைத்தல்.
குருத்துவீசுதல் }
குருத்தெறிதல்-குருத்துவீசுதல்.
குருத்தோலை-இளவோலை.
குருநாடி-ஓர்நாடிவிதி.
குருநாதன்-குமரன், துருசு, பரமகுரு.
குருநாள்-பூசநாள்.
குருநிந்தை-பஞ்சபாதகத்தொன்று.
குருநிலம்-குருக்ஷேத்திரம்.
குருநோய்-வைசூரி.
குருந்தக்கல்-வச்சிரக்கல்.
குருந்து - காட்டுநாரத்தை, காட்டெலுமிச்சை, குருத்து, குருந்தக்கல், குழந்தை, வச்சிரக்கல்.
குருபதம்-சிரசிலோ ராதாரம், மோட்சம்.
குருபத்தி-குருவின்மேல் விசுவாசம்.
குருபத்திரம்-துத்தநாகம், புளியமரம்
குருபத்தினி-குருவின்மனைவி.
குருபரன்-குமரன், பரமகுரு.
குருபன்னி-குருபத்தினி.
குருபாரம்பரை-குருவமிசவழி.
குருபாலப்பிரபோதிகை-ஓர்நூல்.
குருபீடத்தாள்-குருவின்மனைவி.
குருபுகர்சந்திரயோகம் - வியாழன் சுக்கிரன் சந்திரன் மூன்று மோரிராசியினிற்பது.
குருபுடம்-வியாழபுடம்,
குருபுத்திரன்-குருவின்மகன், சீடன்.
குருபூசை-இறந்த குருவைக்குறித்துச் செய்யும் அன்னதானம், குருமாருக்குப் போசனங்கொடுத்தல், குருவணக்கம்.
குருப்பட்டம்-குருவபிஷேகம்.
குருப்பித்தல் - பருக்கொள்ளுதல், முளைத்தல்.
குருப்பிரசாதம் - குருவினால் வரப்பட்டது, குருவுண்ட சேடம்.
குருப்பிரமோதம் - குருவினாற் பெற்ற சந்தோஷம்.
குருப்பு-பரு.
குருப்பூச்சி-குருவண்டு.
குருமன் } குழந்தை, சிறுவுரு.
குருமான் }
குருமித்தல் - ஒலித்தல்,பேசலாலெழுமொலி.
குருமுகம்-குருமுகதா.
குருமுடித்தல் - உலோகங்களை நீற்றத்தக்க மருந்தைப்புடமிடுதல்.
குருமுறை-கோடாசுளி, சவுக்காரம்.
குருமூன் } குருமுகதா.
குருமூன்னிலை }
குருமூர்த்தம்-தேவன் குருவாகவருதல்.
குருமூர்த்தி-பரமகுரு.
குருமூலம்-குருவின்வாக்குமூலம்.
குருமை-பெருமை.
குரும்பட்டி-குரும்பை.
குரும்பம்-வலை.
குரும்பி-புற்றுஞ்சோறு.
குரும்பை-காதுக்குரும்பை, பனை தெங்கினிளங்காய், புற்றுஞ்சோறு.
குருவகம்-வெண்சிவப்பு.
குருவங்கனை-குருப்பன்னி.
குருவசனம்-குருமொழி.
குருவண்டு - துவரைச்செடியிலிருக்கிறவண்டு.
குருவருடம்-நவகண்டத்தொன்று.
குருவாக்கு-குருவசனம்.
குருவாரம்-வியாழக்கிழமை.
குருவால்-இத்திமரம்.
குருவி - குன்றிமணி, சிறுபறவை, மூலநாள்.
குருவிக்கார்-ஓர்நெல்.
குருவிக்குடல்-சிற்றினைப்பை.
குருவிக்கூடு-குருவிவைக்குங்கூடு.
குருவிச்சி } புல்லுருவி.
குருவிச்சை }
குருவிஞ்சி-ஓர்பூண்டு.
குருவித்தலைப்பாகல்-ஓர்வகைச்சிறுகாய்ப்பாகல்.
குருவித்தலைப்பாக்கு - ஓர்வகைச் சிறுபாக்கு.
குருவிந்தம்-குன்றிக்கொடி, கோரைக்கிழங்கு, சாதிலிங்கம், செம்மணி,

பதுமராகச்சாதி நான்கினென்று, முத்தக்காசு, வாற்கோதும்பை.
குருவிமீன்-ஓர்மீன்.
குருவிவாலான்-ஓர்நெல்.
குருவுக்காதி-பச்சைக்கருப்பூரம்.
குருவுபதேசம் - ஓமம்,குருப்பண்ணுமுபதேசம்.
குருவெனற்சாரம்-காசிசாரம்.
குருவேர்-ஓர்செடி.
குருளை-ஆமை, இளமை, நரி நாய் பன்றி புலி மான் முசு முயல் யாளிஇவற்றின் குட்டி.
குருள்-பெண்மயிர், முன்கொண்டை.
குரூபம்-அவலட்சணம்.
குரூபி-அவலட்சணம், உருவிலி.
குரூபின்-அவலட்சணம்.
குரூப்பியம்-துத்தநாகம்.
குரூரம்-கொடுமை.
குரை - அசைச்சொல், ஒலி, குதிரை, குளம்பு.
குரைத்தல்-எழுத்திலா வோசை, ஒலித்தல், குலைத்தல்.
குரைமுகன்-நாய்.
குரோசம்-கூப்பிடுதூரம்.
குரோசானியோமம் - குராசானி ஓமம்.
குரோட்டம்-நரி, பன்றி.
குரோட்டன்-ஆணரி.
குரோட்டு-பன்றி.
குரோதம் - உட்பகை யாறினென்று, சினம், விகாரமெட்டினென்று.
குரோதன - ஐம்பத்தொன்பதாவதுவருடம்.
குரோதன்-வீரபத்திரன்.
குரோதி-குரோதியென் னேவல், கோபி, பகைவன், முப்பத்தெட்டாவதுவருடம்.
குரோதித்தல்-பகைத்தல்.
குர்ப்பரம்-முழந்தாள்.
குர்வாணன்-சேவகன்.
குலகண்டன் - குலத்தை வடுப்படுத்துவோன்.
குலகருமம்-குலாசாரம்.
குலகன்னி-நல்லில்லாள், பதிவிரதை.
குலகாயம்-குலவொழுக்கம்,பேய்ப்புடல்
குலகாலம்-நிலக்கடம்பு.
குலகிரி-அட்ட-குலபருவதம்.
குலகுரு-சாதிக்குரு.
குலகூடஸ்தன்-உயர்குலத்தான்.
குலக்காயம்-பிறவிச்சுபாவம்.
குலாக்கு-குணுக்கு, குலை.
குலக்கொடி-குலஸ்திரி.
குலக்கொழுந்து-குலத்துக்கு முதலாயிருக்கும் அரியபிள்ளை.
குலசம்பலம்-குள்ளம்.
குலசம்பவன் - உயர்குலத்திற் பிறந்தோன்
குலசன் - ஒழுக்கங்குலம் வழுவாதபிதாமாதாவிடத்திற் பிறந்தோன்.
குலசுவேதகன்-சவ்ரிலோத்திரம்.
குலச்சிரேட்டன் - குலத்திலு மொழுக்கத்திலுங் கல்வியிலுமதிகன்.
குலடம்-மஞ்சணீர்ப்புத்திரன்.
குலடாபதி-வசவிகணவன்.
குலடி-செம்பாஷாணம்.
குலடை-குலாசாரந்தவறினவள்.
குலட்சயம்-குடியழிவு.
குலட்டு-குலை.
குலதருமம்-குலாசாரம்.
குலதாரகன்-புத்திரன்.
குலதிதி-நாலாமெட்டாம் பன்னிரண்டாந்திதி.
குலதிலகன்-குலாதிபன்.
குலதெய்வம் - அவ்வக்குலத்தார் வழிபடுந்தெய்வம்.
குலத்தம்-கொள்.
குலத்திகை-காட்டுக்கொள்.
குலத்திரி } கற்புள்ளவள்.
குலஸ்திரி }
குலத்தை-குலத்தை.
குலநாசகம்-ஒட்டகம்.
குலந்தை-குடிப்பழுது.
குலந்தெரித்தல்-குலப்பழிகூறல்.
குலபதி-குலாதிபன்.
குலபத்தினி-கற்புடையாள்.
குலபருவதம்-குலமலை.
குலபாலகம்-ஓர்தேன்தோடை.
குலபாலகன்-குலபுத்திரன்.
குலபாலிகை-கற்புடையாள்.
குலப்பம்-கக்குவான், செம்புமணல்.
குலப்பகை - சாதித் தொடர்ச்சியான பகை.
*குல்பௌ-கணுக்கால்.
குலமகள்-குலஸ்திரீ.

குலமகன்-நற்குடியிலுள்ளவன்.
குலமசாதி-நீலக்கல்.
குலமரியாதை - வமிசத்துக்கடுத்த சங்கை.
குலமலை-அட்டமலை.
குலமித்திரன்-குலானுசாரி.
குலமிலான்-குலவீனன்.
குலமுளோன்-நற்குலத்தோன்.
குலம் - அரண்மனை, இரேவதி, இனம், கற்கண்டு, கூட்டம், சாதி, மனை, விலங்கின்கூட்டம்.
குலம்பா-பேய்ச்சுரை.
குலம்பெயர்தல்-சாதிமாறுதல்.
குலரி-குலை.
குலவரை-துத்தநாகம், மந்தாரக்கல்.
குலவாரம்-அங்காரசுக்ரவாரங்கள்.
குலவித்தை-சாதிவித்தை.
குலவிருது-குலத்துக்குரியது.
குலவிருத்தியை-மருத்துவிச்சி.
குலவீனன்-கீழ்மகன்.
குலவுகாசம்-நாணல்.
குலவுவல்-உலாவுதல், கொண்டாடல், நட்புறல், பிரகாசித்தல், பொருந்தல், வளைதல்.
குலவுரி-சந்தனமரம், செஞ்சந்தனம்.
குலவை-குரவை.
குலன்-கலைவல்லோன், நலம்.
குலா - ஆடம்பரம், குலாவென்னேவல், கொண்டாடல், பட்சம், வளைவு.
குலாகுலதிதி-ஆருந்திதி.
குலாகுலவாரம்-புதவாரம்.
குலாங்கனை-உயர்குலத்தவள்.
குலாங்குலி-காவட்டம்புல்.
குலாசம்-குலமலை.
குலாசாரம்-குலநடை.
குலாசாரியன்-குலக்குரு.
குலாதனி-கடுரோகிணி.
குலாதாரகன்-புத்திரன்.
குலாதிக்கம்-குலவிசேடம்.
குலாதினி-கடகரோகிணி.
குலாத்திரி-குலபர்வதம்.
குலாபிமானம்-குலச்சங்கை.
குலாபு-முட்செவ்வந்தி.
குலாயம்-பறவைக்கூடு, வலை.
குலாரி-ஓர்வகைப்பண்டி.
குலாலம்-வரத்தொளை.
குலாலன்-குயவன்.

குலாலி-குயத்தி.
குலால்-செவ்வை.
குலாவல்-கொண்டாடல், சிநேகம், பாராட்டல், பொழுதுபோக்கல், வளைவு, வியத்தல்.
குலாவு-குலாவென்னேவல், கொண்டாட்டம்.
குலாவுதல்-சஞ்சரித்தல் சந்தோஷித்தல், பிரகாசித்தல், வளைதல்.
குலி-மனைவி, யாக்கை. [பந்து.
குலிகம்-இலுப்பை, சாதிலிங்கம்சிவப்பு
குலிகன் - மூங்கில்வேலைசெய்வோன்
குலிகாக்கிரீடை-பந்தடித்தல்.
குலிங்கம்-ஊர்க்குருவி, ஓர்தேசம், காக்கை, குதிரை, சாதிலிங்கம்.
குலிங்கர்-ஓர்சாதி.
குலிசபாணி-கந்தன், தெய்வேந்திரன்.
குலிசம் - இடியேறு, இலுப்பை, கற்பரிபாஷாணம், வச்சிரச்சோடு, வச்சிராயுதம், வன்னிமரம்.
குலிசல்-நாகபாஷாணம்.
குலிசன் - கற்பரிபாஷாணம், குலிசபாணி.
குலிசாசனன்-சாக்கியமுனி.
குலிநன் } குலமுள்ளோன்.
குலிஞ்சன் }
குலிந்தம்-தேயமைம்பத்தாறினொன்று.
குலிரம்-நண்டு.
குலிலி-வீராவேசவொலி.
குலீநசம்-நீர்.
குலீரம்-நண்டு.
குலீனன்-குலமுள்ளோன்.
குலுகுலுத்தல் - இரைதல், ஊருதல், சொறிதல்
குலுகுலுப்பு-தினவு.
குலுகுலெனல்-ஒலிக்குறிப்பு.
குலுக்கம்-ஓர்புள்.
குலுக்கி-பிலுக்கி.
குலுக்கு - அசைப்பு, குலுக்கென்னேவல், பிலுக்கு.
குலுக்குதல் - அசைத்தல், கெறுவங்காட்டுதல்.
குலுக்கெனல் - ஒலிக்குறிப்பு, குலுங்குதல்.
குலுக்கை-குதிர், கோரிக்கை.
குலுங்கல்-நடுங்கல்.
குலுங்குதல்-அசைதல், நடுங்கல்.

குலுசம்
குலுஞ்சம் } பூஞ்செண்டு.
குலுத்தம்-கணுக்கால், கொள்.
குலுமமூலம்-இஞ்சி.
குலுமம்-அணியைநடத்தல், ஓர்செடி, கோட்டை, படைத்தொகை, புற்கற்றை.
குலுமி-பாசறை.
குலேசன்
குலேச்சுரன் } குலநாயகன்.
குலை-அம்பின்குதை, ஈரற்குலை, குதை, குலையென்னேவல், கொத்து, செய்கரை, நடுக்கம், பூங்கொத்து, மரம் முதலியவற்றின் குலை, விற்குதை.
குலைகட்டுதல்-குலைபிடித்தல்.
குலைகுலைத்தல்-அச்சத்தானடுங்குதல்.
குலைச்கல் - ஆட்டுக்கல், கோரோசனம்
குலைச்சல்-அழித்தல், ஒழுங்குத்தப்பு. குலைதல், குலைத்தல், வெறுத்துப் பேசல்.
குலைத்தல்-அச்சக்குறிப்பு, அவிழ்தல், அழிதல், ஒழுங்குகெடுதல், கலைதல், குன்றல், நடுங்கல், பதறுதல்.
குலைதள்ளுதல்-குலைபோடுதல்.
குலைத்தம்-அவிழ்த்தல், கலையச்செய்தல், குலைத்தல், பிரித்தல்.
குலைநோய்-குலைமுட்டி.
குலைபடுவன்-ஓர்நோய்.
குலைப்பன்-சக்குவான், சீதநோய்.
குலைப்பு-குலைத்தல், நடுக்கம்.
குலைமுட்டி-நெஞ்சிற்குத்து.
குலையல்-அச்சக்குறிப்பு, குலைதல்.
குலையெரிவு-ஓர்நோய்.
குலைவயிறு-ஈரலடி.
குலைவிலை-குலைமதிப்புக்குத்தகை.
குலைவு-குலைதல்.
குலோமி-வெள்ளறுகு.
குலோமிசை-வசம்பு.
குலோத்துங்கன் - குலசிரேஷ்டன், சோழன்.
குல்மம்-குன்மம்.
குல்மலம்-பாவம்.
குல்மாஷம்-கழுநீர்.
குல்லயம்-என்பு, புட்டம், மாமிசம்.
குல்யன்-மந்திரி.
குல்லம்-முறம்.
குல்லரி-இலந்தை.
குல்லா-தலைக்கோலம், படவிற்கட்டுங் குல்லா.
குல்லாய்-தலைவாரை.
குல்லான்-சலாகைப்பாரை.
குல்லி-ஓர்பூண்டு.
குல்லியம்-ஆலோசனை, இனிமை.
குல்லியன்-ஆலோசனைக்காரன்.
குல்லிரி-குலிலி.
குல்லை-கஞ்சா, துளசி, வெட்சி.
குல்வலி-இலந்தை.
குவங்கம்-ஈயம்.
குவசம்-இழந்தது.
குவடு - சங்கபாஷாணம், சிறுமலை, திரட்சி, மரக்கொம்பு, மலை, மலையுச்சி
குவட்டிலுதித்தோன்-சொன்னபேதி.
குவட்டிற்புளிதம் - சங்கபாஷாணம்.
குவட்டினீயம்-நீலாஞ்சனக்கல்.
குவட்டுக்கல்-ஆட்டுக்கல்.
குவட்டுக்கூர்மை - தொட்டி பாஷாணம்.
குவட்டுநுண்முலைச்சி - குவட்டிலுதித்தோன்.
குவட்டுமுலைச்சி-சொன்னபேதி.
குவம்-ஆம்பல்.
குவரிகுண்டல்-வாலுளுவை.
குவலம்-அவுபலபாஷாணம்.
குவலயப்பிரியன்-சந்திரன்.
குவலயம்-குவளை, நெய்தல், பூமி.
குவலயானந்தம்-ஓர்அலங்காரநூல்.
குவலயாபீடம்-ஓர்யானை.
குவலி-இலந்தைமரம்.
குவலிடம்-ஊர்.
குவலை-கஞ்சா, துளசி.
குவலையன்-துருசி.
குவவு - குவிதல், கூட்டம், திரட்சி,பருத்தது, பூமி, பெருமை.
குவளச்சி-புற்றும்பழம்.
குவளை - ஓர்நீர்ப்பூக்கொடி, ஓர்வகைப் பாத்திரம், கடுக்கனில் வைக்குமிதழ், கண், கண்ணிற்கோளை, கண்மடல், கோளை, பாண்டங்களின் கழுத்து, பொக்கணி, மன்மதன்கணையிலொன்று.
குவளையச்சு-தட்டாரிஞோர்கருவி.
குவா-ஓர்கிழங்கு.
குவாகம்-கமுகு.
குவாகுலம்-ஒட்டகம்.

குவாட்டி-ஓர்மட்டி.
குவாதம்-கஷாயம்.
குவால்-குவிதல், கூட்டம், மேடு.
குவிதல்-ஒடுங்குதல, கூட்டம், சேருதல், திரளுதல், நெருங்குதல்.
குவித்தல்-ஒடுங்குவித்தல், ஒளித்தல், கூட்டுவித்தல், கூப்பல்.
குவிப்பு - குவியல்செய்தல், கைகுவிப்பு, சேர்க்கை.
குவியல்-கும்பம்.
குவிரம்-காடு.
குவில்-அறுத்தல், கைபிடியரி, சத்தம்.
குவிவு-குப்பை, குவிதல்.
குவேணி-மீன்புட்டில்.
குவேராசலம் } கைலாயபர்வதம்.
குவேராத்திரி }
குவேலம்-ஆம்பல்.
குவை-குப்பை, கூட்டம், திரட்சி, மேடு.
குழ-இளமை.
குழகம்-அழகு, சிறுவர்க்குரியஓர்நூல.
குழகன்-சிவன், முருகன்.
குழகு-குழகம்.
குழகுழத்தல்-கொளுகொளுத்தல்.
குழக்கன்-சிவன்.
குழங்கல்-ஓர்மாலை.
குழந்தை-சிறுபிள்ளை.
குழந்தைநீர்-இளநீர்.
குழப்படி } கலகம், கலக்கம், கொந்தளிப்பு, தாறுமாறு.
குழப்பம் }
குழப்பன்-குழப்பக்காரன்.
குழப்பு-கலக்குகை, குழப்புகை.
குழப்புதல்-கலத்தல், குழப்பம்பண்ணுதல்.
குழமகன்-ஓர்பிரபந்தம், அஃது கலிவெண்பாவான் மாதர்கடங்கையிற் கண்டஇளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்துகூறுவது, பாலன்.
குழம்பல்-அடிதலைமாறுதல், கலங்கல், நீராளமானது.
குழம்பு-ஓர்விதக்கறி, கஞ்சி, குழம்பென்னேவல், குழைசேறு, சந்தனக்குழம்பு முதலியன நீராளமானது.
குழம்புதல்-கலங்குதல், தத்தளித்தல், தலைதடுமாறல்.
குழம்புப்பால் - குழம்பாய்க் காய்ச்சசப்படும்பால்.
குழலல்-குழற்சி.
குழலுதல்-குழற்சியாதல், சுருட்டிமுடித்தல்.
குழல்-இசைப்பாட்டு, ஊதிடுகுழல், ஐம்பாலினொன்று அஃது சுருட்டிமுடித்தல், ஓர்மீன், கொண்டை, துளையுடைப் பொருள், பெண்மயிர், யோனி.
*குழலளகம் - குழற்சியையுடைய அளகம்.
குழவி-அம்மிக்குழவி, இளமை, ஒட்டகம் கடமை காட்டா பன்றி மான் முசு யாளி யானை இவைகளுமன்றி மரக்கோட்டின் வாழ்விலங்கின்பிள்ளைகளுமாம், குழந்தை, பாலசந்திரன், பெருமை, மரக்கன்று.
குழவு-இளமை.
குழற்கொத்து-மயிர்க்குழற்சி.
குழற்சி-குழன்றிருத்தல்.
குழற்பிட்டு-குழலிலவிக்கும்பிட்டு.
குழற்றிறப்பு-ஓர்வகைத்திறவுகோல்.
குழாம்-கூட்டம், திரள்.
குழாம்பல்-குழைவு, நீராளமானது.
குழாய்-துளை, துளையுடைப்பொருள்.
குழி-ஒருகோல்நீளமு மொருகோ லகலமுங் கொண்டதனை, கிடங்கு, கிணறு, குழியென்னேவல், குளம், பள்ளம், வயிறு.
குழிசண்-குழிந்தகண்.
குழிகை-குளிகை.
குழிக்கணக்கு-குழிமதிப்புக்கணக்கு.
குழிக்கிட்டி-ஓர்விளையாட்டு.
குழிங்கை-அகங்கை.
குழிசி-பானை, மிடா.
குழிசிசாரகன் } குசவன்.
குழிசிகாரன் }
குழிசிலை-கௌபீனம்.
குழிச்சட்டி-ஓர்பணிகாரச்சட்டி.
குழிதல்-குழியாதல்.
குழித்தல்-குழியாக்கல், நீராட்டல்.
குழித்தாமரை - ஆகாசத்தாமரை, கொட்டைப்பாசி.
குழிநரி-ஓர்நரி.
குழிநாவல்-ஓர்மரம்.
குழிபறிதல்-குடங்குவிழுதல்.
குழிப்பு-குழிசெய்கை, தாழ்வு, பிரபந்தவுறுப்பினொன்று.

குழிமாறுதல் } குழியைப்பரப்பாக்க
குழிமாற்று } கல்.
குழிமி-பாத்திரத்தின்மூக்கு, மதகு.
குழிமிட்டான்-நத்தைச்சூரி.
குழிமுயல்-ஓர்முயல். [வி.
குழியச்சு-தகட்டைக்குழியாக்குங் கரு
குழியம்-திரட்சி, திரண்டவட்டம், பாராவலையம், வலையம்.
குழியம்மி - மருந்தரைக்குங் குழியுள்ள வம்மி.
குழிவு-குழித்தன்மை.
குழிவெட்டி-சவக்கிடங்குவெட்டுவோன்.
குழு-அடங்காமை, குழுவென்னேவல், கூட்டம், மகளிர்கூட்டம்.
குழுக்காலி-கட்டுக் ககப்படாதமாடு.
குழுப்பற்றுதல் } அடங்காமைத் திரி
குழுப்பாய்தல் } தல்.
குழுமல்-கூட்டம், கூட்டல்.
குழுமாடு-குழுக்காலி.
குழுமுதல்-கூடுதல்.
குழுமூரல்-ஓர்மீன்.
*குழும்பு-குழி, திரள்.
குழுவல்-கூடல், கூட்டம்.
குழுவன்-சொற்கேளாதவன்.
குழுவுதல்-கூடுதல்.
குழூஉ-கூட்டம்.
குழூஉக்குறி-அவ்வக்கூட்டத்தார் வழங்குஞ்சொல்.
குழூஉப்பெயர்-கூட்டத்தான்வரும்பெயர்.
குழை-காடு, காது, குண்டலம், குழைசேறு, குழையென்னேவல், சேறு, தளிர், துளையுடைப்பொருள், நெய்தல்.
குழைகறி-நீராளமானகறி.
குழைக்காடித்தல்-மந்திரோச்சாரணத்துடன் குழையடித்துப்பார்த்தல்.
குழைக்காடு-காட்டுத்தேசம்.
குழைசாந்து } கலந்தசுண்ணம்பு.
குழைசுண்ணம் }
குழைசேறு-குழைந்தசேறு.
குழைச்சி-புற்றுஞ்சோறு.
குழைச்சு-ஆயுதங்களின்கழுத்து, ஆயுதமுதலியவற்றின்சுரை, கழுத்து, கைகால் முதலியவற்றின் பொருத்து, முடிச்சு.
குழைஞ்சான்-குழப்பம்.
குழைதல்-கலங்குதல், நெகிழ்ந்தொன்றுதல், வளைதல், வாடல்.
குழைத்தல்-இளகுவித்தல், ஒன்றாய்க் கலத்தல், தளிர்த்தல், வளைத்தல்.
குழைநாற்றம்-குழைமணம்.
குழைபிடித்தல் - ஒன்றைவிலக்கத் தழைபிடித்தல்.
குழைப்பு-குழைத்தல்.
குழைமறைவு-ஒளிப்பு
குழையடி } குழையடித்து மந்தி
குழையடித்தல் } ரோச்சாரணத்துடன் பார்க்கும்பார்வை, போதிப்பு.
குழையல் - இளகி யொன்றுபட்டிருப்பது.
குழைவு - அலைதல், இளக்கம், உருக்கம், கலப்பு, சேர்மானம், வளைவு, வாடல்.
குளகச்செய்யுள் - ஓர்பிரபந்தம், அஃது பலபாட்டா லொருவினை கொண்டு முடிவது.
குளகம்-ஆழாக்கு, குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுள், பலபாக்கூடிப்பொருண்முடியுஞ்செய்யுள், மரக்கால்.
குளகன்-குமரன்.
குளகு-இலைக்கறி, இலையுணவும்விலங்குணவு.
குளுகுளுத்தல் } ஈரடுக் கொலிக்குறி
குளுகுளெனல் } ப்பு.
குளக்கட்டு-குளத்தருகு.
குளக்கரை-தடாகக்கரை.
குளக்கால்-குளத்தின்வாய்க்கால்.
குளக்கீழ்-குளம்பார்த்தவயல்.
குளக்குருவி-நண்டு.
குளக்கொட்டி-ஓர்கொட்டி.
குளக்கோடு-குளக்கரை.
குளக்கோட்டன்-குளம் வெட்டுவதிலும் கோயிற்பணிசெய்வதிலும் சிறந்த இலங்காபுரியிலிருந்த ஓரரசன்.
குளக்கோரை-ஓர்புல்.
குளசு-குழைச்சு.
குளஞ்சி-ஓர்தோரைமரம், கிச்சிலி, சருக்கரை.
குளத்தேபோதல்-வாகியத்துக்குப் போதல்.
குளநண்டு-ஓர்நண்டு.

குளநெல்-குளக்கரையிலும் சதுப்புநிலங்களிலும் சுயமாய் பயிராகும் ஓர்நெல்.
குளபாகம்-இலளிதபாகம்.
குளப்பயறு-ஓர்பயறு.
குளப்பாடு-குளமடுத்தநிலம்.
குளமீன்-குளத்துமீன்.
குளம்-ஏரி, சருக்கரை, தடாகம், நெற்றி, வெல்லம்.
குளம்பு-குரம்.
குளவஞ்சி-குளாஞ்சி.
குளவடம்பு-ஓர்கொடி
குளவட்டை-சீரட்டை.
குளவரகு-ஓர்வரகு.
குளவாழை-ஓர்நெல்.
குளவி-ஓர்வண்டு, காட்டுமல்லிகை, தேனீ, மலைப்பச்சை.
குளவிகொட்டுதல்-குளவிகுற்றுதல்.
குளவிக்கூடு-குளவியிருக்குங்கூடு.
குளவிந்தம்-ஓர்மஞ்சள்.
குளறுதல்-உளறுதல், குளிறுதல்.
குளறுபடை } குழப்பம்.
குளறுபிடி }
குளன்-குளம்.
குளாஞ்சி-ஓர்தோடை.
குளாபாகம்-குடாபாகம்
குளி-குளித்தல். குளியென்னேவல்.
குளிகசித்தி-குளிகாசித்தி.
குளிகம்-மருந்தின்பொது.
குளிகன் - அட்டநாகத்தொன்று, கரந்துறைகோளிலொன்று.
குளிகாசித்தி-இரசகுளிகையினால் வருஞ்சித்தி, அஃதுஅட்டசித்தியிலுமொன்று.
குளிகாரன்-சங்குமுத்து முதலியன குளித்தெடுப்போன்.
குளிகை-மாத்திரை.
குளிக்கை-குளித்தல்.
குளிசமாடுதல்-வளையமிடுதல்.
குளிசம்-சக்கரம்வரைந்ததகடு, வளையம்.
குளிசிலை-கௌபீனம்.
குளித்தல்-சுழியோடல், நீராடல், படிதல்.
குளிப்பச்சை-ஆற்றுப்பச்சை.
குளிப்பாட்டு-பிரேதமுழுக்காட்டு.
குளிப்பாட்டுதல் - குளிக்கச்செய்தல், பிரேதாலங்காரத்தொன்று.
குளிப்பு-குளித்தல்.
குளியமாடுதல்-குளிசமாடுதல்.
குளியம் - உண்டை, புலி, மருந்தின்பொது, வளையம்.
குளியோடுதல்-சுழியோடுதல்.
குளிரக்கொடுத்தல்-மனரம்மியப் படக்கொடுத்தல்.
குளிரி - கல்லாரம், பீலிக்குஞ்சம், வெற்றிலைமூக்கரிகத்தி.
குளிர்-அச்சக்குறிப்பு, இலைமூக்கரிகத்தி, கவண், கற்கடகவிராசி, குளிர்ச்சி, கூதல், குலம், நண்டு, பனிக்காற்று, மழு, மீனெழுங்கு, முழவு, வெண்குடை, வெற்றிலை மூக்கரிகத்தி.
குளிர்காய்ச்சல்-சீதசுரம்
குளிர்காய்தல்-கூதிர்காய்தல்.
குளிர்காலம்-கூதல்காலம்.
குளிர்காற்று-குளிரானகாற்று.
குளிர்குளிர்தல் } சீதளமடைதல், தோஷமேறுதல், விறைத்தல்.
குளிர்கொள்ளல் }
குளிர்சுரம்-சீதசுரம்.
குளிர்ச்சி-குளிர்மை, திருத்திகரம். [ல்.
குளிர்தல்-குளிருதல், சாதல், விறைத்த
குளிர்த்தி-ஓராராதனை, குளிர்மை.
குளிர்த்திபண்ணுதல்-குளிர்மை செய்தல்.
குளிர்த்திபோடுதல்-சீதளாதேவிக்குச் செய்யுமோராராதனை.
குளிர்ந்தகுரல்-இனியவோசை.
குளிர்ந்தசொள்ளி-குளிர்ந்து கொல்லிலொலி.
குளிர்ந்தநிறம்-கன்னிறம்.
குளிர்ந்தநீர்-இளவெந்நீர், மணியினல்லொளி.
குளிர்ந்தபரிமளம்-சீதரங்கபாஷாணம்.
குளிர்ந்தபாட்டு-செவிக்கினியபாட்டு.
குளிர்ந்தபார்வை-தயைநோக்கு.
குளிர்ந்தபேச்சு-மதுரவசனம்.
குளிர்ந்தமணம்-நறுநாற்றம்.
குளிர்ந்தமனம்-நல்லஇருதயம்.
குளிர்ந்தமுகம் - அலங்காரமுகம், நன்முகம்.
குளிர்ந்தவாசனை-நறுமணம்.
குளிந்தவாயு-வாதவாயு.
குளிர்ந்தவேளை-சாயந்திரம்.

குளிர்ந்தவொளி-மணிகளினல்லொளி
குளிர்ந்துகொல்லி-கொவ்வைக்கொடி, வஞ்சகன்.
குளிர்ந்துபற்றுதல்-வாயுவிட முதலிய பற்றியேறுதல்.
குளிர்ந்துபோதல்-இறத்தல்.
குளிர்ந்தேறுதல்-குளிர்ந்துபற்றுதல்.
குளிர்ப்பித்தல்-குளிர்ச்சிசெய்தல்.
குளிர்ப்பு-குளிர்மை.
குளிர்மை-அன்பு, சீதளம்.
குளிர்மைக்கட்டு-கூகைக்கட்டு.
குளிறல்-எழுத்திலாவோசை, ஒலித்தல், பேசலாலெழுமொலி.
குளிறு, ஒலி, குளிறென்னேவல், பேரொலி.
குளிறுதல்-அலறுதல், சத்தமிடுதல்.
குளீரம்-நண்டு.
குளுகுளுத்தல்-ஒலிக்குறிப்பு, காமாலைகொள்ளுதல், செவ்வியழிதல், மெதுமெதுத்தல்.
குளுகுளுப்பை-காமாலை.
குளுகுளெனல்-ஒலிக்குறிப்பு.
குளுத்தி-குளிர்மை.
குளுப்பை-குளுகுளுப்பை.
குளுமை-குளிர்மை.
குளுவன்-கோழிக்காரரிற்றலைவன்.
குளைச்சு-காற்பங்கு, குழைச்சு.
குளைமான்-ஓர்விதமான்.
குள்ளக்கெண்டை-ஓர்மீன்.
குள்ளத்தாரா-குள்ளவாத்து.
குள்ளநரி-ஓர்நரி.
குள்ளம்-குறுமை, கொடுமை, வஞ்சகம்
குள்ளன்-கட்டையன், வஞ்சகன்.
குள்ளி-கட்டைச்சி, குள்ளன்.
குறங்கு-கொளுவி, தொடை.
*குறங்குசெறி-தொடையாபரணம்.
குறங்கொட்டி-துலாவோடே யடுக்கும் மரம்.
குறங்கொள்ளி-குறைக்கொள்ளி.
குறஞ்சனம்-வெண்காரம்.
குறஞ்சால்-உழுதுகுறைந்தநிலம்.
குறஞ்சி-செம்முள்ளி.
குறடு-அடைகல், ஒட்டுத்திண்ணை, ஓர்கருவி, செருப்பினேருறுப்பு, திண்ணை, நண்டு, பலகை, புடைப்பு, மரத்துண்டு, மிதியடி,
குறட்டரியம்-குறைகூறல்.
குறட்டாழிசை - நாற்சீரின்மிக்கபலசீரான் வருமடியிரண்டாய் ஈற்றடிகுறைந்துவருவதும் விழுமியபொருளும் ஒழுகிய ஓசையுமின்றிக் குறள்வெண்செந்துறையிற் சிதைந்துவருவதும் வேற்றுத்தளைவிரவிய குறள்வெண்பாவாய்வருவதுமாகியவிம்மூன்றுவகையுமாம்.
குறட்டுச்செருப்பு-ஓர்செருப்பு.
குறட்டுப்பாக்குவெட்டி-ஓர் பாக்குவெட்டி.
குறட்டுவாதம்-ஓர்வலிப்பு.
குறட்டை-காக்கணங்கொவ்வை, குறுகுறுப்பு.
குறண்டல் - குறண்டுதல், சுருண்டது, சுருண்டுவளைந்தது.
குறண்டல்வாதம்-வலிவாதம்.
குறண்டவாங்குதல்-சுருட்டியிழுத்தல்.
குறண்டி-ஓர்பண், ஓர்முட்செடி.
குறண்டுதல்-சுருண்டுகூனுதல்.
குறத்தி - குறிஞ்சிநிலப்பெண், நிலப்பனை.
குறத்திப்பாட்டு - ஓர்பிரபந்தம், அஃது தலைவன் பவனிவரக்கண்ட தலைவி மயங்கித் திங்கள் முதலிய உவாலம்பனப்பட்டுக்குறிகேட்டல் முதலிய அகப்பொருளுமடங்க அகவல் முதலிய செய்யுளிடையிடை விரவ்வரச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற்பாடுவது.
குறம்-ஓர்சாதி, குறி.
குறம்பார்த்தல்-குறிபார்த்தல்.
குறம்விடுத்தல்-குறட்டுசொல்லுதல்.
குறவஞ்சி-ஓர்பிரபந்தம், குறத்தலைவி.
குறவணவன்-ஓர்புழு.
குறவர்-குறிஞ்சிநிலமாக்கள், வேடர்.
குறவன்-இரதம், ஓர்சாதியான்.
குறவை-ஓர்மீன்.
குறளடி-இருசீரடி.
குறளடிவஞ்சிப்பா-இருசீரடியான்வரும் வஞ்சி.
குறளன்-குள்ளன்.
குறளி-ஓர்பிசாசு, வசவி.
குறளிக்கூத்து-பேய்த்தனம்.
குறளிவிடுதல்-கோளாறுபண்ணல்.
குறளை-குள்ளம், கோட்சொல்லல்.

குறள்-இருசீரடி, உறுப்புக்குறை யெட்டியென்று, ஓர்பா, குறுமை, சிறுமை, திருவள்ளுவர்செய்த ஓர்நூல், பூதகணம்.

குறள்வெண்செந்துறை-விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமுடைத்தாய் எனைத்துச்சீரானும் அளவொத்த இரண்டடியாய்வருவது.

குறள்வெண்பா - இரண்டடியாயொருவிகற்பத்தானேனு மிருவிகற்பத்தானேனும்வருவது.

குறுசாணி-ஓர்மருந்து.

குறுவுதல்-ஒடுங்குதல், மெலிதல்.

குறுள்-மறிக்குட்டி.

குறி - அடையாளம், ஆண்பெண்குறி, எண்ணம், ஓர்வகைச்சாத்திரஞ்சொல்லுதல், குணம், குறிப்பு, குறியென்னேவல், சகுனம், தோற்றம், நன்னடத்தை, நிமித்தம், பயில், புடவை, மாடுமுதலியவற்றினிடுங்குறி, முறை.

குறிகாணுதல் - அடையாளந் தோன்றல்.

குறிக்கொள்வோர்-கருமம்முடிக்குந் துணிவுள்ளோர், பராயணர்.

குறிக்கோள்-ஒற்றுமை, கணித்தல், கருமமுடிக்குந்துணிவு.

குறிசொல்லுதல்-குறியிடம் பார்த்துச் சாத்திரஞ்சொல்லல்.

குறிச்சி - கிராமம், குறிஞ்சிநிலத்தூர், சிற்றூர்.

குறிச்சூத்திரம்-பெயரீடுசூத்திரம்.

குறிஞ்சா-ஓர்கொடி.

குறிஞ்சி-ஈந்து, ஐந்நிலத்தொன்று அஃது மலைச்சார்பு, ஓரிசை, ஓர்கொடி, ஓர்சிமிள், ஓர்பண், குறிஞ்சிநிலத்திராகம், குறிஞ்சிமரம், செம்முள்ளி, மருதயாழ்த்திறம், மருதோன்றிமரம்.

குறிஞ்சிக்கருப்பொருள்-குறிஞ்சி நிலத்துற்பத்திப்பொருள், அவைசேய்முதற்சுனையாடலீருயவாம்.

குறிஞ்சித்தலைவன்-கானகநாடன்.

குறிஞ்சித்திணை - குறிஞ்சிநிலத்திற்குரியன, அவை மலை-கூதிர்-முன்பனி-இருள் - ஐவனம்-தினை-வெதிர், களவுப்புணர்ச்சி, சிலம்பன், வெற்பன், பொருப்பன், சேய், கானவர், குறவர், தேன், வெறி, சிறுகுடி, குறிச்சி, அருவி, சுனை, யானை, வேங்கை, மயில்.

குறிஞ்சித்திணைப்பொருள் - குறிஞ்சிக் கருப்பொருள்.

குறிஞ்சித்தெய்வம்-சுப்பிரமணியன்.

குறிஞ்சிப்பறை-துடி, தொண்டகம்.

குறிஞ்சிப்பொருள் - குறிஞ்சி நிலத்திற்குரியபொருள்.

குறிஞ்சிமுதற்பொருள்-வரையும் வரைசார்ந்த விடமுமென்னு நிலப்பொருளும் கூதிர், யாமம், முன்பனியென்னும் பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுகளுமாம்.

குறிஞ்சியாழ்-குறிஞ்சிநிலத்தியாழ்.

குறிஞ்சிலைக்கல்-ஈரற்கல்.

குறிஞ்சில்-தொட்டிபாஷாணம்.

குறிஞ்சிவேந்தன்-குமரன்.

குறிது-குறுமையுடையது.

குறித்தகள்வன்-பெயர்போனகள்வன்.

குறித்தபொருள்-நினைத்தபொருள்.

குறித்தல் - அடையாளப்படுத்தல், கருதல், சுட்டுதல், நியமித்தல், மதித்தல், வரைதல்.

குறிநிலையணி - புகழ்பொருளையுணர்த்துஞ்சொற்களாற் குறித்தறிதற்குத் தகுதியாய்பொருளைச் சொல்லுதல்.

குறிபார்த்தல்-சகுனம்பார்த்தல், சாமுத்திரிகாலக்கணம்பார்த்தல்.

குறிப்பறிதல்-குறிப்பினாலறிதல்.

குறிப்பாளி-குறிப்பறிவோன்.

குறிப்பானவன்-கணிசவான், மதிக்கத்தக்கவன்.

குறிப்பிசை-எழுத்திலாவோசை.

குறிப்பிடம்-சுருக்கம்.

குறிப்பு - அடையாளம், எழுத்துப்பழக்குங்குறிப்பு, ஒருமை, கருத்து, சைகை, நினைப்புக்கெழுதின வெழுத்து பிறந்தநா ளெழுதிவைக்கு மோலை, விருப்பம்.

குறிப்புக்காரணவகத்திணை - குறிப்புக்காட்டல், (உ-ம்) பேருலகாளயான் பிறந்ததாயின பாருலகிழிநலம் பற்றிநக்கவோ.

குறிப்புச்செயல்செஞ்செயலினுமாக்கச்செயலினுநின்று அவைக்கு வேறுயபொருளையுணர்த்துவது.

குறிப்புச்சொல்-குறிப்பினாற் பொருளு ணர்த்துஞ்சொல்.
குறிப்புவிற்சியணி-ஒரு பொருளைக்கு றித்துச்சொல்லவேண்டியதற்கு மற் றொரு பொருளைக்குறித்துச் சொல் லுதலாம்.
குறிப்புப்பண்பு-மனதாற் குறித்துணர ப்படும் பண்பு.
குறிப்புப்பொருள் - குறிப்புச்சொல்லா லுணர்த்தப்படுபொருள்.
குறிப்புமறிநிலை - ஓரலங்காரம், அது சொல்வேறுணர்ந்தகுறிப்பு வேறாக த்தோன்றவுரைத்தல்.
குறிப்புரிச்சொல்-மனத்தாற் குறித்தறி யப்படு முரிச்சொல், (உ-ம்) நண் மை.
குறிப்புவினை - பொருளிடங்கா லஞ்சி னை குணந்தொழிலடியாகத் தோற றிக் கருத்தாவைமாத்திரம் விளக்கு ஞ்சொல்.
குறிப்புவினைப்பகுபதம் - பொருளாதி யாறுங் காரணமாகக் கருத்தாவொ ன்றையே விளக்கிநிற்பது.
குறிப்பெஞ்சணி - ஓரணி அது, குறிப் பெச்சம்.
குறிப்போலை - காரியங் குறித்திருக்கு மோலை சாதகவோலை.
குறியர்-குள்ளர்.
குறியானவன்-நிகார்த்தன்.
குறியிடம் - அடையாளம், அடையாள மு மிடமும்.
குறியிடையீடு-குறியிடத் தொழுகாது தடைப்படல்.
குறியீடு-நாமதாரணை.
குறில்-குற்றெழுத்து, நீட்டற்றது.
குறுகலர்-பகைவர்.
குறுகல்-அணுகல், குறைதல்.
குறுகித்தல் - கோபமுதலியவற்றாற்பா ர்க்குங் குறும்பார்வை.
குறுகுதல் - கிட்டுதல், குறுத்தல், கு றைதல், சுருங்குதல்.
குறுகுத்தாளி-சிறுதாளி.
குறுகுறுத்தல்-ஒலிக்குறிப்பு.
குறுகுறுப்பு - குரட்டை, அஃது யாக் கைக்குற்ற மைந்தினொன்று, சினக் குறுப்பு.
குறுகுறுப்பை-குறட்டை.
குறுகுறெனல்-ஒலிக்குறிப்பு.
குறுக்கடி - குறுச்குநியாயம், குறுக்கு வழி.
குறுக்கம் - குறுக்கினது, கௌரிபாஷா ணம், சுருக்கம்.
குறுக்கல்-குறைத்தல்.
குறுக்கல்விகாரம்-நெடில்குறிலாதல்.
குறுக்களவு- நடு அளவு.
குறுக்கிடுதல்-இடையேசெல்லலல், கிட் டுதல்.
குறுக்கு - ஊடு, குறுக்கென்னேவல், குறுமை, சுருக்கம், நடை, விட்ட த்தளவு.
குறுக்குக்கட்டு-மார்க்கட்டு.
குறுக்குக்கேள்வி-மடிப்பான கேள்வி.
குறுக்குச்சட்டம-குறுக்குவளை.
குறுக்குச்சார்-குறுஞ்சார்.
குறுக்குச்சூத்திரம் - சுருக்கமாயறியுஞ் சூத்திரம்.
குறுக்குதல்-குறுகப்பண்ணுதல்.
குறுக்குநோய்-சந்துப்பிடிப்பு.
குறுக்குப்பாடு-குறுக்குவிட்ட அளவு.
குறுக்குப்பாதை-குறுக்குவழி.
குறுக்குப்புத்தி - எண்ணிக்கையற்ற பு த்தி.
குறுக்குமறுக்கு - இடைக்கிடை, தாறு மாறு.
குறுக்குவிட்டம்-கைவிட்டம்.
குறுக்குவிழுதல்-ஊடுவிழுதல்.
குறுக்குவெட்டி-குறுக்குவழி.
குறுக்கையர்-ஓர்வேளாளர், திருநாவுக்க ரையர்.
குறுங்கணக்கு-தனியட்சரங்கள்.
குறுங்கண்-பலகணி
குறுங்கயிறு-சிறுகயிறு.
குறுங்கலி-ஓர் பிரபந்தம், பாலையாழ்த் திறம், மருதப்புறம் அது தலைமகன் முன்னின்று மாதர்பழிகூறல்.
குறுங்கற்றலை-ஓர்மீன்.
குறுங்காசு-ஓர்காசு.
குறுங்காடு-சிறுகாடு.
குறுங்கால்-குள்ளங்கால்.
குறுங்கிண்ணி-வெண்கலம்.
குறுங்குடியாள்-தாளசம்.
குறுங்கோல்-இரண்டுமுழத்தடி.
குறுஞ்சாலி-இளமரம்.

குறுஞ்சிரிப்பு-புன்னகை.
குறுஞ்சீர்வண்ணம்-குற்றெழுத்துப் பயின்றுவருவது.
குறுஞ்சுனை-சிறுபொய்கை.
குறுணல்-சிறியது.
குறுணி-ஓரளவு, சிறியது.
குறுணை-குறுநோய்.
குறுதல்- குத்தல், தறித்தல்.
குறுத்தல்-குறுகுதல்.
குறுத்தாள்-சிற்றடி
குறுநகை-புன்சிரிப்பு.
குறுநடை-தளர்நடை.
*குறுநர்-பறிப்பார்.
*குறுநறுங்கண்ணி-குன்றிப்பூ.
குறுநிலமன்னர்-குறும்பர்.
குறுநெளிப்பு-ஆங்காரம், இறுமாப்பான அசைப்பு.
குறுநொய்-குறுணல், சிறுநொய்.
குறுந்தடி-குதிரைசெலுத்துங் கருவியினென்று, குறுத்ததடி, பறைமுதலிய வடிக்குந்தடி.
குறுந்தறி-குறுந்தடி, சுவர்த்தறி, போதிகை.
குறுந்தாள்-சிற்றடி.
குறுந்துணி-சீலைத்துணி.
குறுந்துளசி-சிறுதுளசி.
குறுந்தொட்டி-காஞ்சொறி, சிற்றமட்டி, தோட்டி.
குறுப்பி-பொன்னிமிளை.
குறுமணல்-இரசதமணல்.
குறுமாக்கள்-சிறுவர், பிள்ளைகள்.
குறுமீன்-ஓர்மீன்.
குறுமுட்டு-கிட்டுமானம், முட்டுத்தனம்.
குறுமுழி-குறுவிழி, வெறித்தபார்வை.
குறுமுனி-அகத்தியன்.
குறுமை - அழகு, சிறுமை, சுருக்கம், பாவம்.
குறும்பச்சி-இடைச்சி.
குறும்பயிர்-இளம்பயிர்.
குறும்பர் - குருநிலமன்னர், துற்சனர்.
குறும்பன்-துற்சனன்.
குறும்பாடு-பள்ளையாடு.
குறும்பாட்டம்-குறும்புத்தனம்.
குறும்பார்வை - குறுகித்த பார்வை, கொடியபார்வை.
குறும்பி-காதழுக்கு.
குறும்பிடி-உடைவாள், முட்டுப்பிடி.
குறும்பிடையர்-பள்ளையாட்டிடையர்.
குறும்பிவாங்கி-காதழுக்குவாருங்கருவி.
குறும்பு-அரணிருக்கை, குறும்பர்சாதி, சிறுமை, பாலைநிலத்தூர், பொல்லாங்கு, போர்.
குறும்புத்தனம்-துட்டத்தனம்.
குறும்புவன்னி-ஓர்புட்சாதி.
குறும்புவன்னியன்-பள்ளிகளில் ஓர்சாதியான்.
குறும்புள் } காடை.
குறும்பூழ் }
*குறும்பொறி-உதரபந்தம்.
குறும்பொறை-காடு, குறிஞ்சிநிலத்தூர் சிறுமலை, மலை.
குறும்பொறைநாடன் - முல்லைநிலத்தலைவன்.
குறுவாழ்க்கை-அற்பவாழ்வு, வறுமை.
குறுவாள்-சிறுவாள்.
குறுவிசாரம்-கவலை.
குறுவித்தல்-குறுகித்தல்.
குறுவித்துப்பார்த்தல்-குரூரமாயுற்றுப் பார்த்தல்.
குறுவிலை-ஒறுப்பு.
குறுவிழி-கோபத்தாற் பயத்தாலுற்றுப் பார்த்தல்.
குறுவிழிக்கொள்ளுதல் } வெறித்துப்
குறுவிழிவிழித்தல் } பார்த்தல்.
குறுவேர்வை-அச்சத்தால் வேர்த்தல் சிறுவேர்வை.
குறுணுத்தகடு } மலாம்பூசினதகடு
குறுணுப்பட்டை }
குறூரம்-குரூரம்.
குறை-அரசிறை, குறைந்திருப்பது குறையென்னேவல், குற்றம், சேடம், தரித்திரம், தவறு, நிறைவற்றது, மன்றூட்டு, மிச்சம், வெறுப்பு.
குறைகூறல்-குறைசொல்லல்.
குறைகோள்-இரத்தல்.
குறைக்கண்ணுக்குறங்கல் - அரைக்கண்ணுக்கு நித்திரைசெய்தல்.
குறைச்சல்-ஒறுப்பு, தாழ்ச்சி.
குறைஞ்சால்-உழுதகுறை.
குறைதல்-கெடுதல், சிறுகல்.
குறைத்தலைப்பிணம்-கவந்தம்.
குறைத்தல்-குறுகுதல், சங்கரித்தல், சுருக்குதல், வெட்டுதல்.

குறைநிறை-ஏற்றத்தாழ்ச்சி, குறைச்சல், நிறைச்சல்.
குறைபாடு-ஈனம்,குறைவு, குற்றத்தினல்வந்தபாடு, தரித்திரம்.
குறைப்பிராணன்-குற்றுயிர்.
குறைப்பு-குறைத்தல்.
குறையாற்றல்-குறைதீர்த்தல்.
குறையிரத்தல்-பின்சென்றுகேட்டல்.
குறையுடல்-தலையற்றவுடல்.
குறையுயிர்-குற்றுயிர்.
குறையொட்டி-உறையொட்டி.
குறையொற்றுமையுருவகம்-உருவகத்திலோர்குறைதோன்றச்சொல்வது.
(உ-ம்) நெற்றிவிழியில்லாச்சங்கரன்
குறைவயிறு-குறைப்பசி.
குறைவிலி-கடவுள்.
குறைவு-ஈனம், வறுமை.
குறோட்டை - காக்கணம், பீச்சுவிளாத்தி.
குற்குலு-குங்கிலியம்.
குற்சலை-அவுரி
குற்சனம்-இகழ்ச்சி.
குற்சிதம்-அசுத்தம், அருவருப்பு.
குற்சித்தல்-அருவருத்தல்.
குற்சிப்பு-அருவருப்பு.
குற்சை-இகழ்ச்சி, சுபாவகுணமொன்பதினொன்று, அஃது அருவருப்பு.
குற்பகம்-நாணல்.
குற்பம்-பரடு.
குற்றமில்லான்-அருகன், கடவுள், மாசிலான்.
குற்றம்-அபராதம், குறை, தவறு, நோய், பழுது, பிழை.
குற்றம்பிடித்தல்-பிழைகாட்டல்.
குற்றல் - இடித்தல், குற்றுதல், நெரித்தல்,பறித்தல்.
குற்றவாளி-குற்றமுள்ளோன்.
குற்றிசை-குறுஞ்சத்தம்.
குற்றி-தறி.
குற்றிகரம், குற்றியலிகரம் } மாத்திரை குறுகின விகரம்.
குற்றியலுகரம், குற்றுகரம் } மாத்திரைகுறுகினவுகரம்.
குற்றுடைவாள்-சிறுஉடைவாள்.
குற்றுதல்-குற்றல்.
குற்றுயிர்-குறைப்பிராணன்,குற்றுயிரொழுத்து.
குற்றுவாய்-ஓர்மீன், கடிவாய்.
குற்றெழுத்து-ஓர்மாத்திரையாயுச்சரிக்கப்படுமெழுத்து.
குற்றேவல்-அடித்தொண்டு.
குற்றொற்று-குற்றெழுத்தின்கீழொற்று
குனட்டம்-அதிவிடையம்.
குனட்டு-சேட்டை.
குனசகம்-சிறுகாஞ்சொறி.
குனசம்-குன்றி.
குனட்டை, குனஷ்டை } துடுக்கு.
குனபி-சுழிக்காற்று.
குனி-குனியென்னேவல், வில்.
குனிதல்-இரங்குதல், தலைதாழ்த்தல், துக்கப்படுதல், வளைதல்.
குனித்தல் - அசைத்தல், ஆடல், வளைத்தல்.
குனிப்பு-ஆடல், கூத்தின்விகற்பம், வளைப்பு.
குனிவு-வளைவு.
குனுகுதல்-சிணுங்கிப்பேசல்.
குனுக்கம்-குணுக்கம்.
குனை-கூர்ப்பக்கம்.
குன்மச்சூலை-ஓர்நோய்.
குன்மப்புரட்டு-ஓர்நோய்.
குன்மம்-ஓர்நோய்,குலுமம் அஃது சேனைமுகம் மூன்றுகொண்டது, தூறு.
குன்மவலி-ஓர்நோய்.
குன்மவாயு-ஓர்நோய்.
குன்றக்கூறல்-நூல்வழுவினொன்று.
குன்றத்துச்சித்தி- தாலம்பபாஷாணம்.
குன்றம்-மலை.
குன்றல்-குலைதல், குறைதல், கெடுதல்
குன்றவர், குன்றவாணர் } குறிஞ்சிநிலமாக்கள், வேடர்.
குன்றவில்லி-சிவன், துருசி.
குன்றுவாடை-வடகீழ்க்காற்று.
குன்றுவாழ்வு-குறையாதசெல்வம்.
குன்றி-ஓர்கொடி, மாஞ்சேசிலை.
குன்றிநிறக்கண்ணன்-காட்டுப்பன்றி.
குன்றிநிறமணி-குருவிந்தம்பதுமராகம்.
குன்றிமணி-குன்றிக்கொட்டை.
குன்றியலுகரம்-குற்றியலுகரம்.
குன்றிவேர்-அதிமதுரம்.
குன்று-குன்றென்னேவல், சதயநாள், சிறுமலை, மலை.

குன்றுகூப்பிடுதல் - எதிரொலியெழக் கூப்பிடுதல்.
குன்றுதல்-குறைதல், கெடுதல், மெலிதல், வாடல்.
குன்றுவாடை-வடமேல்காற்று.
குன்றெடுத்தோன்-கண்ணன்.
குன்றெறிந்தோன்-குமரன்.
குன்றேந்தி-கிருஷ்ணன்.

கூ

கூ-ஓரெழுத்து, கூவென்னேவல், பூமி மலங்கழித்தல்.
கூகமானம்-மறைவு.
கூகம்-ஆந்தை, கூகை, மறைத்தசொல்
கூகனம்-அசப்பியவார்த்தை மறைத்த சொல்.
கூகனம்-மாய்மாலம்.
கூகாகம்-கழுகு.
கூகாரி-காகம்.
கூகு-எட்டுவயதுப்பெண்.
கூகூ - அச்சப்பொருடருமோரிடைச் சொல்.
கூகை-ஓர்பருந்து, கோட்டான்.
கூகைக்கட்டி } பொன்னுக்குவீங்கி.
கூகைநீர்க்கட்டி }
கூகைநீறு - ஓர்மருந்து, காட்டெருமைப்பால்.
கூகைவீக்கம்-கூகைக்கட்டி.
கூக்குரல்-கூப்பிடுமொலி, முறையீடு.
கூசம்-முலை.
கூசல்-அச்சக்குறிப்பு, அச்சம், கூக்குரல், கூசுதல், நாணுதல்.
கூசனம்-உதாசினம், மறைத்தசொல்.
கூசி } எழுதுகோல்.
கூசிகை }
கூசிதம்-புட்குரல்.
கூசுதல்-கண்பல்முதலிய கூசுதல், நாணுதல், பயப்படல்.
கூச்சக்காரன்-சங்கோசமுள்ளவன்.
கூச்சத்தம்-கூக்குரல்.
கூச்சந்தெளிதல்-சங்கோசந்தீர்தல்.
கூச்சம்-அச்சம், கண்பல் முதலியவற்றின்கூச்சம், நாணம், வெட்கம்.
கூச்சல்-இரைச்சல். கூக்குரல்.
கூச்சி-சவரிலோத்திரம்.
கூச்சிதம் } கடம்பு.
கூச்சிரம் }

கூச்சு-கூர்ச்சு.
§கூட - ஒருங்கு, சேர, தானும் (உ-ம்) எனக்குக்கூடப்பயம்.
கூடகம்-கொழு, வஞ்சனை.
கூடகாரகன் } கள்வன், பொய்யன், வஞ்சகன்.
கூடகாரன் }
கூடகிருதன்-சிவன்.
கூடசதுக்கம் - ஓர்பிரபந்தம், மிறைக்கவியினொன்று அஃது ஈற்றடி ஏனை மூன்றடியுள்ளுஞ் சொற்புகாவெழுத்துக்கரந்து நிற்கப்பாடுவது.
கூடசன்-சோரபுத்திரன்.
கூடசாசனம்-கள்ளத்தீர்வை.
கூடசாட்சி-பொய்ச்சாட்சி.
கூடசாரன் } அந்தரங்கதூதன்.
கூடசாரி }
கூடசாலம்-ஓர்நரகு.
கூடசான்மலி-பட்டுநூல்மரம்.
கூடசுவணம்-கலப்புப்பொன்.
கூடணை-மயிற்றோகைக்கண்.
கூடத்தர் - ஆன்மாகத்தாவுடனயிக்கப்படுதல்.
கூடத்தன் } நிருவிகாரனைதந்நியன், முதன்மையானவன்.
கூடஸ்தன் }
கூடபதம்-பாம்புபுத்தி.
கூடபாலகம்-சூலை, யானைநோய்.
கூடபாஷிதம்-அந்தரங்கசம்பாஷணை.
கூடபாதரம்-பாம்பு.
கூடபுருஷர்-ஒற்றர், சோரநாயகர்.
கூடபூர்வம்-ஹஸ்திசுரம்.
கூடமார்க்கம்-கள்ளவழி.
கூடமைதுனம்-காகம்.
கூடம்-அண்டம், அறை, இந்திரசாலம், இரகசியம், உறையறிகருவி, எள், ஏகாந்தம், கலப்பை, கூட்டம், கொழு, தானியக்குவியல், கொல்லன்சம்மட்டி, கோளகபாஷாணம், தீங்கு, புதையல், பொய், மலையினுச்சி, மறைவு, மாயம், யானைப்பந்தி, வஞ்சகம், வீடு.
கூடம்பில்-சுனை.
கூடயந்திரம்-பொறி, வலை.
கூடலர்-பகைவர்.
கூடல்-அடுத்தல், இயலல், ஓர்விளையாட்டு, கழிமுகம், கூடுதல், சேர்தல், புணர்தல், மதுரை, மர முதலியவற்றின்செறிவு.

கூடல்வளைத்தல்-மகளிர் விளையாட்டி
ெனான்று.
கூடல்வாய்-ஒடுங்கியகால்வாய்.
கூடவற்சை-தவளை.
கூடற்குறி-தலைமகன்பிரிந்துழித் தலை
விபார்க்குங்குறி.
கூடற்கோ-பாண்டியன்.
கூடற்பற்றை-காடு, வனம்.
கூடாகாரம்-மேல்வீடு.
கூடாக்கு-புகையிலை.
கூடாங்கம்-ஆமை.
கூடாதகூட்டம்-தீயோர்நட்பு.
கூடாதது-இயலாதது, தகாதது, பொ
ருந்தாதது,
கூடாமை-இயலாமை, பொருந்தாமை.
கூடாமையணி-ஓரலங்காரம், அஃது,
ஒருகாரியம்பிறத் தலையருமையுடை
யதாய்ச்சொல்லுதல்.
கூடாரக்கட்டில்-மூடுகட்டில்.
கூடாரப்பல்லக்கு-மூடுசிவிகை.
கூடாரமடித்தல்-கூடாரம்போடுதல்.
கூடாரம் - படாம்வீடு, பெருங்காயம்,
வண்டிகௌசனை.
கூடாரவண்டில்-மேல்மூடியவண்டில்.
கூடார் -பகைவர்.
கூடார்த்தபாஷிதம்-கட்டுக்கதை.
கூடாவியற்கைவிலக்கு - ஓரலங்காரம்,
அது கூடாததனைக் கூடுவதாகக் கூ
றிவிலக்கல், (உ-ம்) சிதசந்தனந்தீக்
காலும்.
கூடாவுவமை - ஒருபொருட்கு இயல்
பா யில்லாதவற்றை யுள்ளதாகச்
சொல்லியதனை ஒன்றற்குவமையாக்
கியுரைப்பது, (உ-ம்) காமுகர்க்குத்
தண்மதியந்தீக்கால்வபோலும்.
கூடாவொழுக்கம்-கள்ளவேடம்.
கூடியது-இயன்றது, ஏற்றது, கிடைத்
தது, சேர்ந்தது.
கூடிலி-தசைதின்போன்.
கூடு-அடைப்பு, உடம்பு, உறை, கூ
டென்னேவல், பறவைக்கூடு.
கூடுங்கழுந்தும்-துளையுங்கழுந்தும்.
கூடுதல்-இயலுதல், ஏற்றிருத்தல், கி
டைத்தல், சேருதல், புணர்தல்.
கூடுமியற்கைவிலக்கு - ஓரலங்காரம்,
அது கூடுவதனைக்கூடு வதாகக்கூறி
விலக்குவது, (உ-ம்) கைவளைசோர்
ந்தாவிகளைந்துருவர்,மெய்வெதும்ப
ப்பூத்தகையுஞ் செங்காந்தள் பொ
ங்கொலிநீர்ஞாலத்துத் தீத்தலையா
ர்க்கிடுதெசெயல்.
கூடுவிட்டுக்கூடுபாய்தல் - ஒருடம்பை
விட்டான்மா மற்றோருடம்பிற் பு
குதல்.
கூடுவிழுதல்-ஆணிச்சீ விழுதல், சாத
ல், வியாதியின்வேர் கழலுதல்.
கூடுவைத்தல்-சிலந்தி யிறுணிச்சிதல்,
காய்ந்துசவ்வுபற்றல், பட்சிகள், கூ
டுகட்டுதல், வியாதி வேர்வைத்துப்
பலத்தல்.
கூடை-கூத்தின்விகற்பம், கோரியையூ
க்கூடைமுதலியன.
*கூடைப்பாடல் - சொற்செறிவும் இ
சைச்செறிவுமுடையது, இயக்கம்
நான்கினுளொன்று.
கூடையன்-பருத்தவன்.
கூடோற்பன்னன்-சோரபுத்திரன்.
கூட்டம்-இனம், சங்கம், சிநேகம், தி
ரள், தொகுதி, பிண்ணாக்கு, புண
ர்ச்சி, போர், மிகுதி, மேவினர்.
கூட்டரம்-வண்டில்.
கூட்டரவு-கூட்டம்.
கூட்டரிசி-கறிக்கரைக்குமரிசி.
கூட்டவணி-ஓரலங்காரம், அது பகை
யில்லாமையாலொரு காலத்துக் கூ
டத்தக்க பொருளுக்குக் கூட்டந்
தைச் சொல்லுதல், பலகாரணங்க
ள் கூடுதலாலோர்காரியம் பிறத்த
லுமாம்.
கூட்டற்றவன் - ஆசாரங்குலைந்தவன்,
கூடாதவன்.
கூட்டாகுழப்பம்-தாறுமாறு.
கூட்டாளி - கூடிநடக்கிறவன், தோழ
ன், பங்காளி.
கூட்டிமுடித்தல் - தெய்வங் கூட்டி
நிறைவேற்றல்.
கூட்டியம்-சுவர்.
கூட்டு-உறவு, கலப்பு, கறிக்கூட்டு,கூ
ட்டென்னேவல், சம்பந்தம்,சேர்மா
னம்.
கூட்டுக்கச்சவடம்-கூட்டுவியாபாரம்.
கூட்டுக்கணக்கு-எண்கூட்டுதல்.
கூட்டுக்கறி-குழம்புக்கறி.

கூட்டுக்கால் - இருகாலையு மோரடியில் மிதித்துநிற்றல்.
கூட்டுணல்-கூட்டியுண்ணல்.
கூட்டுதல் - அதிகப்படுத்தல், சேர்த்தல், சேர்த்துண்டுபண்ணல், பலவினத்தை யொன்றாக்கல்.
கூட்டுத்தட்டு-ஓர்பாத்திரம்.
கூட்டுத்தொழில் - கூடித்தொழினடத்துதல், வசியவித்தை.
கூட்டுப்பயிர்-கூடிப்பயிரிடுதல்.
கூட்டுப்பல்லக்கு-ஓர்விதபல்லக்கு.
கூட்டுமூட்டு-ஒன்றுபடுத்தல், கோள், சேர்மானமாக்கல்.
கூட்டுமொழி-கூட்டுச்சொல்.
கூட்டுவர்த்தகம்-கூட்டுவியாபாரம்.
கூட்டுறவு-இணைந்தஉறவு.
கூட்டெழுத்து - தொடரெழுத்து, பலவெழுத்தொலியொன்றாயிருப்பது.
கூஷ்மாண்டம் } நீற்றுப்பூசணி.
கூஸ்மாண்டம் }
கூணி-கூனி.
கூணிகை-வீணையினோருறுப்பு.
கூண்டு-கூடு, பறவைக்கூடு.
கூண்டுதல்-கூடுதல்.
கூன்மாண்டம்-நீற்றுப்பூசணி.
கூதம்-குதம்.
கூதன் - தூரஸ்திரீ முயங்கிப்பெற்ற பிள்ளை.
கூதலோடுதல்-குளிர்தல்.
கூதல்-குளிர்.
கூதல்விறைத்தல்-கூதலோடுதல்.
கூதளம் - கூதாளிச்செடி, தூதுளை, வெள்ளரி.
கூதறை-இழிந்தது, கிழியல், கூட்டற்றது.
கூதற்காய்தல்-குளிர்காய்தல்.
கூதனம்-மறைத்தசொல்.
கூதாரி-வெள்ளரி.
கூதாளம் } கூதளம்.
கூதாளி }
கூதிர் - ஐப்பசி கார்த்திகையின் பருவம், காற்று, கூதல், பனிக்காற்று.
கூதிர்காலம்-குளிர்காலம்.
கூதிர்காலவுரிமை - கூதிர்க்காற்றுவீசலும், குருகு அன்னம் கொக்கு சகோரம் சங்கு, நண்டு நத்தை இவைமகிழ்தலும், நீர்தெளிதலும், மீனினஞ்செனித்தலும், மேகஞ்சூல் கொள்ளலும், பாரிசாதம் சிறுசண்பகம் செம்பரத்தை சந்தனம் நாணல் இவைமலர்தலும், பலபறவைவிலங்குமக்கள்வருந்தலுமாகும்.
கூதிர்காற்று-குளிர்காற்று.
கூதிர்ப்பருவம்-குளிர்காலம்.
கூதை-காற்று, குளிர்காற்று.
கூத்தரிசி-குத்திவிற்குமரிசி.
கூத்தர்-நாடகர்.
கூத்தன் - உயிர், கடவுள், சிவன்; தருசி, நாடகன்.
கூத்தன்குதம்பை - மூக்கொற்றிப் பூண்டு.
கூத்தாடி-கூத்தாடுவான்.
கூத்தாடுதல் - தோரத்தமாடுதல், நடனம்பண்ணுதல், பெருமைகாட்டல்.
கூத்தாட்டு-தோரத்தம், நடனம்.
கூத்தி } நாடகக்கணிகை, வேசி, வைப்பாட்டி.
கூத்திச்சி }
கூத்து-ஆடம்பரம், நடனம், நாடகம், விளையாட்டு.
கூத்துகந்தோன்-சிவன்.
கூத்துக்களரி-நடனசாலை.
கூத்துப்பாட்டு-நாடகக்கவி.
கூத்துவிடுதல் - ஏவிவிடுதல், கூத்தாடுவோனைக்களரியில்விடல்.
கூந்தலறுகு-ஓரறுகு.
கூந்தலாற்றுதல்-மயிராற்றுதல்.
கூந்தல்-கமுகோலை, குதிரைமயிர், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, கூந்தற்றெங்கு, பனையோலை, பெண்மயிர், மயிர், மயிற்றோகை, யானைக்கழுத்தடிமயிர்.
கூந்தற்கமுகு-ஓர்கமுகு.
கூந்தற்பனை-ஓர்மரம்.
கூந்தற்பாசி-ஓர்நீர்ப்பூடு.
கூந்தற்பூகம்-கூந்தற்கமுகு.
கூந்தாலம் } குந்தாலி.
கூந்தாலி }
கூபகம்-எண்ணைத்துருத்தி, கிணறு, சிற்றூற்றுக்குழி, பாறை, பாய்மரம்.
கூபம்-கிணறு.
கூபரங்கம்-உரோமப்பொடிப்பு.
கூபரம்-முழங்கை.
கூபரி-தேர்.
கூபாரம்-கடல்.

கூபிகை - நீரிலடைப்பட்ட மலைமுதலி யன.
கூப்பரம்-முழங்கை.
கூப்பல்-கூப்புதல்.
கூப்பாடு-கூப்பீடு.
கூப்பிடல் } அழைத்தல்.
கூப்பிடுதல் }
கூப்பீடு-குரோசம், கூப்பிடல்.
கூப்பீடுதூரம்-கூப்பிட்ட சத்தங்கேட் குமெல்லை.
கூப்புதல் - குவியச்செய்தல், சுருக்கு தல்.
கூமம்-நீர்நிலை.
கூமனை-கோங்குமரம்.
கூமா-ஓர்மரம்.
கூம்பல் - ஒடுங்கல், குமிழமரம், குவி தல்.
கூம்பு - கூம்பென்னேவல், சேறு, தே ர்க்கொடிஞ்சி, பாய்மரம்.
கூம்புதல்-குவிதல், குறுவுதல், சுருங் குதல்.
கூரணம் - உத்தியோகம், கொடுமை, கோடகசாலை, பாகல், பொறாமை.
கூரம்-கொடுமை, கோடகசாலை, பாக ல், பொறாமை, முயற்சி.
கூரரம்-முழங்கை.
கூரல் - ஓர்மீன், புள்ளிறகு, பெண்ம யிர்.
கூரன்-கூர்நெல், நாய்.
கூராம்பாய்ச்சி } சலாகைப்பாரை.
கூராம்பிளாச்சு }
கூரான்-ஓர்பூடு, குல்லான்.
கூரியது-கூர்மையுள்ளது.
கூரியம்-கூர்மை.
கூரியன்-கூர்மையுள்ளவன்.
கூரிலவணம்-அமரியுப்பு.
கூரை-சிற்றில், வீட்டின்மேற்புறம்.
கூரைதட்டல் - ஆண்பிள்ளைப்பிறப்புக் குச்செய்யுமோர்மகிழ்ச்சிக்குறி.
கூர்-இலைக்காம்பு, காரம், கூரென்னே வல், கூர்மை, நுனி, மிகுதி.
கூர்கேவு-வெண்கடுகு.
கூர்க்கதிர்-ஓர்கருவி.
கூர்க்கறுப்பன்-ஓர்நெல்.
கூர்ங்கோடு-கூரியகொம்பு.
கூர்ச்சகம்-தந்ததாவனக்குச்சி.
கூர்ச்சகன்-தையற்காரன்.
கூர்ச்சசேகரம்-தெங்கு.
கூர்ச்சம்-எத்து, தருப்பை, தலை, தா டி, புருவமத்தி, மாய்மாலம், வயிரி ப்பு, வீண்புகழ்ச்சி.
கூர்ச்சரம் - தேயமைம்பத்தாறி னொ ன்று.
கூர்ச்சரி-ஓரிராகம்.
கூர்ச்சிகை-ஊசி, எழுதுகோல், பூவரு ம்பு.
கூர்ச்சு-கூருள்ளதடி.
கூர்ச்சை - ஆசநம், குலஸ்தீரீ; தருப் பை.
கூர்தல்-ஆராய்தல், கூருதல், நுணுகு தல், மிகுதல்.
கூர்த்தம்-விளையாட்டு.
கூர்த்தல்-உவர்த்தல், மிகுத்தல்.
கூர்த்தநி - சித்திரைமாதபௌர்ணிமை.
கூர்த்தனம்-பொழுதுபோக்கு.
கூர்த்திகை-ஆயுதப்பொது.
கூர்ந்தபுத்தி-கூரியவிவேகம்.
கூர்ப்பது-உள்ளதுசிறத்தல், உறைப்பு, கூர்மை, மிகுதி.
கூர்ப்பம்-புருவமத்தி.
கூர்ப்பரம்-முழங்கை.
கூர்ப்பருவம்-முழங்கை, முழந்தாள்.
கூர்ப்பாசகம்-முலைக்கச்சு.
கூர்ப்பாசம்-இரவிக்கை.
கூர்மபிரிட்டிகம் } ஆமையோடு.
கூர்மபிரிட்டம் }
கூர்மம்-ஆமை, திருமா லவதாரத்தொ ன்று, பதினெண்புராணத்தொன்று
கூர்மராசன்-ஆதிகூர்மம்.
கூர்மன் - உரோமம் புளகிப்பித்திமை ப்பிக்கும்வாயு.
கூர்மாண்டர்-ஒருருத்திரர்.
கூர்மை-அறிவு, கல்லுப்பு, கூர், நுண் மை, நுனி.
கூர்மைக்கரிவாள்-சவுக்காரம்.
கூர்மைபார்த்தல்-நுண்மைபார்த்தல்.
கூலகம்-கறையான்புற்று, குவியல்.
கூலங்கஷம்-கடல்.
கூலங்கஷை-நதி.
கூலம் - அதிட்டம், ஆற்றங்கரை, கட ற்கரை, கடைவீதி, கரை, காராம ணி, குவியல், சிறுவரம்பு, நீர்நிலை, பசு, படையணி, பலபண்டம், பாக

ல், மந்தி, மனை, முசு, விலங்கின் வால்.
கூலவதி-யாறு.
கூலி - சம்பளம், வேலைகண்டுகொடுப்பது.
கூலிக்காரன்-வேலையாள்.
கூலிப்பாடு-கூலிப்பிழைப்பு.
கூவநூல்-கீழ்நீர்க்குறியறிசாத்திரம்.
கூவம்-கிணறு, கூகைநீறு, சிவஸ்தலங்களிலொன்று.
கூவரம்-ஏர்க்கால்.
கூவரன்-கூனன்.
கூவரி-பண்டி.
கூவலம்-பலநிறமுள்ள ஆம்பற்பூ.
கூவலர்-கூவநூல்வல்லோர்.
கூவல்-அழைத்தல், கிணறு, சொல்லுதல், பள்ளம்.
கூவியர்-மடையர், *அப்பவாணிகர்.
கூவிரம் - தேரிடக்கியம், தேர், தேர்க்கொடிஞ்சி, வில்வமரம்.
கூவிரி-தேர்.
கூவிளங்கனி-நேர்நிரை நிரையசைச்சீர்க்குவாய்ப்பாடு, வில்வப்பழம்.
கூவிளங்காய்-நேர்நிரை நேரசைச்சீர்க்குவாய்பாடு.
கூவிளநறுநிழல் - நேர்நிரை நிரைநிரையசைச்சீர்க்குவாய்ப்பாடு.
கூவிளநறும்பூ-நேர்நிரை நிரைநேரசைச்சீர்க்குவாய்பாடு.
கூவிளந்தண்ணிழல் - நேர்நிரை நேர்நிரையசைச்சீர்க்குவாய்பாடு.
கூவிளந்தண்பூ-நேர்நிரைநேர் நேரசைச்சீர்க்குவாய்பாடு.
கூவிளம் - கோளகபாஷாணம், நேர்நிரையசைச் சீர்க்குவாய்பாடு, வில்வம்
கூவிளி-அழைப்பு.
கூவிளித்தல்-சாப்பிடல்.
கூவிளை - கோளகபாஷாணம், வில்வமரம்.
கூவுதல்-அழைத்தல், சேவல்முதலிய கூவுதல்.
கூவுவான்-சேவல்.
கூவெனல்-அழைத்தல், ஆரம்பித்தல் கூவென்குதல்.
கூவை-கூகை, *ஓர்கிழங்கு.
கூழங்கை-குறட்கை, குறைந்தகை.
கூழம்-எள்ளு.
கூழன்-ஓர்பலா.
கூழா-நறுவிலிமரம்.
கூழாங்கல்-ஓர்கல்.
கூழாமட்டி-மந்தையன்.
கூழாமணி-கூழ்முன்னை.
கூழாம்பாணி-கரையல்.
கூழான்-கண்டகிக்கல்.
கூழுக்குப்பாடி-அங்கிடுதத்தி, ஔவை.
கூழை-இறகு, கடையின்மை, கவியுறுப்பிலொன்று, சேறு, நடு, நீளங்குறைந்தது, படைவகுப்பு, பாம்பு, பிற்படை, பெண்மயிர், பொன், மந்தம், மயிற்றோகை.
கூழைக்கடா-ஓர்கொக்கு.
கூழைத்தொடை - செய்யுளிலோருறுப்பு.
கூழைமுரண் - கடைச்சீரொழிந்தமற்றெல்லாச்சீர்க்கண்ணும் முரண்வரத்தொடுப்பது.
கூழைமோனை-இறுதிச் சீர்க்கணின்றியொழிந்த சீர்க்கண் மோனை வரத்தொடுப்பது.
கூழையளபெடை -கடைச்சொல்லொழிந்தமற்றெல்லாவற்றின் கண்ணுமளபெடைவரத்தொடுப்பது.
கூழையன்-மடயசாம்பிராணி.
கூழையியைபு - முதற்சீரொழிந்த மற்றைச் சீர்க்கணியைபுவரத் தொடுப்பது.
கூழையெதுகை-கடைச்சீரொழிந்த மற்றெல்லாச்சீர்க்கண்ணுமெதுகைவரத்தொடுப்பது.
கூழ்-உணவு, கஷாயம், சோறு, நறுவிலி, பயிர், பொன்.
கூழ்முட்டை-கருக்செட்டமுட்டை.
கூழ்முன்னை-ஓர்கீரை.
கூழ்வரகு-கேழ்வரகு.
கூளம்-கஞ்சல், குப்பை, திப்பி.
கூளி-உறவு, எருது, குறள், குற்றம், சுற்றம், தொகுதி, பூதம், பெருங்கழுகு, பேய், பொலியெருது, வலிமை.
கூளியர்-படைவீரர், வேடர்.
கூறல்-கூறுதல், நாகபாஷாணம்.
கூறியதுகூறல் - நூற்குற்றம்பத்திலொன்று.
கூறியான்-சிவியார் தலைவன்.

கூறு-அறிவிக்கை, எள்ளு, காரணம், கூறென்னேவல், தன்மை, பங்கு, பிரிவு, பாதி, வகை.
கூறுகொள்ளுதல்-அமர்த்துதல்.
கூறுதல் - சொல்லுதல், விளக்கிச்சொல்லுதல், விற்றல்.
கூறுபாடு-கூறு.
கூறை-சீலை, மணவாட்டியுடுக்கும் புதுப்புடைவை.
கூறைப்பாய்-தோணிப்பாய்.
கூறோலை-கூற்றோலை.
கூற்சரம்-கூர்ச்சரம்.
கூற்றம்-கொடியசத்துரு,சொல்,நமன்.
கூற்றன்-கொடியசத்துரு, நமன்.
கூற்று-காலன், சொல், நமன்.
கூற்றுதைத்தோன்-சிவன்.
கூற்றுவன்-கொடியசத்துரு, நமன்.
கூற்றோலை-பங்குபிரித் தெழுதினவோலை.
கூனல் - கோணல், சங்கு, நத்தை, பிறைச்சந்திரன், வளைதல், வளைவு.
கூனன்-ஆமை, கூனுள்ளோன், சங்கு, நத்தை.
கூனன்முதுகு-ஆமையோடு.
கூனி-குசினி, கூனுள்ளோன்,கோணியது, சிற்றிறால், மந்தரை, வசவி.
கூனிக்குயம், கூனிரும்பு } அரிவாள்.
கூனுதல்-ஒடுங்குதல், வளைதல்.
கூனை - கருப்பஞ்சாறடுகூன், கொடிப்பட்டை, வேள்விக்குண்டம்.
கூன்-ஆந்தை, உறுப்புக்குறையெட்டினொன்று, கூனன், கூனென்னேவல், நத்தை, வளைவு,வெண்பாமுதலியசெய்யுட்களின் முதலடியி னேரோவிடத்துப்பொருள் படத்தனித்து நிற்பது.
கூன்கிடை - யாக்கைக்குற்ற மைந்தினொன்று, அஃது வளைந்துகொண்டு கிடத்தல்.
கூன்பாண்டியன் - ஓர் பாண்டியராசன்.
கூன்முதுகு-ஆமையோடு.

கெ

கெகராசி-பூலா.
கெக்கட்டம்-அட்டகாசம், மிகச்சிரித்தல்.
கெக்கரித்தல் - கடினிப்பு, கொக்கரித்தல்.
கெக்கலி-மகிழ்வு.
கெக்கலித்தல்-மகிழ்தல்.
கெக்களம்-கெக்கட்டம்.
கெக்களித்தல்-தோல்விகாட்டல், நெளிதல், வளைதல்.
கெக்களிப்பு-நெளிவு.
கெசகன்னம்-யானைசெவியை யசைப்பதுபோற்காதையசைக்கும்வித்தை.
கெசகன்னி-வெருகு.
கெசமாமுட்டி-எட்டி.
கெசம்-இரண்டுமுழஅளவு, யானை.
கெசாசனை-அரசு.
கெசாசைநா-கையாந்தகரை.
கெச்சங்கெட்டவன்-நாணமில்லோன்.
கெச்சம்-சிறுசதங்கை, முல்லை.
கெச்சிதநடை-உல்லாசநடை.
கெச்சிதம்-கெற்சிதம்.
கெச்சுக்கெச்செனல்-ஒலிக்குறிப்பு, வருத்தல்.
கெச்சை-சிறுசதங்கை.
கெச்சைநடை, கெச்சைமிதி } உச்சாகமானநடை.
கெஞ்சுதல்-மன்றாடுதல்.
கெடலணங்கு-மூதேவி.
கெடவரல்-மகளிர்விளையாட்டு.
கெடாரம்-கடாரம், கடியாரம்.
கெடி-அதிபத்தியம், ஊர், கீர்த்தி, கெடியென்னேவல், துருக்கம், பயம்.
கெடிஸ்தலம் - அதிகாரவிசாரணைகித்தவிடம், இராஜதானி.
கெடித்தல்-பயப்படல்.
கெடிமண்டுதல்-அஞ்சுதல்.
கெடியன் - அஞ்சப்பண்ணுவோன், அஞ்சாதவன், சமர்த்தன், சுறுக்கன், வீரன்.
கெடிலம்-ஆழமானஓடை, ஒடுங்கியபாதை, குகை, கூடலூருக்கருகிலோர் நதி.
கெடு-கெடுவென்னேவல், கேடு, தவணை, தறுவாய்.
கெடுகுடி-கெடுதலையானசமுசாரம்.
கெடுதலை-அழிவு, இழிவு, கேடு.
கெடுதல்-சாதல், சாய்தல், பதனழிதல், பழுதாதல்.

கெடுதல்விகாரம் - எழுத்துக்கெடும்விகாரம்.
கெடுதி-அழிவு, ஆபத்து, கெட்டுப்போனபொருள், கேடு, நட்டம்.
கெடுத்தல்-அழித்தல், கெடச்செய்தல்.
கெடுநினைவு, கெடுபுத்தி - கெடத்தக்கபுத்தி.
கெடுப்பிணை-வங்கமணல்.
கெடுமதி-கேடானபுத்தி.
கெடும்பு-அருந்தல், கெடுநலை.
கெடுவைத்தல்-கெடுக்கச்சொல்லுதல்.
கெட்டகேடு-அதிககேடு.
கெட்டம்-தாடி.
கெட்டாகெட்டி, கெட்டாரகெட்டி - மகாகெட்டி.
கெட்டி-உச்சிதம், உலோபகுணம், உறுதி, கெட்டியென்னேவல், சாமர்த்தியம், நேற்றி.
கெட்டிக்காரன்-சமர்த்தன்.
கெட்டித்தல்-கெட்டிபண்ணுதல்.
கெட்டித்தனம் - சமர்த்து, திறம், திராணி.
கெட்டிபண்ணுதல்-பலப்படுத்தல்.
கெட்டிபத்திரம் - சாக்கிரதையானவிசாரணை.
கெட்டு-பக்கக்கிளை.
கெட்டுவிடுதல், கெட்டுவைத்தல் - கவர்விடுதல்.
கெணு... மூலம்.
கெ...ம்-கண்டம்.
கெண்டன்-மிண்டன்.
கெண்டி - கெண்டிகை, கெண்டியென்னேவல், தறித்தல், தறிவாய்.
கெண்டிகை-கமண்டலம்.
கெண்டித்தல்-கண்டித்தல்.
கெண்டு-கெண்டை.
கெண்டூரம்-ஓர்மருந்து.
கெண்டை - கயல், சரிகைத்தலைப்பு, சேல், முழந்தாளின் கீழ்க்கால்.
கெண்டைக்கால்-முழந்தாளின்கீழ்.
கெண்டைப்பீலி-மாதர் காலணியினொன்று.
கெண்டையேறல், கெண்டைவாதம் - ஓர்வித வாயுநோய்
கெதம்-கதம்.
கெதி-கதி.

கெத்திடல், கெத்திடுதல் - சில்லபொல்லமாய் வெட்டல்.
கெத்து-உபாயம், பலகொத்து.
கெத்துக்கெத்தெனல்-அச்சக் குறிப்பு, பலகத்துக்கத்துதல்.
கெத்துதல்-கண்டம்போடுதல்.
கெத்துவம்-பக்கல், போதல்.
கெந்தகபூமி-காங்கையானபூமி.
கெந்தகம்-கந்தகம், கேரகண்டபாஷாணம், நாய்வேளை.
கெந்தபந்தம்- கெவுரிபாஷாணம்.
கெந்தம்-கந்தம்.
கெந்தனம்-கோடகசாலை.
கெந்தி-கந்தகம், பொன்னிமிளை.
கெந்திகம்-பாம்புகொல்லி.
கெந்திபரம்-ஆடுதின்னாப்பாலை.
கெந்தியுப்பு-கெந்தகலவணம்.
கெந்திவாருணி-பேய்த்துமிட்டி.
கெந்துதல்-புழுமுதலியநெளிதல்.
கெபத்தம்-கிரணம்.
கெபி-குகை, குழி, வளை.
கெப்பிதம்-நிந்தை.
கெமனம்-கமனம்.
கெமிளித்தல்-கெம்பளித்தல்.
கெமிளிப்பு-சந்தோஷம்.
கெம்பத்து-இடம்பம்.
கெம்பறை-கூடை, நெற்கூடை.
கெம்பல்-ஆரவாரம், எழும்பல்.
கெம்பளித்தல்-சந்தோஷித்தல்.
கெம்பளிப்பு-ஆடம்பரம், சந்தோஷம்.
கெம்பீரம் - ஆழம், பரிமளிப்பு, மேன்மை, வீரம்.
கெம்பீரித்தல்-வீரங்காட்டுதல்.
கெம்பு - ஓரிரத்தினக்கல், கெம்பென்னேவல்.
கெம்புதல்-கிளர்தல், கொந்தளித்தல்.
கெய்-ஓர்மீன்.
கெரடி-சிலம்பம்.
கெரிட்டம்-கோவம்.
கெரித்தல்-கரித்தல்.
கெருடன்-கருடன்.
கெருடி-கருடி.
கெருமத்தம்-பறவை.
கெர்வம்-கர்வம்.
கெலத்தம்-பட்சித்தல்.
கெலி, கெலிசு - ஆசை, செலியென்னேவல், பயம், பெருவயிறு.

கெலிகெட்டவன்-அங்கலாய்த்தவன்.
கெலித்தல்-அஞ்சுதல், ஆசைப்படல், வெல்லல்.
கெலிப்பு-அச்சம், ஆசை, வெற்றி.
கெல்லிக்கம்பு-கூராம்பாய்ச்சி.
கெல்லுதல்-கிண்டல், தோண்டல்.
கெவரி-வெள்ளைக்காக்கணம்.
கெவுடு-அட்சரக்கூடு.
கெவுரா-துளசி.
கெவுரிசங்கம் - இரட்டை யுருத்திராட்சம்.
கெவுரிபாஷாணம்-ஓர்மருந்து.
கெவுளி-சிவந்தசங்கு, சிவந்தமுகிழுள்ளதேங்காய், பல்லி.
கெவுளிச்செவ்விளை-ஓர்வகைத்தெங்கு
கெவுனி-பட்டணவாசல்.
கெவ்வியம்-நாய்வேளை.
† * கெழீஇய-பொருந்தின.
கெழு - இடைச்சொல் (உ-ம்) வேல்கெழுதடக்கை, சேர்த்திக்கை, நிறம், பிரகாசம்.
கெழுதகை } உரிமை.
கெழுதகைமை } உரிமை.
கெழுதல்-கெழுமுதல்.
கெழுமல்-அமைதல், கற்றல், நிறைதல், முளைத்தல்.
கெழுமுதல்-கற்றல், கூடுதல், நிறைதல், பொருந்துதல், முளைத்தல்.
கெழுமை-கெழுமுதல், நிறம், பிரகாசம், வளமை.
கெழுவல்-நிறைதல்.
கெழுவுதல்-நிறைதல், பெற்றுக் கொள்ளுதல், பொருந்தல்.
கெளிசு-காமாலைவீக்கம்.
கெளிசுபற்றுதல்-பருவயிறுபற்றல்.
கெளிதம்-கீழ்விழல், பட்சித்தல், பெருகல்.
கெளித்தல்-நெளிதல்.
கெளிப்பு-நெளிவு.
கெளிர்ச்சல்லியம்-மீனெலும்பு.
கெளிறு-ஓர்மீன்.
கெறு } ஆங்காரம்.
கெறுவம் } ஆங்காரம்.
கெறுவி-ஆங்காரி, கெட்டிக்காரன்.
கெறுவித்தல்-கறுவித்தல்.
கெற்சிதம்-உக்கிராரம்பம், முழக்கம்.
கெற்சித்தல்-உக்கிரமாயார்த்தல்.
செற்சிப்பு-முழக்கம்.
கெற்பக்குவளை-கருப்பை.
கெற்பத்தலைவன்-வீரம்.
கெற்பத்தி-சாலக்கிராமம்.
கெற்பம்-கருப்பம்.
கெற்பவாயு - கருப்பமுண்டாகாமற் பண்ணும்வாயு.
கெற்பவிப்புருதி-ஓர்விப்புருதி.
கெற்பணி-கருப்பந்தரித்தவள்.
கெற்பாதானம் - கருப்பந்தரித்த நாலாமாதஞ் செய்யுமோர்சடங்கு.
கெற்பித்தல்-கருப்பந்தரித்தல்.
கெற்பிரித்தல்-சுவாலித்தல்.
கெற்பு-தத்துவம், திராணி.
கெற்போட்டம் - மார்கழிமாதத்தி லவ்வம்மாதத்தைப்பற்றிமுகிலோடுதல்.

கே

கேகம்-மயிற்குரல், வீடு.
கேகயம் - கெவுரிபாஷாணம், கேகயப்புள், தேசமைம்பத்தாறினொன்று, மயில்.
கேகயன்-கைகேயன்.
கேகயி-தசரதன்மனைவி.
கேகரம்-கடைக்கண்பார்வை.
கேகரன்- ஓரக்கண்ணன்.
கேகலன்-கூத்தாடி.
கேகா-மயிற்குரல்.
கேகாபலம்-மயில்.
கேகி-மயில்.
கேகுந்தகம் } கொழுக்கட்டை,
கேகுந்தம் } கொழுக்கட்டை,
கேகை-மயிற்குரல்.
கேகையி-கைகேயி.
கேசகலாபம்-மயிர்முடி.
கேசகன்-நாவிதன்.
கேசகாரம் - ஓர்வகைக்கரும்பு, குதிரைதேய்க்குமோரிருப்புக்கருவி.
கேசசிதன்-நாவிதன்.
கேசதம்-கையாந்தகரை.
கேசபத்ததி-மயிர்வகிர்.
கேசபந்தம்-பூமுடித்தகொண்டை.
கேசபந்தி-மயிரொழுங்கு, மயிர்முடி.
கேசபாசி- குடுமி.
கேசபாரம்-பெண்மயிர்.
கேசமார்ச்சகம் } சீப்பு.
கேசமார்ச்சனம் } சீப்பு.
கேசமுட்டி-வேம்பு.

கேசம்-குதிரைமயிர், துவக்கம், மயிர்ப்பொது.
கேசரம்-அப்பிரகம், சிங்கம், பூங்கூந்தல், பூந்தாது, பெருங்காயம், மகிழமரம், மயிர், வண்டு.
கேசரர்-வித்தியாதரர்.
கேசரவரம்-குங்குமம்.
கேசரி - அங்கயோகாதனத் தொன்று, அது பீசத்தின்கீழ்ச்சிவனியிடத்துப் பரட்டை வைத்திட முழங்கையை முழந்தாளில்வைத் தங்குலிவிரித்து நாசியைப்பார்த்திருத்தல், ஆகாயமனம், குதிரை, சிங்கம், பெருங்காயம்.
கேசரிகம்-நாயுருவி.
கேசரிஜன்-அநுமான்.
கேசரியாதனம் - பீசத்தின்கீழ்ச்சிவனியிடத்துப்பரட்டைவைத்திடமுழங்கையை முழந்தாளிலங்குளிவிரித்து நாசியைப்பார்த்திருத்தல்.
கேசரியோகம்-உதயத்துக்கு நாலில் எழிற் சந்திரன்நிற்பது, வியாழனுஞ் சந்திரனுங்கூடிநிற்பது.
கேசரீகம்-நாயுருவி.
கேசனை-பருத்திச்செடி.
கேசவம் - அட்டாதசதருமநூலில் ஒன்று, நறுமணம், நிறைமயிர், பெண்வண்டு, பைசாசம், வண்டு.
கேசவற்குத்தோழன் } அருச்சுனன்.
கேசவற்றோழன் }
கேசவன்-சோழன், நிறைமயிருள்ளோன், விட்டுணு.
கேசவேசம்-கொண்டை.
கேசாதிபாதம்-ஓர்பிரபந்தம் அஃது கலிவெண்பாவான் முடிமுதலடியளவுங்கூறுவது, சருவாங்கம். [டங்கு
கேசாந்தம்-மயிர்களைந்துசெய்யுமோர்ச
கேசாரசம்-ஓர்நாரத்தை.
கேசாவாதனம்-இரண்டு முழந்தாளும் மாறிமுடித்தான்றி யிருமுழங்கையுமுழந்தாளிற்படக்கைநீட்டி யிருப்பது.
கேசி-கிருட்டிணன், சிங்கம், நிறைமயிருள்ளோன்.
கேசிகன்-நிறைமயிருள்ளோன்.
கேசிசூதநன் } கண்ணன்.
கேசிசூதனன் }
கேசிநி-நிறைகுழலுள்ளவள்.
கேசிநிசூதநன்-விட்டுணு.
கேசியா-தாழை.
கேசினி-சங்கங்குப்பி.
கேசுகம்-ஓர்கிழங்கு.
கேஞ்சலிகை-ஓர்கிழங்கு.
கேடகம்-ஓர்யாறு, ஓர்வகை, ஊர்திபரிசை, பாசறை, புருமுட்டி, மலைசெறிந்தவூர்.
கேடகம்-கிளியாறு, மலைசெறிந்தவூர்.
கேடயம்-பரிசை.
கேடிக்கை-கேளிக்கை.
கேடிலுவகை-மோட்சம்.
கேடு - அந்தக்கேடு, அழிவு, குறைவு, கெடுதல், சிதைவு, பொல்லாங்கு.
கேடுகாலம்-கெடுகாலம்.
கேடுபாடு-அழிவு, துன்பம், நட்டம்.
கேடையம்-கேடயம்.
கேட்குதல்-ஆராய்தல், கேட்டல், தரச்சொல்லுதல், வினவல்.
